
இனிய
பிறந்தநாள்
வாழ்த்துகள்
மாமா!


வேலுப்பிள்ளை
பிரபாகரன்
2019

சூரியனைத் துப்பாக்கி துளைப்பதில்லை...
உனக்காக
இதோ... இதோ ஒரு எழுச்சிப் பயணம்!
சென்னையிலிருந்து கன்னியா குமரி!
செல்கிறோம் எங்கள் இதயங்கள் குமுறி!

நீ எங்கிருக்கிறாய் என்பது எங்களுக்குத்
தெரியாது ஆனால்-
என்ன செய்து
கொண்டிருக்கிறாய் என்பதை
உலகம் முழுவதும்
உணர்ந்திருக்கிறது!
அவர்கள் - எங்கே இருக்கிறார்கள் என்பது
தெரிகிறது ஆனால்
என்ன செய்து
கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான்
அவர்களும் கூட அறிந்து கொள்ளவில்லை!

நீ தேசத்தை
பிரசவிப்பதற்காக அன்றாடம் உன்னையே
ஆயுத சிகிச்சைக்கு
ஆளாக்கிக் கொள்கிறாய்!

அவர்களோ - ஒரு குழந்தையை
கொல்வதற்காகத் தாயின் வயிற்றையே
பீரங்கி கொண்டு
பிளக்கப் பார்க்கிறார்கள்!

நீ- விடுதலையை
தேடுகிறாய்
உன் மக்களுக்கான
விடியலைத் தேடுகிறாய்!
அவர்கள்
உன்னையே
தேடுகிறார்கள்!

துப்பாக்கி முனைகளுகுச்
சொல்லி வைக்கிறோம்-
சூரியக் கதிர்களை
துளைக்க முடியாது!

எமதர்மக் கைகளை
எச்சரிக்கிறோம் - வெண்ணிலவை
வலை வீசி வீழ்த்தியவர் கிடையாது!

ஒருவனைப் பிடிக்க ஒரு லட்சம் படையா?
உண்ண மறுத்தால் அதற்கும் தடையா?
உலக சரித்திரம் படித்ததே இல்லையா?

இனிமேல்- காந்தி சிலைகளில் உள்ள
கைத்தடியை அகற்றுங்கள்! அதற்கு பதிலாகத்
துப்பாக்கி ஒன்றை அதன் தோள்மீது
மாட்டுங்கள்!

இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு இந்-
தியாவுக்குத்தான்! ஆமாம்...
அமைதி என்பதற்கான
புதிய அர்த்ததைப் பூமிக்கு தந்ததனால்!

அன்றொரு நாள்- பிரபாகரன் என்பது பெயராக
இருந்தது. இப்போது
பிரபாகரன் என்பது பிரமிப்பாய் ஆனது!
இனிமேல் பிரபாகரன் என்பது
பிரளயமாய் ஆகாதோ?
எங்கள் இலட்சியக் கனவுகளின்
சுமைதாங்கியே! பொன்னாடை
தோள்மீது போர்த்துவதாய்ச் சொல்லி உன்மீது
சிலுவை அறைந்தது யார்?

நீ ஏசுவல்ல- ஆனால்
இறப்பினும் நீ உயிர்த்தெழுவாய்!
ஒரு பிரபாகரனாய் அல்ல...
ஒரு லட்சம் பிரபாகரனாய்!

உன்னுடைய மூச்சுக் காற்று
முகாமிட்ட இடமெல்லாம் பட்டாளம்
தனைச்சாய்க்கும் பாசறைகள் உண்டாகும்!

உன்னுடைய பாதங்கள் நடந்த
பாதைகளிலெல்லாம் புல்லும்
கூட புலியாக மாறும்!

உன்னுடைய சுட்டும் விழிச்சுடர் தொட்ட
இடமெல்லாம் ஜோதி கருவாகும்!
புலிகளின் தாகம் தமிழீழத்
தாயகம் அங்கே உருவாகும்!

கவிஞர் மு.மேத்தா

Century 21 Innovative Realty Inc. Brokerage
Karan Thurainayagam
Sales Representative
Office: 416-298-8383 | Fax: 416-298-8303
3-2250 Markham Rd., Toronto ON. M1B 2W4
Direct: 416-707-4350
karant991@yahoo.ca



வரலாற்றில்
எமக்கு தேசம் இருந்தது
தேசத்திற்கு அரசனும் இருந்தான்
வீரம் இருந்தது வீரத்தினை
வெளிப்படுத்தும் போரும் செய்தான்
அந்நியரிடம் தோற்றதால்
அந்நியருக்கு அடிபணிந்தோம், ஆனால்
அயலவனும் அடிமையாக்க
நினைத்த பொழுதுதான் - மீண்டும்
எமக்கென ஒரு அரசன் இருந்தால் - என
ஏங்கினோம்
வந்தாய் அரசனாகவே வந்தாய்
நாமே வியக்கும் நல்ல அரசை தந்தாய்
உலகம் உற்றுநோக்கும்
தலைவனுமாய் உயர்ந்தாய்
இன்று நீ இல்லாத பொழுதும் - உனது
காலம் தந்த நினைவுகள் மட்டும் என்றும்
காலத்தால் அழியாது இருக்கும்
வாழ்த்துவதால் பேறுபெற்றோம்



வல்வை நடா

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
உங்களுக்கான சட்ட உரிமைகள தெரியுமா?
வார. மாத. இறுதிக் கொடுப்பனவுகளில் இருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது
எழுத்தில் உத்தரவாதம் தரப்படும்
தொடர்புகளுக்கு
info@prudentiallegalservices.com
416-723-7387

RE/MAX realty SPECIALISTS Inc. BROKERAGE
உங்கள் வீட்டை நல்ல விலைக்கு விற்க வேண்டுமா?
அல்லது அழகிய புதிய வீடு ஒன்றை வாங்க வேண்டுமா?
அர்ப்பணிப்புடன் தொடர்ந்து உங்கள் சேவையில்
உங்களின் றியல் எஸ்டேட் தேவைகள் குறித்து
ஆலோசிக்க இன்றே அழையுங்கள்
SATHEESAN KUMARASAMY
REAL ESTATE BROKER
Direct 647.723.0087 | Office 905.456.3232
realtorsatheesan@gmail.com | www.realtorsatheesan.com






வீடு வாங்க, விற்க அழையுங்கள்
Vaheesan
Jeyaveerasingam
Broker
Direct: +1 (416) 276-9999
3-1286 Kennedy Rd, Toronto, ON, M1P 2L5
Tel:416-270-1111, Fax: 416-270-7000

தமிழினத்தின் அடையாளம்!



“பிரபாகரன்” எனும் பெயர் வெறும் பெயரல்ல. அது தமிழினத்தின் அடையாளம்! தமிழர்கள் மீதும் தாயக மண்ணின் மீதும் சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்திருந்த அடக்குமுறைகள் - அட்டுழியங்கள் என்பன சொல்லிலடங்காதவை. ஸ்ரீலங்கா என்ற நாட்டுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்ட நாள் முதல் ஈழத்தமிழர்களை கண்டு அஞ்சிய சிங்கள பேரினவாதம் தன்னுடைய அடக்குமுறையை ஈழத்தமிழர்கள் மீது ஏவத்தொடங்கியது. அதற்கு காரணமும் இல்லாமல் இல்லை. ஈழத்தமிழர்கள் என்பவர்கள் இந்த நாட்டின் சொந்த குடிமக்கள். ஆண்டாண்டுகாலமாக அவர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், சிங்களவர்களின் வரலாறு அப்படியானதொன்றல்ல. அதனைவிட ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்த காலத்தில் ஈழத் தமிழர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் கோலோச்சிக் கொண்டிருந்தார்கள். இவற்றை பொறுத்துக் கொள்ளமுடியாத சிங்கள பேரினவாதம் ஈழத்தமிழர்களை கண்டு அஞ்சியது. அதன் வெளிப்பாடாகவே ஈழத்தமிழரை ஏதோவொரு வகையில் அழித்துவிட வேண்டுமென எண்ணி தமிழருக்கு எதிரான அடக்குமுறைகளை மெல்ல மெல்ல ஆரம்பித்தது. 1947 இற்கு பின்னரான தமிழரின் வரலாறு என்பது இரத்தக்கறைகளால் எழுதப்பட்டவை. சிங்கள இராணுவம் தமிழர் தேசத்தில் செய்த அட்டுழியங்களை, அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக் கொள்ளமுடியாது என சீற்றம் கொண்டு எழுந்த வீரனே தமிழினத்தின் தேசிய தலைவன் பிரபாகரன். தமிழினத்தின் மேல் கொண்ட தீரா அன்பினால், தமிழ் மண்ணின் மீதான பற்றினால், பழந்தமிழர் வீர மரபின் தொடர்ச்சியாக அறநெறியும், போர் வழியும் இணையும் இடத்தில் நின்று தனது மக்கள் அனுபவித்த கொடுமைகளுக்காக ஆயுதம் ஏந்தி போராட துணிந்த தலைவன் தான் பிரபாகரன்.

தன்னினத்தின் விடிவு தமிழீழம் பிறப்பதில்தான் இருக்கிறது என்கிற கொள்கையில் முழுமூச்சாக செயற்பட்ட ஒப்பற்ற தலைவர் பிரபாகரன். ஒரு இனத்தை இன்னொரு இனம் ஒடுக்குமானால் அந்தக் கட்டமைப்பின் மீது ஒடுக்கப்பட்ட இனம் சீற்றம் கொள்வது இயல்பு. அந்த சீற்றத்தை ஒருமுகப்படுத்தும் வடிவமாக ஒரு தலைவன் உதித்தெழுவான் என்பதே உலகப் போராட்ட வரலாறுகளின் விதியாகும். அந்த விதிக்கு உண்மையான சொந்தக்காரனாக பிறப்பெடுத்தவர் தான் தமிழீழ தேசிய தலைவர். தமிழினத்தின் நிலம் மீட்கவும் தமிழினத்தின் விடுதலைக்காகவும் சமர் புரிந்த மாவீரர்களை வழிநடத்தி, பெரும் ஆயுத பலம் கொண்ட சிங்கள ராணுவத்தை விரட்டிய வெற்றி நாயகன் அவர். காலாகாலமாக தமிழர்கள் வாழ்ந்த மண்ணில் உரிமையுடனும், நிம்மதியுடனும் அவர்கள் வாழவேண்டுமென்பதற்காக ஆயுதம் ஏந்தியவர் தேசிய தலைவர். “யாருடைய பெயரைக் கேட்டால் இனத்தின் எதிரி அஞ்சி நடுங்குகிறானோ அவனே தலைவன” என்பதற்கு அமைய வீரத்தின் தலைமகனாக வாழ்ந்தவர் தேசியத்தலைவர். நிறைய மானம், நிறைய வீரம், நிறையத் துணிவு, பணிவு, தெளிவு, கருணை, அன்பு, அறிவு, ஆற்றல், அடக்கம், பண்பு, மாண்பு, ஈகம், கனவு, ஒழுக்கம் - இவை எல்லாவற்றையும் வைத்து ஒரு மனிதனைப் இறைவன் படைப்பானாக இருந்தால் அவர் தான் தேசிய தலைவர்.உலகின் பண்பாளர்கள் மதிக்கும் நற்பண்புகளை கொண்ட தன்னாட்சி பிரதேசத்தை கட்டியெழுப்பிய மகத்தான தலைவன் என்பதுடன் - கல்வி, விவசாயம், தொழில்நுட்பம் என அனைத்து துறைகளிலும் தமிழர் தாயகத்தை ஏனைய நாடுகளுக்கு குறிப்பாக சிங்கள தேசத்துக்கு சவால் விடும் வகையில் வளர்த்தெடுத்த மிகப்பெரிய அறிவுஜீவி அவர்.

தமிழர்களும் தமிழ் மண்ணும் எவருக்கும் அடிபணியக்கூடாது என்பதை தன்னுடைய வாழ்க்கை மூலம் வாழ்ந்து காட்டிய மகத்தான ஒரு தலைவர் அவர். “எதிரிக்கு எதிரி நண்பனுக்கு நண்பன்” என்ற வீரனுக்கே உரித்தான பண்புடன் ஸ்ரீலங்காவையும் சர்வதேசத்தையும் கையாண்ட அவருடைய பண்பு உலகில் வாழ்ந்த உன்னதமான வீரத் தலைவர்களின் பட்டியலில் அவரையும் இணைத்திருக்கிறது. சர்வதேச சமூகமே வியக்கும் அளவுக்கு அவருடைய தலைமைத்துவ பண்பு தமிழர்களுக்கு உலகமெங்கும் ஒரு மரியாதையை ஏற்படுத்தி கொடுத்தது என்றால் மிகையாகாது. இன்று உலகமெங்கும் தமிழர்கள் நிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால் அதற்கு பின்னால் இருக்கும் நாமம் தேசிய தலைவர் “பிரபாகரன்” என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதுவே நிதர்சனமாகும்.

இன்று உலகில் வாழ்கின்ற இனங்கள் தங்களுடைய தலைவர்கள் என்று பலரை மகுடம் சூட்டி வாழ்ந்துகொண்டிருந்தாலும், ஈழத்தமிழர்களும் உலகெங்கும் வாழும் தமிழர்களும் தங்கள் நெஞ்சை நிமிர்த்தி “எங்கள் தலைவன்” என்று கூறும் ஒரே ஒரு தலைவராக இருப்பது தேசிய தலைவர் மாத்திரமே. காரணம், தலைவன் என்று கூறுவதற்கு உரிய அனைத்து பண்புகளையும் கொண்டவராகவும் அந்த பண்புகளுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவராகவும் தமிழர்களுக்கு தெரிந்த ஒருவர் என்றால் அது தேசியத் தலைவர் மாத்திரமே. அந்த அடிப்படையில் அவரின் இலட்சியம் ஒரு நாள் வெல்லும். அவரின் உருவம் என்றும் தமிழினத்தின் இதயங்களை ஆழ்ந்துகொண்டே இருக்கும். அந்த அடிப்படையில் அவருடைய இலட்சிய கனவு மெய்ப்படும் வகையில் அவருடைய பாதையை தெரிவு செய்து பயணிக்கும் இலட்சக்கணக்கானவர்கள் அவருடைய விடுதலை தாகத்தை முன்னெடுத்து செல்லவேண்டுமென இந்த உன்னதமான நாளில் உறுதி பூணவேண்டுமென “ஈழமுரசு” அறை கூவல் விடுப்பதுடன், தமிழீழ தேசிய தலைவரின் 69 ஆவது அகவைக்கு இதயம் கனிந்த வாழ்த்தை தெரிவிப்பதில் “ஈழமுரசு” பெருமகிழ்ச்சி கொள்கிறது.

ஈழமுரசு


Veerar Takeout & Catering
416-299-4541 / 647-293-6634
5790 Sheppard Avenue, #3, Scarborough, ON M1B 5J6

தமிழீழத் தேசிய மாவீரர் நாள் 2023

1st Mortgage, HomeEquity Line of Credit,
2nd & 3rd Mortgages, Refinance &
Private Mortgage
And For All Other Mortgage Needs

Jey Rasathurai BBA (Hon), AMP
Team Leader/Mortgage Broker
416-624-4843
1504 Markham Rd, Toronto.ON M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
MORTGAGE CLINIC
www.mortgageclinic.ca

வியாழன் தோறும் CANADA EELAMURASU

ஈழமுரசு

முரசு: 25 நவம்பர் 23 - நவம்பர் 30, 2023 இதழ்: 400

HOMELIFE / CHAMPIONS REALITY INC.
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
SINCE 1988

Realtors Wanted
FLEXIBLE SPLIT
OR FLAT FEE



UTAYAN PONNUTHURAI
BROKER OF RECORD, Bsc (Hons)
HOMELIFE HIGHER STANDARDS
D: 416 505 2120 B: 416 281 8090



Life Insurance?
It's for those you **LOVE** the most!

- RESP/RRSP
- Disability
- Investments for Children

ஆயுட்காப்புறுதி
Call: 416-704-8074

Excellent Rates!
Insurance Ajay
Are you Insured?

கடன் தொல்லையா?
Bankruptcy மட்டுமே தீர்வு அல்ல
GET DEBT FREE
WITHOUT BANKRUPTCY
For 30 years we have helped more than 55,000 people become debt free.
இலவசமான ஒரு நிமிடமும் இலவசமான விபரமும்
கரன் சிவநாதன் (HARAN Sivanathan)
Tel: 416 498 4326 / 416 803 8830
msi Spergel Inc., Licensed Insolvency Trustee
505 Consumers Rd., Suite 200, Toronto On M2J 4V8
(Victoria Park / Consumers Rd.)
Email: hsivanathan@spergel.ca | www.spergel.ca
கரன் சிவநாதன், Certified Insolvency Counsellor
Federally licensed

Bringing Your Dreams To Life!
Mahesan Subramaniam
416-816-0141
eXp REALTY
Free Home Evaluation with No Obligation

LONGO LAWYERS
Our Clients aren't just a file
Each are our life
SHENTHURAN SUBRAMANIAM
B.SC.,M.B.A., J.D.
(PERSONAL INJURY LAWYER)
4960 YONGE STREET, SUITE 401
TORONTO, ON. M2N 6K1
www.longolawyers.ca
CELL: 647-992-2417
FAX: 416-800-6247
PHONE: 416-800-4232
TOLL FREE: 1-844-800-4252

High Efficiency Heating & Cooling Air Solutions
AIR CONDITIONER SALE !!!
Repair & Service & Installation
FINANCING WITH $0 DOWN HOME ENERGY LOAN $15,000
Gas Line For BBQ, Stove, Dryer
FREE ESTIMATE
Sales, services & Repair
Kumar - 416.993.8001

416-904-7444
pari.sinnathamby@gmail.com
Higher Standard Agents... Higher Results!
Parithi Sinnathamby
Sales Representative
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
7240 Woodbine Ave., Suite 103,
Markham, ON. L3R 1A4
Tel: 905-305-1600 Fax: 905-305-1609

iConnect Mortgages
The best time for new beginings is now.
iconnect . mortgages . renewal . newbeginning
High Standards
Low Rate
Mortgages
DARSHAN SRITHARAN
Mortgage Agent
C: 416-836-0345
O: 416-291-4555
F: 416-298-1414
darshan@iconnectmortgages.ca
www.darshans.ca

QUICK & AFFORDABLE IMMIGRATION SERVICES
- PR APPLICATION
- FAMILY SPONSORSHIP
- STUDENT VISA
- WORK PERMITS
- SUPER VISA
- CAREGIVER VISA
- VISITOR VISA
- BUSINESS VISA

CALL NOW: 416-902-8225
RAMACHANDRAN LAW
Professional Corporation

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
உங்கள் உறவொன்றை பிரிந்து துடிமாறும் வேளையில் இறுதிநிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்
• Visitation • Funeral & Memorial Service
• Reception • Burial • Cremation
மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை
8911 Woodbine Avenue, Markham, Ontario L3R 5G1
Email: info@chapelridgefh.com
www.chapelridgefh.com
Christeen Seevaratnam 416-258-6759
Vilosanan Sivatharman 416-993-0826

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை

பிரபாகரன் இறைவன் ஆனான்... ஆறுமுகன் இறந்து போனான்.

ஆசியாக் கண்டத்தின்
உச்சத்தில் உதித்த
ஈழத்துச் சூரியன்!
அச்சத்தில் மூழ்கிய
அப்பாவித் தமிழரின்
விலங்கினை உடைத்து
உலகின் உச்சத்தில் வைத்த
உன்னதத் தலைவன் இவன்!

பிரித்தானிய வெள்ளையனுக்குப் பின்
தமிழனை சிங்களக் கொள்ளையன்
அடிமைப் படுத்தி ஆண்ட போது
இலங்கைத் தலையின் மூளையில்
வல்வைத் தாயின்
வீரத் திரு வயிற்றில்
உலகத் தமிழர்களின
ஒட்டு மொத்த மூளையாக
உயிராகி உருவாகினான்..!

கார்கால மழையில் - ஓர்
கார்த்திகை நாளில்
இருட்டியது ஊர
இருபத்தி ஆறு நன்னாளில்
எடுத்தது வீரத்தாய்க்கு வலி!
பிறந்தது தமிழுக்கு வீரப்புலி!
அன்று - உருவானது
தமிழர்களுக்கான புதிய வழி!!

இலங்கைத் தலையில் பிறந்து
தமிழர்களின் மூளையானன்!
ஐம்பத்து நான்காம் ஆண்டிலிருந்து
மூலையில் முடங்கிக் கிடந்த
ஈழத் தமிழர்களுக்கு
புதிய அத்தியாயமும் தொடங்கியது!
புதிய பாதையும் பிறந்தது!!

இரத்தச் சேறில் புதைந்த
தமிழர்களின் நிலையினையும்
பரல் தாரில் அவிந்த
குழந்தைகளின் உயிரினையும்
வலி நிறைந்த
வார்த்தைகளால் கேட்டு
தன் இதய வலிகளால் சுமந்தான்!
தலைகள் அறுக்கப்பட்டும்
தமிழர்களின் சொத்துக்கள்
நொறுக்கப்பட்டும் - பெண்களின்
மானங்கள் பறிக்கப்பட்டும்
புனித உயிர்ப்பைகள் நிரப்பப்பட்டும்
தாய்மை மார்புகள் அறுக்கப்பட்டும்
தமிழர்களின் உடலங்கள் அறுக்கப்பட்டு
மாமிசங்களாக்கப்பட்டும் - வீதியோரக்
கடைகளில் விற்கப்பட்டதையும்
முகவரிகளே இல்லாமல்
அழிக்கப்பட்டதையும்
பார்த்தும், படித்தும், கேட்டும்
பதறித் துடித்துப் போய்
பதினான்கு வயதினிலே
பிறந்தது நெஞ்சத்தில் வலி!
சிங்களனைக் கூண்டோடு அழிக்க
பதினேழு வயதினிலே
உறுமிப் பாய்ந்தது புதிய புலி!
நீங்கியது தமிழர்களைப் பிடித்த பிணி!
துவங்கியது
சிங்களவனுக்கு ஏழரைச் சனி!!

தாழ்ந்து போன தமிழன் எழுந்தான்!
எழுந்து வந்த தமிழன்
உலகினில் உயர்ந்தான்!
புலியாகிப் பொங்கி எழுந்து பாய்ந்தான்!
பலியாகிப் போய் மடிந்தான் சிங்களன்!
தமிழர்களின் வாழ்வில
பிறந்தது புதிய விடிவு!

சிங்களனுக்குத் தொடங்கியது
துன்பமான முடிவு!!

பதுங்கியிருந்த தமிழன் பாய்ந்தான்
பிரபாகரன் பெயர் சொல்லி எழுந்தான்..!
களங்கள் பல கண்டான்
காவியங்கள் பல படைத்தான்..!
எதிரிப்படைகளை எல்லா முனைகளிலும்
தாக்கி அழித்தான்..!
கடல் மீது ஏறியும்
காவியங்கள் பல படைத்தான்..!
சிறகுகள் முளைத்து
விண் மீது ஏறியும்
வானையும் சாடினான்..!
உலக ஆயுத பெரும் பலத்தின்
முன்னால்
மனபலத்தால் உடைத்தெறியும்
கரும்புலிகள்தனை படைத்தான்..!
எதிரி விழி பிதுங்கி
வாய் மூடி அடைத்தான்!!

பொங்கி வந்த படையெல்லாம்
நொந்த படையாகின
நொந்து போன படையெல்லாம்
இவனை ஒரு சக்தி என்றனர்..!
தம்மைக் காப்பாற்றாத
சாமி எல்லாம் எதற்கு என்றனர்..?

இலங்கைத் தலைநகரத்தின்
தலையில் ஏறி
உலுக்கிய போதுதான்
உலகமே உணர்ந்தது,
இவன் மனிதப் பிறவியல்ல
கடவுள்களின் அவதாரம் என்று!!!

ஆறடி அணுகுண்டு இவனை
அனுசரித்துப் போனால்தான்
பலனுண்டு என
பயந்தது இரக்கமற்ற இலங்கை!!
பணிந்தது வல்லாதிக்க வல்லரசுகள்!!!

தமிழனின் வீரம்
உலகறிந்த காலம
தமிழர்களுக்கென உருவாகியது
உலகினில் புதிய கோலம்..!
உலகறியாத் தமிழனையும்
உயரத்தில் பார்த்தது உலகம்..!
தமிழனின் தனி வீரமும்
புதிய தனித்துவமான அடையாளமும்
உலக வரலாற்றில் பதிந்து போனது!
இதுதான், பிரபாகரனின் காலம்!!!

இவனைப் போன்ற தலைவன்
உலகினில் எங்கும் இல்லை!
இவனைப் போன்ற வீரத் தலைவன்
இனி பிறக்கப் போவதும் இல்லை!!
ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்
அஞ்சா வீரத்துடன் பிறந்த
உலகின் ஒப்பற்ற தலைவன் இவன்!
தன் சொந்த மக்களுக்காகவே
தனது இரத்தத்தையே
பலியிட்ட மானத்தலைவன் இவன்!!

மூலவளங்கள் இல்லாத
கண்ணீர்த் தேசத்திலே
வீரத்தை விதைத்து
சுதந்திரக் காற்றினை
சுவாசிக்க வைத்து
மக்களின் கண்ணீரைத் துடைத்த
ஈர நெஞ்சுக்காரன்!!
இவனின் ஈர வரத்தினாலும்
வீரத் தவத்தினாலும்
இறைவனை மறந்து போய்
இவனையே இறைவன் எனக் கருதி
தமது நெஞ்சத்தில் இருத்தி
இதய தெய்வமாக வழிபட்டனர்
ஈழ மக்களுடன் உலகத் தமிழரும்!

உயிரற்ற..
வார்த்தைகளை அள்ளி விடும்
அரசியல்வாதிகளுக்கு அப்பால்

வருடத்திற்கு ஒரு தடவை பேசி
தமிழர்களின் கடவுளாகிப் போனான்!
இவனின் உயிர் வார்த்தைகளையும்
தத்துவங்களாக
உலகமே உள்வாங்கியது!!!
பேசாமலே இருந்து பேச வைத்தான்..!
இவன் பேசிய வார்த்தைகள்
மந்திரங்களாகின தமிழர்களுக்கு!
இவன் பேசாத நிமிடங்கள்
தந்திரங்களாகின எதிரிகளுக்கு!!

காலங் காலமாக
கடவுள்கள் செய்யாத கடமைகளை
தன்னகத்தே கொண்டு
தரணியெங்கும் வாழும் தமிழர்களின்
தனிப்பெரும் கடவுளானான்!!!

அரிதாரம் பூசிய போலியான
கதாநாயகர்களுக்கு மத்தியில்
அரிதாரம் பூசாத உண்மையான
கடவுளின் அவதாரம் இவன்!!
கொடுங்கோல் அரக்கர்களை
புதிய அவதாரம் எடுத்து
அழித்தொழித்தான்..!
தமிழர்களின் இதய அறைகளிலும்
வீட்டுப் பூசை அறைகளிலும்
புதிய கடவுளாக அவதரித்து நின்றான்!!

ஆறுமுகனைப் பார்த்தவர் யாருமில்லை!
பிரபாகரனைப் பார்க்காதவர் யாருமில்லை!!
உருவம் இல்லாத கடவுள்
மனிதரின் இதயங்களில் நிறைந்த மாதிரி
உருவமுள்ள எம் தலைவனும்
தமிழர்களின் இதயங்களில்
இன்று வரையும் உயிரோடு வாழ்கின்றான்!!!

இல்லாத கடவுளை
இருக்கிறார் என்கிறார்கள்
இருக்கின்ற தலைவரை
இல்லை என்கிறார்கள்!!!
இல்லாத கடவுள் இருக்கின்ற போது
இருக்கின்ற தலைவர்
எப்படி இல்லாமல் போனார்..?
இல்லை என்று சிலரும்
இருக்கிறார் என்று பலரும்
சாட்சியங்கள் தேடுகின்ற
மனிதர்களின் எண்ணங்களிலும்
தேடல் கொள்கின்ற இதயங்களிலும்
உயிரோடு வாழ்ந்து வருகின்ற
உண்மைக் கடவுள் இவன்!!!

உருவம் இல்லாத கடவுளுக்கு
சிலைகளை உருவாக்கும் இவ்வுலகில்
உருவமுள்ள எம் தலைவனுக்கு
அழகு வார்த்தைகளால் கூட
வர்ணனைகள் செய்ய முடியாது!
அலங்கார வார்த்தைகளால் கூட
அலங்காரம் செய்ய முடியாது!!
இவ்வுலகினில் உள்ள
எந்த வார்த்தைகளாலும்
அலங்கரிக்க முடியாத
உலகத் தமிழர்களின்
தனிப் பெரும் கடவுளாகிப் போனான்..!
இவன் கடவுளாகிப் போனதால்
எதுவும் செய்யாத கடவுள்
இறந்து போனான்!
தமிழனைக் காத்து இவன்
இறைவனாகிப் போனான்!!!

எம் இறைவனை வாழ்த்த
வார்த்தைகள் இல்லை இங்கே..!
அதனால், தமிழர்களாகிய
நாம் வணங்கிக் கொள்கின்றோம்
எம் இதயங்களின் உள்ளே!!!

கவியாக்கம்:- வல்வை அகலினியன்.
"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"



மாவீரர்களின் தியாகங்களும் தமிழினம் முன்னுள்ள சவாலும்

பகை முடிக்க படை நடத்தி தாயக விடுதலை என்கின்ற ஒற்றை இலக்கிற்காகக் குருதி சிந்தி, உயிரை விலையாகக் கொடுத்து வீரத்தின் இலக்கணமான மாவீரர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செய்து, அவர்களை பெருமைப்படுத்தும் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கு தாயக உறவுகளும் புலம்பெயர் உறவுகளும் தயாராகிக்கொண்டிருக்கின்றார்கள். "இதய கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்! மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை, அவர்கள் காலத்தை உருவாகிப்பவர்கள" என்ற தமிழீழ தேசிய தலைவரின் கூற்றுக்கிணங்க யுத்தம் மௌனிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்தும் ஈழத்தமிழர்கள் எமது மாவீரர்களை நெஞ்சில் சுமந்துகொண்டு சிங்கள பேரினவாதிகளின் பெரும் அடக்குமுறைகளையும் அச்சுறுத்தல்களையும் தகர்த்தெறிந்துகொண்டு நவம்பர் மாதத்தை தமிழீழ தேசிய தலைவரின் வழியில் முன்னெடுத்து வருகிறார்கள். 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் நவம்பர் மாதம் என்பது மாவீரர் எழுச்சி நாளாகத் தமிழீழம் எங்கும் கொண்டாடப்பட்டு வந்தது.

எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் எழுச்சி நாட்களானது நவம்பர் 25 இல் தொடங்கி நவம்பர் 27 இல் முடிவடைகின்றது. இம்மாவீரர் நாட்களைக் கொண்டாடும் முகமாக நவம்பர் 25 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழீழம் எங்கும் புனிதப்பட்டு விடும். மாவீரர் தூபிகள், நிழற்படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக் கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே, மக்கள் அனைவரும் தனித்தும், ஒருமித்தும் புனிதமாக்கி விடுவர். தமது இன்னுயிரை ஈந்து தமிழீழ விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அருஞ் செயல்களும் மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினர்களும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில், தமிழீழ தேசிய தலைவரின் எண்ணத்திலிருந்து உருவான மாவீரர் நாள் தேசியக் கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாட்கள் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகும்.

அனைத்துத் தமிழீழ மக்களும் அலங்கரிப்பு நிகழ்ச்சியிலும் வீரவணக்க நிகழ்வுகளிலும் கலந்துகொள்வார்கள். இந்த நாட்களில் வேறு களியாட்டங்களோ, கொண்டாட்டங்களோ நடைபெறமாட்டாது. தேவையற்ற கேளிக்கைகள், தேவையில்லாத நிகழ்வுகள் அனைத்தும் மறைந்துவிடும்.வீடுகள் தோறும் விடுதலைத் தேசிய கீதங்கள் ஒலிக்கும். மக்கள் பிரிவு, பிரிவாக, அமைப்புக்கள் ரீதியாக, ஆக்கபூர்வ வேலைத் திட்டங்களிலும், மற்றும், மாவீரர் நாள் நிகழ்வுகளிலும் கலந்துகொள்வர். ஆனால், 2009 இற்கு பின்னர் தமிழர் தாயகத்தில் நினைவுகூரல்களுக்கு சிங்கள பேரினவாதம் பெரும் தடைகளையும் அச்சுறுத்தல்களையும் செய்துவருகிறது. ஈழத்தமிழர்கள் தங்களுடைய உறவுகளை நினைந்து நினைவு கூருவதென்பது பெரும் போராட்டமாகவே இருந்துவருகிறது. அதேபோல், இந்த வருடமும் மாவீரர் நாளை தடைசெய்வதற்கு பொலிஸார் நீதிமன்றங்களை நாடத் தொடங்கியிருக்கிறார்கள். முள்ளிவாய்க்காலில் ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமான ஈழத் தமிழர்களை கொடூரமான முறையில் படுகொலை செய்ததற்கு காரணமான பலர் இன்றும் இலங்கையின் முக்கிய பதவிகளில் உள்ளனர்.அதேபோல், ஈழத்தமிழரின் விவகாரம் சர்வதேச அரங்கில் ஒரு பேசுபொருளாக இருந்தபோதிலும் தமிழீழத்தில் தமிழர்கள் அச்சமின்றி வாழ்வதைக்கூட அல்லது தங்களுடைய உறவுகளை நினைவுகூருவதற்கு கூட சர்வதேச சமூகம் இதுவரை ஒரு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் ஈழத்தமிழருக்கு வேதனையான ஒரு நிகழ்வாகும்.

ஆனாலும், எந்த தடைகள் - அச்சுறுத்தல்கள் - அடாவடிகளை சிங்கள பேரினவாதம் செய்தாலும் எமது மாவீரர்களை கௌரவிப்பதற்கு தமிழர் தாயகம் தயாராகிக்கொண்டிருக்கிறது. இது ஒரு நிகழ்வோ அல்லது களியாட்டமோ அல்ல. இது ஈழத்தமிழரின் இதய கூடுகளில் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் எமது மண்ணினுடைய வீரர்களை கௌரவிக்கும் ஆத்மார்த்தமான ஒரு நாளாகும். இதனை எந்த சக்தியாலும் அழித்துவிட முடியாது என்பதற்கு 2009 இற்கு பின்னர் தமிழர் தேசம் வீறுகொண்டு மாவீரர் நாளை அனுஷ்டித்து வருவது சிறந்த உதாரணமாகும். இந்த பூமிப்பந்தில் ஈழத்தமிழர்கள் என்ற ஒரு இனம் வாழும் வரை ஒவ்வொருவரின் மனங்களிலும் உணர்வுகளிலும் ஈழமண்ணின் மாவீரர்கள் வாழ்ந்துகொண்டிருப்பார்கள். அவர்களுடைய தியாகங்களையும் வீர செயற்பாடுகளையும் எமது வீர வரலாற்றையும் எதிர்கால சந்ததிக்கு கடத்தவேண்டிய பாரிய பொறுப்பு ஈழத்திலும் புலத்திலும் வாழும் ஒவ்வொரு பொறுப்புவாய்ந்தவர்களினதும் பாரிய கடமையாகும். ஈழத்தமிழினம் என்ற இனம் ஏனைய இனங்களை போன்று சுகபோகங்களை அனுபவித்த ஒரு இனமல்ல, ஏனைய இனங்களை போன்று விடுதலை காற்றை சுவாசித்த இனமல்ல. மாறாக சொந்த மண்ணில் அடக்குமுறைக்குள்ளும் உரிமைகள் மறுக்கப்பட்ட இனமாகவும் எதிரிகளின் சூழ்ச்சிகளுக்குள்ளும் போராடி - போராடி மண்ணையும் உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்காக இலட்சக்கணக்கான உறவுகளை மண்ணுக்கு வித்திட்ட ஒரு போராட்ட இனமாகும். ஆகவே எமது மாவீரர்கள் செய்த தியாகத்துக்கான பலன் கிடைக்கும்வரை எங்களுடைய போராட்டம் ஏதோவொரு வடிவில் தொடரவேண்டும். அதுதான் எங்களுடைய மாவீரர்களுக்கு நாங்கள் செய்யும் பிரதியுபகாரமாக அமையும் என்பதை இந்த நாளில் அனைவரும் நெஞ்சில் பதித்து கொள்வோம்.

தேசியத் தலைவரின் சிந்தனையிலிருந்து



எமது போராளிகளின் அற்புதமான தியாகங்களும், எமது மக்களாகிய உங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாடுமே எமது போராட்டத்தை உலக அரங்கில் பிரசித்தப்படுத்தியுள்ளது. நீதியையும், தர்மத்தையும் சுதந்திரத்தையும் இலட்சியமாகக் கருதிய எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெற்றியடைந்தே தீரும்.

மாவீரர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு மாவீரர்களின் நினைவை ஈழமுரசில் பதிவு செய்ய ஏமக்கு அனுப்பி வைக்கவும்



எங்களுக்காய் தங்கள் வாழ்வை தியாகம் செய்த எம் தெய்வங்களை தினமும் நினைவு கூருவோமாக.

ஈழமுரசு

எம்முடனான தொடர்புகளுக்கு:

647-657-8566



Email: eelamurasu@yahoo.com

web: www.eelamurasu.ca

All the rights reserved to Eelamurasu publication. Every effort is made to pro- vide accurate information in this publication. Eelamurasu Publication is not re- sponsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

கரிகாலன் வாழி (அகவற்பா) கரிகாலன் வாழி (அகவற்பா)



வாடா தமிழ்வீரா வந்துநில் என்னருகே
கூடாதார் கூட்டம் குடிகெடுக்கும் என்றாற்போல்
உடன்பிறந்தே கொல்லும் நோயாகி ஊர்ந்தூர்ந்து
மடம்பிடித்து முன்னேறும் இனவெறியர் செயல்பாராய்!
மண்நோக்கிப் பார்க்கும் விழியிரண்டை மேலுயர்த்தி
விண்பார்த்து விரிவறிக! வியன்புவியில் ஒருபோதும்
யார்க்கும் யாருமே அடிமைஅலர் என்பதறி!
தேக்குமரத் தோளின் திறம்காட்டு! நீண்டிருக்கும்
கையிரண்டால் தூசுகளைத் தட்டித் துடைத்திடுக !
பெய்யென்று நீசொல்ல நீள்வானும் மழைபொழியும்
மாலைப் பொழுதில் மரநிழலில் நம்மினத்து
வேலை நிகர்த்த விழிமடவார் அன்பருடன்
செந்தமிழிற் பேசிச் செழுங்காதல் வளர்த்தஇடம்
முந்தை வழியுள்ளார் விதைத்துண்ட வயற்பரப்பு
மொழியெல்லாம் பறிபோகும் கொடுமை இதுபாராய்!
செல்லரித்துப் போயொழிந்த செழுந்தமிழின் நூல்கள்போல்
எல்லாம் இழப்போமேல் ஏது எதிர்காலம்?
இவ்வாறு நாங்கள் அழிதல் முறையாமோ?
வவ்வால் எனமுகட்டில் தூங்குவது வாழ்வன்று
செவ்வாழை போலநாம் வாழ்வோம் என்பின்னே

வாருங்கள் பூரியரைப் போர்க்களத்தே சந்திப்போம்
சேருங்கள் புலியாகி அணியணியாய் என்றழைத்து
வீரம் விளைத்தமகன் விண்மண் கடலொன்றாய்ச்
சேரத் தமிழீழம் ஆண்டமகன் புகழ்போமா?
தங்கத் தமிழ்மகளிர் தனியணியாய்க் களம்நின்று
பொங்கு தமிழ்காக்க போரிட்ட வரலாற்றுப்
புறம்மீண்டும் படைத்தளித்த பேராண்மை மறப்போமா.?
வளவர் களமாடித் திரிந்த கடலெல்லாம்
தளமாக்கிச் செருச்செய்த கரிகாலன் எம்தலைவன்
உலகுளார் சேர்ந்து அழித்த விடுதலை
நிலமிசை மீண்டும் கண்டிட ஐயன்
வருவான் வாழ்வின் பொன்நாள் காண்பன்
வானக் கடல்கிழித்துக் கதிராக வந்தானை
ஞாலத் தமிழர் தலைவனென நின்றானை
பூவாகி நின்று புதுவாசம் தந்தானை
நாவாரப் பாடி நற்றமிழர் நெஞ்சத்துக்
காதற் திறம்காட்டிக் காலமெலாம் வாழிஎன
வாழ்த்து மழைபொழிவோம் கரிகாலன் வாழியவே!

-ஈழமுரசு கண்ணன்-





Office of the Prime Minister
Transnational Government of Tamil Eelam
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்
பிரதம அமைச்சரின் அலுவலகம்

875 Avenue of the Americas, Suite 906
New York, NY 10001, USA
www.tgte.org
pmo@tgte.org

தமிழ் ஈழக் கடல் தலைவரின் ஆளுமைக்குள் இருந்தபோது சீனாவின் ஆதிக்கம் ஸ்ரீலங்காவிற்குள் ஊடுருவவில்லை

அன்புக்கும் மதிப்பிற்குரிய தேசியத் தலைவர் பிரபாகரனின் 69 ஆவது அகவைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தேசியத் தலைவர், தமிழீழ தேசத்தின் குறியீடாக மட்டுமல்லாமல் உலகத் தமிழினத்தின் குறி யீடாகவும் விளங்குகின்றார்.

தமிழரின் வீரத்தை, தமிழரின் தியாகத்தை, தமிழரின் கொள்கை உறுதியை உலகிற்கு பறைசாற்றி பறைசாற்றியவர் எங்கள் தேசியத் தலைவர். நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக அந்நியர் ஆட்சியில் கொடியிழந்து இருந்த தமிழர் தேசத்திற்கு தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் உரிமை முரசறைந்து ஈழத் தமிழர் தேசத்திற்கான கொடியை அறிமுகம் செய்து வைத்தார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சோழப் பேரரசின் சின்னமாகவும், தமிழர்களின் வீரத்தையும், மாண்பையும் பிரதிபலிக்கும் சன்னமான புலிச்சின்னத்தை தேசியத் தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள் கொடியிலும், தமிழீழத் தேசியக் கொடியிலும் பதிவு செய்தார். சோழர் ஆட்சிக்காலத்தில் பறந்த புலிக்கொடியின் வரலாற்று நீட்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடியும் தமிழீழ தேசியக்கொடியும் அமைந்தன.

புலிச் சின்னத்தில் மட்டுமன்றி கடல் ஆளுமையிலும், சோழப் பேரரசின் நீட்சியாக தேசியத் தலைவரின் ஆளுமை அமைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்வு பூர்வமான தமிழீழ அரசு தமிழக நிலப்பரப்பில் மட்டுமன்றி தமிழ் ஈழத்தை அண்டிய கடற் பரப்பிலும் வியாபித்திருந்தது. 21 ஆம் நூற்றாண்டின் முதுகெலும்பாக இகழ்வது இந்துமா சமுத்திரம் என்பது அரசியல் வல்லுனர்களின் கருத்து. அந்த இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் தமிழீழக் கடல் அமைந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் அவ் மையமாக கடல் பரப்பு இருந்த சமயம் எந்த ஒரு அந்நிய சக்தியும் சிறிலங்காவிற்குள்ளே ஊடுருவவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரே சீனாவின் ஆக்கம் ஸ்ரீசிறிலங்காவில் தலை தூக்கத் தொடங்கியது.

இந்துமா கடல் நாடாக அல்லாத சீனா, முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் பின்னர், இலங்கையை மையமாகக் கொண்டு இந்துமா கடலில் தனது ஆதிக்கத்தை செலுத்த தொடங்கியுள்ளது. 9 வருட அம்பாந்தோட்டை துறைமுக குத்தகையும், கொழும்பு துறைமுக அபிவிருத்தி திட்டமும் சிறிலங்காவை சீனாவின் காலனிகளில் ஒன்றாக மாற்றியுள்ளது.

இந்துமா சமுத்தரத்தில் சீனாவின் ஆதிக்கம், அமெரிக்க நலன்களுக்கும், இந்திய நலன்களுக்கும் அச்சுறுத்தலாக இருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து அமெரிக்காவின் டியாகோ காசியாத் தளம் (Diego Garcia) ஏவுகணை தூரத்தில் உள்ளது. மேலும் அம்பாந்தோட்டை துறைமுகம் மூலமாக பாஇஸ்தான் கவுதா துறைமுகத்தையும் (Gwadar port) மியான்மரின் கொக்கோ தீவுகளையும் (Coco islands) இணைத்து சீனாவின் பட்டுப்பாதை (Chinese belt and road) விரிய உள்ளது. சிறிலங்காவின் தமிழின இனப்படுகொலையையும், தமிழின கட்டுமான இனப்படுகொலையையும் கவனத்தில் கொள்ளாமல் விடுவதன் மூலம் சிறிலங்காவை தனது நலன்களின் வலயத்துள் வைத்துக் கொள்ளலாம் என அமெரிக்காவும், இந்தியாவும் கனவு காண்டுன்றன. அம்பாந்தோட்டை துறைமுக 99 வருட குத்தகை ஏற்கனவே முடிந்த விடயம். அதனை அமெரிக்காவாலோ இந்தியாவாலோ மாற்ற முடியாதொன்று. இதுதான் யதார்த்தம்.

2008 ஆம் ஆண்டு மும்பை தாக்குதலில் ஈடுபட்டவர்கள் இந்து சமுத்இரத்தின் ஊடாகவே இந்தியாவிற்குள் நுழைந்தனர். 2008 ஆம் ஆண்டு இறுதிக்காலத்தில், இந்திய அமெரிக்க நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் ஆளுமையை பாதித்திருந்தது என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் ஆளுமை, இந்தியாவின் பாதுகாப்பிற்கும், இந்து சமுத்திரத்தின் அமைதிக்கும் உதவியது. ஈழத்தமி ழர்கள் தமது தாயகப் பூமியிலும் அதனை அண்டிய கடலிலும் வலுவாய் இருப்பதே இந்தியாவின் நலன்களுக்கும், இந்து சமுத்திரத்தின் சமாதானத்துக்கும் நன்மை பயக்கும்.



உங்கள் உறவுகளின் இழப்பில் உங்களுடன் இணைந்து உங்களுடன் ஒருவராக உங்களுக்காக சேவைபுரிய

Tharma stanislaus. BCom.
Funeral Counselor
call us:647-713-6049
dharman20@yahoo.com
"Saying Goodbye is so hard Let us make it easy for you"

AJAX
CREMATORIUM
& VISITATION CENTRE



தமிழ்த்தேசிய இனத்தின் உயிர்கொள்கையான தமிழீழத்தேசத்தைப் படைத்திட தலைவர் உதித்தத் திருநாளில் ஒவ்வொரு தமிழரும் உறுதியேற்போம்...

-சீமான்

நவம்பர் 26!

இன்றைய நாள் வரலாற்றின் வீதிகளில் தாழ்ந்து வீழ்ந்து கிடந்த தமிழர் என்ற தேசிய இனம் தன்னைத் தானே தலை உயர்த்தி நிமிர்ந்து பார்க்கின்ற புனித நாள். அழித்தொழிக்கப்பட்ட அடிமைத்தேசிய இனமாக உலக வீதிகளில் நாம் அலைந்தாலும் நமது உள்ளத்துக்குள் எரிகின்ற விடுதலை நெருப்பு இன்னும் அணையாமல் இருப்பதற்கான "ஒற்றைப் பெயர்" பிறந்த நன்னாள்.

அது நம் தேசியத் தலைவர் அன்பு அண்ணன் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் பிறந்த புனிதத் திருநாள்.

இந்த உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு தேசிய இனமும் தனது மொழி, நிலம், உரிமைகள், பண்பாட்டு, தேசிய இனத்தின் இறையாண்மை ஆகியவற்றைக் காப்பாற்ற போராடி வருகிற பெரும் கதையே உலக வரலாறாக அறியப்படுகிறது. கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தக் குடி எனப் போற்றப்படுகின்ற தமிழர் என்கின்ற தேசிய இனமும் பன்னெடுங்காலமாக தனது மொழி, நிலம், பண்பாட்டு அடையாளங்களைக் காப்பாற்றுவதற்கு போராடி வருகிறது. காலம் காலமாக உயிரைத் துச்சமாகக் கருதி, மானத்தையும், வீரத்தையும் உயிராகக் கருதி களத்தில் நின்ற பெருமாவீரர்கள்தான் தமிழ்த்தேசிய இனத்தின் தெய்வங்களாக, இறை வடிவங்களாக மாறி இருக்கிறார்கள். வரலாற்றுப் பெருமிதங்கள் நிறைந்த தமிழர் வரலாற்றில் நேர் எதிர் நின்று எதிரிகளை நோக்கி மாபெரும் வீரத்துடன் வேலெடுத்து பாய்ந்த முருகன், வாளெடுத்து சுழன்று திசை எட்டும் புலிக்கொடி பறக்க வைத்த சோழன், என காலப் பெருமையின் நீண்டு துலங்கும் பட்டியலில் அறம் வழி நின்று மறம் போற்றி வாழ்ந்து, தன் பெயரை தங்க எழுத்துக்களால் பொறித்து தனித்துவம் கண்ட தலைவராக மிளிர்ந்து சுடர்கிற சூரியனாய் விளங்குபவர்தான் நமதுயிர்த் தலைவர், அன்பு அண்ணன் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

இந்த உலகில் வாழ்கின்ற 12 கோடி தேசிய இன மக்களைக் கொண்ட தமிழினத்தின் இருபெரும் தாய் நிலங்களாக தாயகத்தமிழகமும், தமிழீழமும் இருந்து வருகின்றன. நடுவே பாய்ந்துப் பூரிக்கின்ற கடலலைகள் இரு பெரும் நிலங்களையும் பிரித்தாலும் குருதி முழுவதும் நிறைந்திருக்கின்ற மரபணுக்களின் ஒத்திசைவு உணர்வால், ஒரு தாயின் வயிற்றில் தோன்றிய ஒரே கருவறைப் பிள்ளைகள் என்கின்ற உறவால் ஒற்றைத் தேசிய இனத்தின் மக்களாக தமிழராகிய நாங்கள் வாழ்கின்றோம்.

நீண்ட நெடிய வரலாற்றுத் தொடர்ச்சி, எக்காலம் தோன்றியது என அறிய முடியாத அளவுக்கு இலக்கண, இலக்கிய செழுமைகளுடன் கூடிய மொழி முதுமை போன்ற பெரும் சிறப்புகள் தமிழினத்திற்கு இருந்தாலும் இறையாண்மையுடன் கூடிய ஒரு நாடு இல்லையே என்ற ஏக்கம் ஒவ்வொரு தமிழ் மகனின் மனதிற்குள்ளும் ஆழ்மனத்துக்கமாக பன்னெடுங்காலமாக இருந்து வந்தது. சிங்களப்பேரினவாத கரங்களுக்குள் நம் தாய் நாடான தமிழீழம் சிக்கித் தவித்த போது இதை மீட்க யாராவது எங்கிருந்தோ வர மாட்டார்களா? என்கிற தவிப்பு நம்மிடையே இருந்து வந்தது.

நம் மனதிற்குள் இருந்த அந்தத் துக்கத்தைத் துடைத்தெறிவதற்காக, ஏங்கித் தவித்த ஏக்கத்தை அழித்து முடிப்பதற்காக காலம் அளித்த கரிகாலனாக நம்மிடையே தோன்றி, சமகாலத்தில் தமிழர் என்ற தேசிய இனத்திற்கு முகமாக, முகவரியாக , ஊக்கமாக, ஆற்றலாக அடையாளமாக திகழ்பவர்தான் நம் தேசியத் தலைவர் அவர்கள்.

தனது அறநெறிப் போற்றி வாழ்ந்த வாழ்க்கை முறையினால், ஓங்கி உயர்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளால் இதுவரை தோன்றிய புரட்சியாளர்களில் நம் தேசியத் தலைவர் அண்ணன் பிரபாகரன் அவர்கள் ஆகச் சிறந்தவராகிறார். படையின் எண்ணிக்கையில் வெற்றியல்ல் எண்ணத்தில்தான் வெற்றி என்பதைப் பாருக்கு எடுத்துச் சொன்னதோடு மட்டுமில்லாமல் அதை நடைமுறைப்படுத்தி வரலாற்றில் வீரக்காவியமாக மாற்றி நிறுத்தியதும் தலைவர் பிரபாகரன் மட்டும் தான்.

ஒரு மக்களின் தலைவனின் வாழ்க்கை எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் அவர் விளங்கினார். மக்களோடு மக்களாக எளிய வாழ்க்கை வாழ்ந்து இறுதிவரை மக்களின் விடுதலைக்காகக் களத்திலே நின்று, எதிர்த்து நின்ற எதிரியைக்கூட உளப்பூர்வமாக வென்று காட்டியவர்தான் நம் தலைவர் பிரபாகரன் அவர்கள். அவர் கட்டமைத்த ஈழ சோசலிசக் குடியரசு இதுவரை தோன்றிய உலக நாடுகள் அனைத்திற்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தது. மது, புகை ஊழலற்ற, பாதுகாப்பான, மக்கள் நலன் பேணுகின்ற, மொழி பண்பாட்டு அடையாளங்களை பாதுகாக்கிற , சுற்றுப்புறச் சூழலியல் கருத்துக்களை உள்ளடக்கிய தாய்மைப் பொருளாதாரத்தைப் போற்றி வளர்த்த ஒரு பொதுமை அரசாக தலைவர் பிரபாகரன் கட்டியெழுப்பினார்.

அவர் கனவுப் பூமியாய் கட்டமைத்த நம் தமிழீழத் தேசத்தை உலக வல்லாதிக்கங்களின் துணையோடு சிங்களப் பேரினவாதம் இன்று அடிமைப் பூமியாக மாற்றி வைத்திருக்கிறது. வரலாறு காணாதத் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்து, உலக நாடுகளின் துணைகொண்டு நமது விடுதலைப்போராட்டத்தை சிங்கள அரசு தற்காலிகமாக முறியடித்து வைத்திருக்கிறது. போர் முடிந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் உலக அரங்கில் நமக்கென நீதி இன்றும் கிடைக்கவில்லை. இவ்உலகில் எல்லாத் தேசிய இனங்களையும் போல நமக்கும் சகலவிதமான உரிமையுடன் வாழக்கூடிய இறையாண்மை மிக்க ஒரு தேசம் இன்றளவும் அமையவில்லை.

நம் உயிர் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் கரங்களில் இருந்த விடுதலைப் போராட்டம் இன்று உலகத் தமிழர்களின் தோள்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எது நடந்தாலும் என்ன நிகழ்ந்தாலும் தமிழீழ நாட்டிற்கான விடுதலைப்போராட்டத்தை எந்த சூழ்நிலையிலும் கைவிடாமல் தொடர்ந்து எடுத்துச் செல்வதுதான் நம்முயிர் தலைவர் மீதான நமது ஆழ்ந்தப் பற்றுறுதியை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டுகிற உன்னதப்பணி என்பதை இப்புனித நாளில் உணர வேண்டும்.

இப்பூமிப்பந்தில் இறுதித்தமிழன் இருக்கும் வரை தமிழீழம் சாத்தியம்தான் என்பதை நம் சத்தியத்தலைவர் பிரபாகரன் அவர்களது வாழ்க்கையிலிருந்து நாம் எடுத்துக் கொள்கிற தத்துவமாக இருக்கிறது. மன உறுதி குலையாமல், விடுதலை நோக்கம் சிதையாமல் தமிழினம் தனது விடுதலைப்பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்பதுதான் நம் தலைவர் பிறந்த நாளில் நாம் எடுத்துக்கொள்ளும் ஆணையாக அமைகிறது. உலகம் முழுக்க வாழ்கின்ற எம் தாய்த்தமிழ் உறவுகளுக்கு தேசியத் தலைவர் என்னுயிர் அண்ணன் மேதகு வே. பிரபாகரன் அவர்களது 68 ஆவது அகவை தினத்தில் தமிழர் எழுச்சி நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்த்தேசிய இனத்தின் ஆன்ம விருப்பமான தமிழீழத்தேசத்தைப் படைத்திட தலைவர் உதித்தத் திருநாளில் ஒவ்வொரு தமிழரும் உறுதியேற்போம்!

வாழ்க தலைவர் பிரபாகரன்!
வெல்க தமிழீழம்!
சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர் நாம் தமிழர் கட்சி

Naam Thamilar Canada
நாம் தமிழர் கனடா
Babu 416-278-1728
Naam Thamilar Canada
நாம் தமிழர் கனடா



உலகத் தமிழர்களின் ஒப்பற்ற முகவரி மேதகு பிரபாகரன்.

அன்பு அண்ணனுக்கு அறுபத்தொன்பதாமாண்டு அகவைதின நல்வாழ்த்துகள்.

வ.கௌதமன்

ஐம்பதாயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட தமிழர் மண்ணை, வீரம் செறிந்த எத்தனையோ மன்னர்கள் ஆண்டதுண்டு.
வீரமும் ஈரமும் அறமும் சுமந்து ஆண்ட ஒரே ஒரு மன்னன் எமது அண்ணன் மேதகு பிரபாகரன் மட்டுமே உண்டு.

சிங்களக் காடையர்கள் ஒரு தமிழ்க் குழந்தையை கொதிக்கும் தாரினில் முக்கியெடுத்து தூக்கிய போது "ஏனப்பா நாம அவர்களை திருப்பி அடிக்கவில்லை" என்று தனது கை பிடித்து நடந்து வந்த தந்தையை கேள்விக் கேட்ட பால சிறுவன்.

தகப்பன் தனது கனவினை வெளிப்படுத்திய போது "படித்துவிட்டு அரசாங்கத்தில் சேர்வதல்ல எனது வேலை நித்தம் நித்தம் செத்துக் கொண்டிருக்கிற எமது மக்களுக்கு தனித்ததொரு அரசாங்கத்தை உருவாக்குவதே எனது தலையாய வேலை" என்று சொன்ன இளம் சிறுவன்.

"எதிரியை விட துரோகியே ஆபத்தானவன்" என சூளுரைத்து தமிழ் மாநாட்டில் தமிழர்கள் சாகக் காரணமாக இருந்த மேயர் ஆல்பர்ட் துரையப்பாவை நேருக்கு நேர் நின்று களையெடுத்த பதின்ம பருவ இளைஞன்.

காடையர்களும் ராணுவமும் கண் கொத்திப் பாம்பாக தேடிக் கொண்டிருக்க, பகல் முழுவதும் புறாக்களின் புழுக்கைகளோடும், எலிகளின் எச்சங்களோடும் முருகர் கோவிலின் உச்சியில் மூச்சடக்கி உட்கார்ந்திருந்து, இரவானதும் இறங்கி வந்து இயற்கை உபாதைகள் கழித்து தனது உயிரான தாய் நில விடுதலைக்காக, உயிருக்கு உயிரான நண்பர்களோடு வியூகமைத்துவிட்டு முப்பது நாட்களுக்கு மேல் சிகரத்தில் அமர்ந்து கண்விழித்து தமிழீழற்காக கனவு கண்ட பெருவீரன்.

இனமழிக்கும் எதிரிகளை கருவறுக்க தனது தாய்நில தமிழர்களைக் கொண்டே, உலகின் எந்த ஒரு நாட்டின் துணையுமின்றி காலாட் படை, கப்பல் படை, விமானப் படை என முப்படைகளையும் கட்டி தனித்ததொரு மக்கள் ராணுவத்தை கட்டமைத்த மாவீரன்.

அனைவரும் வியக்க அரசாண்டது பொறுக்காமல் சிங்கள அதிகார வர்க்கத்தோடு இவ்வுலகின் வல்லரசு நாடுகளனைத்தும் ஒன்றிணைந்து எங்கள் பிஞ்சுப் பிள்ளைகள் முதல் இளைஞர்கள், பெண்கள், பெரியவர்கள் என அனைவரையும் ஈவு இரக்கமின்றி கொத்துக் குண்டுகளையும் ரசாயன குண்டுகளையும் வீசி கொத்துக்கொத்தாக செத்து சிதறி எங்கள் நந்திக்கடல் செங்கடலான போதும் "எதிரியை மட்டும் எதிர்ப்போம் அவர்கள் வீட்டு பெண்களையும் குழந்தைகளையும் நம் வீட்டார்கள் போல் காப்போம்" என கொழும்பினை தகர்க்க வாய்ப்பிருந்தும் வன்மம் காட்டாது எங்கள் வள்ளுவன் வள்ளலாரை போல் "எதிரிக்கும் அருள்வாய் நன்னெஞ்சே" என்கிற அறக்கோட்பாட்டிற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்த எம் இனப் பெருந்தலைவன்.

இறுதி யுத்தம் செய்த இரத்த காட்டேரிகள் இராஜபக்சே, கோத்தபய, பசிலை அவர்களது சொந்த மக்களே அடித்து அவர்களின் மாளிகையை தீயிட்டுக் கொளுத்தி அவர்களை ஓட ஓட துரத்திய பின், தங்களின் "பசி"த்தீ அடங்காமல் கொழும்பு தார்ச் சாலையை நிறைத்தபடி நின்று "பிரபாகரன் இருந்திருந்தால் இந்நேரம் நாங்கள் பட்டினி கிடந்திருக்க மாட்டோம்" என ஒரு சிங்கள இளைஞன் பெருங்குரல் எடுத்து கூக்குரல் இட்ட பொழுதே எங்கள் அண்ணன் மேதகு பிரபாகரன் அவர்களின் பிறப்பு இதுவரை இந்த உலகில் எந்த தலைவனுக்குமில்லாத தனிப்பெரும் சிறப்பினை அடைந்துவிட்டது.

அப்படிப்பட்ட வீரமும் ஈரமும் அறமும் ஒருங்கே அமைந்த எனது தாய்க்கும் தாய் மொழிக்கும் சமமான எங்களண்ணன் மேதகு பிரபாகரன் அவர்களுக்கு ஒரு தம்பியாக அவருக்கு அறுபத்தொன்பதாமாண்டு அகவை தின நல்வாழ்த்துகளை எனது உயிர் நெகிழும் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

"உன்னைப்போல் ஒரு பிறப்பு இனி இவ்வுலகில் சாத்தியமில்லை. ஆனால் உன்னைப் போல் பல வளர்ப்பு தமிழினத்தில் சாத்தியமானது.

நீ இருக்கிறாயா இல்லையா என்கிற மர்மத்தை காலம் கட்டவிழ்க்கட்டும். அதுவரை பொறுமை காக்காமல் இனியாவது தமிழினம் இறுக கைப்பற்றி எம் தலைவனின் வலி சுமந்து புதியதொரு வழி சமைத்து தமிழினத்தை தலை நிமிர்த்துவோம்.

தமிழரின் தாகம்
தமிழீழத் தாயகம்.

வெல்வோம்.
பெரு நம்பிக்கையோடு,

வ. கௌதமன்
பொதுச் செயலாளர்
தமிழ்ப் பேரரசு கட்சி "சோழன்குடில்"
26.11.2023



சிங்களப் பேரினவாதம் என்ற பேரிருளை நீக்க வந்த பேரொளி தலைவர் பிரபாகரன் -– மா. க. ஈழவேந்தன்



அகவை 69 அடைந்துள்ள அவரை தமிழ் கூறும் நல்லுலகம் வாழ்த்துகிறது.

எம் அடிமை விலங்கை அறுத்தெறிந்து சிங்களப் பேரினவாதத்திலிருந்து எம்மை விடுவிக்க தோன்றியவர் தான் எங்கள் மேதகு தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். அவரது 69 வது அகவையை தமிழீழம் மட்டுமல்ல, தமிழ் கூறும் நல்லுலகமும் தமக்குள் அன்புப் போட்டி நடாத்தி விழா எடுத்து மகிழ இருக்கின்றனர் வருகிற நவம்பர் 26 இல்.

தலைவர் இருக்கிறாரா? இல்லையா? எங்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் உயிரோடு இருக்கிறாரா? அல்லது, நடந்த போரில் வீரச்சாவு அடைந்தாரா? என்ற கேள்வியும் கருத்து மோதலும் உலகெங்கும் உள்ள அரசியல் வட்டாரங்களில் வாதத்துக்குரிய பொருளாக இருக்கிறது. அவரை சாகடித்து விட்டோம் என்று வெறி கொண்ட சிங்கள அரசு கொக்கரிக்கிறது. எம்மை அழிக்கும் சிங்கள அரசின் வெறி போராட்டத்திற்கு துணை நின்ற இந்திய அரசிற்கு பக்கபலமாக நின்று துரோகி என்று வரலாற்றில் அழிக்க முடியாத பட்டத்தை பெற்றுள்ள கலைஞர் கருணாநிதியும் தமக்குள் உள்ளுர மகிழலாம். தம் பூகோள நலனை மட்டும் கருதிச் செயற்படும் உலக வல்லரசுகள் கூட புலிகளையும் ,புலிகளின் தலைவனையும் அழித்ததால் பயங்கரவாத்தை ஒழித்துகட்டி விட்டோம் என்று எக்காளம் விட்டுச் சிரிக்கலாம்.

நாடு கடந்த தமிழீழ அரசு ஆற்ற வேண்டிய நற்பணி ஆயுதப் போராட்டத்தை மீண்டும் தொடங்கும் வல்லமை விடுதலைப் புலிகளிடம் இருப்பதாக அனைத்துலகப் போர் வல்லுனர்கள் ஏற்கனவே கூறியுள்ளனர். எதிர் கால விடுதலைப் போராட்டம் தொடக்கத்தில் அறவழி போராட்டம், பின்பு ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. பின்பு காலத்தின் கருத்தோட்டத்திற்கேற்ப நாடுகடந்த தமிழீழ அரசை உருவாக்கி உலகின் கவனத்தை ஈர்க்கும் முறையில் தமிழர்களின் போராட்டம் வேறு வடிவம் எடுத்துள்ளது. தலைவர் குறிப்பிட்டதிற்கமைய காலத்திற்குக் காலம் போராட்ட வடிவங்கள் வௌவேறு வடிவம் எடுக்கும் ஆனால், குறிக்கோள் • இலட்சியம் என்றும் மாற்றமுற மாட்டாது என்பதற்கமைய எங்கள் போராட்ட வழிமுறைகள் மாற்றத்திற்குள்ளாகியபடி இருக்கின்றன.

ஆனால், எம் தலைவர் தொடர்ச்சியாக சொல்லி வந்ததற்கமைய . "உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்" என்ற உயர்ந்த வார்த்தை, தலைவர் பற்றி அடேல் பாலசிங்கம் தமிழ்ப் பெண்மணிகள் இருவர் எம் தலைவன் பிரபாகரனை ஏற்ற முறையில் எடுத்துரைக்கையில் நாம் என்ன சலித்தவரோ என்று வெள்ளைக்காரப் பெண் மதிவுரையாளர் பாலசிங்கத்தின் மனைவி அடேல் பாலசிங்கம் பிரபாகரனுடைய தோற்றத்தை, ஒளிபடைத்தக் கண்களை, பின்வருமாறு வர்ணிக்கிறார். "பிரபாகரனுடைய இளம் முகம் தெளிவானதாக, ஒளிமையமாக இருக்கும். அவருடைய அகன்ற கண் வழிகளில் ஊடுருவும் பார்வை உள்ளே ஊடறுத்து எம் உயிர் நிலையை உற்றுப் பார்ப்பது போன்ற உணர்வே மற்றவர்களுக்கு ஏற்படுத்தும்.

அவருடைய கண்களின் ஆழமே அவரது மனதையும் சிந்தனையையும் எதிரொலித்துக் காட்டும். மற்றவருடைய முகத்தை நுணுக்கமாக அளவிடுவது ஒரு பொதுவான நிகழ்வு. மற்றவருடைய ஒவ்வொரு சொல்லையும் அவரது பார்வை ஊடறுக்கும் பொழுது உரையாடலில் எவ்விதப் பொய்களோ அன்றி ஏமாற்றுகளோ நுழைவது என்பது இயலாத செயல்.? அடேல் பாலசிங்கம் வர்ணிக்கும் பிரபாகரனின் ஊடுருவும் கண்களைப் பற்றி பலர் வியந்து போற்றுவது நாம் அறிந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

நக்கீரன் நவில்வது திறனாய்வாளராக விளங்குகிற நக்கீரன் அவர்கள் பிரபாகரனை பற்றி? குனிந்த தமிழனின் தலையை நிமிர்த்தினாய்! கூனிய தமிழனின் முதுகெழும்பை நேராக்கினாய்! கும்பிட்ட கைகளில் குண்டுகளை கொடுத்தாய்! என்று கூறும் கூற்று, எம் சிந்தனைக்கு விருந்து.

அனித்தா பிரதாப் அறைந்தவை எம் தலைவன் பிரபாகரனை அடிக்கடி நேர் காணல் கண்டவர் அனித்தா பிரதாப் அவர்கள். அவர் தனது செங்குருதி படிந்த தீவு "பிரபாகரன் பற்றி எனக்கு ஏற்பட்ட ஆழமான கருத்துப் பதிவு என்னவென்றால் அது தமிழீழ இலட்சியத்திற்கான அவரது தடுமாற்றம் இல்லா ஈடுபாடு. அந்த ஈடுபாடு ஆழமானது, பேரத்திற்கு அப்பாற்பட்டது. நான் அவரை பல முறை நேர் காணல் கண்டிருக்கிறேன். காலப் போக்கில் அவரிடம் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவருக்கு வயது போய்விட்டது, சற்று பருத்து விட்டார், மீசையை எடுத்து விட்டார். ஆனால் அவரது இலட்சியத்திற்கான ஈடுபாட்டை பொறுத்தளவில் எந்த மாற்றமோ மெத்தனப் போக்கோ அல்லது நீர்ப்பத்தன்மையோ இல்லை" என்று கூறும் அனித்தா பிரதாப் அவர்கள் மேலும் பிரபாகரனை பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்.

"தாக்கப்பட்டால் பிரபாகரன் வெஞ்சினம் பூண்டு விடுகிறார். புலி இலட்சிணையை சும்மா அவர் தேர்ந்தெடுக்கவில்லை. பிரபாகரனது கரவு, பாய்தல், சூழ்ச்சி, தந்திரம், வழி மறித்துத் தாக்குதல் இவையெல்லாம் புலியினால் தூண்டப் பட்ட உணர்வுகள் ஆகும். புலியைப் போல அவரது வீரம் பச்சையானது. பெருமையுடைத்தும் ஆகும். சிறிது காலத்திற்கு முந்தி நான் அவரிடம் ஒரு வேள்வி கேட்டேன். "கடந்த 2 சகாப்த காலமாக ஒரு கொரிலா வீரனாக இருந்து வருகிறீர்கள். இந்தக் கால இடைவெளிக்குள் நீங்கள் கற்றுக் கொண்ட பாடம் என்ன?" அவர் அளித்த பதில் "எவன் துணிகிறானோ அவர் வெல்கிறான் (u;e who dares wins)" என்பது தான். ஆறு மாதம் கழித்து சஞ்சிகையில் எனது நேர்காணல் வெளியிடபட்ட பொழுது அதற்கு "டைம்" இதழ் கொடுத்த தலைப்பு அதுதான்.

மேற்குறித்த மேற்கோள்கள் பிரபாகரனுடைய உள்ள உறுதிக்கும் தொலை நோக்கு சிந்தனைக்கும் தலை சிறந்த எடுத்தக்காட்டு.

தலைவரின் 2008 மாவீரர் உரை 2008 ஆம் ஆண்டு கார்த்திகை 27 ஆம் நாள் அவருடைய இறுதி மாவீரர் உரையாக, வரலாற்றில் இடம்பெறும் உரையாக அமைகிறது.? எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காக தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புகளை எமது மண்ணிலே எமது மண்ணிற்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.?

"மனித துயரங்கள் எல்லாம் அடங்காத அருவெறுப்பான ஆசைகளில் இருந்தே பிறப்பெடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையில் இருந்தே தோற்றம் அளிக்கின்றன. ஆசையின் பிடியில் இருந்து மீட்சி பெறாத வரை சோகத்தின் சுமையில் இருந்தும் விடுபெற முடியாது. மண்ணாசை பிடித்து, சிங்களம் அழிவு நோக்கிய இராணுவப் பாதையில் இறங்கிருக்கிறது. உலகத்தையே திரட்டி வந்து எம்மோடு மோதுகின்றது. இராணுவ வெற்றி பற்றிய கனவுகளில் வாழுகிறது. சிங்களத்தின் இந்த கனவுகள் நிச்சயம் கலையும். எமது மாவீரர் கண்ட கனவு ஒரு நாள் நனவாகும். இது திண்ணம்.?

தலைவரின் கூற்று பற்றி கட்டுரையாளரின் கருத்து இக்கட்டுரையை நாம் வரைகின்ற வேளையில் மண்ணாசை பிடித்த சிங்கள அரசு அம்பாறையை அபகரித்து, திருமலையை விழுங்கி ஏப்பமிட்டு ? திருமலையை எரிமலை ஆக்கி, மட்டக்களப்பு மண்ணையும் தனதாக்கி நிறைவடையாத நிலையில் கேடினை நீக்கும் கேதீஸ்வரனுக்கும் கேடுகளை விழைவிக்கின்ற முறையில் புதை பொருள் ஆய்வு என்ற பெயரில் தமிழன் வரலாற்றை புதைக்க முனைகின்ற இவ்வரசு, மடுமாதாவையும் தனதாக்கிக் கொண்டு, முல்லைத்தீவை முற்றுகையிட்டு, மணலாற்றை வெலிஓயா என்ற சிங்களப் பெயர் சூட்டி அபகரிக்க முயல்கிறது சிங்கள அரசு. இத்தோடு வெறிபடங்காத சிங்கள அரசு வணங்கா வன்னி மண்ணையும் தன் வலைக்குள் சிக்க வைத்து, வன்னி மண்ணை ஆண்ட பண்டாரவன்னியனின் சிலையை சிதறடித்து, முறிகண்டியை முற்றுகையிட்டு, நயினாதீவு அம்மனையும் அப்புறப்படுத்தும் முயற்சியல் ஈடுபட்டுள்ள சிங்கள அரசு சங்கமித்தா குடி புகுந்த மண் என்று கூறி மாதகலையும் தனதாக்க முயல்கிறது. கொடியோடு, முடியோடு, சீரோடு, சிறப்போடு சங்கிலி மன்னன் ஆண்ட நல்லூரையும் கைப்பற்றும் நோக்குடன் நல்லூர் முருகன் கோயிலும் முற்றுகையிடப் படுகிறது. கிட்டுவின்

பூங்கா சின்னாபின்னம் ஆக்கப்பட்டுள்ளது, திலீபனின் சிலை சுக்கு நூறு ஆக்கப்பட்டுள்ளது. இந்த வெறியாட்டத்தைத் தொடர்ந்து கொழும்புத்துறையில் உள்ள மணியம் தோட்டத்தில் அயிரக்கணக்கான சிங்களவரை குடியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. யாழ்ப்பாண தொடர் வண்டி நிலையத்தை சுற்றியுள்ளப் பகுதி சிங்களவர் புகுந்து அட்டகாசம் செய்கின்றனர். தந்தை செல்வாவின் சிலை சீரழிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நூலகத்திற்குள்ளும் புகுந்து அங்குள்ள நூல்களை தூக்கி எறிந்த வெறியாட்டத்தையும் நாம் அறிந்துள்ளோம். 1981இல் உலகில் தலை சிறந்த யாழ் நூலகம் எறிக்கப் பட்டதை நாம் மறக்கவில்லை. மீண்டும் இந்நூலகத்தை எரியூட்டும் நிகழ்ச்சி உருவாகின் அது எமக்கு வியப்பில்லை. தலைவர் குறிப்பிடும் சிங்களவரின் மண்ணாசைக்கு இவை தலை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தலைவரின் 2008ஆம் ஆண்டு மாவீரர் உரை முழுவதையும் நாம் ஆய்வு செய்ய விரும்பினும் செய்தி இதழ்களில் ஏற்படும் இட நெருக்கடி காரணமாக நாம் விரிக்க விரும்பவில்லை. எனினும் ?பூமிப் பந்திலே ஈழத்தமிழினம் சிறிய தேசமாக இருக்கின்ற பொழுதும் நாம் பெரும் வலிமை வாய்ந்த ஒரு சக்தி மிக்க இனம். தன்னிகர் அற்ற ஒரு தனித்துவமான இனம். தனித்துவமான மொழியையும் பண்பாட்டு வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு பெருமை மிக்க இனம். இப்படியான எமது அருமை, பெருமைகளை எல்லாம் அழித்து தமிழீழத் தேசத்திலே தமிழரின் இறையாண்மை தகர்த்து விட்டு இராணுவ பலத்தால் சிங்களம் தமது இறைாண்மையை திணித்து விட துடிக்கிறது. தமிழரின் சுதந்திர இயக்கம் என்ற வகையில் நாம் எமது மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்புக்கோ சிங்கள ஆதிக்கத்திற்கோ என்றுமே இடம் அளிக்கப் போவதில்லை என்று தலைவர் கூறும் கூற்றை நாம் நினைவு கொள்வோமாக.

எத்தனை சவால்களுக்கும் முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர் கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவிற்காக தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில், காலம் விட்ட கட்டளைப்படி, சிங்கள அந்நிய ஆக்கிமிப்பு அகலும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

இந்த வரலாற்று சூழமைவில் தமிழர் உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாக குரல் எழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களை பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகின்றேன். அத்துடன் தங்களது தாராள உதவிகளை வழங்கி தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடும் கேட்டுக் கொள்கின்றேன். இந்த சந்தர்ப்பத்தில் தேச விடுதலைப் பணியை தீவிரமாக முன்னெடுத்து வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சத்திய இலட்சியத்தீயில் தம்மை அழித்து சரித்தரமாகிவிட்ட எமது மாவீரர் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என உறுதி எடுத்துக் கொள்வோமாக."

தலைவரின் உரை அனைத்து முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் புலம்பெயர்ந்த மக்களுக்கு, குறிப்பாக இளம் தமிழ் சமுதாயத்திற்கு விடுக்கின்ற வேண்டுகோள் எம் சிந்தனையைத் தூண்ட வேண்டிய குறிப்பாகும். எம் விடுதலை போராட்டத்தில் நாம் எவரும் பார்வையாளராய் இருக்க முடியாது. அனைவரும் பங்காளிகளாக மாற வேண்டும். செய்யத் தவறின் வரலாறு எம்மீது வசை பாடும். எம் வழித் தோன்றல்களே எம்மீது பழிசுமத்துவார்கள். இதற்கு நாம் இடம் கொடுக்க முடியுமா என்பது தான் நாம் எம்மை கேட்க வேண்டியக் கேள்வியாகும்.

தலைவர் பற்றி நூற்றாண்டு கண்ட நவரத்தினம் நவிந்தவை இவ்விடத்தில் இறுதியாக நூற்றாண்டு நிறைவைக் கண்டுள்ள பிரபாகரன் உள்ளத்தை ஆட்கொண்ட தமிழரசுக் கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்பட்ட திரு. வ. நவரத்தினம் அவர்கள் குயடட யனெ சுளைந ழக வுயஅடை யேவழைெ ? தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் என்ற நூலில் பக்கம் 389இல் எங்கள் தலைவன் பிரபாகரனை பற்றி கூறியுள்ள சொற்கள் பொருள் பொதிந்தவை ஆகும் • பொன் எழுத்தில் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும். இதோ அவர் எடுத்து இயம்பியவை.

"எல்லாப் பக்கத்திலும் இருந்து தாக்குதல் நடாத்தி தமிழ் மக்களின் நம்பிக்கைகளையும் அரசியற் வேட்கைகளையும் சாகடிக்கிற முயற்சிகள் நடைபெறுகின்ற வேளையில் ஈழத்தமிழ் மக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவனாக வேலுப்பிள்ளை பிரபாகரன் தென்னாசியா அகன்ற பூகோள அரசியலில் வகிக்கும் நிலை மிகப் பெரியது. தமிழ் இனத்தை முடித்துக்கட்டும் முயற்சி நடைபெறுகிற வேளையில் எம்மை பாதுகாக்கும் அரணாக அவர் விளங்குகின்றார். எம்மினம் மிகப் பேரழிவை எதிர் நோக்குகின்ற வேளையில் நாம் மாறுபட்டு, வேறுபட்டு தன்னலத்திற்கு அடிமையாக வாழ்ந்து எம் வழித்தோன்றல்கள் எம்மீது வசைபாட இடம் கொடாது அவர் தலைமையில் விளங்குகின்ற அணிக்கு பக்க துணையாக இருக்க வேண்டும். எம் வழித்தோன்றல்கள் தன்மானத்தோடும் பெருமையோடும் ஒரு நாட்டைக் கட்டிக் காக்கும் முறையில் விடுதலை பெற்ற இறமையுள்ள தமிழீழத்தை முந்தையோர் எமக்கு தந்துள்ளனர் எனப் பெருமை கொள்ளும் வகையில் எம் சிந்தனையும் செயற்பாடும் அமைய வேண்டும். உலகில் எந்தப் பாகத்திலும் இன்னலுக்கு ஆளாகுகின்ற எம் மக்களுக்காக நாம் தோற்றுவிக்கும் தமிழீழம் துணையாக அமைய வேண்டும்." தமிழன் வாழாத நாடில்லை. ஆனால், தமிழனுக்கு ஒரு நாடு இல்லை. இதை மாற்றி அமைக்கும் வகையில் தமிழனுக்கு ஒரு நாடு உண்டு, இது தமிழீழ நாடு. அது உலக வரலாற்றை மாற்றும். இதுவே எம் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இட்ட கட்டளையை நிறைவேற்றும் பணியாகும். இதுவே மறைந்தும் மறையாத தமிழ்ச்செல்வனுக்கும் மற்றைய மாவீர்களுக்கும் நாம் செய்கின்ற கைம்மாறு ஆகும்.

மா. க. ஈழவேந்தன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
நாடுகடந்த தமிழீழ அரசின்
கனடாப் பேராளர்

Life Insurance?
It's for those you LOVE the most!
●RESP/RRSP
●Disability
●Investments for Children
ஆயுட்காப்புறுதி
Call: 416-704-8074
Excellent Rates!
Insurance Ajay
Are you Insured?



பள்ளியில் தோழராய் தொடங்கினோம்
பழகும்போது நண்பராய் நெருங்கினோம்
தேசத்திற்காய் புறப்பட்டாய் தம்பியானாய்
ஆளுமையை வெளிப்படுத்தினாய், தலைவனாய்
தேசியம் உன்னை உணர்ந்த போது
தேசியத் தலைவனானாய்.
இன்று உலகத்தமிழரின் ஒப்பற்ற தலைவனுமானாய்
ஆம், எல்லாமும் ஆனாய் எல்லோருக்கும், ஆனால்
அறிமுகம் ஆகும்போதும், ஆபத்தில் இருக்கும்போதும் இன்று எங்கும் உன்பெருமை
உயர்ந்த பொழுதும் எனக்கு என்றும் நீ தந்த உறவு
அந்த நட்புறவு ஒன்றுதானே
யார் இருப்பார் உன்போல, என் உள்ளத்திலும்
நீ இருப்பாய் அந்த நட்புடனே!

நண்பனை வாழ்த்தும் நண்பன்

சிவபாலன் பாலசுந்தரம்





என் உயிருக்கு இன்று பிறந்த
நாள்...!!
உயிரற்ற ஜடமாக ஏங்குகிறேன்
இங்கே..!
உன்னை அள்ளி அணைத்து
முத்தமிட்டு வாழ்த்துச் சொல்ல
ஆசை அண்ணா...!!
உன் புகைப்படத்தின் முன்னால்
நின்று புலம்புகின்றேன் இங்கே..!!
என் புலம்பல் உன் செவிகளில்
வந்து விழுகிறதா அண்ணா....!!
ஒரு கணம் கலங்கினாலும்
மறு கணம்
உறுதி கொள்கிறேன்
அண்ணா...!!
உன் வளர்ப்பில்
வீரத்தையே எமக்கு
ஊட்டி வளர்த்தாய்,
அதனால் தான்
என்னவோ துயரமும்
தூளாகிறது..!!
ஒரு நாள் உன் மடியில்
தலை சாய்த்து
உனக்கு வாழ்த்துப் பாடுவேன்..!!
அதுவரை உன்
வரவை எண்ணிக்
காத்திருப்பேன் என் உயிர்
அண்ணா.!!

பிறந்த நாள்
வாழ்த்துக்களோடு
உன் அன்புத் தங்கை.....!!
எஸ். றதன் கார்த்திகா.

altona group
Luxury Home Builders



REGISTERED BUILDER TARION WARRANTY CORPORATION TARION
(416) 623-4903
www.altonagroup.com



கரிகாலன் காலம் மீளும்!

பாதந்தும் பாரெங்கும் தமிழர் போற்றும்
படி, அறுபத்தொன்பதும் அகவைச் சோழா!
நீ தந்த மறவீரம் அழிபட்டாலும்,
நீ தந்த போர்ப்பயிற்சி மறைந்திட்டாலும்
நீதந்த அறவீரம் நம்முள் இன்றும்
நிற்கிறது பன்மடங்காய்ப் பெருகி!
மேலும் சாதந்து பகைவன்
கொல் மாவீரர்கள்
தமிழீழம் மீட்க மீண்டும்
பிறக்கின்றார்கள்!

கண்மூடிப் பொயத்துயில்கொள்
தர்மம் நாளை

கனல்கக்கிப் பாய்ந்தெழும்பும்
வேளை எங்கள்
மண்மூடிக் கிடக்கின்ற
பெருமை எல்லாம்
மறுபடியும் ஓங்கியெழும் கரிகாலன் போல்!
விண்கூடிக் காத்திருக்கும் மாவீரர்கள்
விறைந்திங்கே பிறந்தெழுவர்!
விடியும் நாளை!
கண்கூடாய் காணுமிதை உலகம்! எங்கள்
கரிகாலன் காலம் மீளும்!
நிலைக்கும்! வாழி!

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்


ARUS JEWELLERS INC
AMMAN'S
For All Your Special Occasions Amman's
(416) 293 -7287
FAX(416) 291-7287
3341 Markham Rd Suite #104
Scarborough ON M1X 0A5
WWW.AMMANSJEWELLERS.COM




பிறந்த நாள் சிறப்பு

அடிமை என்றும் எண்ணுகின்றேன்!!
பிள்ளைபோல்...
நீங்கள் சென்ற இடம், தெரிந்திருந்தால்!! நான்
தேடி அவ் இடம் வந்திருப்பேன்!! நீங்கள்
சென்ற இடம், தெரிந்திருந்தால்!! நான்
தேடி அவ் இடம் வந்திருப்பேன்
பிள்ளைபோல்...

திருமலை சத்தியக்கவிஞன் (தலிங்கம்)
சிந்தனைக்கூடம்
நெதர்லாந்து 16 - 11- 2023

பிள்ளைபோல் என்னை அணைத்து!! (உங்கள்)
கார்த்து வளர்த்த எம் தலைவா!! நீங்கள்
போன இடம்!! தெரியாமல்
தவித்து ஏங்கி, நிற்கும் உன் உள்ளம்!!
பிள்ளைபோல்....

உங்கள் அணைப்பால், நான்
தனிமை என்று உணரவில்லை!! நான்
அடிமை என்றும், எண்ணவில்லை!! நீங்கள்
இன்று அருகில் இல்லை!! நான்
தனிமை என்று உணருகின்றேன்!! நான்

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
வீடு வாங்க, விற்க அல்லது
அது சம்பந்தமான விடயங்கள் அறிய
இலவச ஆலோசனைகளுக்கு உங்கள் நண்பன்
ஆனந் தர்மலிங்கம்
Office: 416.287.2222
1265 Morningside Ave. #203
Toronto, ON. M1B 3V9
Ananth Tharmalingam
Sales Representative
416.939.9525



பிரபாகரன் எனும் திசை

பிரபாகரன்..
பார்வதி ஈன்ற புனிதன்
பாரினில் சிறந்த மனிதன்

பிரபாகரன்...
ஆதித் தமிழினத்தின் குறியீடு
மீதித் தமிழினத்தின் முதலீடு..

பிரபாகரன்...
விடுதலை விதைத்த வயல்
கெடுதலை அறுத்த புயல்

பிரபாகரன்..
நிகரமை ஏற்றிய அகல்
சூரியனைச் சுடும் கடல்

பிரபாகரன்...
சோழப் பரம்பரை புலி
ஈழப் பரம்பரை ஒளி..

பிரபாகரன்...
கைகால் முளைத்த நெருப்பு
கவண்கல் எய்தத் துவக்கு

பிரபாகரன்..
கரும்புலி ஈன்ற பெரும்புலி
வான்புலி கண்ட தாய்ப்புலி

பிரபாகரன்...
காலனைச் சீண்டிய கரிகாலன்
ஈழனாய் தோன்றிய எள்ளாளன்

பிரபாகரன்...
காந்தள் மலரின் சாந்தன்
கருணை மனதின் வேந்தன்

பிரபாகரன்..
முப்படை முகிழ்த்த உடல்
எப்படை எதிர்த்தத் துகள்

பிரபாகரன்...
புறநானூற்று மிச்சத்தின் வீரம்
புரட்சிக்கு அடையாள தீரன்

பிரபாகரன்...
இளைய தலைமுறையின் திசை
உலகம் முழுமைக்கும் விசை

கவிபாஸ்கர்



தியாகத்தை உணர்த்தும் வரலாற்றின் மாவீரர் நினைவுச் சின்னங்கள்

ஜங்கரன் விக்கினேஸ்வரா

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவாக்கப்பட்ட உலகின் மிகவும் அடையாளம் காணக்கூடிய நினைவுச்சின்னங்களின் பின்னணியில் உள்ள வரலாற்றை நாங்கள் ஆராய்ந்து பார்த்தால் மானுட தியாகத்தின் உச்சத்தை நாம் அறியலாம். தியாக வரலாற்றினை உணர்த்தும் இந்த போர் நினைவுச் சின்னங்கள் உலகின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. உலக நாடுகளின் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் ஒவ்வொரு நாடும் தனது தேசத்து உயிர்த் தியாகிகளை தேச புருசர்களாகப் போற்றி தேசிய தினம் கொண்டாடுகின்றது.

உலகின் எந்தத் தேசத்தை எடுத்து நோக்கினாலும் போர் நினைவுச் சின்னங்கள், மாவீரர் துயிலகங்கள் தேசச் சொத்தாக பேணிப் பாதுகாக்கப்பட்டு பூசிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்டாலின்கிராட்: தாய்நாடு அழைக்கிறது

ரஷ்யாவில் மிகவும் அடையாளம் காணக்கூடிய நினைவுச்சின்னங்களில் ஒன்று, உலகில் எங்கும் இல்லாத, "தாய்நாடு அழைக்கிறது" நம்பமுடியாத 91 மீட்டர் உயரத்தில் கம்பீரமாக நிற்கிறது, இது ஸ்டாலின்கிராட் போரின் நினைவாக ரஷ்யாவின் வோல்கோகிராட்டில் உள்ள மாமேவ் குர்கானில் அமைந்துள்ளது. தாய்நாடு அழைக்கிறது நினைவுச் சின்னத்தை சிற்பி யெவ்ஜெனி வுச்செடிச் மற்றும் கட்டமைப்பு பொறியாளர் நிகோலாய் நிகிடின் ஆகியோரால் வடிவமைக்கப்பட்டது. 1967 ஆம் ஆண்டில், இது உலகின் மிகப்பெரிய சிலையாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று உலகிலேயே மிகப் பெரிய பெண் சிலையும் இதுவாகும்.

அமெரிக்காவில் அரிசோனா நினைவுச்சின்னம் :

அரிசோனா நினைவுச்சின்னம் ஹவாய் ஹொனலுலுவில் உள்ள பேர்ல் துறைமுகத்தில் அமைந்துள்ளது.

பேர்ல் துறைமுகத்தின் மீதான தாக்குதலின் போது ருளுளு அரிசோனா கப்பலில் உயிரிழந்த 1,177 மாலுமிகள் மற்றும் கடற்படையினரில் 1,102 பேர் நிரந்தர ஓய்வெடுக்கும் இடத்தை இது குறிக்கிறது.

1962 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த நினைவிடத்தை ஒவ்வொரு ஆண்டும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பார்வையிடுகின்றனர். கப்பலின் மூழ்கிய எச்சங்கள் மே 5, 1989 அன்று தேசிய வரலாற்று அடையாளமாக அறிவிக்கப்பட்டது. பார்வையாளர்கள் அரிசோனாவை கடலுக்கு அடியில் கிடப்பதைப் போல பார்க்க முடியும்.

இரண்டாம் உலகப் போரின் பெண்களுக்கான நினைவுச்சின்னம்

இரண்டாம் உலகப் போரின் பெண்களுக்கான நினைவுச்சின்னம் லண்டனில் உள்ள வைட்ஹாலில் அமைந்துள்ள ஒரு பிரிட்டிஷ் தேசிய போர் நினைவுச்சின்னமாகும். இந்த நினைவுச்சின்னம், ஜான் என்பவரால் செதுக்கப்பட்டது.

W. மில்ஸ், ராணி எலிசபெத் II ஆல் திறக்கப்பட்ட ஜூலை 2005 இல் பரோனஸ் பூத்ராய்டால் நிர்மாணிக்கப் பட்டது. இது 22 அடி (6.7 மீ) உயரத்தில் உள்ளது.

அதன் பக்கத்திலுள்ள எழுத்துகள் போர்க்கால புத்தகங்களில் பயன்படுத்தப்பட்ட எழுத்துருவைப் பிரதிபலிக்கிறது. சிற்பத்தில் உள்ள 17 விதமான ஆடைகள், போரின் போது பெண்கள் நூற்றுக்கணக்கான வெவ்வேறு வேலைகளைச் செய்ததைக் குறிக்கிறது. இந்த இரண்டாம் உலகப் போரின் பெண்களுக்கான நினைவுச்சின்னம் லண்டனில் உள்ள வைட்ஹாலில் அமைந்துள்ளது.

போலந்து படைகளின் போர் நினைவுச்சின்னம்: தேசிய நினைவு அமைவகம் :

150 ஏக்கர் காடுகளை உள்ளடக்கியதுடன்



முதலாம் உலகப் போர் மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் பிற மோதல்களில் வீழ்ந்த ராணுவ வீரர்கள் மற்றும் பெண்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் இங்கிலாந்தின் ஸ்டா.ர்போர்ட்ஷையரில் உள்ள லிச்.பீல்ட் அருகே அமைந்துள்ளது.

நேச நாட்டுப் படைகளின் ஒரு பகுதியாக நீண்டகாலமாக சேவை செய்து போரில் உயிர் இழந்தவர்க்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நினைவுச்சின்னம் ஆக உருவாக்கம் பெற்றுள்ளது. இந்த நினைவுச்சின்னங்கள் நான்கு வெண்கல வர்ணம் பூசப்பட்ட பொம்மை வீரர்களிடமிருந்து வந்தது போல் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை டாக்டர் ஆண்ட்ரெஜ் மீசன் கிலானோவ்ஸ்கியால் உருவாக்கப்பட்டது.

இந்த நினைவுச்சின்னம் போலந்து ஆயுதப் படைகளின் நான்கு கிளைகளை அடிப்படையாகக் கொண்டது: விமானப்படை, இராணுவம், கடற்படை மற்றும் போலந்து துணைப்படையை நினைவுகூரும் வகையில் கட்டப்பட்டது. இந்த போலந்து போர் நினைவுச்சின்னத்திற்கான வடிவமைப்பு நிறுவியவர் ஆர். சோபோசின்ஸ்கி

அலோய்ஷா நினைவுச்சின்னம்; ப்லோவ்டிவ் – பல்கேரியா

அலோய்ஷா என்பது 11 மீட்டர் உயரமுள்ள ஒரு சோவியத் சிப்பாயின் உறுதியான வலுவூட்டப்பட்ட கான்கிரீட் சிலை ஆகும். இது 1943 - 1946 இல் பல்கேரியாவின் விடுதலையின் போது சோவியத் உயிரிழப்புகளை நினைவுகூரும் வகையில் கட்டப்பட்டது. ஆயினும் ப்லோவ்டிவ் அதிகாரிகள் 1989 இல் சிலையை அகற்ற முயன்றனர். பின்னர் மீண்டும் 1996 இல், மீண்டும் முயற்சிக்க நிரந்தர பாதுகாப்புக்கு வழிவகுத்தது. சிலை உடைக்கப்படாமல் இருக்க காவலர்கள் இரவு பகலாக சிலை அருகே நின்றனர். இச்சிலையை உக்ரேனிய முன்னணியின் சிப்பாய் அலியோஷா ஸ்கர்லடோவ் இந்த சிலையை அமைக்க உத்வேகமாக பணியாற்றினார்.

கடல் வீரர்களின் போர் நினைவுச்சின்னம்:

இரண்டாம் உலகப் போரின் மற்றொரு சின்னமான கடல் வீரர்களின் போர் நினைவுச்சின்னம் (மரைன் கார்ப்ஸ் வார் மெமோரியல்) தி ஐவோ ஜிமா நினைவுச்சின்னம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆர்லிங்டன் ரிட்ஜ் பூங்கா, ஆர்லிங்டன், வர்ஜீனியாவில் உள்ள ஆர்லிங்டன் தேசிய கல்லறையின் நுழைவாயிலில் அமைந்துள்ளது.

இந்த நினைவுச்சின்னம் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கட்டப்பட்டது, மேலும் 1775 முதல் அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக இறந்த அமெரிக்காவின் கடல் வீரர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டது.

ஐவோ ஜிமா போரின் போது பிப்ரவரி 23, 1945 இல் சூரிபாச்சி மலையில் பெரிய அமெரிக்கக் கொடியை உயர்த்திய ஆறு படைவீரர்களை இந்த சிலை கொண்டுள்ளது.

பிரான்சின் நாடுகடத்தப்பட்டவரின் நினைவுச் சின்னம்

இந்த நினைவுச் சின்னம் இரண்டாம் உலகப் போரின்போது பிரான்சிலிருந்து நாஜி வதை முகாம்களுக்கு நாடு கடத்தப்பட்டவர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மெமோரியல் டெஸ் மார்டியர்ஸ் டி லா டிபோர்ட்டேஷன் (நாடுகடத்தப் பட்டவரின் நினைவுச்சின்னம்) என்பது பிரான்சின் பாரிஸில் உள்ள ஒரு நினைவுச் சின்னமாகும். இது Île de la Cité இல் உள்ள நோட்ரே டேமின் பின்னால் அமைந்துள்ளது.

பிரெஞ்சு நவீன கட்டிடக் கலைஞர் ஜார்ஜஸ்-ஹென்றி பிங்குசன் என்பவரால் இந்த நினைவுச் சின்னம் வடிவமைக்கப்பட்டது.

1962 இல் சார்லஸ் டி கோல் என்பவரால் திறந்து வைக்கப்பட்டது. கப்பலின் முனை போன்ற வடிவில், இரண்டு படிக்கட்டுகள் மற்றும் ஒரு தாழ்வான சதுரம் ஆகியவை நினைவுச்சின்னத்தை அணுக அனுமதிக்கின்றன. இதனுள் இரண்டு தேவாலயங்கள் உட்பட ஒரு அறுகோண பார்வைக்கை வழிவகுக்கிறது. அதன் சுவர்களில் பல வரலாற்று இலக்கியப் பகுதிகள் பொறியப்பட்டு உள்ளன.

பிரான்சின் அறியப்படாத நாடுகடத்தப்பட்டவரின் கல்லறையானது, நாஜிகளின் கீழ் பிரான்சில் இருந்து நாடு கடத்தப்பட்ட 200,000 மக்களைக் குறிக்கும் நினைவுச் சின்னம் ஆகும்.

டான்பாஸ் விடுதலையாளர்களுக்கான நினைவுச்சின்னம்:

இரண்டாம் உலகப் போரின் போது ரஷ்யாவின் டான்பாஸை விடுவித்த அனைத்து இராணுவ பிரிவுகளுக்கும் அமைப்புகளுக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் (டான்பாஸ் லிபரேட்டர்ஸ்) டோனெட்ஸ்கில் உள்ள லெனின் காம்சோமால் பூங்காவில் அமைந்துள்ளது.

இவ் நினைவுச்சின்னம் ஒரு முக்கோண வடிவில் உள்ளது. இது மூன்று சாய்ந்த சுவர்களின் குழுவானது தரையில் இருந்து வெளியே வரும் டொனெட்ஸ்க் டெரிகோன்களின் நிழற்படங்களை அவற்றின் கூர்மையான விளிம்புகளால் அடையாளப்படுத்துகிறது.

நினைவுச்சின்னத்தின் அடிவாரத்தில் ஒரு "நித்திய சுடர்" அமைந்துள்ளது.

டான்பாஸ் விடுதலையாளர்களுக்கான நினைவுச் சின்ன மேடையில் ஒரு சுரங்கத் தொழிலாளி மற்றும் சிப்பாய்களின் சிற்பம் உள்ளது. அவர்கள் ஒரு வாளை, அதன் விளிம்பைக் கீழே, தங்கள் வலது கைகளில் பிடிக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் ஐந்து புள்ளிகள் கொண்ட நட்சத்திரத்தின் வடிவம் உள்ளது.

நினைவு நாள் நிகழ்வுகளின் போது, வீரர்கள் நினைவுச்சின்னத்திற்கு நகரத்தின் வழியாக அணிவகுத்துச் செல்வர்.

உலகப் போர் முடிந்து 75 ஆண்டுகள் கடந்துவிட்டன.

உலகம் முழுவதும் நூற்றுக் கணக்கான போர் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டு, அவர்களின் தியாகங்கள் நினைவு கூரப்பட்டுவருகின்றன.

அவற்றில் கனடா மற்றும் பிரித்தானியாவில் கார்த்திகை பிறந்தால் அம் மக்கள் "பொப்பி எனும் பூ அணிந்து தமது வாழ்வுக்காகப் போரில் உயிர்நீத்த தமது போர்வீரர்களை நினைவுகூர்வதைக் காணலாம்.

அதுபோல பிரான்சில் பிரெஞ்சுப் புரட்சியின் நினைவு ஆடி 14 ஆம் நாள் தேசிய தினமாக மக்கள் பெருவிழாவாக சிறப்பிக்கப்படுகிறது.



எங்கள் அண்ணன் பிரபாகரன்
எங்கள் அண்ணன் பிரபாகரன் - தமிழ்
ஈழம் தந்த கருணாகரன் (2)
எங்கும் புகழ் படைத்தானவன் (2)
எங்கள் இன்னல்களை துடைத்தானவன் (2)

சத்தியத்தை மதித்தானவன் - தமிழ்
தாயகத்தை பிடித்தானவன் (2)
முத்தமிழை வளர்த்தானவன்
முத்தமிழை வளர்த்தானவன் - வீர
முத்திரையை பதித்தானவன்
(எங்கள் அண்ணன்)
ஆதிக்கத்தை வதைத்தானவன் - எங்கும்
அன்புதனை விதைத்தானவன் (2)
பாதகத்தை கலைத்தானவன்
பாதகத்தை கலைத்தானவன் - இந்த
பார்புகழ நிலைத்தானவன் (2)
(எங்கள் அண்ணன்)
அண்ணன் வழி அணிசேருவேன் - அவர்
ஆற்றலினால் பகைபோக்குவேம் (2)
கன்னித்தமிழ் துயர்நீக்குவேம்
கன்னித்தமிழ் துயர்நீக்குவேம் - வீர
காவியத்தை உருவாக்குவேன் (2)

எங்கள் அண்ணன் பிரபாகரன் - தமிழ்
ஈழம் தந்த கருணாகரன் (2)
எங்கும் புகழ் படைத்தானவன் (2)
எங்கள் இன்னல்களை துடைத்தானவன் (2)
எங்கள் அண்ணன் பிரபாகரன் - தமிழ்
ஈழம் தந்த கருணாகரன் (2)

பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
தமிழர் தாய்மண்ணை காக்கின்றான்
தமிழ் மானம் நிலைநாட்டி

பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
பிரபாகரன் எங்கள் வழிகாட்டி

புண்பட்ட தமிழீழத் தாயின் கருப்பையில்
புலியாக கருவானவன்
பொறுமை கடந்து பகைவர் நடுங்க
புயலாக உருவானவன்..... (2)
கண்பட்டுப் போகுமோஎன்றிந்த வையம்
கருதும் புகழ் கொண்டவன்..... (2)
களம்பாடும் புலவர்கள் உளம் துள்ள வரலாற்றில்
பல நூறு களம் கண்டவன்..... (2)

பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
எங்கள் தலைவன் போல் இன்றைக்கும்
நேற்றைக்கும் நாளைக்கும் எவனுமில்லை
எரிமலை மூச்சுக்கும் எழும்புயல் வீச்சுக்கும்
உலகினில் எதடா எல்லை..... (2)

பொங்கியெழுந்தெங்கள் தலைவனின் ஆணை
முடிப்பது எங்கள் வேலை..... (2)
போர்ப்பறை அதிர வா புலியே நீ
களம் நின்று தட்டடா தட்டு தோழை..... (2)

பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
வீரமே உருவான எங்கள் தலைவனை
யாரடா யார் வெல்லுவார்
வெந்தணல் விழி கொண்ட
வேங்கையின் முன்னின்று
யாரடா யார்துள்ளுவார்..... (2)

பாரடா அங்குபாரெங்கள் தலைவனின்
படைவீரர் களமாடினார்..... (2)
பாரடா கதிரவன் சுடர் பட்ட பனையாகி
பகைவீரர் பறந்தோடினார்..... (2)

பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
பிரபாகரன் எங்கள் வழிகாட்டி

உண்மையும் அறமும் உயிரென்று வாழும்
உள்ளம் எம் தலைவன் உள்ளம்
உரிமைப் போர் வெல்லும் வரை எங்கள்
மண்ணில் ஓயாது நெருப்பு வெள்ளம்..... (2)

கண்முன் எம் தலைவனின் காலத்தில் விரைவ-
ிலே
கோட்டையில் புலி பறக்கும்..... (2)
காலத்தை வெல்லவும் ஈழத்தை ஆளவும்
தமிழர்க்கோர் வழி பிறக்கும்..... (2)

பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
தமிழர் தாய்மண்ணை காக்கின்றான்
தமிழ் மானம் நிலைநாட்டி
பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
பிரபாகரன் எங்கள் வழிகாட்டி
--

COMMERCIAL & RESIDENTIAL MORTGAGES
PURCHASE AND REFINANCE
Commercial & Residential 1st & 2nd mortgages.
vacant land financing.
"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE



T.Antony Ponrajah
Mortgage Agent License: M08004007
Brokerage License # 10216
416.457.0651
Email: antonyres@gmail.com
40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5 | Tel: 416431.5115

We can arrange COMMERCIAL MORTGAGES with 10% down
DON'T FORGET, WE CAN CLOSE YOUR RESIDENTIAL MORTGAGE WITHIN 48 HOURS

ஈழச் சோழனே...

நேற்றுப் பிறந்த நாளை நீ...

கர்ப்பத்தில் உதித்த கதிரவன் நீ...

சத்தியம் பிரசவித்த தலைச்சன் நீ...

சிரிப்புச் சுமந்த செங்குருதி நீ...

அழுத விழிகளுக்கு அன்னை நீ...

அசுர மனங்களுக்கு அனலும் நீ...

ஆயுதம் கலங்கிய பேராயுதம் நீ...

அதர்மம் அஞ்சும் அணுவாயுதம் நீ

நஞ்சு சுமந்த அமுதம் நீ ...

பிஞ்சு, மரமான விந்தையும் நீ...

காடு சுமந்த கரிகாற் சோழனே–

'நாடு நாடு' உன் மூச்சின் ஒலியே...

கல்லணை துயின்ற ஈழச் சோழனே..

நல்லவர் நெஞ்சில் என்றும் நீயே நீயே..!

நெருப்பைக் கொளுத்திய நெருப்பே...

நெருங்கிய பேருக்குக் குளிர்ந்த நீரே...!

செங்கோல் சுமந்து, செம்மை செய்த

செய்யோன் வாழ்க வரலாறாய் நீடு..!

வாழ்க வாழ்க வரலாறே நீடு !

–திருமதி. கோதை அமுதன்







வாயடைத்து போனது அவ்வுலகம்

இருக்கிறானா? இல்லையா?
ஏடக்குது வீண் வாதம்
வாராது இந்த மயக்கம்
படித்திருந்தால் அவன் வேதம்.

அவன் இல்லை ஆகையால் அவன் இறைவன்
என்றது ஒர் உலகம்.
அவன் இருந்தாலும் அவன் நானே ஏம் இறைவன்
என்றேன்.
வாயடைத்து போனது அவ்வுலகம்.

இருக்கிறான் ஆகையால் காலத்தை வென்றவன்
என்றது ஒர் உலகம்.
இவன் எப்பொழுது காலதிடம் தோற்றான் என்றேன்.
வாயடைத்து போனது அவ்வுலகம்.

இருந்தால் அவனுக்கு இழுக்கு
இல்லாவிட்டால் அவனுக்கு மிடுக்கு
என்றது ஒர் உலகம்
இருக்கிறானோ இல்லையோ இயக்குபவன் அவன்
நானே என்றேன்.
வாயடைத்து போனது அவ்வுலகம்.

தொடக்கியதை முடித்து வைக்க அவன் வேண்டும்
என்றது ஒர் உலகம்.
அவன் பணி முடிவற்ற தொடர்.
உன்பணி எப்பொழுது தொடங்கும் என்றேன்.
வாயடைத்து போனது அவ்வுலகம்.

பேரிக்காலத்தை வீணடிக்காதவன் – இருப்பைப்
பேரி காலத்தை வீணடிக்கிறாயா என்றேன்.
வாயடைத்து போனது அவ்வுலகம்.

இரைக்காது மண்ணை காத்தவன்
இம்மைக்கும் நன்நலம் அறிந்திலன்
நம்மிடம் சுமக்கச்சொன்னது
நன்னையல்ல!
நன் கனவை!!
சொன்னதைச் செய் – அவன் மனம் குளிர.

– ஞானம் அன்ரனி



தமிழர் தேசத்தின் அடையாளம் கார்த்திகைப் பூ ! செங்காந்தள் மலர் தமிழ்நாட்டின் மாநில மலர் !!

நவீனன்

(எத்தகைய அடக்குமுறை வந்தபோதும்; ஆலயங்களில் மணி ஒலிப்பதோ; தீபம் ஏற்றுவதோ தடைசெய்யப்பட்ட போதும் மாவீரர் நாளில் கார்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்க தவறவில்லை. தமிழரின் இதய அஞ்சலியை துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும்; இயற்கையாக; கார்த்திகைப் பூ வடிவில் மாவீரர் நாளினை நினைவேந்துவதை யாராலும் அடக்க முடியவில்லை)

பண்டைய தமிழ் மன்னர்கள் தமது இராட்சியங்களுக்கு தனித்தனியான மலர்களைக் கொண்டிருந்தனர் என்பது வரலாற்றிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது.

கார்த்திகைப் பூவின் வரலாற்றுப் பாரம்பரியம்:

சோழருக்கு அத்திப் பூவும், சேரருக்கு பனம் பூவும், பாண்டியர்க்கு வேப்பம் பூவும் தேசிய மலர்களாக இருந்ததுள்ளன. மேற்குறிப்பிட்ட பூக்களின் மாலைகளையே அவர்கள் களமுனைகளுக்கு செல்லும் போது அணிந்து சென்றதாக வரலாறு கூறுகின்றன.

இங்கே காந்தள் என்பது கார்த்திகைப் பூவின் பாரம்பரியத் தமிழ்ப் பெயராகும். இவ்வரலாற்றுச் சான்றாதாரத்தினூடாக கார்த்திகை மலருக்கும் தமிழர் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெட்டத்தெளிவாகின்றது.

தேசத்தோடு மாத்திரமின்றி தேசத்தில் வாழுகின்ற மக்களின் நம்பிக்கைளிலும் பூக்கள் பங்கு வகிக்கின்றன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு உள்ளிட்ட சங்க இலக்கியங்களிலும் செங்காந்தள் மலர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய சிறப்புமிக்க மலர்தான் தமிழ்நாட்டின் மாநில மலராகப் போற்றப்படுகிறது.

தமிழ்நாட்டின் மாநில மலராக செங்காந்தள் :

செங்காந்தள், காந்தள் அல்லது கார்த்திகைப் பூ என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன. ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களில் காணப்படும் இந்த மலர் தமிழ்நாட்டின் மாநில மலராகத் திகழ்வது மிகவும் சிறப்புக்குரியது.

இம் மலர் `Gloriosa Superba' என்ற தாவரவியல் பெயரைக்கொண்டது. செங்காந்தள் மலர்ச் செடியின் அனைத்துப் பாகங்களிலும் "கோல்ச்சிசின்" (Colchicine) என்ற அல்கலாய்டுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

கார்த்திகை மாதத்தில் பூக்கும் இந்தப்பூ வேலிகளில் மட்டுமல்ல சாலையோரங்கள் மற்றும் காடுகளிலும் படர்ந்து வளரக்கூடியது. குறிப்பாக, மலைகள் மற்றும் சரிவுகளில் காணப்படும் இந்த மலர் அழகிய விரல்களைப் போலவும், சுடர்கள்போலவும் காட்சியளிக்கும்.

காந்தள் மலராக மலர்ச் செடியின் வேர்ப்பகுதியை "கண்வலிக்கிழங்கு", "கலப்பைக்கிழங்கு", "வெண்தோன்றிக்கிழங்கு", "கார்த்திகைக்கிழங்கு" என்றும் அழைக்கிறார்கள்.



செங்காந்தள் செடியின் கிழங்கிலிருந்துதான் புதிய கொடிகள் கிளைவிட்டுப் படரும். செடி வகையான இது, கொடிபோல் படரக்கூடியது. இலைகளின் நுனி நீண்டும் சுருண்டும் பற்றுக்கம்பிகள் போல அருகில் உள்ள மரம், செடி போன்றவற்றைப் பற்றிப் பிடித்து வளரக்கூடியது. இதன் இலைகளுக்கு காம்பு கிடையாது. ஆனால், கிழங்கின் ஒவ்வொரு பகுதியின் முனையிலும் புதிய கணு முளைக்கும்.

இதன் பூக்கள் பெரியவை. முதலில் பச்சை நிறத்துடன் பூக்கும் இந்த மலர் பிறகு வெண்மை கலந்த மஞ்சள், பிறகு மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு என நிறம் மாறிக்கொண்டே போகும்.

கார்த்திகை பூ தமிழரை காத்தவர்களின் பூ !

தீ கொழுந்துவிட்டு எரிவதுபோலக் காணப்படும் செங்காந்தள் பூவை "அக்னிசலம்" என்றும் சொல்வார்கள். கிழங்கு கலப்பையைப்போன்ற தோற்றத்துடன் காணப்படுவதால், அதை "கலப்பை" என்றும், "இலாங்கிலி" என்றும் சொல்வார்கள்.

இலைகளின் நுனி சுருண்டு காணப்படுவதால், "தலைச்சுருளி" என்பார்கள். மற்ற தாவரங்களைப் பற்றிக்கொண்டு வளர்வதால் "பற்றி" என்றும் சொல்வார்கள். வளைந்து பற்றிக்கொள்வதால், "கோடல்", "கோடை" என்று அழைக்கப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் பூ பூப்பதால் "கார்த்திகைப்பூ" எனப்படுகிறது.

மழைக்காலத்தில் வனப்புடன் காணப்படுவதால், "தோன்றி" என்றும் நாட்டு மருத்துவத்தில் "வெண்தோண்டி" என்று அழைப்பார்கள். இதன் பூக்களின் நிறம் வேறுபடுவதால், "வெண்காந்தள்" என்றும், "செங்காந்தள்" என்றும் வர்ணிக்கிறார்கள். கிழங்கு பிரிந்து கணுக்கள் காணப்படுவதை, "ஆண்காந்தள்" என்றும் கணுக்கள் இல்லாததை "பெண்காந்தள்" என்றும் சொல்வார்கள்.



தேனீக்களும் வட்டமிடும் காந்தள் மலர் :

செங்காந்தள் மலரில் தேன் அதிகமாகக் காணப்படுவதால், எப்போதும் வண்டுகளும் தேனீக்களும் வட்டமிட்டுக்கொண்டிருக்குமாம். பொதுவாக, மலர்கள் அனைத்துமே பூத்து உதிரக்கூடியவை.

ஆனால், செங்காந்தள் மலர் மட்டும் வாடினாலும் உதிர்வதில்லை. இந்தப் பூவை உற்றுப்பார்த்தால், கண்வலி வரும் என்று சொல்கிறார்கள், அதனால் இதை "கண்வலிப்பூ" என்றும் கிராப்புறங்களில் அழைக்கிறார்கள்.

இத்தகைய சிறப்புவாய்ந்த வரலாறுகளைக் கொண்ட செங்காந்தள் மலர் புற்றுநோய்க்கு நல்லதொரு மருந்தாகச் செயல்படுகிறது என்று கூறப்படுகிறது. குறிப்பாக, புற்றுநோய் பரவாமல் தடுக்கும் கால்சிசின் (colchicine) செங்காந்தளின் விதை, கிழங்கில் அதிகமாக உள்ளது.

இதற்காக செங்காந்தள் செடியின் விதையை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த மருந்து நிறுவனங்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றன எனவும் அறியப்படுகிறது.

மருந்தாக பயன்படும் செங்காந்தள் :

செங்காந்தள் பாம்புக்கடி, தேள்கடி போன்றவற்றுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. பாம்பு கடித்தவர்கள் இந்தச் செடியின் வேருடன் குப்பைமேனி வேர், நீலி வேர் சேர்த்து அரைத்து, அரை நெல்லிக்காய் அளவு தினமும் காலை, மாலை என மூன்று நாள்கள் சாப்பிட்டுவந்தால், விஷம் இறங்கும் என தமிழ்நாட்டில் கிராமிய வைத்தியர்கள் நம்புகின்றனர்.

உப்பில்லா பத்தியம் அவசியம். சிறிய பாம்புகள் கடித்தாலோ, வண்டு கடித்தாலோ இதன் இலையை அரைத்துப் பூசி சீயக்காய் தேய்த்துக் குளித்தால் விஷம் இறங்கிவிடும்.

செங்காந்தள் வேரில் செய்யப்பட்ட தைலத்தை வாரம் ஒருநாள் தலையில் தேய்த்துக் குளித்துவந்தால் எலி, வண்டு, பூரான், சாரைப்பாம்பு கடிபட்டவர்களுக்கு விஷத்தன்மை குறைந்துவிடும்.

மேலும், இந்தத் தைலத்தை மேகநோய், சொறி, சிரங்கு, படை உள்ளவர்கள் குளித்து வந்தால் நோய் குணமாகும். இத்தகைய சூழலில் புளி, புகைப்பிடித்தல், போதைப்பொருள் பயன்படுத்தக் கூடாது.

வாதநோய், மூட்டுவலி, தொழுநோயைக் குணப்படுத்துவதுடன் பால்வினை நோய், வெண்குஷ்டம் போன்றவற்றைக் குணப்படுத்தவும் இது பயன்படுகிறது. பிரசவவலியைத் தூண்டும் நல்ல மருந்தாகவும் இது செயல்படுகிறது.

மகத்தான மருத்துவப் பலன்கள் :

பிரசவத்தின்போது நஞ்சுக்கொடி இறங்காமல் அவதிப்படும் பெண்களுக்கு பச்சை செங்காந்தள் வேர்க்கிழங்கை அரைத்து தொப்புள், அடிவயிறு, உள்ளங்கை, உள்ளங்கால் போன்ற இடங்களில் தடவுவார்கள். உடனடியாக நஞ்சுக்கொடி இறங்கிவிட பச்சைச் செங்காந்தள் கிழங்கை சிறு துண்டுகளாக நறுக்கி அது மூழ்குமளவு வேப்பெண்ணெய் ஊற்றிக் காய்ச்ச வேண்டும். கிழங்குகள் மேலே மிதக்கும்போது அடுப்பிலிருந்து இறக்கி, ஆறவைத்து, பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பாரிசவாயு, தலைவலி, கழுத்து நரம்புவலி போன்றவற்றுக்கு இந்த எண்ணெயைத் தேய்த்துவந்தால், குணம் கிடைக்கும். மேலும் தலைப்பேன்களை ஒழிக்கும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

செங்காந்தள் செடியின் கிழங்கு ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருந்துகளில் பல்வேறு விதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

23ம் பக்கம் பரர்க்க...



Residential, Commercial, Refinance ALL YOUR MORTGAGE NEEDS

Ari Paramalingam

Mortgage Agent

T: 905.781.1356

F: 1.888.653.5161

E: arikaran@hotmail.com

MORTGAGE ALLIANCE

402-2 Country Court Blvd

Brampton, ON L6W 3W8

22ம் பக்கத் தொடர்ச்சி...



தமிழர் தேசத்தின் அடையாளம் கார்த்திகைப் பூ:

தமிழர் தேசியத்தின், தமிழர் தேசத்தின் அடையாளச் சின்னமாக பூக்கள் விளங்குவது யாவரும் அறிந்ததே. பூக்கள் அந்தந்த தேசியத்தினதும், தேசத்தினதும் வரலாற்று சமூக பண்பாட்டின் பால் பின்னிப்பிணைந்து உள்ளதை நாம் காணலாம்.

ஒவ்வொரு நாட்டினதும் தொடர்புபட்டுள்ள மலர்கள் தேசியப் பூக்களாக பிரகடனப்படுத்தப்பட்டு அந்தந்த தேசியங்களால் கௌரவிக்கப்படுவதும், தேசியக்கொடிக்கு சமமாக பேணப்படுவதும், தொன்றுதொட்டு நிலவிவரும் மரபு.

தழிழர்களின் தேசியப்பூவாக, தமிழீழத்தின் தேசியப் பூவாக கார்காலத்தில் மலர்ந்திடுவதும், தமிழீழ தேசியக்கொடியின் வர்ணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழீழத் தேசியத் நாளாம் மாவீரர் நாள் வருகின்ற நாட்களில் கொடிபரப்பி பூத்துக் குலுங்குவதும், தமிழீழ தேசமெங்ஙனம் பரவி முகிழ் விடுவதுமான காந்தாள் (கார்த்திகை) பூ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தேச நம்பிக்கைளின் பூக்கள்:

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி தாய்நாட்டுக்காக தமது உயிரை ஈந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களையும், அவர்களோடு சேர்ந்து போரிட்டு உயிர் ஈந்த எல்லைப்படை துணைப்படை வீரர்களையும், புலிகளோடு இணைந்து உயிர் ஈந்த ஈழ புரட்சி இயக்க (ஈரோஸ்) உறுப்பினர்களையும், மற்றும் குட்டிமணி, தங்கத்துரை போன்ற வேறு பல ஈழப்போராட்ட போராளிகளையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செய்து, பெருமைப்படுத்தும் நாள் மாவீரர் நாளாகும்.

இதற்குரிய நாளாக நவம்பர் 27 ஆம் நாள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரால் 1989 ஆண்டில் அறிவிக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் நினைவுகூரும் நாள் போன்று மற்ற நாடுகளில் போர்வீரர்களை நினைவு கூரும் நாட்களோடு தமிழீழ மாவீரர் நாள் ஒப்பிடத்தக்கது.

ஈழத்தமிழர் அனேகர் வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும், ஈழப் போராட்டத்தில் மடிந்த வீரர்களுக்கு மரியாதை செய்வர்.

ஈழப் போரில் இறந்த போராளிகளை நினைவுகூருவது, மதிப்பது தமது அடிப்படைக் கடமைகளில், கொள்கைகளில் ஒன்றாகக் தமிழ் மக்கள் கருதுகிறார்கள். முதன் முதலில் மாவீரர் நாளாக நவம்பர் 27 விடுதலைப் புலிகளால் 1989 அறிவிக்கப்பட்டது.

தமிழீழ மாவீரர் நாளாக இந்நாளைத் தேர்ந்தெடுத்ததற்கு தமிழீழ போராட்ட வரலாற்றுடன் இணைந்த ஒரு முக்கிய காரணம் உள்ளது. இந்த நாளில்தான் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முதலாவது போராளியான சங்கர் (செ. சத்தியநாதன்) வீரமரணம் அடைந்தார்.

மாவீரர் நாள் அடையாளமாக கார்த்திகை பூ:

உலக அரங்கில் ஈழத் தமிழினத்தின் குறியீடாக, வேறு எந்தப்பூவை விடவும் பொருத்தமான தேர்வாகக் கார்த்திகைப்பூ சிறப்புப் பெற்றுள்ளது. ஆனால் கார்த்திகை பூ சொல்லும் செய்தியை, அது கமழும் தேசிய வாசத்தை நுகர்வதற்குப் பேரினவாதம் தயாராக இல்லை.

இலங்கைத் தீவின் ஒரே ஒரு பூ நீலோற்பலம்தான் என்று அதன் நாசி வழிகள் எங்கும் நீலோற்பலத்தால் அடைத்து வைத்திருக்கிறது. இயற்கை, அதன் பரிணாமப் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கி எறிந்து தன் பல்லினத்துவத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது என்பதை வரலாறு பூராவும் நிரூபித்தே வந்துள்ளது.

கார்த்திகைப்பூவும் கார்த்திகைக் கனவுகளும் ஈழத்தமிழர்களினதும் புலம்பெயர் தமிழர்களினதும் வாழ்வில் மறக்கமுடியாத நாளாக கார்திகை 27 ம் திகதி காணப்படுகிறது.

மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் தம் உயிர்களை ஆயுதமாக்கி போராடி மடிந்த மாவீரர்களை நினைவேந்தும் நாள் மாவீரர் நாளுக்கென்றே பிறந்தாற்போல் இந்தமாதத்திலேயே கார்திகைப்பூக்களும் மலரும்.

மாவீரர்களை அஞ்சலிக்கும பூ:

தமிழீழத்தை அடையாளப்படுத்தும் சிகப்பு மஞ்சள் வர்ணங்களோடும் மாவீரர் நாளில் ஏற்றப்படும் சுடரைப் போன்ற தோற்றத்துடனும் கார்திகை மலர்கள் எவருக்கும் சொல்லாமலேயே மாவீரர்களை நினைவூட்டும்.

2009 இல் போர் மௌனித்த பின்னரும்,

எத்தகைய அடக்குமுறை வந்தபோதும் - மாவீரர் நாளில் ஆலயங்களில் மணி ஒலிப்பதோ, தீபம் ஏற்றுவதோ தடைசெய்யப்பட்ட போதும் கார்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்க தவறவில்லை. தமிழர்களின் அஞ்சலியை துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும் இயற்கை கார்த்திகைப் பூ வடிவில் மாவீரர் நாளினை நினைவேந்துவதை யாராலும் அடக்க முடியவில்லை.

இந்த நாள் இனிய நாள்.
எங்கள் இனத்தின்
தலைவர் பிறந்தநாள்.
தலைவரின் வீரம் கண்டு
உலகமே அஞ்சும்–
அவர்தம் ஈரம் கண்டு
தாய்மையே கெஞ்சும். கண்களை மூடி
உமை
நினைக்கும் போது காயத்தில் ஒரு
மாயத்தை உணர்கிறோம்.

வேங்கை தலைவனே!
நின் பிறந்த திகதி
சத்தியத்தின் வேரில்
பெயரானது. விலை
இல்லாத சுதந்திர
விடுதலைக்காக சுவாசத்தை
நிறுத்திய ஒவ்வொரு மாவீரனின் குரு–
தியிலும் உயிராக கலந்தது.

சுதந்திரகீதம் ஒலித்த உங்கள்
இதயத்துடிப்பு பரவிக்கிடக்கிறது
பார்க்கும் இடமெல்லாம்–
அந்த குழந்தை முகமும்
மழலைச்சிரிப்பும் ஆட்சி
செய்கிறது எம் ஆழ்மனதை.
எத்தனை அடக்குமுறையையும்
உடைத்து எறியவல்ல
வல்லமையே! ஆறு படை வீடு கொண்ட
ஆறுமுருகனையே கண்டோம்
உம் நடையில்.

அசாதாரணப்பிறவியே நின் ஆற்றல்
அடங்கிவிட்டது என்று நினைக்கும்
மூடர்கள்
மறவாதிருக்கட்டும். நெருப்பின் வடு
அழியாதென்பதை.

தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும்
மறுபடியும் தர்மமே வெல்லும்.

தூய கங்கை நீர் போன்ற தூமணியே!
சங்க தமிழ் வீரமரபதன் பிதாமகனே!
"பிரபாகரன்" எனும் மந்திரமே
வாழ்த்துக்கள்! வாழ்க வளமுடன்
என்றும் நலமுடன்.

தாயகத்திலிருந்து
கண்ணம்மா அறிவழகன்.





BUYING SELLING LEASING

CANADIAN HOME APPRAISALS INC. /OTTAWA BRANCH
We at Canadian Home Appraisals Inc in Ottawa branch are hiring for real estate appraisers and a receptionist. Most be fluent in English and have completed a college diploma or university degree. If you are looking for a fast paced and exciting career, please email your resume to chai@chainc.ca or please call

RE/MAX ACE REALTY INC. BROKERAGE

உங்கள் வருமானத்திற்கு ஏற்ப
விரும்பிய இடத்தில்
.விரும்பிய விலையில் வீடு வாங்க

S.K Bales
Real Estate Broker Car,P,APP,MVA,FRI,CRES Cell:416-801-3219

களம் வீழ்ந்த முதல் வேங்கை!

மாவீரர் தினம் இதுதான்!

ஒரு நாள் அதிகலை, யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டை சுற்றிச் சிங்கள இராணுவம் முற்றுகையிடுகிறது. 1982ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியபோது காயமடைந்த விடுதலைப் புலிகளுக்கு அந்த வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து. இராணுவத்தினால் அந்த வீடு முற்றுகையிடப்படுகிறது.

அவ்வேளையில் ஒரு இளைஞன் முற்றுகையிட்டவர்களை நோக்கி தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டவாறே வீட்டு மதிலைத் தாண்டிக் குதித்து ஓடுகிறான்.

அவனை நோக்கி சிங்கள இராணுவத்தினரின் துப்பாக்கிவேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்படுகின்றன. அப்போது அந்த இளைஞனின் வயிற்றில் ஒரு குண்டு பாய்கிறது.

படுகாயமுற்ற நிலையிலும் கூட அவன் இராணுவத்தினரிடம் அகப்பட்டு விடக்கூடாது என்ற இலட்சிய உறுதியோடு இரண்டு மைல் தூரம் இடைவிடாமல் ஓடி தன் இயக்கத் தோழர்களின் இருப்பிடத்தை அடைகிறான். தோழர்களிடம் தன் கைத்துப்பாக்கியை ஒப்படைத்துவிட்டு கீழே விழுந்து மூர்ச்சையாகிறான். வயிற்றில் ஏற்பட்ட காயத்திலிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறியமையினால் இரும்பை ஒத்த அவன் கட்டுடல் சோர்வடைகிறது.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால கட்டமாகையால், அப்போது அங்கு போதிய மருத்துவவசதி ஏற்படுத்தப்படவில்லை. அவசர அவசரமாக முதலுதவிகள் செய்யப்பட்ட நிலையில் அவனைத் தோழர்கள் விசைப் படகுகள் மூலம் கடல் மார்க்கமாகத் தமிழகத்திற்கு அழைத்துச் செல்கின்றார்கள.

இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கை, முற்றுகை இவற்றைத் தாண்டி தமிழகம் செல்ல ஒருவராமாகிறது. தமிழகத்தில் தலைவர் பிரபாகரனைக் கண்டு பேசும் வரை அவன் நினைவு தப்பவில்லை இருந்த போதிலும் வயிற்றில் ஏற்பட்ட காயத்தின் நிலை மோசமடைந்து, அவனைப் பிழைக்கவைக்க அவனது தோழர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. தலைவரும் தோழர்களும் கண்கலங்கி நிற்க (27.11.1982இல்) அந்த இளைஞன் இயக்கத்தில் முதற் களப்பலியாகும் பெருமையை இணைத்துக் கொள்கின்றான்.

அவன்தான் லெப்டினன் சங்கர் (சுரேஸ்)

சிங்கள ஆயுதப்படையினர் வலைவிரித்துத் தேடிவந்த செ. சத்தியநாதன் வடமராட்சியைச் சேர்ந்த கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கர் அதே இடத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வீரச்சாவடைந்த கப்டன் பண்டிதரின் (ரவீந்திரன்) பள்ளித் தோழன். (லெப்டினன் சங்கர் இறந்து இரண்டு ஆண்டுகளின் பின் இராணுவ முற்றுகையின் போது அச்சுவேலியில் ஏற்ப்பட்ட நேரடி மோதலில் கப்டன் பண்டிதர் வீரச்சாவு அடைந்தார்)

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கெரில்லாவீரன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன், ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்து விடக்கூடிய வெடி குண்டுகளின் தயாரிப்புகளிலும் அச்சமில்லாது ஈடுபடுவான்.

அரச படைகளின் தீவிரக் கண்காணிப்புக்கு



நவம்பர் 27 - மாவீரர் நாள்
விடுதலைப் புலிகளின் முதலாவது மாவீரன்
லெப்டினன் சங்கர்

அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி கிராமங்களில், வீதிகளில் சாதாரணமாக உலவி வருவான். அதே நேரத்தில் சுழன்று கொண்டிருக்கும் அவன் விழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறுங்கூட ஒரு கெரில்லாவீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆப்த்தை ஏற்படுத்தும் என்பதில் சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரச படைகளின் கையில் சிக்க நேருமானல் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்திவிட்டுத் தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. இருபத்தொரு வயதில் அவன் சாதித்வை தமிழீழப் போராட்ட வராலாற்றுக்குச் சொந்தமானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கிவிடமுடியும் என்று பாசிசசர்வாதிகாரி ஜே.ஆர். ஜெயவர்த்தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்த போது நெல்லியடியில் அரசபடைகள் மீது சங்கர் நடத்திய கெரில்லத்தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போரட்டம் ஓயாது, ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது. ஜீப்சாரதியின் மீது வெற்றிகரமான முதல் தாக்குதலைநடத்தி, ஜீப்வண்டியை நிறுத்தவைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒருகையில் வெளியே இழுத்து எறிந்தவாறு மறு எதிரியை நோக்கி குண்டுகளைத் தீர்த்த யாவகம் சங்கருக்கே உரியது. இருப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறி வைக்கும் அவனது சாதுரியம் அசலானது நெல்லியடியில் அரசபடையினர் பீதியுற்ற நிலையில், சங்கர் கால்களை அகல விரித்து பக்கவாட்டில் நின்ற அரச படையினர் மீது குண்டுமாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில்லாத் தாக்குதலின் வெற்றிக்கு சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் பொலிஸ் நிலையங்கள் உஷார்ப்படுத்தப் பட்டிருந்த நிலையில் மாடிக்கட்டிடத்தோடு பிரதான வீதியிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது முன்பக்க வாயிலூடாக தாக்குதல் நடத்துவது என்பது வி' ப்பரீட்சைதான் ஆனால் உயிரை கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் ஆகிய போராளிகளின் முன்னே அபாயங்களும் தடைகளும் என்ன செய்து விடமுடியும்? ஐ2 சகிதம் படுத்துக்கிடந்த சங்கர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் ஒரு பகுதிக்கு பொறுப்பாக இருந்து நடத்திய தாக்குதல் இப்பகுதி அரசபடைகளை ஸ்த்தம்பிக்கச் செய்ததும்.

பொன்னலைக் குண்டுவெடிப்பு நடவடிக்கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தான். ஐக்கிய தேசியக் கட்சி (ஜெயவர்த்தனாக் கட்சி) உறுப்பினர் புன்னாலைக்கட்டுவன் தம்பாப்பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்கு சங்கரே பொறுப்புவகித்தான்.

எந்த விதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பன்முனைப் பட்ட ஆற்றலுக்கு சான்றாகும். ஒரு கெரில்லாத் தாக்குதலை அடுத்து ஏற்படுகிற பரபரப்பு, எதிரிப்படைகள் அந்த இடத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றுக்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடன் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும்போது மிகுந்த கவனம் செலுத்துவான். தேளிவாக விளக்குவான். தனக்கு தெரியாத வி' யங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சகபோராளிகள் மத்தியில் தனிமதிப்பு வகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல், இராணுவத் தலைமையிலேதான் வென்றெடுக்கமுடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர் இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவன். விடுதலைப்போராட்டமே சங்கரின் முழுமூச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூகவிரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்ப வாதிகளையும் அவன் வெறுத்தான் அவன் மனது மிகவும் சுத்தமானது. இத்தகைய இதயசுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.

இயக்கத் தலைவர் பிரபாகரனின் அரசியல் வழிகாட்டலிலும் இராணுவக் கட்டுக்கோப்பிலும் சங்கர் ஊறி வளர்த்தவன். பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்நலமற்ற - தூய்மை மிக்க விடுதலைப் போராளிகளால்தான் தலைமையேற்று நடத்தப்படவேண்டும் என்று அவன் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறான். பதவிப்பித்தர்களும், துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமைதியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கிறான்.

நன்றி - தமிழீழம் சஞ்சிகை

Bhairavi Music Academy
Keyboard | Piano | Flute | Violin | Vocal | Guitar
T.Jeyachandran
Tel: 647-206-7886 / 416-724-2006
www.bhairavionline.com
bhairavimusicacademy@gmail.com

தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு வித்தாக அமைந்த முதலாவது தமிழீழ காவிய நாயகி

2ம் லெப்.மாலதி



10.10.1987 அன்று யாழ். கோப்பாய்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோத லின்போது வீரச்சாவினைத் தழு விக் கொண்ட முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி அவர் கட்கு எமது வீரவணக்கங்களைச் செலுத்துகின்றோம்.

தமிழீழப் பெண்களின் எழுச் சிக்கு வித்தாகி வீழ்ந்த விடு தலைச்சுடர்.

எமது சமூகத்தில் வேரூன்றி யிருந்த, பெண் என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும். பெண்ணானவள் இப்படித்தான் இருப்பாள். இதற்கு மேல் அவ ளால் முடியாது. ஆணைவிட பெண்ணுக்கு ஆற்றல் குறைவு என்ற கருத்துக்களை 2ஆம் லெப். மாலதி 28 ஆண்டுகளுக்கு முன் பொய்யாக்கினாள்.

பெண்ணினால் எல்லாம் முடியும் என்று செய்து காட்டினாள். அந்நிய ஆக்கிரமிப்பில் எமது தேசம் துவண்டிருந்த போது வீறு கொண்டெழுந்தாள். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளா வதைப் பார்த்துக் கொதித்தாள்.

நாட்டின் விடுதலையோடு பெண்ணினத்தின் விடுதலையை யும் கருத்தில் கொண்டு ஆயுதம் தூ க்கியவள், அந்த இலட்சியக் கனவோடே வீரச்சாவை தழுவிக் கொண்டாள். அன்று (10.10.1987) நடுராத்திரியில் தமிழ் பெண் களுக்கு அநீதி இழைத்த, வல்லாதிக்க இந்திய இராணுவ த்தை எதிர்கொள்ள கோப்பாய் கிறேசர் வீதியில் காத்திருந்தாள்.

1987 அக்டோபர் 10 ஆம் திகதி நள்ளிரவு 1 மணியளவில் இந்திய வல்லாதிக்க இராணுவம் மீது அவளது எம்16 ரக துப்பா க்கியிலிருந்த குண்டுகள் சீறிப் பாய்ந்தன. அந்தத் தாக்குதல் 2 ஆம் லெப் மாலதியின் இறுதித் தாக்குதல்.

புலிகள் போராட்ட வரலாற்றில் முதல் பெண் போராளி 2 ஆம் லெப் மாலதி வித்தாகி வீழ்ந்தாள். அது தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு வித்தாகவும் அமை ந்தது. தமிழ்த் தேசிய உணர் வுகளை கட்டியெழுப்பி புதிய பெண்ணெழுச்சிக்கு வழிச மை ப்பதே அவளது இலட்சியமாக அமைந்தது.

பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். பெண்ணா னவள் இப்படித்தான் இருப்பாள். இதற்கு மேல் அவளால் முடியாது. ஆணைவிட பெண்ணுக்கு ஆற் றல் குறைவு என்ற கருத்தை ஆழமாக கொண்டே மனித சமூக அமைப்பு வேரூன்றிவிட்டது.

வரலாற்றில் எழுந்த இலக் கியம், இதிகாசம், புராணம் என எதுவானாலும் பெண்ணின் புற அழகிற்கே முக்கியத்துவத்தை கொடுத்து பெண்ணின் பலத்தை வெளிக்கொணராமல் போயு ள்ளன. பெண் எனப்பட்டவள் இயலாமையின் வடிவம் என்ற பிம்பத்தை தோற்றுவிப்பதில் சமூ கத்தின் பிற்போக்குவாதிகள் வெற்றி கண்டுள்ளனர்.

வீட்டில் ஆண் குழந்தை பிறந்து விட்டால் மகிழ்ச்சி பெரு மிதம். பெண் பிறந்து விட்டால் கவலை. ஏக்கப் பெருமூச்சு. இதுதான் இன்றுள்ள நிலை. இந்த அவலம் ஏன் நமக்கு ஏற்பட்டது? ஏன் எங்கள் மனங் களில் மாற்றம் வரவில்லை. ஒரு ஆணுக்குரிய ஆற்றல் அவ் வளவும் பெண்ணுக்குள்ளும் இருக்கிறதுதானே. அப்படியிரு ந்தும் சமூகத்தில் ஏன் இந்தப் பாகுபாடு? இந்தக் கேள்விகள் எல்லோர் மனங்களிலும் எழ வேண்டும். இதற்கு ஓர் முற்றுப் புள்ளி வைக்கும் திறன் புதிய தலைமுறைக்கு உண்டு.

மனிதகுல வரலாற்றில் கிறிஸ் துவுக்கு 6000 (ஆறாயிரம்) ஆண்டுகளுக்கு முன் தாய் வழிச் சமூகமே இவ்வுலகில் ஆட்சி புரிந்தது.

காடுகளில் குழு ந்தைகள் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் தாயின் இராச்சியமே நடைபெற்றது. குழுவிற்கு தாய்தான் தலைமை தாங்கினா ள். பெண்ணே பெரிதாக மதிக் கப்பட்டாள். தாய் என்ற சொல்லே மருவி தலைவி என்றாகி விட்டது என வரலாற்றாசிரியர்கள் கூறுகி ன்றனர்.

தன்னுடைய இனத்தைக் காக்கும் சக்தியாக பெண் விளங்கினாள். அவளின் சக்தி க்கு கட்டுப்பட்டு பின்னால் செல்ல அவளது சமூகம் தயா ராக விருந்தது அன்று. தனது இனத்தை பாதுகாக்கவும், அவர் களுக்கு உணவு கொடுக்கவும், தேவையானவற்றை தேடிக் கொடுக்கவும், தாயானவள் தன் னைப் பலி கொடுக்கவும் தயா ராகவிருந்தாள் என்பது உயர்ந்த தியாகமாகும். அது அன்றே இருந்தது.

எதிரிகளிடமிருந்தும் காட்டு விலங்குகளிடமிருந்தும் தனது இனத்தை காக்க தானே தலைமை தாங்கி வழி நடத்தினாள். பஞ்சாயத்து சபையை நிறுவி நிர்வாகம் செய்தாள். அன்றைய பெண்ணும் போர் முனைகளைச் சந்தித்தவள்தான். எதிரிக் குழு க்களை தாக்க, வேட்டையாட தானே ஆயுதங்களைக் கொண்டு முன்னே சென்று தாக்குவாள். அந்த தாய்க்குப் பின்னால் தான் அவளது குழுவைச் சேர்ந்த பெண்களும், ஆண்களும் வருவார் கள். சண்டை செய்வார்கள். சா வைச் சந்திப்பார்கள். வெற்றி பெறுவார்கள்.

மலைகளின் மீது மான்களைப் போன்று ஏறி எதிரியை விரட்ட வும், தேனை எடுக்கவும் அந்தப் பெண்களால் முடிந்தது. தேன் குடிக்க கரடி ஏற முடியாத இடத்தில் கூட ஏறி நின்று தேன் குடிப்பாள் வீரமங்கை. கல்லினால் கூரிய ஆயுதம் செய்யவும், தோளினால் கருவி செய்யவும், பாத்திரம் செய்யவும், அழகிய குடிசை கட்டவும், நடனமாடவும் அந்தப் பெண்களால் முடியும்.

எலும்பாலும், கல்லாலும், மரத்தாலும், கொம்பாலும் செய்யப்பட்ட விதம் விதமான கூரிய ஆயுதங்களால் பெண்கள் சண்டை போட்டார்கள். தமக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய எதிரிகளை தேடி, தேடி தாக்கி அழித்தார்கள். கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் பெண்கள் சாம்ராஜ்யமாகவே இருந்தது. அக்காலத்தில்தான் சமூகம் முழுவதும் ஒரே குடும்பமாக விருந்தது என ஆய்வாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். இத னை மெய்ப்பிப்பது போல அகழ்வாராய்வின்போது மிகப் பழமையான காலத்து வரலாற்று ஆவணங்களில் சக்தி வழிபாட்டு முறை இருந்து வந்துள்ளதை சுட்டுகின்றனர்.

உலகில் சரிபாதியினர் பெ ண்கள், எமது சமூகத்திலே சரிபாதியினர் பெண்கள். இந்தச் சரிபாதித் தொகையினரான பெ ண்கள் போராட்டத்தில் பங்கு பெறாது எமது தேசத்தின் விடுதலை சாத்தியப்படாது. சரிபாதியினரான பெண்களுக்கு விடுதலையின்றி எமது தேச விடுதலையும் முழுமை பெறாது என்பது தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கருத்தாகும். அடக்கு முறையின் வடிவமாக பெண்ணை ஆளாக்கியுள்ள நமது சமூகம் அந்தத் தடையை அறுக்க முன்வரவில்லை. பெண் ஒடுக்குமுறைக் கருத்துகள் இன்னமும் பலமான நிலையில் பேசப்படுகின்றன. அவ்வாறான சமூக கட்டமைப்பு எழுதப்படாத வாக்கியமாக நிலைத்து நிற்கிறது.

சாதி வேறுபாடுகள், மூட நம்பிக்கைகள் புரையோடிப் போயிருந்த சூழ் நிலையில் பெண்கள் அதிலே புதையுண்டு போனதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தமிழரது வாழ்வில் அடிமைத்தனம் என்பது பல ஆண்டுகளாக நீடித்துள்ளது. அந்நியப் படையெடுப்புகளால் தமிழரது கலாசாரம் பண்பாடு என்பன சிதையுண்டு போயுள்ளன.

தமிழர் வாழ்வில் பெண் மதிக்கப்பட்டு அவளுக்குரிய கௌரவம் வழங்கப்பட்டு வந் திருகிறது. ஆனால் ஆரியப் படைகளுக்கு தமிழன் அஞ் சியோடவில்லை. ஆனால் வ ஞ்சகமாக ஆன்மீக தத்துவ ங்களை புகுத்தி ஆரியசக்கர வர்த்திகள் தமிழ் நாடுகளை அடிபணிய வைத்தார்கள். அ துதான் தமிழ்மக்களின் தமி ழ்ப் பெண்களின் வாழ்வுக்கு அஸ்தமனமாக விருந்தது. அவர்கள் போட்ட விதைதான் பெண்ணடிமை, சீதனம், சாதி முறை, குலதொழில் என்பன. இன்று கூட இந்தியாவில் பெண் கள்படும் இழிவுநிலை ஏராளம். இந்திய ஆதிக்கம் ஈழத்திலும் நிலை கொண்டதனால் ஈழப் பெண்களும் இதுபோன்ற அடக்கு முறைக்கு ஆளாகினர்.

அன்று எமது சமூகத்தில் பெண்களுக்கெதிரான சமூக அநீதிகள் அதிகரித்திருந்தன. பெண் அடக்குமுறைக் கருத்துகள் பலமாக நிலவின. எமது சமூகமே சாதி சமய வேறுபாடுகளால் ஆழமாகப் பிளவுபட்டு நின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக நிலச்சுவாந்தர் முறைமையையும், சாதியக் கட்டமைப்புக்களையும் இறுக்கமாகப் பின்னிப்பிணைத்து அமைந்த பொருளாதார உற்பத்தி முறையில் எமது சமூகக் கட்டமைப்பு எழுதப்பட்டிருந்தது. அது சுய சிந்தனைக்கு வரம்பு களை விதித்தது. பெண்கள் தாம் அடக்கு முறைக்குள் வாழ்கிறோம் என்பதை உணரவிடாது தடுத் தது. அத்தோடு எதிரியின் இன அழிப்புப் போர் என்று மில்லாதவாறு எம்மண்ணில் தீவிரமடைந்திருந்தது. அந் நிலை யில் அடிப்படையான சமூக மாற்றத்தை ஏற்படுத்தி பெண் விடுதலைக்கு வழிசமைப்பது பற்றி நாம் சிந்திக்க முடியாதிருந்தது.

எனவே விடுதலைப் போராட் டத்தில் பெண்களையும் அணி சேர்ப்பதினூடாகப் படிப்படியாக சமூகமாற்றத்தை ஏற்படுத்தி பெண் விடுதலையையும், தேசவிடு தலையையும் சாத்தியமாக்கலாம்

இவ்வாறுதான் எமது போரா ட்டத்தில் பெண் புலிகள் தோற்றம் பெற்று எதிரியின் படைப்பலத்தைச் சிதைத்து யுத்தத்தின் போக்கை யே நிர்ணயிக்கின்ற பெரும் படை யணிகளாக எழுந்து நின்றது.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மேற்குலகப் பெண்கள் பெரும் போராட்டங்களை நிகழ்த்தி, புரட்சிகளை நடத்தி விவாத ங்களை புரிந்து கருத்தமர் வுகளை மேற்கொண்டு பெற் றெடுத்தவற்றைவிட எமது பெண் புலிகள் மிக்க குறுகிய காலத்துக்குள் எமது பெண் களுக்குப் பெற்றுக் கொடுத்த உரிமைகளும், சுதந்திரங்களும் அளப்பரியவை. அத்தோடு சமூகத்திலே பெரும் புரட்சியை நிகழ்த்தியிருக்கிறார்கள். சமூகக் கருத்துலகில் புதிய பார்வையை வளர்த்து வருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஆணும், பெண்ணும் சமமான ஆற்றல்களுடனேயே படைக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற உடற் கூற்றியல் நிபுணர்களது, கூற் றுக்கு பெண் புலிகளே உலகுக்கு உதாரணமாக வாழ்ந்தவர்கள் என பெண் போராளிகள் பற்றி தலைவர் பிரபாகரன் பெருமித த்துடன் குறிப்பிடுகிறார்.

உலகில் பெண்கள் மோசமான அடக்கு முறைக்கு ஆளாகி வந்துள்ளனர். இற்றைக்கு சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் தாய்வழிச் சமூக அமைப்பு சிறப்புற்று விளங்கியது. அதன் பின், கால வெள்ளத்தில் தாய் வழி சமூக அமைப்பு முறைகள் பல்வேறு காரணிகளால் சி தைந்துபோய் ஆணாதிக்க மு றைமைகள் தோற்றம் பெற்றன. இன்றும் உலகில் பெண்கள் மோசமாக நடத்தப்படுகிறார்கள். மேற்காசியா, ஆபிரிக்கா மற்றும் இஸ்லாமிய மதக் கோட்பாடுகளை தீவிரமாக பின்பற்றும் நாடுகளில் பெண்களின் உரிமைகள் அடி யோடு மறுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் ஆரியர்களின் மனுதர்ம சாஸ்திரம் பெண்களுக்கு எதிராக சமூக நீதிகளை அதிகரிக்க செய்திருக்கின்றன. சாதியம், அடிமைத்தனம் போன்றவற்றை ஆழப்பதித்திருக்கின்றன. வர தட்சனை, இரத்த உறவு திரு மணம், கொடுமை, சித்திரவ தை, உயிர் நீப்பு என பெண் களுக்கிழைக்கப்படும் கொடுமை கள் ஏராளம்.

எகிப்து நாட்டை தாலமி அயோலேட்டஸ் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய மகள் கிளியோபாட்ரா! தாலமி இறப்பதற்கு முன் அவள் தம்பி ஏழாவது தாலமி, சகோதரி கிளியோபாட்ராவை திருமணம் செய்து கொண்டு நாட்டை ஆளவேண்டுமென அறிவித்தார். அதன்படி இருவருக்கும் திரு மணம் நடந்தது. அப்போது கிளியோபாட்ராவுக்கு வயது 16. தாலமிக்கு வயது 10. இது ஒரு செய்தியல்ல. 20 நூ ற்றாண்டுகளுக்கு முன்னரும் இப்படி பெண்ணியல் பற்றி பெண் ணுரிமை பற்றி, யாரும் வாய் திறக்கவில்லை. அப்போதும் பெண் அடிமைதான். இப்போதும் பெண் அடிமைதான் எகிப்து நாட்டில்.

அக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளும் 2 ஆம் லெப்டினன் மாலதியின் நினைவு நாளும் ஆகும். அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த தமி ழீழப் பெண்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறனர். தீரத்தி னாலும், தியாகத்தினாலும், விவேகத்தினாலும் உலகப் பெண்களுக்கு வழிகாட்டியாக உயர்ந்து நிற்கின்றனர் என்பதை அனைவரும் ஏற்றுள்ளனர்.





தேசியத்தலைவர் வாழ்க.

மாவீரன் நேதாஜியை நேசித்தவன் நீ
மாவீரன் நேதாஜி போலவே நிலைத்தாய் நீ !

நீ இருக்கிறாய் என்றும் இல்லை என்றும்
நாட்டில் பட்டிமன்றங்கள் நடக்கின்றன !

நீ யானை மாதிரி ஆம் இருந்தாலும்
இறந்திருந்தாலும் மதிப்பு மிக்கவன் நீ !

நீ இன்னும் இருக்கிறாய் ! என்று
நாளும் அச்சத்தில் சாகிறான் பகைவன் !

நீ இன்னும் வாழ்கிறாய் ! என்று
நாளும் மகிழ்வில் வாழ்கிறான் தமிழன் !

சிங்கள ஆதிக்கத்தை என்றும் எதிர்த்தாய்
சிங்கள் மக்களை என்றும் எதிர்த்ததில்லை !

கடவுளை நம்பாத நாத்திகர்களும்
கனிவோடு உன்னை நம்புகின்றோம் !

புழுவாக இருந்த இலங்கைத் தமிழனை
புலியாக மாற்றிய மாவீரன் நீ !

கொட்டக் கொட்ட குனிந்தவனுக்கு
திருப்பிக் கொட்டிட கற்பித்தவன் நீ !

புறநானூற்று வீரத்தை படித்தோம்
புதிய வடிவில் ஈழத்தில் பார்த்தோம் !

எட்டு நாட்டுப் படைகளோடு வீர
எட்டு வைத்து போராடியவன் நீ !

துரோகம் உன்னை தோற்கடிக்கவில்லை
துரோகம்தான் உன்னிடம் தோற்றது !

இருக்கிறாய் என்பதற்கும் இல்லை என்பதற்கும்
இவ்வுலகில் சாட்சிகள் இல்லை இன்று !

உலகத்தமிழர்கள் உள்ளங்களில் என்றும் வாழ்கிறாய்
உலகம் முழுவதும் சாட்சிகள் உண்டு !

பகைவர்கள் துரோகிகள் மனசாட்சி இன்றும்
பயத்தோடு உன் வீரம் பாராட்டும் !

தனித்தமிழ் ஈழம் விரைவில் மலர்வது உறுதி
பிரபாகரன் தேசம் பெயர் சூட்டுவதும் உறுதி !

புரட்சியாளர்களுக்கு பிறந்த நாள் உண்டு
புனிதர்களுக்கு இறந்த நாள் இல்லை !


Camsonics
security systems
No: 1 NorthAmerican Professional Security Camera
905.216.8966 | 416.981.3431
1300 Steetes Avenue east, Unit 221, Brampton, On,L6T 1A2
Rajeev@camsonics.com | www.camsonics.com

RE/MAX
RAJEEV SEBARASHA
Salesperson
905-226-8515



பிரபாகரன் பெருமை

அழகான தோற்றம்
அனல் தெறிக்கும் வீரம்
இளகும் மனம்
ஈடிணையிலாத் திறன்
மாறாத கொள்கை
மாசில்லாக் குணம்
ஒப்பிலாத் தலைவன் மேதகு பிரபாகரன்
ஆயிரத்து தொழாயிரத்து ஐம்பத்தி நான்காம் ஆண்டு,
நவம்பர் மாதம் 26ஆம் திகதி
ஈழத்திருநாட்டின் வல்வெட்டித்துறையில்
வேலுப்பிள்ளை, பார்வதி தம்பதிகளின் புதல்வராகப் பிறந்தாய்

உன்னைப்போல் ஒரு தலைவன் இவ்வுலகில் யாருமுண்டோ?
உன்னை இன்றேனும் இவ்வுலக அரசுகள் புரிந்ததுண்டோ?
ஈழத்தமிழர் இன்னல் கண்டு நீ எழுந்தாய்
வேழத்தின் சீற்றமாய் வீறுடன் நீ எழுந்தாய்
தங்கத் தமிழன் பிரபாகரனே நீ வாழி
எங்கள் இனத்தின் வீரமறவனே நீ வாழி
இனத்தின் இலட்சுமணன் நீயே!
தமிழர்க்கெல்லாம் தம்பி நீயே!
தமிழ் மண்ணின் சூரியனே!

சூரியக் கதிர்களாய் வெற்றிக் கணைகள் தந்தவனே!
ஊரிக் காட்டில் கற்று உலகத்தை திகைக்க வைத்தவனே!
கையெறி குண்டு செய்து கரிகாலன் பெயரைப் பெற்றவனே!
வையகம் காணாத விந்தைகளை வன்னியில் செய்தவனே!
ஆணுக்கும் பெண்ணுக்கும் சமநிலை கொடுத்தவனே!
நிராவிட வீரப்பெண்ணை மீண்டும் ஈழத்தில் தந்தவனே!

அப்பாவித் தமிழர்நிலை அனலாய் உன்நெஞ்சைச் சுட்டது
எப்பாடு பட்டாவது இனவிடுதலை காண உன்மனம் துடித்தது

கண்ணுக்குள்ளே தேசம் வைத்த காவியத் தலைவனே!
மண்ணுக்கான ராஜாவாய் மக்கள் மனதில் நின்றாய் நீ

காடுகள் கழனியாகின கிராமங்கள் நகர்களாகின
வீடுகளை நீங்கி வாழ்ந்த போராளிகளின்
தாயும் தந்தையுமாய் நின்றாய் நீ

சாதிகள் ஒழிந்தன சேதிகள் நிறைந்தன
வேதமாய் உன்நாமம் விண்ணையும் தொட்டது

தலைவன் என்ற சொல்லுக்கு
புது இலக்கணம் தந்தவன் நீ

இனத்தின் ஈழப்போரெனும் பெருங்கதை எழுதி வைத்தாய்
புயலெனச் சீறினாலும் புன்னகை புரிந்தாலும் நீ தலைவன்
ஏழைகள் முகத்தில் புன்னகை தந்தவன் நீ

உழைப்போர் முகத்தில் உவகை கொடுத்தாய்
இன்ப துன்பம் சரிவு நிமிர்வு எதிலும்
ஈடுகொடுக்காது வாழ்ந்த பிரபாகரன்
களையெடுத்த கத்தியும் நீயே! கலங்கரை விளக்கும் நீயே!
தமிழரின் விடிவெள்ளியே! தளராத வீரனே!
இலங்கை அரசைக் கிலியுட்டிய இணையில்லாத் தலைவனே!

சரித்திர நாயகனே! தமிழரின் சுதந்திரக் காற்றுக்காய்
சுடராய் எரிந்தவனே!

வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்து எட்டப்பன்களும்
பண்டாரவன்னியன் காலத்து காக்கை வன்னியர்களும்
இனத்தின் பெருங்கதையில் இடையில் நுழைந்தனர்
சூழ்ச்சிக்கார கும்பல்கள் கூட்டுச் சேர்ந்து
முள்ளி வாய்க்காலில் கொள்ளி வைத்தனர்
செஞ்சோலை சிறார்களின் சீரிய காவலனே!
பஞ்சுபோன்று மென்மனம் கொண்டு அணைத்தவனே!
ஆண்களுக்கு நிகராக பெண்களும்

ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை தந்தவர்
இலங்கை அரசைக் கிலியுட்டிய
இடியும் மின்னலும் இல்லாது மழை பொழியாது
யாரும் அணியத்துணியாத சீருடையில் நாள்முழுதும்
இருந்தாய்

புயலெனச் சீறி
காடுகள் கழனிகள் ஆச்சு
உழைப்போர் முகத்தில் உவகை
ஏழைகள் முகத்தில் புன்னகை
கோழைகள் இல்லாத புமி
கொடுத்தவன் நீயே! தலைவா
எங்களின் பலம் இலட்சியம் என்று சொன்னாய்
செயலுக்கு முன்னுரிமை தந்த செயல்வீரனே

ஓடாத மானும் போராடாத இனமும்
மீண்ட சரித்திரம் இல்லை என்றாய்
இயற்கையை நண்பன் என்றாய்
வாழ்க்கையை தந்துவாசிரியன் என்றாய்
வரலாறு உனது வழிகாட்டி என்றாய்
போராளிகளின் நெஞ்சுரத்தில் பிறந்தது
போராட்டத்தின் வலிமை என்றாய்
மக்களின் தலைவன் ஆனாய்
சிந்தனையாளனே நீ வாழி
மக்களின் விடுதலைப் போராளி
அச்சம் வந்தால் இலட்சியம் இல்லை என்றாய்
நான் பெரிது அல்லாது நாடு பெரிது என்று
வாழுங்கள் என்றாய்

கூறுபட்டுக் கிடந்த சமூகத்தில்
மாறுபாடு தந்து மலைக்க வைத்தவனே!
உனது தலைமையை எதிர்நோக்கி
புலம்பெயர்ந்தும், பெயராமலும்
காத்திருக்கிறது தமிழினம்

கிளிநொச்சியில் இராஜ்ஜியம் வைத்து
கிலியுட்டி ஓடவைத்தாய்

கரும்புலி கடற்புலி வான்புலி
எத்தனை வேங்கைகளை
இனத்திற்காய்ப் பிறப்பெடுக்க வைத்தாய்

வெளியில் தெரியாத வேர்களாய்
முகவரி இல்லாத வேங்கைகள்
விதைகள் ஆக ...
வெந்து வெந்து வாழ்ந்த வீரனே! தீரனே!

செங்காந்தள் பூவிற்கு சிறப்பிடம் தந்தவனே!
எங்கள் தலைவனுக்காய் ஏங்கும் நம்மினம்
நிலையான தலைவனாய் நீடு வாழ்க
தலைவனே தலைவனே நீடு வாழ்க

ஆக்கம் அகணி





முந்துபுகழ் முத்தமிழைக்
காத்திடவே பூத்தமகன்
செந்தமிழ்த்தாய்
சிறந்திடவே
செருக்களத்தே நடந்த மகன்
தூய மொழிவளத்தை
தொல்தமிழின்
அருஞ்சிறப்பை
அழகுறவே அகிலத்தே
உணர்த்துகின்ற உத்தமனாய் உதித்தவனை
மனதார வாழ்த்தியே வணங்கிடுவோம்

(சயந்தன் பசுபதி)

புரட்சியும் பூத்திட
பரணியும் பாடிட
வெங்களம் சிவந்திட
பொங்கிடும் உணர்வெலாம்
சங்கமம் ஆக்கிய
எங்களின் உண்ணதன்

மங்கலம் பொங்கிட
மாதமிழ் மிளிர்ந்திட
எங்கணும் எங்களின்
இன்புகழ் ஓங்கிடச்
சிங்களம் சரிந்திடச்
சாய்த்திடும் சங்கரன்

Cell Tel Mobility
CELL TEL MOBILITY
For all your cellphone and accessory needs...
◆ Rogers Wireless
◆ Telus Mobility
◆ Fido
◆ Bell Mobility
◆ Mobilicity
◆ Freedom Mobile
◆ Public Mobile
◆ Chair Mobile
Phone: 416-266-6818 / 416-999-4126 / 416-891-1234
Toll Free: 1-866-439-9393
info@celltelmobility.com | www.celltelmobility.com
2637 Eglinton Ave East, Scarborough ON. M1K 2S2 (Eglinton / Midland)



வாழும் காலத்தே
வரலாறு ஆனமகன்
சூழும் பகைவிரட்டி
நாளும் நடந்தமகன்
முந்தைத்தமிழ் வீரம்
முகிழ்ந்தெழுந்து சிலிர்த்த தினம்
வந்தபகை நடுங்க எங்கள்
சொந்தமகன் சீற்றமொடு எதிர்த்த
பலம் எந்தப்பகை வரினும்
எதிர்த்து ஆடி வெல்லும் உரம்
போர் ஓடுங்கிப்போனாலும்
புகழ் ஓடுங்கிப்போகாத பொங்கு
தமிழோடும் புலருகின்ற
பொழுதோடும் மங்காத
புகழோடும் அன்னைமண்
விடியலுக்காய் வரிதுரித்த
எங்கள் தங்கத்தலைவன்
வந்துதித்த திருநாளில்
வாழ்த்தி நாம் மகிழ்ந்திடுவோம்
(சயந்தன் பசுபதி)

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



Vilosanan Sivatharman
416-993-0826

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

• Visitation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation

மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

8911 Woodbine Avenue, Markham, Ontario L3R 5G1
Email: info@chapelridgefh.com
www.chapelridgefh.com



Christeen Seevaratnam
416-258-6759

எங்கள் தலைவன்



வல்வைக் கடல் ஓரம்!
மழைத்துளி மண்ணை நனைத்தீடும் நேரம்!
பொங்கும் கடல் அலை மங்கல கீதம் இசைக்க!
பல்லினப் பறவைகளின் பாட்டொலி முழங்க!
வேலு பிள்ளை ஐயாவின் மனையாள் மடியில்!
நங்கூத் தலைவன் நங்கமென உதித்தான்!

குட்ட குட்டக் குனிந்த தமிழன்!
தத்தீத் தத்தீ நடந்த தலைவனைப் பார்த்து!
நெஞ்சில் வீரம் மிதக்க நிமிந்தான்!
ஆண்ட தமிழனை அடக்கி ஆள நினைந்த அதிகார வெறியன்!
அதிசய வீரனைப் பார்த்து அலறித் துடித்தான்!
கார்த்தீகைத் தீங்களின் கதிரவனை!
கன்னி தமிழின் காவலனை!

நாற் படை கொண்ட நாயகனை!
நானிலம் பார்த்து அதிசயிக்க!
அந்தப் பிரபாகரன் எனும் பிரபந்தத்திற்கு!
அகவை 69 ஆனதாம் இன்று!
வான் படை கொண்ட வல்லோனே!
வடிவேல் முருகனுக்கும் முதலானவன் என!
முத்தமிழால் பாட வைத்த பல்லவியே!

ஈழமெனும் தேசத்தை உலகிற்கு உணர்த்தியவா!
உடன் இருந்தவனே எதிரியின் கைக்கூலியான போதும்!
காட்டி கொடுக்கப் பல
கயவர்கள் விழித்த போதும்!
அண்ணனாய் தம்பியாய் கண்ணாய் கருத்தாய் கைகோர்த்து நின்ற!
கட்டளைத் தளபதிகளை
அரசியல் ஞானிகளை!
பல்லாயிரம் போராளிகளை இழந்தும்!
அண்டை நாட்டுப் படைகள் அணி திரண்டு வந்தும்!
அஞ்சா நெஞ்சனாய் உன் படை கொண்டு!
எதிரிகளை புறமுது கிட வைத்த வித்தகனே!
பாவலர் பாட்டின் தத்துவனே!
பைந்தமிழ் மொழியின் பாவலனே!

அன்னை மண்ணின் அதிசய வீரனே!
மீண்டும் தமிழன் மண் ஆள!
வரம் பெற்ற வரலாற்று நாயகனே!
உன் வீரம் கண்டு உலகே வியக்க!
உன் பின்னே மக்கள் படை அணிவகுத்து நிற்க!
உன் தலைக்கு மகுடம் சூடி உனமாற வாழ்த்தி சைக்க!

நாய் மண்ணை ஆள வேண்டும் நீ நயானனே!
நானங்கள் போட்டு நாம் பாட்டிசைத்து!
எங்கள் தலைவனே நீ எனக் கோஷமிட்டு!
கோலங்கள் போட்டு நாம் பொங்கலிட்டு!
நாட்டுவோம் நாடெங்கும் புலிக் கொடியை!
போற்றுவோம் புலி வீரத்திறன் அதனை!
வாழ்த்துவோம் வரலாற்று நாயகன் அகவைதனை!
எழில் கொண்ட ஈழமே எங்கள் தலைவனே!
வாழ்க வாழ்க பல்லாண்டு வாழிய நீடு!

அன்னை மண்ணையும் மக்களையும் நேசிக்கும்
உங்களில் ஒருவன் தெடங்கேனியூர் சீற்றன்!

CHRIS BREAD BAKERY
Fresh Bread Baked Daily Tamil Eelam Style
Come in for all your Tamil Eelam Food catering services available
2617 Eglinton Ave. E, Toronto ON. M1K 2S2
Tel: 416-BOS GUYS (267-4897) | www.chrisbreadbakery.com

கரிகாலனும் கதிரவனும்

வல்வைக் கடலோரம்
கரிகாலன் எனும் கதிரவன் உதித்தான்!
எல்லையிட்டே தமிழ் ஈழத்தை இவன் அமைத்தான்!
கதிரவன் இருள் நீக்க ஒளி ஏற்றும் விளக்கு!
கரிகாலனோ இனவெறிச் சிங்களவனை
எரிக்கின்ற நெருப்பு!
எழுவதும் மறைவதும் கதிரவனுக்கு இட்ட நியதி!
கரிகாலன் எழுவதும் மறைவதும்
வீர வரலாற்றின் உறுதி!
கதிரவன் நித்தம் உதித்து
உயிரினங்களை காப்பவன்!
கரிகாலனோ ஆண்டுக்கு ஒரு முறை
உதித்து உலகிற்குச் செய்தி சொல்பவன்!

அவன் வாயுதிரும் தமிழுக்கு
உலகெங்கும் எத்தனை மதிப்பு!
ஆனாலும் புலிப்படை பயங்கரவாதிகள்
என எதிரிகளோ பழிப்பு!
சிங்கள அரசு புரிகின்ற பயங்கரவாதத்திற்கு
உலகெங்கும் உதவி!
உரிமை கேட்டுப் போராடும் தமிழனுக்கு
அகதி எனும் பதவி!

இனவெறியருடன் இணைந்து இருபது
நாடுகள் போரிட்டதால்!
கரிகாலன் மீண்டும் மறைவு!
இருளில் இருந்தே இவன் காரியம் மாற்றுவதால்!
இந்தியா அமெரிக்கா தடை உத்தரவு!

ஆர் தடுத்தாலும் ஆண்டுக்கொரு முறையாவது!
கரிகாலக் கதிரவன் உதிக்க வேண்டும்!
மாநிலம் எங்கும் அதிர மாவீரர் தின
உரை நிகழ்த்த வேண்டும்!
அந்த ராஜ கோபுரத்துக்கு தமிழர் நாம்
முடி சூட்டுவோம்!
அகவை 69 இல் புலம்பெயர் தமிழர்
நாம் நிறைவேற்றுவோம்!
என்றென்றும் உன் புகழ் ஓங்க!
தமிழர் துன்பங்களெ ல்லாம் நீங்க!
கரும்புலித் தலைவனே கதிரவனாய் உதித்து வா!
உன் வீர வரலாற்றை நாம் மீண்டும் படிக்க வா!
தங்கத் தலைவனே வாழ்க!
தமிழீழ மண்ணை ஆள்க!

என்றென்றும் அன்புடன் ஒதியமலைத் தேவன்!



THILEEPAN
YOGANATHAN B.SC(ENG), P.ENG.
18 Orchard View Blvd, Oshawa, ON L1G 3N7
Tell: 905-240-7027 Cell: 647-895-7027

CONNECTING STEEL
ENGINEERING SERVICES





பிரபாகர ஒளியே!

பிரபாகரா பிரபாகரா
பிரபஞ்சம் வாழ்த்தும் பிரபாகரா
பிறை சூடியின் உருவே பிரபாகரா

அன்னை பார்வதி ஐயன் வேலவன்
தந்த பிள்ளை நீ பிரபாகரா
நாங்கள் ஆண்ட தமிழ் மண்ணை மீண்டும்
நாம் ஆழ அவனி வந்தவன் பிரபாகரா
எங்கள் ஆண்டவன் நீ பிரபாகரா
வந்தெம்மை ஆழ வேண்டும் நீ பிரபாகரா

வெள்ளைக்காரரை வன்னி மண் தேடி
வரவழைத்தவன் பிரபாகரா
கொள்ளை அழகோடு அன்னை தமிழீழம்
ஆண்டு காட்டினாய் பிரபாகரா
எங்கள் ஆண்டவன் நீ பிரபாகரா
வந்தெம்மை ஆழ வேண்டும் நீ பிரபாகரா
நந்திக்கடல் காற்று நாளை தலை சாய்க்க
எங்கள் தலைவா நீ வரவேண்டும்
மண்ணில் குந்தியிருக்கும் பகை
குலை நடுங்கிட
பொங்கு கடலாக எழ வேண்டும்
எங்கள் ஆண்டவன் நீ பிரபாகரா
வந்தெம்மை ஆழ வேண்டும் நீ பிரபாகரா

எண்ணமும் எழுத்தும்
உடுவையூரான்
அமல்குமார் – சின்னத்தம்பி



“காவலாய் வாய்த்த கதிர்க்கையன்”(01)

காவலாய் வாய்த்த கதிர்க்கையனின் மாமறத்தை ஆவலாற்
பாட அகமுற்றேனி - தாவிலாச் செந்தமிழே!
தாள் பணிந்தேனி
சின்னவனெனி கற்பனையில்
சிந்தாமல் முத்தமிழைச் சேர்! (1)
சேர்ந்து தமிழரைச் சிக்கெனப்
பற்றியவனி நேர்த்தியினைப் பாட
நிறைதமிழைச் - சேர்த்தென்னில் தைத்த
முருகடியானி தாளை வணங்கிடவும்
வைத்தேனி ஒருவெண்பா யாத்து! (2)
யாவர்க்கும் நல்லவா! ஈழத் தலைமகனே!
காவலாய் வாய்த்த கதிர்க்கையா! - ஆவலாய் எந்தமிழ்
மக்களை ஏற்றணைந்து காத்தவனே!
தந்தையே தாள் பணிந்தேனி தாழ்ந்து! (3)
தாழும் எமதினத்தைத் தாங்கித் தலைநிமிர்த்தி
வாழும் இனமாய் வகைசெய்தாய்! - பாழும் அரியை
விரட்டி அடித்த புலியே! எரியை நிகர்த்தாய் எழுந்து! (4)
எழுந்த கதிர்க்கைய! ஈழத்தில் ஆடும்
உழுவக் கொடியிற்(கு) உரியோய்! - அழுந்த விதைத்தாய்
விடுதலை வேட்கையை நாமும் அதைத்தானி
விரும்பினோம் ஆங்கு! (5)
ஆங்கே எமதினம் ஆளும் எனுங்கருத்தைத்
தாங்கி மறப்போர் தழுவினாய்! - ஈங்குனி புகழைப்
புகலப் பொருவில் தமிழை அகழப்
புகுந்தேனி அணைந்து! (6)
அணையா விளக்கே! அருந்தலைவ!
உன்னைத் துணையாகக் குறித்துத்
தொழுதோம் - இணையாய் இருந்தீழ மக்களின்
இன்னல் களையும் மருந்தானாய் சொல்வேனுனி மாண்பு! (7)
மாணார்மூ புரிந்த மதியில் செயலையெல்லாம்
காணார்போற் கண்டிருந்தார் காசினியில்
- பேணார் திருவிற் செயலைத் திருப்பி
அடித்தே கருவிற் கலைத்தாய்க் களத்து! (8)
களத்துப் புகுந்த கதிர்க்கையா!
எங்கள் உளத்துள் ஆடும் உணர்வே!
- இளைத்த தமிழர்க்(கு) அரணாந் தருவே
உனையிங்(கு) உமையாள் கொடுத்தாள் உணர்ந்து! (9)
உணர்ந்துந்தை வேலு உவந்துலகிற் கீந்த
மணந்தங்கு வண்ணா மலரே! - புணரிசார்
வல்வெட்டிமூ வார்த்தெடுத்த வான்மதியே!
உன்புகழைப் பல்மெட்டில் பாடேனோ பார்த்து! (10)

குறிப்பு:

தாவில்லா - குற்றமில்லாத முருகடியானி -
எனதாசானி சிங்கைப் பெருங்கவிஞர்
பாத்தென்றல் முருகடியானி அரி - சிங்கம்
உழுவக்கொடி - புலிக்கொடி வேட்கை
-பற்றுள்ளம் பொருவில் - உவமையில்லாத
மாணார் - பகைவர் பேணார் - பகைவர்
உமையாள் - பார்வதி (பிரபாகரனினி தாயார்ப்பெயர் பார்வதி)
புணரிசார் - கடல்சார்ந்த வல்வெட்டி -
வல்வெட்டித்துறை வேலு - பிரபாகரனினி தந்தையார்.

-அன்புடன் அகரம்-அமுதன்



EVEREST FURNITURE
Unique - Quality - Service - Lowest Price
416.332.0721
உங்கள் சகல தளபாடத் தேவைகளுக்கும் நாடவேண்டிய நகரின் தன்நிகரற்ற தமிழர் நிறுவனம்.
தமிழரின் மத்தியில் மெத்தை தளபாட உற்பத்தியில் 18 வருட கால முன்னணி நிறுவனமாகத் திகழ்கிறது
நீங்கள் விரும்பிய தளபாடங்களை ஓடருக்குச் செய்துகொள்வதுடன் அனைத்துவிதமான சோபாக்களும் உங்கள் உடலுக்குத் தகுந்த ஆரோக்கியமான மெத்தை வகைகளையும் நீங்கள் விரும்பிய முறையில் எவரெஸ்ட் தொழிற்சாலையில் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்பதனை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்!
80 Finchdene Square, Scarborough ON M1X 1C1. Neilson / Finch (Between Neilson & Tapsertt) | www.everestfurniture.com

ஈழமுரசு

ஈழமுரசும்
கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசிய தலைவர்
மேதகு வே. பிரபாகரன்
அவர்களின்

69



தலைவர்
பிறந்தநாள்
அதுவே
தமிழர்
நிமிர்ந்த நாள் !

வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்

இருப்பாய்
தமிழா
நெருப்பாய் !

AAROSAI "WHERE MUSIC BEGINS..."

அகவை விழா
மாபெரும் எழுச்சி விழா

2023 நவம்பர் 26 ஞாயிற்றுக்கிழமை

மாலை 5 மணி

இடம்
Metropolitan Centre
3840 Finch Ave East
Scarborough, ON, M1T 3T4
(Kennedy & Finch)

ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்

தொடர்புக்கு : (647) 657 8566, (437) 224-7923, (587) 982-8829

FUZION AUTO CENTER

AUTO REPAIR & MAINTENANCE
AUTO BODY & PAINT
COMPLETE COLLISION REPAIR
INSURANCE CLAIMS



Auto Body
COMPLETE
COLLISION REPAIR

905-738-0887 FUZIONAUTO.COM 435 BOWES ROAD, UNIT #5 VAUGHAN, ONTARIO. L4K 1J5



ஒரு காலப்பெருவெளி
நீண்டு கிடக்கிறது...
கரிகாலப் பெருந்தடத்தில்
நிமிர்ந்து கிடக்கிறது...

வாழக்கிடைத்த வாழ்வு
வலராறாய் வல்லமைச் சிகரம்
வான்வரை தொடுகிறது...
நிலத்தில் ஒளிர்ந்த சூரியனை...
நித்தமும் துயர்வென்ற தூயவனை
உளத்தில் குடிகொண்ட கோமகனை
உணராத நாளென்ன உண்மை நாளோ!

மறத்தின் வழிநடந்த மாவீரம்
மன்னவன் மறவர்தம் போர்வீரம்
அறத்தில் துளிர்த்திட்ட அவதாரம்
அவர்க்கு ஈழல்லை ஒரு ஈகம்..

களத்தில் நின்றகலாப் பெருவீரம்
நிலத்திற் காதல்கொண்ட இனமானம்
கழுத்தில் நஞ்சணிந்த புலிவீரம்–எம்
உளத்தில் நிறைந்திட்ட ஒளிதீபம்...

கனத்ததோர் மழைமாதம்,
அலையதன் கரையோரம்
தினத்த தோள் கொண்ட
இனத்தின் காவலனாய்
பலத்தில் எமையேற்றிப் பகை
முகத்திற் பயம்காட்டி
வனத்தில் வாசம்செய்து
வண்ணமாய் ஒரு தேசம் செய்தார்...

வருவதும், தாமே வாழ்வதும்,
வந்த தடமறியாமற் போவதும்
வாழ்ந்தோர் வழமையன்றால்,
வந்ததை, வென்றதை,
பிறர்வாழ நின்றதை,
வல்லபராசுரம் தந்ததை
வாயாரப்பாடு தமிழா!
இது உன் வரலாறின் பிறந்தநாள்!

–காந்தள்–



தம்பியாய்த் தொடங்கி தமிழ் தேசியத் தலைவனாய் மிளிர்ந்தவன்



ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாகி ஓர் இனம் அல்லது ஒரு நாடு முற்றும் முழுதாக வேரறுக்கப்படும் கடைசிக் கட்டத்தை எட்டும்போது, கொடுமையை எதிர்த்து முகம் கொடுக்கவும் அதை எதிர்த்துப் போராடவும் மக்கள் தயங்குவதில்லை. அத்தகைய இக்கட்டான கட்டத்தில் அதே களத்தில் பிறந்து, ஒத்த கருத்துடைய மக்களை ஓரணியில் திரட்டி, முழு அர்ப்பணிப்போடும் வளையாத் துணிபோடும் முன்னின்று வழி நடத்துபவர்கள் வரலாற்றில் இடம் பிடிக்கிறார்கள். அச்சத்துக்கு இடங்கொடாது அஞ்சாமையை அணிகலமாய்ப் பூண்டு தீரத்தோடு போராட்டத்தை வழிநடத்தும் போது மக்கள் மனதில் தலைவனாக உயர்ந்து மண்ணின் வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் மாவீரத் தலைவர்களாகச் செதுக்கப் படுகிறார்கள். நாட்டின், இனத்தின், சமூகத்தின் பொதுக் குறியீடாகவும் அவர்கள் பதிவு நிலைபெறுகிறார்கள். நாம் வாழும் காலத்தில் மக்களின் உரிமை விடுதலையை முன்னெடுத்து போராடி, உலக வரலாற்றுக் குறியீடுகளாக முகிழ்த்தவர்களை நாம் கூர்ந்து கவனித்தால் ர'யாவில் விளாதிமிர் லெனின் சீனாவில் மாஓ சேதுங் கியூபாவில் பீடல் காஸ்ட்ரோ வியற்னாமில் ஹோ சீ மின் தென் ஆபிரிக்காவில் நெல்சன் மண்டேலா பாலஸ்தீனத்தில் ஜசீர் அர.பாத் ஆகியோரும் அனைத்துலக போரட்டத் தளத்தில் சே குவேரா போன்றோரும் வரலாற்றுத் தடம்பதித்திருக்கிறார்கள். இதே வரலாற்றுத் தடத்திலேயே வேலுப்பிள்ளை பிரபாகரனும் உலக வரலாற்று ஆசிரியர்களால் வைத்துப் பார்க்கப்படும் சாதனையாளராக மிதந்து வருகிறார்.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக இனக் கருவறுப்புக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டத்தின் முதல் முப்பது ஆண்டுகளை அகிம்சை முறையிலும் ஜனனாயக வழியிலும் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் வழிநடத்திச் சென்றார். தமிழ் மக்களை வழி நடத்திக் கொண்டிருந்த தமிழ் கட்சிகள் ஒரு கட்டத்தில், தமிழ் மக்களின் உரிமைக்காகவும் விடுதலைக்காக வும் ஒரு பொதுப் போராட்ட நீரோட்டத்தில் ஒன்றிணைந்து செயல்பட்டன. பெரும்பான்மை இனவாத அரசின் ஆயுத முனையில் அமைதிவழிப் போராட்டம், மீண்டும் மீண்டும் மழுங் கடிக்கப் பட்டது. தமிழ் மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி, அங்கு குடியேறும் சிங்களவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க, புதிய புதிய இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டன. தவிர, தமிழ் பாரம்பரியக் கரையோரங்களில் பாதுகாப்பு என்ற சாக்கோடு இராணுவ முகாங்கள் அடுத்தடுத்து நிறுவப்பட, தமிழர் தாயகம் முழுவதிலுமே சிங்கள இராணுவக் கோலம் பரவலாக்கப்பட்டது. அந்தத் கட்டத்தில் புதிய சிங்களத் தளைகளை அறுத்தெறியவும் பொரும்பான்மைச் சிங்கள அரசின் ஆயுத வன்முறையை எதிர்கொளும் நோக்கத்தோடும் சுகித்துக் கொண்டிருந்த அத்தனை சுதந்திர உரிமைகளையும் தமிழ் இனமும் சுகித்தாக வேண்டும் என்ற விடுதலை உணர்வு சூல்கொண்டு தமிழ் மக்களிடையே கருவளரத் தொடங்கியது. சுகப் பிரசவம் இடம்பெற வேண்டுமானால், அதை முன்னின்று நடத்த தகைமை வாய்ந்த ஒரு மருத்துவரோ ஒரு மருத்துவிச்சியோ அகத்தியத் தேவையாக இருந்தது.

முப்பது ஆண்டு சாத்வீகப் போராட்டத்தின் பின் விடுதலைக் குழந்தையை பெற்றெடுக்க வழிகாட்டும் மங்கல மருத்துவனாகவேரூபவ் தமிழீழமும் தமிழ்நாடும் உலகத் தமிழகமும் தலைவர் பிரபாகனை வரலாற்றில் வைத்துப் பார்க்கிறது. தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்க ஆயுத எதிர்ப்பு மிக அவசியம் என்பதை உணர்ந்த இளைஞன் பிரபாகரன், எழுச்சி பெற்ற இளைஞர்களுடன் தன்னையும் இணைத்துக் கொண்டானர். அவரது துணிவையும் திட்டமிட்டு செயல்படும் திறனையும்கண்டு அந்த இளைஞர் கூட்டம் பிரபாகரனை உள்வாங்கியது. வயதில் சிறியவனாக இருந்ததால் எல்லோரும் அவரைத் □தம்பி□, □தம்பி□ என்று அழைத்தார்கள். □தம்பி□ என்ற பெயர் பிரபாகரனின் குறியீட்டுப் பெயராக மாறியது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் களம் இறங்கிய பல் வேறு ஆயுதக் குழுக்களிடையே □தமிழீழ விடுதலைப் புலிகள்□ என்ற இயக்கத்தை வேலுப்பிள்ளை பிரபாகரன் தோற்றுவித்தார். □புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்□ என்ற தாரக மந்திரத்துடனும் □சொல்லுக்கு முன்

37ம் பக்கம் பார்க்க...



36ம் பக்கத் தொடர்ச்சி...

செயல்□ என்ற செயற்திறனுடனும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எழுச்சி பெற்றது.

சிங்கள அரசு ஆயுத அடக்கு முறையை மிக மூர்க்கமாகக் கட்டவிழ்த்து விட்டது. அரசின் இந்த வன்முறையை ஆயுதம் தரித்த இளம் தமிழ்த் தலைமுறையினர் ஆங்காங்கே எதிர் கொண்டனர். அரசு எதிர்பாராத வேளைகளில் திடீர்த் தாக்குதல்களையும் நடத்தினர். சிங்கள சிவில் நிர்வாகத்தை துவம்சம் செய்தனர். சிங்கள அடிவருடிகளையும் போராளிகளைக் காட்டிக்கொடுப்போரையும் களைஎடுத்தனர். இவற்றை நேரே கண்ட தமிழ் மக்களிடையே விடுதலை உணர்வு பீரிடத் தொடங்கியது. போராடும் இளைஞர்களை தொடர்ச்சியாக ஆதரிக்க வேண்டும் என்ற உணர்வும் தமிழ் மக்கள் நடுவில் மேலோங்கியது. இதுகாலவரை இடம்பெறாத வகையில் தீட்சண்யம் பெற்றிருந்த விடுதலைப் புலிகளின் வீரம் செறிந் தாக்குதல்கள் சிறீலங்கா அரசையும் அரச படைகளையும் நிலைகுலையச் செய்தன. தம் உயிரை துச்சமென நினைத்து நஞ்சு மாலை அணிந்த தலைவனுக்கும் போராளிகளுக்கும் பின்னால் தமிழீழ மக்கள் அணிவகுத்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் □நஞ்சு மாலை□ தமி ழீழ விடுதலைப் போராட்டத்தின் குறியீடானது. □ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் - உயிரினும் ஓம்பப்படும்□ என்ற வள்ளுவன் கூற்றை விடுதலைப் புலிகளின் ஒழுக்க நெறியாக்கினார். உலகிலுள்ள விடுதலைப்போராட்ட இயக்கங்களுக்குள் மிக ஒழுக்கமான விடுதலைப் போராட்ட இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளே என உலக ஊடகங்கள் புகழாரம் சூட்டின.

இந்தச் சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தீர்மானித்த பிராந்திய வல்லரசான இந்தியா, இலங்கைத் தீவு முழுவதையும் தனது ராஜதந்திரக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தீர்மானி த்தது. அதற்கிசைய தமிழ் இளைஞர்களுக்குப் போர்ப் பயிற்சிகளையும் போர்க் கருவிகளையும் வழங்கத் தொடங்கியது. பல மேலதிக தமிழ்ப் போராளி இயக்கங்களை இந்தியா உருவாக்கியது. இந்தியாவின் சுயநல திட்டத்திற்கு இணைந்து போக தலைவர் பிரபாகரன் அவர்கள் மறுத்தார். அதனால் மற்றைய போராளி இயக்கங்களை வைத்து தமிழீழ விடுதலை புலிகளை அழிக்க இந்தியா திட்டமி ட்டது. இதன் காரணமாக எதிரியுடனும் துரோகியுடனும் ஒரேகட்டத்தில் பொருதும் நிலை உருவானது.

இந்தியாவின் ஆதரவைப் பெற்றாலன்றி விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்று உணர்ந்த சிறீலங்கா, தனது ராஜதந்திரக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தியது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு இணங்குவதாகத் சிறீலங்கா சாடை காட்டிய மறுகணம், இதற்காகவே காத்திருந்த இந்தியாவும் தமிழீழப் போராட்டத்தை வேரோடு பிடுங்கி எறிய இணங்கியது. இதனால் பிராந்தியத்துக்கான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வலுவடைந்தது. சிறீலங்காவின் சம்மதத்தை ஒப்பந்தம் மூலம் உறுதிப்படுத்த இந்தியா முடிவெடுத்தது. மண்ணிலே தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம், அர்ப்பணிப்புடனும் உயிர்த் தியாகங்களுடனும் முன்னெடுக்கப் பட்டுக்கொண்டிருந்தது. சிறிலங்கா அரச படையை விஞ்சும் வகையில் தமிழர் படையை வீறுடன் தலைவர் பிரபாகரன் கட்டியெழுப்பப்பினார். கரந்தடி இயக்கமாக உருப்பெற்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தை மரபுவழி தரைப்படை இராணுவமாகக் கட்டி எழுப்பினார். தமிழீழத்தின் தரை எல்லைகள் போன்றே கடல் எல்லைகளும் இருந்தன. கடல் எல்லைகளைக் காக்க கடற் படையை உருவாக்கி தமிழீழக் கடற்பரப்பை தமிழர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். தமிழீழ தரை, கடல் பகுதிகளை தமிழர் வரலாற்றில் முதன்முதலாக தமிழர் ஆட்சிக்குள் கொண்டுவந்தவர் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். தமிழீழ வான் பரப்பை காக்க வான் புலிகளை உருவாக்கினார். சுதந்திரத்துக்கு முந்திய காலப் பகுதியிலிருந்தே குடியேற்றம் என்ற பெயரில் கவரப்பட்டிருந்த தமிழீழ எல்லைப் பகுதிகளில் கூடுமானவற்றை, தமிழீழ தரை, கடல், வான் படை மீட்டெடுத்தது. தமிழர் தாயகப் பகுதியிலிருந்த சிங்கள இராணுவ முகாங்கள் துடைத்தெறியப்பட்டன. மீட்டெடுத்த பகுதிகளில் தமிழர் நடைமுறை அரசு நிறுவப்பட்டது.

எல்லைகள் அங்கீகரிக்கப்பட்டு நாடுகள் உருவாக்கப்பட்ட பின்னர் தமிழருக்கான ஒரு நாட்டை தலைவர்

பிரபாகரன் உருவாக்கினார். கடந்த ஐந்து நூற்றாண்டு கால தமிழர் வரலாற்றில் அதாவது, பண்டைய அரசர் ஆட்சிகளை அடுத்துவந்த கொலனித்துவ காலத்தில்ரூபவ் முதன் முறையாக தமிழர் தாயக எல்லைகளைப் பிரபாகரன் வரையறுத்தார். முப்படைகளை உருவாக்கினார். பழமையும் புதுமையும் கலந்த ஒரு புதிய நீதி - சட்டக் கோவையையும் மக்களுக்குப் பரிச்சயமான வெவ்வேறு அடுக்கு நீதி மன்றங்களையும் நிறுவினார். காவல் துறை அடங்கலாக உள்நாட்டு ஆட்சி நிர்வாகத்தை நிறுவினார். சுங்கக் கோவை, குடிவரவு - குடிஅகல்வு ஆகியவற்றைப் புதிதமைத்தார். விவசாயம் மற்றும் குடி நீர் வழங்கலை ஒழுங்கு படுத்தினார். மீன் பிடித் துறையை சீரமைப்புச் செய்தார். நடைமுறைத் தமிழ் அரசின் அதிகார மையமாக கிளிநொச்சியை நிறுவினார். அனைத்துலக அரசியல் தலைவர்களும் இராஜ தந்திரிகளும் சிறீலங்காவுக்குள் வந்ததும் இலங்கை அரசுடனான நேரடித் தொடர்புகளை எவ்வாறு கொழும்பில் மேற்கொண்டார்களோ, அதேபோல தமிழீழ எல்லைக்குள் வந்ததும் கிளிநொச்சிலேயே அனைத்து நடவடிக்கைகளையும் செய்யக்கூடியாக ஏற்பாடு செய்தார். இதன்வழி கிளிநொச்சி நகரின் முக்கியத்துவத்தை பிரபாகரன் உறுதிப்படுத்தினார். தமிழீழத்தின் தலைநகராக திரிகோணமலையைத் தேரந்தெடுத்தார். ஐக்கிய நாடுகள் சபையால் தமிழீழ அரசு சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படாத போதிலும்ரூபவ் நடைமுறைத் தமிழ் அரசுடனான உலக அரசுகளின் நடவடிக்கைகளை கிளிநொச்சியில் மேற்கொள்வதற்கு வழிவகுத்ததன் மூலம் □இலங்கைத் தீவில் இரண்டு நாடுகள் உள்ளன□ என்பதை சூட்சுமமாகச் உணர்த்தினார். ஒரு தனித்தியங்கும் அரசுக்கு தேவையான அத்தனை இலட்சணங்களும் பொருந்திய ஒரு நடைமுறை அரசை நிறுவி படிப்படியாக அதை வளர்த்தெடுத்துக் காட்டினார்.

தமிழ் இனத்தில் காலாகாலமாக புரையோடியிருக்கும் பெண் அடிமை முறையையும் பெண் ஒடுக்கு முறைகளையும் தகர்த்து, ஆண் பெண் சமத்துவத்தை புரட்சிகரமாக நிறுவிக் காட்டுவதற்கு, தேச விடுதலைப் போராட்டமே ஐயந்திரிபற்ற வழியைக் காட்டும் என்று பிரபாகரன் முழுமையாக நம்பினார். இதைக் கருத்தில் கொண்டு பெண்களை அறிவு ரீதியாகவும், உடல்வலு ரீதியாகவும் பலம்பெற, பல முன்னெடுப்புகளைச் செய்தார். சமூக, கலை, பண்பாட்டு துறைகளிலும் போர்க் களங்களிலும் பெண்கள் பிரிவுகளைத் தனித்தனிச் சுதந்திர அலகுகளாக உருவாக்கினார். போர்க்களத்தில் மகளிர் அணிகள் எதிரியுடன் போரிட்டு வெற்றி பெற்று மீண்டபோதெல்லாம் அவர்களுடைய சாதனையின் மகோன்னதத்தை உலகம் பாராட்டும் வகையில் அவர்களை முன்னிலைப்படுத்தி வழிநடத்தினார். உலகப் பொரு கள வரலாற்றை உற்று நோக்கினால், துணைப் பணிகளை மட்டுமே பெண்கள் புரிந்து வந்தது கண்கூடு. ஆனால் பிரபாகரன் அவர்கள் உலகத்துக்குக் காட்டிய வீராங்கனைகள், உடலும் உளமும் பலம் பெற்றவர்களாக, எந்தத் துறைகளிலும் சாதனைகளிலும் மேம்பட்டவர்களாக, புத்தி சாதுரிய அணுகு முறைகளில் தனித்துவம் கொண்டவர்களாக அமையும் வகையில் அவர்களுக்குப் பயிற்சிகள் பெற வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தார். உலகப் போர் அரங்கில் தமிழீழ விடுதலைப் புலிப் பெண்கள் பிரிவு ஒப்பாரும் மிக்காரும் அற்ற வடிவெடுத்திருப்பதை அவர்களுடைய சாதனைகள் மூலம் உலகுக்கு உணர்த்தினார்.

பெண் விடுதலைக்கு தலைவர் பிரபாகரன் அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாரோ அதே அளவு முக்கியத்துவத்தை சமூகத்தில் புரையோடியிருந்த சாதிரூபவ் சமய பாகுபாடுகளை அறவே ஒழிப்பதிலும் தீர்க்கம் காடடினார். மகாகவி பாரதியின் □சாதிகள் இல்லையடி பாப்பா□ பிரபாகரனின் கண்களில் புது ஒளி பாய்ச்சிய வண்ணமே எக்காலமும் இருக்கும். சாதி, சமய பாகுபாடுகளை அறவே புறம் தள்ளினார். அறிவுக்கும் திறமைக்கும் ஏற்றம் கொடுத்தார். தனியாளின் தனிப்பட்ட திறமைகளை அடையாளம் கண்டு, அவரவரை அவரவர் துறைகளில் ஊக்கப்படுத்தி ஆளுமையைப் போற்றினார். வேலுப்பிள்ளை பிரபாகரனின் அவர்களின் தலைமையிலான போராட்டத்தின் வீச்சு, இலங்கையின் எல்லைகளைத் தாண்டி, பிராந்திய வல்லரசுகளின் கவனத்தை ஈர்க்கும் நிலை வரை சென்றது. இலங்கை - இந்திய ஒப்பந்தம், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, இந்தியப் படை வருகை, புலிகள் இந்தியப் போர், இந்தியப் படை வெளியேற்றம் போன்ற வரலாற்று நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசைப்பட்டன. சிங்கள அரசு - தமிழீழ நடைமுறை அரசு - போர் நிறுத்தம், பேச்சு வார்த்தை, சமாதானம், மீண்டும் போர் - மீண்டும் சமாதானம் - மீண்டும் போர் என்று அதன் நீட்சி, மற்றும் வெற்றி - தோல்விகள் என்ற வரிசைக் கோர்வையில் தமிழர் தாயக மண்மீட்புப் போர் தொடர்ந்தது. சிறீலங்காவின் அதி உயர் பாதுகாப்புப் படைமுகாங்களும் கேந்திர முக்கியத்துவமான படைமுகாங்களும் தலைவர் பிரபாகரனின் படைகளால் தகர்த்து அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான சிங்கள இராணுவத்தினர் படையிலிருந்து தப்பி ஓடினர். பிராந்திய வல்லரசின் எல்லை தாண்டி, தமிழர் விடுதலைப் போராட்டம் உலக வல்லரசுகளின் கைகளுக்கு மாறியது. அனைத்துலகத் தலையீடு தமிழர் தாயகப் பகுதிகளுக்கு அனைத்துலகத் தலைவர்களின் வருகைக் அனைத்துலக மேற்பார்வையில் சிங்கள அரசு - தமிழர் நடைமுறை அரசு சமாதான ஒப்பந்தம் அனைத்துலக சமாதானக் கண்காணிப்புக் குழுவின் இலங்கை - வருகை என அனைத்துலக நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழீழ விடுதலைப் போராட்டம் நகர்ந்தது.

நிலைமையைச் சமாளிக்கவும் சூழ்ச்சி வழியில் விடுதலைப் புலிகளை அழிக்கவும் அனைத்துலக அனுசரணையுடன் சிறீலங்கா அரசு புலிகளுடன் சமாதான ஒப்பந்தம் செய்ய முன்வந்தது. அனைத்துலக அனுசரணையாளராக நோர்வே பங்கேற்றது. சிறீலங்கா அரசின் சார்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் தமிழ் மக்கள் சார்பில் தலைவர் பிரபாகரனும் 22 பெப்புரவரி 2002 இல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைஒப்பம் இட்டனர். பேச்சுவார்த்தை தாய்லாந்து, நோர்வே, ஜப்பான், யேர்மனி, சுவிற்சலாந்து என்று பல நாடுகளில் நடபெற்றது. கால விரயம் நீடித்ததே தவிர அரசியல் தீர்வு எதுவும் ஏற்படவில்லை. சிறீலங்கா அரசு பன்னாட்டு அரச உதவிகளுடன் தனது படை பலத்தைப் பெருக்கி 2006 இல் விடுதலைப் புலிகளை வலிந்து போருக்கு இழுத்ததோடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மீறியது. மீண்டும் போர் மேகங்கள் தமிழ் மக்களைச் சூழ்ந்து கொண்டன. அனைத்துலக நாடுகளைப் பொறுத்த வரையில், அவை தங்கள் புவியியல்சார் மற்றும் கேந்திரவியல்சார் அரசியல் நலன்களை மனதில் கொண்டு, தமிழர் தாயகம் உருவாவதற்கு இடமளிக்க மறுத்தன. இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு ஒரு நீதியான சமாதானத்தைப் பெற்றுக் கொடுக்கவும் முன்வரவில்லை. அனைத்துலக போர் விதிகளை மீறி இலட்சக்கணக்கான பொது மக்களைக் சிறீலங்கா அரசு கொன்றொழித்தது. 2009 மே 18 இல் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முல்லைத்தீவு - முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப் படவில்லை, அழிக்கப்பட்டது. வல்லரசு, பிராந்திய வல்லரசுகள், அனைத்துலக முதல் நிலை அரசுகளின் ஆயுத உதவிகளுடனும் நவீன தொழில்நுட்ப உதவிகளுடனும் சாட்சிகள் அற்ற சூழ்நிலையை உருவாக்கி, பிரசவத்துக்கு தாயாராக இருந்த தமிழீழக் குழந்தையை தாயின் வயிறைக் கிழித்து கொடூரமாகக் கொன்றொழித்தார்கள்.

பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியும் வெற்றியும் தமிழீழ எல்லையைத் தாண்டின் தமிழ்நாட்டு எல்லையைத் தாண்டின் உலகில் எங்கெங்கு தமிழ் மக்கள் குடியேறினார்களோ அங்கெல்லாம் சென்று உலகத் தமிழர்களின் இதயங்களில் குடியேறின. உலகத் தமிழர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய உணர்வு ,யல்பாகவே ஊற்றெடுக்கவும் அவர்களை ஒன்றிணைக்கவும் அவை வழிகோலின. தென் ஆபிரிக்கா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் பெருந்தொகையாக பல நூற்றாண்டுகளுக்கு முன் கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள், தமிழ்த் தேசிய உணர்வு உலகெங்கும் வியாபிக்கத் தொடங்கியதும், தம்மை இந்தியராக அடையாளம் காணுவதைக் குறைத்துக்கொண்டு தம்மைத் தமிழராகவே அடையாளம் காணத் தொடங்கினர் என்றால் அந்த வெற்றிச் சாதனை, தமிழ்த் தேசிய உணர்வுப் பரவலையும் அதன் மூலவனாக இருந்த வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சாரும்.

தமிழினம் பற்றி இன்றைய உலகம் அறியவும், ஆராயவும் தலைப்பட்டமைக்கு காரணம் தலைவர் பிரபாகரனின் தொடர்ச்சியான நீண்டகால ஆயுத போராட்டம். போர்க் களத்தில் நின்று விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடிய எதிரணிப் படைத் தளபதிகளும், போர் வல்லுநர்களும், போர் ஆய்வாளர்களும் பிரமித்துப் பார்க்கின்ற ஒரு போராட்டத் தலைவனாகவும் ஒரு பெரும் தமிழ்த் தலைவனாகவும் பிரபாகரன் உலக விடுதலை வரலாற்றில் இடம்பெறுகிறார். விடுதலைப் போராட்டத்தின் நடுப்புள்ளியாக பிரபாகரன் நின்றார். சூழ நின்றவர்களை இயக்கினார். அவர்களின் சிந்தனைக்கும் செயலாக்கத்துக்கும் மதிப்பளித்து போரட்டத்தை ஒருமுகப் படுத்தினார். ஒரு விடுதலைப் போராட்டம், ஒடுக்கப்பட்ட மக்களின் உயிர்த் தியாகங்களின் ஊடாகவும், உடைமை அழிவுகளின் ஊடாகவும், வலி சுமப்பின் ஊடாகவும்ரூபவ் துணிச்சலோடு முன்னெடுத்துச் செல்லப்படுவதாகும். அந்தக் களத்தில் ஒடுக்குமுறையை கட்டவிழ்க்கும் அரசும், அதற்கு முண்டு கொடுக்கும் பிராந்திய, உலக வல்லரசுகளின் நேரடி, மறைமுக உதவியும், ராஜதந்திரத் தலையீடும் அந்த விடுதலைப் போராட்டத்துக்கு பின்னடைவை ஏற்படுத்தும். வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற மனிதன் புராணங்களிலோ, இதிகாசங்களிலோ வரும் ஓர் அபூர்வ பாத்திரம் அல்லன். செவிவழி அறியப்பட்ட வரலாற்று நாயகனும் அல்லன். மாறாக தன் மக்களின் விடுதலைக்காக தன்னையும் தன் மனைவி, தன் மூத்த மகன், தன் மகள், தன் இளைய மகன் ஆகியோர் அடங்கிய முழுக் குடும்பத்தையும் முழுமையாக அர்ப்பணித்த ஒரு மானுடன். தமிழர் மத்தியில் பிறந்து, தமிழ் மக்களுக்காகப் போராடி, தமிழ் மக்களின் விடிவுக்கான தலைமைத்துவத்தைப் பூண்டு, வழிகாட்டிய ஓர் இலட்சிய வீரன். தம்பி, அண்ணன், தலைவர், தேசியத் தலைவர், தமிழீழத் தேசியத் தலைவர், தமிழ்த் தேசியத் தலைவர் எனப் பல படிநிலைகளில் தமிழ் மக்களால் அழைக்கப்பட்டு, நேசிக்கப்பட்டவர். தம்பியாய்த் தொடங்கி தமிழ் தேசியத் தலைவனாய் மிளிர்ந்தவர்.

பொன்ராசா அன்ரன்
20.11.2023


Gogulam
"Where you find Art"

கோகுலம் இது ஒரு கலைக் களஞ்சியம்
வயலின் கருவி, வீணை, மோரசிங் , கடம், தபேலா, புல்லாங்குழல்,நடன உடை (Custom), சாரீ, வேஷ்டி , குத்துவிளக்கு , இசைக்கருவிகள், பரத நாட்டிய அணிகலன்கள் (Jewellery), பரத நாட்டிய புத்தகங்கள்,CD,DVD சுவாமி சிலைகள், அனைத்து அளவுகளிலும் சுவாமி மாடம், சுவாமிப் படங்கள், பூஜை பொருட்கள்,சுவாமிப் பாட்டு அனைத்தையும் பெற்றுக்கொள்வதுடன் காவடி, கரகம், மயில்தோகை, பொய்க்கால் குதிரை, கிரீடம் போன்றவற்றை வாடகைக்குபெற்றுக்கொள்வதுடன் அரங்கேற்றத்திற்கான மேடை அலங்காரங்களும் செய்து தரப்படும்
Phone:(001)416 265 2093
2654, Eglinton Avenue East (Brimley & Eglinton),Scarborough Ontario M 1 K 2 S 3 Canada | Opening Time:11 A.M To 9 P.M | www.gogulam.com



கல்லறை சொல்லும் கதை.

அரக்கரின் ஆட்சியிலே அல்லலுற்ற மக்களுக்காய்
உரமான படையமைத்தே ஊக்கமாய்ப் போராடத்
தரமான இளைஞர்க(ளை)க் காப்பதற்காய்
வரமாகப் பெற்றநல் வீரனேதான் கரிகாலன்.

ஒழுங்கான பயிற்சியை ஓர்மநிறை இளைஞர்க்கு
அழுக்காறற்ற தலைவர்கள் ஆர்வமுள்ள பயிற்றினர்
குழுக்களாய் அமைந்தே கூரறிவால் ஒழுங்கமைப்பு
முழுநிறைவு கண்டதன்பின்
முற்றுகைக்காம் ஆணையதே.

வடகிழக்கை ஒன்றிணைத்தே
வல்லாட்சி காண்பதற்காய்
திடங்கொண்டான் நற்றலைவன் தீராத வேட்பாலே
அடம்பிடித்த சிங்களத்தின் அடாவடித் தனத்தாலே
புடம்போட்ட செந்தமிழர் பூரண ஆதரவே.

கல்லூரி மாணவர்கள் கருப்பொரு ளானார்கள்
வல்லறி வுள்ளவர்கள் வழிகாட்ட லங்கேதான்
சொல்லாற்றல் மிக்கவர்கள் சோர்வின்றிச் செயற்படவே
கற்றோரும் மற்றோரும் களிப்புடனே வீர ரரானார்.

கொள்கைக்காம் போராட்டம்
கோமகனார் தலைமையிலே
கள்ளமற்ற காளையர்கள் காட்டிய வீரத்தால்
எள்ளலின்றி ஏற்றார்கள் ஏற்புடைய வெற்றிகளை
துள்ளிய சிங்களமோ சோர்வுடனே சென்றதுவே.

வெற்றிகள் பெற்றாலும் வேதனையும் அங்குண்டே
உற்றதந்தப் போரிலே உயிரிழந்த மாவீரர்
கல்லறை யானாலும் காடையரால் சீரழிவே
கல்லறை சொல்கின்ற கதைகளைக் கேட்போமே.

பேரும் புகழும் இல்லாதார் புகழில்லார்
வேரென்றே அறியாத வேட்கை கொண்ட
கூரறி வில்லாத குற்றஞ்செய் சிங்கவீரர்
போர்நீதி அறியாத பேடிகளே இடித்தழித்தார்.

சிதைந்தாலும் எம்மாவி சுற்றித் திரிந்தங்கே
விதைத்தஎம் கல்லறையில் வீரராய்த் திரிந்தங்கே
விதைத்தழிப்போம் வாழ்கின்ற சிங்களப் படையினரை
உதையமாகும் தமிழரசை
ஊக்கமாய்க் காத்துநிற்போம்.

கற்றவர்க்கும் கல்லறையே கல்லாத செல்வர்க்கும்
அற்றவிடத் தன்போடு அளிக்கின்ற அன்பர்க்கும்
நல்லாட்சி செய்துசென்ற நாயகர்க்கும் கல்லறையே
பொல்லா அர்கரைப் போரிலே வென்றோர்க்கும்.

கல்லறையாய் இருந்தவரே கடவுளானார் அன்றெமக்கு
நல்லவராய் வாழ்ந்தவர்க்கு நல்லதோர் அடையாளம்
பொல்லாதார் கண்களுக்குப் பொய்யாகி விட்டதுவே
நல்லவர்கள் செய்யாரே நாசகாரச் செயல்களையே.

பாவலர், புலவர் முருகேசு
மயில்வாகனன்.

Green Field
Construction Project Management

• Premium Custom Build Homes • Renovation & Remodeling • Commercial • Restaurants • Office Building Service • Design to Construction & Project Management to meet your needs • Quality workman-ship & an on time performance



Jude
416.986.9222
Email: consalas.j@gmail.com
Web: www.greenfield.ca
3 Fredrick Wilson Ave,
Markham, Ont.



தமிழன் என்று சொல்லடா

தமிழன் என்று சொல்லடா

தலை நிமிர்ந்து நில்லடா என்ற சொற்பதத்தின்

முழு அர்த்தத்தினையும் செயல்வடிவமாக்கிய

பெரும் வீரமரவராவார் ஏம் அவர்களை ஒவ்வொரு

தமிழருக்கும் தமிழ் வீரமறவர்களின் வீரர்கள்

எழுப்போர் பற்றியெல்லாம் கூறியதல்லாமல்

சேரன், சோழன், பாண்டிய மன்னர்களை ஏம்

தலைவர் கூறியவையும் இவர்களையும் விடவும்

ஒருபடி உன்னதமான மாமனிதர்களுக்கெல்லாம்

சிறந்த தமிழருக்கான முதற்படியாக உள்ளார்.

ஏம்மக்களின் நின்மதிப் பெருமூச்சை தீர்க்க

வேண்டுமென்ற ஆறாதுயர் கொண்ட கனவை

நனவாக்க வேண்டுமென்ற பெருமைமிக்க இறை

இலட்சியவானான தமிழரின் காவல் தெய்வம்

ஆகுதியில் நின்று இறைவனுக்கு நிகரான இறை

தியாகியானார். ஏம் தெய்வ தமிழர் சரித்திரமான

தலைவர் வழியில் நாம் எவரையும் நினைக்க

முடியாது.... எழுத்தில் அல்ல உலகிலேயே

ஏம் தலைவருக்கு ஒப்பானவர் யாரும் இல்லை

இனியும் இருக்க முடியாது ஐயா தமிழன் அல்ல

எந்த நாட்டவனும் ஏம் தலைவன் மாதிரி பிறக்கவும்

முடியாமல் ஏம் தலைவன் பாதங்களை மலர்

கொண்டு பூசிப்போம்.

கிழக்கு

கவியூர் கண்ணன்

H.E. Heating & Cooling Air Solutions
Repair & Service & Installation
Kumar - 416.993.8001
Upgrade to High Efficiency furnaces SAVE UPTO 40% ON BILLS
FREE upgrade of you old water heater to Tankless
ALL MAKES & MODELS
Lennox, Trane, Carrier, Payne, Goodman,
Keeeprite, Attic Insulation
24/7 HOURS SERVICE

பன்முக ஆற்றலின் பிறப்பிடம்

என் இதயக் கோவிலில் என்றும் இடம்பிடித்த தலைவர்

பன்னெடுங்காலமாய் இப் பூமிப்பந்தில் தனித்துவம் மிக்க ஒர் தேசிய இனமாய் வாழ்ந்து வரும் ஈழத்தமிழினத்தின் மீது சிங்கள பேரினவாதம் தன் கோரப்பற்களினால் கொடுராமான இனஅழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்த காலத்தில் தமிழினத்தின் துன்பங்களைப் புரிந்துகொண்டு தமி ழருக்கென நிரந்தர விடுதலையை ஏற்படுத்துவேன் என்ற சிந்தனையோடு சிறுவயதிலேயே மாறாத உறுதியோடும் உயர்ந்த இலட்சியத்தோடும் தனித்து விடுதலைக்கான பாதையில் காலடி எடுத்து வைத்த ஓர் உன்னதமான ஒப்புயர்வற்ற மனிதன் தான் நான் என்றும் நேசிக்கும் என் உயிரினும் மேலான தேசியத்தலைவர் அவர்கள். ஆக்கிரமிப்பாளர்கள்துப்பாக்கு கொண்டு தமிழினத்தை அடக்கிய, அழித்த காலத்தை மாற்றி அதே துப்பாக்கிகளை தமிழரின் கையில் கொடுத்து நிமிர்ந்து நிற்கும் வரலாறு படைத்த உன்னதமான செயல்வீரன். அத்தகைய அற்புதமான மனிதனுக்குள் நிறைந்திருந்த பன்முக ஆற்றல் அளவிடற்கரியது. சாதாரண வார்த்தைகளில் சொல்லிவிட முடியாதது. தலைவர் அவர்கள் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் எவ்வாறு எம்மை நேசித்து வழிகாட்டியாய் இருந்தாரோ அதுபோலவே ஓர் மக்கள் எழுச்சிமிக்க இராணுவ கட்டமைப்புக்களோடு உருவாக்கம் பெற்ற போராளிகளின மீதும் வைத்திருந்த பற்று ஆழமானது. எப்போதும் மாறாதது. அடர்ந்த காடுகளுக்குள் அணிவகுத்து தொடங்கிய போராட்டத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவனாகிய நான் அன்று கண்ட அவரது பாசப்பிணைப்பை பின்நாளில் அவருடனான சந்தப்புக்களின் போது கண்டு வியந்து நின்றேன். அளவிடமுடியாத உணர்ச்சிகளின் வெளிப்பாட்டால் நான் அவரிடம் கட்டுண்டுபோனேன். என்னைப் பொறுத்தவரை தலைவரின் அருகலான போராட்ட வாழ்வு புதிய தமிழ்ப்புலிகள் என்ற பெயரோடு உருவான காலத்தில் இருந்தே ஆரம்பமானது. அன்று தொட்டு அவர் என்மீதும் என்னைப்போன்ற மூத்த உறுப்பினர்கள். போராளிகள், தளபதிகள் அனைத்துலகக் இளை செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட அனைவரின் மீதும் காட்டிவந்த பரிவு எம்மீதான அக்கறை என்பது ஒருதேசத்தின் தலைவர் என்பதையும் தாண்டி ஒரு தந்தையை ஒரு தாயைப் போன்றதாக அமைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதே போல எமக்குரிய எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் அதனை எமது நிலையில் நின்று விளக்கி தீர்ப்பது அவரது இயல்பு. இவ்வாறு எமது பிரச்சனைகளை சரியாகப்புரிந்து கொண்டு தலைவர் என்ற நிலையில் மட்டுமல்லாது ஒரு குடும்பத்தின் தலைவன் போன்று எம்மை வழிநடத்தும் விதம் எந்த விடையத்தையும் மனம்இறந்து கதைக்கின்ற நெருக்கமான நட்பார்ந்த உறவை அவர்மீது ஏற்படுத்தியிருந்தது. ஆரம்பகால தலைமறைவு வாழ்க்கையிலும் கூட உணவு உடை தேவைகளுக்கான கொடுப்பனவுகள் அனைத்துமே சிறப்பானதாக அமைய வேண்டும் என்பதில் முழுமையான அக்கறை எடுப்பார் அதேபோல ஆரம்பகால போராட்ட கள நடவடிக்கைகளில் நாம் பொறுப்புணர்சீசியோடும் எமக்கு வீண் இழப்புக்கள் ஏற்படக்கூடாது என்பதற்காக முன்கூட்டியே பல விடையங்களை ஊகித்தறிந்து எம்மிடம் சொல்லுகின்ற பண்பு அவருக்கே உரித்தானது.

அதே நேரம் தான் என்றும் நேசிக்கும் மக்கள் மீதும் அவரது பரிவு அதிகமாக இருப்பதை காணக்கூடியதாக இருந்தது. ஆரம்பகால போராளிகளில் சிலர் தவறு செய்தபோது இதைக்கேட்ட தலைவர். கோபத்துடன் தவறு செய்தவரை தண்டிப்பதால் எந்தப்பயனும் இல்லை. முடிந்தால் தவறை சுட்டிக்காட்டி திருந்தும்படி அறிவுறுத்தினார் தலைவரின் இந்த அணுகுமுறையானது என் மனதில் தலைவர் பற்றிய மதிப்பீட்டை இன்னுமொருபடி உயர்த்தியிருந்தது. நாம் களச்செயற்பாடுகளை முன்னெடுக்க முற்படும்போதெல்லாம் தலைவர் முதலில் குறிப்பிட்ட விடையம் மக்களின் உயிர் உடமை தொடர்பான விடையமே. இது எமது இலட்சிய வேட்க்கைக்கான முதற்படி எனவே மக்களின் பிரச்சனைகளையும் கவனத்தில் எடுத்து எமது கடமையைச் செய்ய வேண்டும் என்ற மன உணர்வை ஏற்படுத்தியது. அத்துடன் நாம் உபயோகிக்கின்ற ஒவ்வொரு பொருட்களும் மக்களின் பணத்தில் வாங்கப்பட்டவை என்பதைச் சொல்லி அனாவசிய செயற்பாடுகள் போன்றவற்றி ற்கு சிறிதளவும் அனுமதிக்கமாட்டார். நாம் உபயோகிக்கும் பொருட்கள் அனைத்தையும் தேவைக்கு அளவாக அனுமஇப்பார் இவ்வாறு சிக்கனமாக இருக்கவேண்டிய பொருட்களை வீணாக்கும் நேரத்தில் அவரிடம் கோபத்தைக் காணமுடியும். ஆற்றலின் பிறப்பிடமான தலைவர் அவர்களிடம் நான் கண்ட பண்புகளில் இன்னொன்று இறந்த திட்டமிடுதலாகும். எந்த விடையத்தையும் ஆழமாக சிந்தித்து அதற்கேற்ற முறையில் ஒவ்வொருவரையும் கையாள்வார். எந்தவொரு செயற்பாடும் தலைவரின் மனவெளியில் அரங்கேறி நிகழ்ந்து முடிந்த பின்னரே களத்தில் அரங்கேறும் என்பதற்கு ஒவ்வொரு தாக்குதலின் நுட்பமான திட்டமிடல்களே சான்றுகளாகும். இவ்வாறு தலைவர் அவர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் பகர்தல் என்பது காலத்தின் தேவையாமினும் அவை முழுமைபெறாது. காரணம் அவரின் தலைமைத்துவப் பண்பும்சரி அவரின் வழிகாட்டுதல்கள் ஆனாலும் சரி அவர் எல்லா நிலைகளிலும் உயர்ந்தே விளங்குகின்றார்.

தலைவர் அவர்கள் யாருடைய ஆலோசனைக்கும் கருத்துக்கும் செவிசாய்க்கும் தன்மை கொண்டவர் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு மதிப்பளிப்பவற் விடுதலையை விரைவுபடுத்தவல்ல கருத்துக்கள். அறிவார்ந்த சமூகத்திடமிருந்தும் வருமாக இருந்தால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து கவனிப்பதுவும் முக்கி யமான விடையங்களை உடனடியாக நிறைவேற்றுவதும் எந்த விடையத்தையும் அவரவர்க்கு உரிய நிலையில் நின்று அணு தீர்வினைக் காண்பதும் தலைவரின் தனித்துவமான பண்புகளில் ஒன்று. இதேபோல தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்லுகின்ற இன்னொரு விடையத்தை இங்கு குறிப்பிட்டாகவேண்டும். இந்த போராட்டத்தில் ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைத்தான் செய்கின்றனர். நானும் அப்படியே. இதுவரை எனது இனத்துக்கான பணி முடிவடைய வில்லை. எனது மக்களுக்காகத் தாயகத்தை பெற்றெடுத்த பின்னர்தான் எனது பணியை முழுமையாகச்செய்தேன் என நிறைவடைய முடியும். இம்மாபெரும் இலட்சியப்பயணத்தை நான் முன்னெடுக்கும் போது இடையூறுகள் ஏற்பட்டு நான் போர்களத்தில் வீரச்சாவு அடைந்தாலும் கணல்விட்டுப் பிரகாசிக்கும் இச்சுதந்திர தீப்பந்தை உலகப்பந்தில் வாழும் என் நேசத்துக்குரிய இளம் தலைமுறை கையேந்தி முன்னெடுக்கும். என்றார். இவ்வாறு பணியிலேயே அயராத உறுதிமிக்க தலைவர் அவர்கள் மக்களோடு நின்றவாறே அனைத்துச் சவால்களையும் எதிர்கொண்டார்.

சர்வதேச வல்லரசுகளின் போர் வியூகங்கள். சிங்களப் பேரினவாத்தின் அத்துமீறிய இராணுவ நடவடிக்கைகள் பிராந்திய வல்லரசுகளின் சுற்றிவளைப்புக்கள் போன்ற மாபெரும் அச்சுறுத்தல்களை களமுனையில் நின்று எதிர்கொண்டவாறு வழிநடத்திய அவரது நெஞ்சுரம் அளவிடமுடியாதது. தான் மட்டுமன்றி தனது குடும்பத்தையும் முழுமையாக போர்க்களத்தில் சமராடவைத்த தலைவர் அவர்களையும் விருப்பு வெறுப்பின்றி போராளிகளோடு போராளிகளாகவே முன்னிறுத்தி களமுனைச்சவால்களை எதிர்கொண்டார். அத்தகைய பண்பும் உறுதியும் தான் எமது போராட்டத்தை 2009 முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான இன்று வரை உலகம் வியக்கும் வண்ணம் நிலைபெற வைத்துள்ளது. 2003 காலப்பகுதியில் அவருடனான எனது சந்இப்புக்களின் போது அவரின் உரையாடல்கள் என்னை வியக்கவைத்த ஒன்றாகவே அமைந்தது. அது பேச்சுவார்த்தைகாலம். சர்வதேசம் எமது போராட்டத்தை கருவறுக்க அடிகோலியகாலம். சமாதான தேவதைகளின் சமரசப் பொறி உருவாகிய காலம். அப்போது ஆயுத ஒப்படைப்பு சார்ந்த கேள்வியும் தமிழீழக்கோரிக்கை சார்ந்த கேள்வியும் முன்வைக்கப்பட்டபோது எனது நலனுக்காக என் பாதையை நான் மாற்றிக் கொள்ளமாட்டேன். எனது உயிருக்காக மறுபடி ஒரு ஆயுத ஒப்படைப்பு நடக்க அனுமதிக்கமாட்டேன். நான் வீரசீசாவடைந்தால் "இன்னொரு பிரபாகரன் அல்லது பிரபாகரியாவது தோன்றி இந்தப்போராட்டத்தை தொடர்ந்து நடத்தவேண்டும். இதில் நீங்கள் அனைவரும் உறுதியான முடிவை எடுக்க வேண்டும். இந்த கடினங்களுக்கு ஈடுகொ டுத்துப் போராடும் மனநிலை யாருக்காவது இல்லையெனில் அவர்களை பாதுகாப்பாக மறுவாழ்வளித்து அவர்களின் பெற்றோர்களிடம் அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைததுவிடுவேன். நான் விலங்குகளைச் சுட்டுச் சாப்பிட்டாவது இந்த போராட்டத்தை தொடர்வேன். எனது மக்கள் போராளிகள் அவ்வளவு ஏன் என் உயிரினும் மேலான கரும்புலிகள் என அனைவரும் ஆடிய போர்களங்கள் வரலாற்றுச்சமர்கள் அனைத்தும் நாம் சதிராடிய விடுதலைக்களமாகும். எண்ணற்ற நெருப்பாறுகளை நீந்திக்கடந்து வெல்லமுடியது என்று கருதிய எதிரியின் பாசறைகளை தகர்த்து பார்போற்றும் விடுதலைக்கணலை மூட்டியவர்கள் எமது மாவீரர்கள். இரத்தமும் சதையுமாய் களம் கண்ட மக்கள் விண்ணிருந்தாவது பார்ப்போம் விடுதலையை என்ற எனது நேசத்துக்குரிய தளபதிகள் போன்ற உன்னதமானவர்களின் இயாகத்தை எல்லாம் எதிரியின் காலடியில் போட்டுவிட்டு சரணாகதி அடைதல் என்பது நான் எனது மக்களுக்கும் மாவீரருக்கும் செய்யும் துரோகமாகும் என்றார். தலைவர் இவ்வாறு சொல்லும் போது அங்கிருந்த அனைவரும் நெஞ்சுருக நின்றோம். இந்த சம்பவத்தின் மூலம் தலைவர் அவர்களது இலட்சியப்பற்றையும் தான் நேசித்த மக்களின் மீது கொண்ட பாசமும் தன்னை நேசித்த போராளிகளின் அன்பும் நம்பிக்கையும் நேரடியாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கொண்ட கொள்கையில் உறுதியும் விடாமுயற்சியுடன் கூடிய இலட்சியப்பற்றும் தனது நலனையோ உயிரையோ தனது குடும்பத்தின் மீதான பற்றையோ பாசத்தையோ அவர்களின் பாதுகாப்பையோ பெரிதாக எண்ணாது தாய்நாட்டுக்காக எதையும் செய்யத்துணி வேன் என்ற தலைவரின் நெஞ்சுரம் தான் எமது இலட்சி ய பயணத்தின் இறுதி இலக்காக இருக்கவேண்டும். இத்தகைய தலைவரின் அடிமன விருப்பு வேணவா எதுவாக உள்ளது என்பதை எல்லோரும் அறிந்து அவ்வழி எமது பாதையை வகுத்துக் கொள்ளவேண்டும்.

போராட்ட வடிவங்கள் மாறலாம் எமது இலட்சியங்கள் மாறப்போவதில்லை என்ற தலைவரின் தாரக மந்திரத்தை நெஞ்சில் நிறுத்தி பயணிப்பதே இன்றைய காலத்தின் தேவையாக அமைகின்றது. அளவிட முடியா ஆளுமைக்கும் உறுதி குலையா உன்னத கோட்பாட்டுக்கும் உரியவரான எமது தலைவர் அவர்களுக்கு தமிழீழதேசமும் உலகத்தமிழினமும் என்றென்றும் கடமைப்பட்டது. தலைவர் என்இன்ற பெரும் பொறுப்புக்கும் அப்பால் அவரது மனிதநேயமும் மக்கள், போராளிகள் மீதான அக்கறையும் பரிவும் யாருடனும் ஒப்பிடமுடியாதவை. எந்த ஒப்புயர்வுமற்ற விடாமுயற்சியோடும் உயர்ந்த நெஞ்சுரத்தோடும் விடுதலைப் போரை வழிநடத்திய எம் மாபெரும் தலைவன் தன்னுயிரை யாருக்காகவும் சமரசம் செய்யாது மக்களோடு மக்களாக நின்று வழிநடத்தியது போல அந்த தலைவனின் இலட்சியப்பாதையில் நாமும் ஒருங்கிணைந்து தொடர்ந்து பயணிப்போமாக இருந்தால் நிச்சயமாக எங்கள் எல்லோரினதும் தாயகக்கனவு நனவாகும்.

"எங்கள் உயிரினும் மேலான உயிராய், என்றும் உலகத்தமிழினத்தின் கலங்கரை விளக்கமாய், வரலாறு தந்த வல்லமையாய், தமிழ்தீதேயயத்தின் ஆத்மாவாய், விளங்கும் விடுதலையின் வியாபக விருட்சதீதிற்கு அகவை 69. வரலாற்றின் ஓர் உண்மை மனிதனாக, ஒரு விடுதலைப் பேரொளியாக, அடிமைப்பட்டுப்போன ஓர் இனத்தின் மீட்பராக, ஒரு சமூகதீஇன் அரசியல் வழிகாட்டியாக, விடுதலையின் ஒரு குறியீடாக, தமிழினச் சின்னமாக, உலகத் தமிழ் இனத்தின் ஒரு வரலாற்று நாயகனான எங்கள் தேசியத் தலைவர் மானிடத்தின் விடுதலையை நேசிக்கும் எல்லோர் மனங்களிலும் என்றும் நிறைந்திருக்கின்றார் உலகெங்கும் விடுதலையை அவாவி நிற்கும் இனங்களுக்கு தலைவரின் வாழ்க்கை ஒரு வழிகாட்டி... எம் மக்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுங்கள் என்பதே அவர் உரைக்கும் விடுதலைப் பத்திரம். இதனையே எங்கள் மனங்களில் ஏந்துவோம்.

முற்றும்

சேர இளமாறன்






iConnect Mortgages
The best time for new beginnings is now.
#iConnect #mortgages #renewal #newbeginning
High Standards, Low Rate Mortgages
DARSHAN SRITHARAN, Mortgage Agent
CELL: 416.836.0345 | OFFICE: 416.291.4555 | FAX 416.298.1414 | darshan@iconnectmortgages.ca | www.darshens.ca
Independently Owned & Operated | FSCO #12825

பிரபாகரம் என்ற ஒளிப் பந்தம்

என் தமிழ் உறவுகளே!
இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்
தமிழ் மக்களிடையே
ஒரு சிந்தனைத் தத்துவ வழிகாட்டி -
தென்னிந்தியத் தமிழகத்தில் தோன்றினான்.
அன்றைத் தமிழ் மக்களின் வாழ்க்கை
எவ்வாறு அமைய வேண்டும் - பொது உலக மக்களின் வாழ்க்கை
எவ்வாறு அமைய வேண்டும் - என்ற
தனது சிந்தனைகள், அபிலாஷைகள், கனவுகளை அந்தத் தமிழ்
சிந்தனையாளன் - வள்ளுவன் -
இரண்டு வரிக் குறள் வடிவாக -
வழி வழி வாய் - மொழியாக
ஓதிச் சென்றான்.
ஏடு ஏடாக பொறித்துச் சென்றான்.

நமது தமிழ்க் கல்விப் பாரம்பரியமும்
ஆலய தொழுகை - ஓதல் பாரம்பரியமும்
வழி வழி வாய் - ஓதல் வடிவமைந்தவை தானே!

அந்த வாய் ஓதல் - ஒலி, ஏடு வடிவாகியது.
காலப் போக்கில் ஏடு, அச்சில் ஏறியது!
அச்சும் - ஒலியும் - அவற்றுடன் ஒளியும்
இன்று இணையம் ஏறியிருக்கின்றன.

"அச்சு-ஒலி- ஒளி" என்ற
இணைய முத்தடம் மீதேறி
உலகப் பொது மொழிகளோடு
தமிழ் மொழியும் கம்பீரமாக
வலம் வந்து கொண்டிருக்கிறது.
உலா வரும் தமிழின் தலையில்,
கம்பீரத் தலைப்பாகையாகி
திருக்குறள் - நம் தமிழ்க் குறள் -
உலக பொது வேதம் ஒதி
ஒய்யார பவனி வருகிறது!

என் தமிழ் உறவுகளே!
இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர்
தமிழ் மக்களிடையே
ஒரு சிந்தனைத் தத்துவ வழிகாட்டி -
நடைமுறைத் தத்துவச் சிந்தனை வழிகாட்டி -
வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற மேதகு பெரியன் -
இலங்கைத் தமிழகத்தில் தோன்றினான்!

தனது சிந்தனைகளை, தனது அபிலாஷைகளை,
தனது கனவுகளை - இந்த நடைமுறைத் தத்துவ சிந்தனையாளன் -
ஏட்டு நிலையில் தேக்கி வைத்திருக்கவில்லை!
மாறாக நடைமுறையில் செயல்படுத்திக் காட்டினான்.

முல்லை, மருதம், நெய்தல் நிலங்களின் வளங்கள்
சூல் கட்டியிருந்த வன்னி மண்ணிலே தனித்தியங்கும்
தமிழீழ தனியரசை நிறுவினான்!
நாடாளும் எந்த ஒரு நாட்டின் அரசும் நிறுவிப் பேணக்கூடிய
முக்கிய நிர்வாகத் திணைக்களங்கள் அனைத்தையும் தான் நிறுவிய
நடைமுறைத் தமிழீழத்தில் நிறுவி, திறமையாகச் செயல்பட வைத்தான்.

எல்லைகளில் தரைப் படைக் கொத்தளம் அமைத்தான்!
கடற்படைக் கரைக்காவல் அமைத்தான்!
வான் படை வானவில் அமைத்தான்!
முப்படை அனைத்துக்கும் முதுகெலும்பாக
உயிர்க் கொடைக் கரும்புலித் தீஞ்சுடர் வளர்த்தான்!

ஒழுங்கான ஆட்சி முறையின் அடி நாதமாக
வடக்கின் தேச வழமைச் சட்டமும்
கிழக்கின் முக்குவாச் சட்டமும்
இலங்கையின் றோமன் டச் சட்டமும்
உலகத்தின் அனைத்துலகச் சட்டமும்
பொருத்தமுற அடங்குவதாக
நீதிக் கோவையை ஏற்படுத்தினான்!
அதை நடைமுறைப் படுத்த
நீதி மன்றத்தை உருவாக்கினான்!
அதற்கு உதவியாக
அன்பையும் கருணையையும் கொண்டு தொழில்படும் காவல்
துறையையும் வடிவமைத்துக் கொடுத்தான்!

வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழீழ தாயகம்
சாத்தியம் சாத்தியமே என்று
உலகுக்கு ஓங்கி ஒலிக்கும் தொனிப்பில்
தன் ஆத்ம தாகம் தீர்க்கும் முயற்சியிலே
தன் இலட்சிய தாகம் தீர்க்கும் முனைப்பிலே
உயிர் அர்ப்பணிப்போடு நின்று
ஒளி காட்டினான்!
வழி காட்டினான்!

ஒடுக்கு முறை விலங்கொடித்து விடுதலை பெறத் துடிக்கும் உலகளாவிய
இனங்களுக்கும்
இன்று தனது உதாரணோபதேசம் மூலம்
பளிச்சென்று
ஒளி காட்டிக் கொண்டிருக்கிறான்!
வழி காட்டிக் கொண்டிருக்கிறான்!

என் தமிழ் உறவுகளே!
புத்தம் வந்தது !
கிறிஸ்தவம் வந்தது!
இஸ்லாம் வந்தது!
காந்தியம் வந்தது!

இவை அனைத்தும்
முதலில் மானுட உள் மனத் தளத்தைச் செப்பனிட,
தத்துவ வழி காட்டிவிட்டு ,
பின்னர் நடைமுறை வாழ்க்கைக்கு
வழி காட்டின!

இவற்றிடையே மாக்சியம் வந்தது!
அடி-நிலை மக்களின் நடைமுறை வாழ்க்கைக்கான
மீட்பு வழியை உறுத்தி உரைத்தபடியே
உள்மனத் தளத்தையும் செப்பனிட
அது - மாக்சியம் - முனைந்தது!

இன்று,
உலகம் பூராவும் ஒடுக்கப்பட்ட மக்கள் குழுக்களையும்
இனங்களையும்
மீட்டெடுக்கவல்ல நடைமுறை வழிகாட்டியாக -
பூரண பட்டறிவோடு -
"பிரபாகரம்"
உலகத் தளத்தில் குதிர்ந்திருக்கிறது! குதித்திருக்கிறது!
நடைமுறைச்செயல்பட்டு,
நடைமுறை வழி காட்டியிருக்கிறது!

என் தமிழ் உறவுகளே!
விடுதலைப் போராளிகளிடையே
அண்ணை என்றும் தலைவர் என்றும் -
அவரைப் புரிந்துகொண்ட மண்ணின் மக்களிடையே
தேசியத் தலைவர் என்றும்
மண்ணிலும் புலத்திலும் விரவி வாழும் தமிழீழ மக்களிடையே
தமிழீழ தேசியத் தலைவர் என்றும்
உலகம் பூராவும் பரவி வாழும் உலகத் தமிழ் மக்களிடையே
தமிழ்த் தேசியத் தலைவர் என்றும்
படிமுறை-படிமுறை அங்கீகாரத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பவர் -
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்!

என் தமிழ் உறவுகளே!
"பிரபாகரம்" என்ற இந்த நடைமுறைத் தத்துவம்
எவ்வாறு வித்தூன்றி, வேரோடி, முளை எழுந்து, உருவும் திருவும்
பெற்றது என்பதை
ஒரு கணம் பின்னோக்கிப் பார்ப்போமா?

ஏற்கெனவே நான் இங்கு குறிப்பிட்டிருக்கும்
முன்னை ஞானிகளின் வழி காட்டல்கள் தேசியத் தலைவரின்
சிந்தையில் உறுதியாகப் பதியு முன்னம் -
அவர் பிறந்த மண்ணில்
அவருடைய தந்தையின் காலடியில்
அவர் கற்ற உறுதியான நேர்மையுணர்வும் உண்மை உரைத்தலும்
பாலன் பிரபாகரனை, சிறு வயதிலேயே பண்படுத்திப் புடமிடத்
தொடங்கியிருந்தன!
தேசியத் தலைவரின் பள்ளிப் பருவத்தில்
அவருடைய மண்ணின் உள்ளூர்ப் பள்ளி ஆசிரியர்கள் ஊட்டிவிட்ட

விடுதலை உணர்வு
அவருடைய இன விடுதலை யாத்திரையில்
என்றுமே வழி-நடை-தாள சுருதி கூட்டி வந்தது!

43ம் பக்கம் பார்க்க...

JAY'S PROFESSIONAL
TRUCK TRAINING CENTRE
Approved as a Private Career College from Ministry of Training Colleges, Universities, Ontario.
Bus : 416.299.9638 | Cell : 416.771.8041 | Fax : 416.609.9841 | Toll Free : 1-877-611-1511
589 Middlefield Rd, Unit 11, Scarborough, ON M1V 4Y6

42ம் பக்கத் தொடர்ச்சி...

அருகமைந்த தமிழ் நாட்டில்
மானுட சமத்துவத்தை நிலை நாட்டும் முயற்சியிலும், வெகுசன அறியாமை அந்தகாரத்தை
விரட்டி ஒழிக்கும் பெரு வேள்வியிலும் -
பெரியாரும் அண்ணாவும்
படிப்படியாகக் கண்டுகொண்டிருந்த நடைமுறை முன்னேற்றங்கள்
தமிழீழ சமுதாயத்தை வடிவமைக்கும் முயற்சியில் தலைவரின் சிந்தனைக்கு தெளிவு தந்தன!
இந்தியாவின் சுபாஷ் ச்சந்த்ர போஷ், தூர கிழக்கு வியெற்நாமின் ஹோ ச்சி மின் போன்றோரின்
அம்புக் கூரனைய வீர அணுகு முறைகளும்
அவருக்குத் துணிச்சல் உரம் ஏற்றிக் கொண்டிருந்தன

ஒன்றைத் தெளிவாக புரிந்து கொள்வோம்!
தமிழ்த் தேசியத் தலைவர்,
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்
தமது வாழ்க்கை வரலாற்று நடையில்
கற்றுக் கொண்டவை அநேகம்!

அவர் கண்டு வியந்தவர்கள் அநேகர்
ஆனால் அனைத்தையும் அனைவரையும் அப்படியே
அவர் பின்பற்றினார் என்றோ
அப்படியே கொப்பி அடித்தார் என்றோ
நாம் கொள்வதற்கு இடம் இல்லை!

எங்கு எங்கு எவர் எவரிடம் இருந்து
எதை எதைக் கற்றுக் கொண்டாலும்
அதில் தம் மண்ணுக்கும் தமது மக்களுக்கும்
தேவையானது எது எது எனத் தேர்ந்தெடுத்தார்
அதை அதை மட்டும் பொறுக்கி எடுத்து
தம் மண்ணுக்கும் தம் மக்களுக்கும் பொருந்தும் வகையில் மாற்றம் கொடுத்து
நடைமுறையில் அதற்கு தமிழீழ-உயிரும் தமிழீழ - வடிவமும் கொடுத்தார்!
நடைமுறையில் அதைச் செயல்படுத்தி
நடைமுறை வழிகாட்டியிருக்கிறார்!
பிரபாகர தத்துவத்தை எமக்கீந்துவிட்டுத் தம் வழி சென்றிருக்கிறார்!
எனது மக்களின் விடுதலைக்காக தொகுப்பில் பொதிந்திருக்கும்
சிந்தனைகளும் வழி காட்டல்களும் -
பொருத்தமான மொழி பெயர்ப்புகளோடு
உலகத் தளங்களைச் சென்றடைய வேண்டும்!
இதை - கடமையாகக் கொள்ளத் துணிபவர்கள்
முன் வந்து நடைமுறை வழி காட்டுங்கள்!

என் தமிழ் உறவுகளே!
சற்று முன்னர் நான் உரைத்தது போல -

அச்சு - ஒலி - ஒளி என்ற
இணைய முத்தடம் மீதேறி
உலகப் பொது மொழிகளோடு
தமிழ் மொழியும்
வலம் வந்து கொண்டிருக்கிறது.
உலா வரும் தமிழின் தலையிலே,
கம்பீரத் தலைப்பாகையாகி
திருக்குறள் நம் தமிழ்க் குறள் -
ஒய்யார பவனி வந்துகொண்டிருப்பதாக
ஏற்கெனவே கூறியிருக்கிறேன்!
அந்தத் திருக்குறள் தலைப்பாகையின்
நெற்றித் திலகமாக பிரபாகரம் என்ற பட்டை தீட்டிய வைரம்
தொடர்ந்து, தொடர்ந்து ஜொலிக்க வேண்டும்!
உலகில் ஒடுக்கப்படும் மக்களுக்கும்
உரிமை மறுக்கப்படும் இனங்களுக்கும்
செவ்வழியும் செல்வழியும் காட்ட -
பிரபாகரம் என்ற ஒளிப் பந்தம்
என் மக்களின் விடுதலைக்காக என்ற தொகுப்பின் வடிவில் -
நம் கரங்களில் இன்று தவளத் தொடங்கியிருக்கிறது!
உலகின் தேவைப்பட்ட மூலை முடுக்கெல்லாம்
அந்த வைரப் பட்டொளி சென்றடைய வேண்டும்!
பயன் தர வேண்டும்!
அதற்குப் பொருத்தமான ஒளியோடை அமைக்க வேண்டிய பொறுப்பு,
உலகத் தமிழ் மக்களை குறிப்பாக ஒன்று திரண்டு இயங்க வல்ல
நம் இனத்து இளையோரைச் சாரும்!
இதுவே இந்தக் களத்திலும் இந்தக் கணத்திலும்
எனது சிந்தனையில் மிதந்து வருவது!
இதுவே எனது விருப்பமும் வேண்டுகோளும் ஆகும்!
நிறைவாக, உங்கள் அனைவருடனும் சேர்ந்து,
பிரபாகரத்தை எமக்கீந்த அந்தப் பிரபாகரப் பெரியனுக்கு
நன்றியும் கரம் கூப்பலும்!

ஈழக்கூத்தன் ஏ.சீ. தாசீசியஸ்



JCS PARTY HALL
Jude Francis
President and CEO
1686 Ellesmere Rd, Toronto, ON M1 H 2V5
Markham IMississauga I Toronto I Scarborough
JC'S GROUP 416.290.6186 | 416.290.6185 jc@jcsgroup.ca / www.jcsgroup.ca



தமிழீழத் தேசியத் தலைவரின் வாழ்வே எதிர்காலத் தலைமுறைக்கு வழிகாட்டி.!

தமிழீழம் என்ற எமது தேசம் ஒளிபெறுவதற்கு உதய சூரியன் உதித்த இன்றைய நாள் உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு புனிதமான நாள். பரந்து விரிந்த உலகத்தில் தமிழ் மக்களுக்கு என்று தனியான நாடொன்றை உருவாக்குவதற்காக போராடிய எமது தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் பிறந்த இன்றைய நாள் எமது தேசத்தின் பொன்னாள்.

சிங்கள அடக்குமுறையாளர்

களிடமிருந்து தமிழ் மக்களை மீட்பதற்கு பல்துறைசார்ந்த ஒரு வீரன் உதித்த இன்றைய நாள் உலகத் தமிழ் மக்களுக்கு ஒரு உன்னதமான நாள். தமிழ் மக்களின் தனித்துவ அடையாளங்களைக் கட்டிக்காக்க தரணி போற்றும் தனிப்பெரும் தலைவர் பிறந்த இன்றைய நாள் எமது மனங்களில் மறக்கப்பட முடியாத நாள்.

உலகம் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்த வளர்ச்சியால் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால், எந்த மாற்றங்கள் நடந்தாலும் எமது போராட்டம், எமது மாவீரர்களின் தியாகம் போன்றவற்றை நாம் மறந்துவிடக் கூடாது. கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் எமது போராட்டம் மௌனித்த பின்னர் எல்லாமே முடிந்துவிட்டது என்று அனைவரும் நினைத்துக்கொண்ட

ிருக்கின்றனர். எமது இளைய தலைமுறையும் போராட்ட சிந்தனைகளின்றி வாழ்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் எமது வரலாறுகள் மறைக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இது தமிழின விடுதலை நோக்கி பாதையில் பெரும் தடைக்கல்லாக மாறிவிடும்.

எனவே, அதை நாம் மாற்றியமைத்து எமது வரலாறுகளை அவ்வப்போது பிள்ளைகளுக்கு கூறவேண்டும். அப்போதுதான் எமது பிள்ளைகளை இனப்பற்றுடன் வளர்க்க முடியும். அந்த வகையில் இன்று எமது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் 63வது பிறந்த தினம். இன்றைய தினத்தில் அவரைப் பற்றிய தடங்களை மீள்பார்வைக்கு உட்படுத்தவேண்டியது நம் அனைவரதும் கடமையாகும்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் 1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் வேலுப்பிள்ளை பார்வதியம்மாள் தம்பதியருக்கு நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். இவர்தான் அவர்களுக்கு கடைசிப் பிள்ளை. பிரபாகரன் வல்வெட்டித்துறையில் ஊரிக்காடு எனும் இடத்திலுள்ள சிதம்பரா கல்லூரியில் 10ம் வகுப்பு வரையிலும் கல்வி கற்றார். ஆதற்கு மேல் அவரால் கல்வி கற்க முடியவில்லை. இன உணர்வு அவரது கல்விக்குத் தடை போட்டது. சிறிலங்கா அரசாங்கத்தின் இன அடக்குமுறைக்குள் சிக்கித் தவித்த மக்களை எப்படியாவது மீட்க வேண்டும் என்ற வேட்கை அவரிடம் சிறு வயதிலிருந்தே குடிகொண்டது.

1958 ஆம் ஆண்டு சிறிலங்காவின் தென்பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரம் இவரது மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. பிரபாகரனுக்கு நான்கு வயதாக இருந்தபோது 1958 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் தமிழின அழிப்பில் நிகழ்ந்த பயங்கர சம்பவங்கள் அவர் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. சிங்கள இனவெறியரால் ஈழத்தமிழர்கள், கொடூரமாகக் கொல்லப்பட்ட சம்பவங்களை அவர் நேரடிச் சாட்சியங்களாக கேட்க நேர்ந்தது.

அவருடைய பெற்றோருக்கு நன்கு தெரிந்த ஒரு விதவைப் பெண் தனக்கு நேர்ந்த துயரச் சம்பவத்தை பிரபாகரனுடைய தாயார் பார்வதியம்மாவிற்கு கூறியபோது சிறுவனாக இருந்த பிரபாகரன் அதை அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அது அவரை கடுமையாகச் சிந்திக்கத் தூண்டியது. மேலும் மேற்படி இனக்கலவரத்தின்போது பாணந்துறையில் இந்து குரு ஒருவர் உயிரோடு தீ மூட்டி எரிக்கப்பட்ட சம்பவம் போன்ற கொடூரமான வன்முறைகளை அவர் அறிந்தபோது மேலும் மேலும் அவர் சினமடைந்தார்.

ஆனாலும் இவையனைத்தையும் தனக்குள் அடக்கிக்கொண்டு படிப்பைத் தொடர்ந்தார். வயது அதிகரிக்க அதிகரிக்க பிரபாகரனுக்குள் இருந்த தமிழினப் பற்றும் அதிகரித்தது. தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள

1st Mortgage, HomeEquity Line of Credit,
2nd & 3rd Mortgages, Refinance &
Private Mortgage
And For All Other Mortgage Needs
Jey Rasathurai BBA (Hon), AMP
Team Leader/Mortgage Broker
416-624-4843
1504 Markham Rd, Toronto.ON M1B 2V9
(Markham & HWY 401)
MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
MORTGAGE CLINIC

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
Legal Services
NOTARY PUBLIC
(416) 814 -7450
info@aaalegalservices.ca www.aaalegalservices.ca
(Markham & Hwy 401)
தமிழிலும் தொடர்பு கொள்ளலாம்

LEGAL & NOTARY PUBLIC SERVICES
⇒ Commissioner for taking Affidavits & Statutory Declarations
⇒ Notarization, Certification & Authentication ⇨ Wills & Power of Attorney (POA)
⇒ Landlord & Tenant Matters ⇨ Small Claims
⇒ Immigration Services - Super Visa, Visitor Visa, Citizenship, Dual Citizenship, & PR Applications
⇒ Business & Business Name Registration - Incorporation, PREC for Realtors, Sole Proprietorship Etc.
⇒ Drafting Legal Documents - Affidavits - Letter for Super Visa & Visitor Visa
- Statutory Declarations - Letter of Authorization & Explanation

இனவெறி அரசும் படைகளும் மேற்கொண்டு வந்த வன்முறைகளை நிறுத்துமாறு கோரி அப்போதைய தமிழ் உணர்வாளர்கள் முன்னெடுத்த பல்வேறு போராட்டங்களில் பிரபாகரன் பங்குகொண்டார். பாடசாலைக்குச் செல்வதாக வீட்டில் கூறிச் செல்கின்ற பிரபாகரன், தமிழ் மக்களுக்கான விடுதலை நோக்கி செயற்பாடுகளை மேற்கொண்டார். தனது நகர்வுகளை வீட்டுக்குத் தெரியாமல் வைத்துக்கொண்டார். சிறு வயதிலிருந்தே இரகசியங்களைப் பாதுகாக்க கற்றுக்கொண்டதால் அது அவருக்கு பின்னாளில் பெரிதும் உதவியது.

இன அழிப்பில் ஈடுபட்ட சிங்கள அரசு தமிழ் மாணவர்களின் கல்வியிலும் கைவைக்கத் தொடங்கியது. பாடசாலைக் கல்வியை முடித்தபிறகு மேற்படிப்புக்குச் செல்லும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு சிங்கள அரசாங்கள் கொண்டுவந்த தரப்படுத்தல் கொள்கையால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். இந்தச் செயற்பாடும் பிரபாகரனை கடும் கொதிப்படைய வைத்தது. சிங்கள அரசின் பிடிக்குள்ளிருக்கும் தமிழ் மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்ற உள்ளுணர்வும் முனைப்பும் அவர் மனதில் உருவாகியது.

நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இனவெறிச் சிங்களப் படையை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள வேண்டும் என்று அவர் முடிவு செய்தார்.

10 ஆம் வகுப்புவரையிலும் படித்த அவர் அதற்கு மேலும் பொறுமை காக்காமல் விடுதலைப் போராளியாகச் செயற்படத் தொடங்கினார். பிரபாகரனின் செயற்பாடுகள் பெற்றோருக்குப் புரியவில்லை. ஒருநாள் சிறீலங்கா காவல்துறை பிரபாகரனைத் தேடி முதன்முதலில் அதிகாலை 3 மணிக்கு வீடுவந்த போதே அவர்களால் அறிந்து கொள்ள முடிந்தது. காவல்துறையினரிடம் இருந்து தப்பிச் சென்ற பிரபாகரன் அன்றிலிருந்து வீட்டுக்கு வரவில்லை. தன்னை முழுநேரப் போராளியாக மாற்றிக்கொண்டார். உள்ளூரில் தயாரிக்கக்கூடிய கைக்குண்டுகளைக் கொண்டு சிறீலங்காப் படையிருக்கு எதிராகச் சிறு சிறு தாக்குதல்களை நடத்தினார்.

பிரபாகரன் தனக்கு நெருக்கமான நண்பர்களை இணைத்துக்கொண்டு சிறிய குழுவாக இயங்கிய போதிலும் சிறீலங்கா அரசின் தரப்படுத்தலால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் பிரபாகரனுக்கு பின்னால் அணிதிரளத் தொடங்கினர். அவரிடம் இருந்த சிறந்த தலைமைத்துவப் பண்புகளால் மேற்படி மாணவர்களையும் நண்பர்களையும் ஒருங்கு திரட்டி தனது 18 ஆவது வயதில் 1972 ஆம் ஆண்டு புதிய தமிழ்ப் புலிகள் என்ற அமைப்பை ஆரம்பித்தார். அந்த இயக்கம் படிப்படியாக வளர்ச்சி பெற்றது. சிங்களப் படையினரைத் திணறடிக்கும் வகையிலான தாக்குதல்களை மேற்கொண்டது. பின்னர் இந்த இயக்கத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டு அதன் பெயர் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று மாற்றப்பட்டது.

தமிழினத்தை கருவறுக்க முற்பட்ட சிறிலங்கா அரசுக்கும் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிறந்த பாடம் புகட்டிக்கொண்டி

ருந்தமையால் அது இந்தியாவின் கவனத்தை ஈர்க்கப்பெற்றது.

இந்தியாவுடன் அதுவும் தமிழகத்திலிருந்த ஈழ உணர்வாளர்களுடன் பிரபாகரனுக்கு ஏற்பட்ட தொடர்புகளைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெறக்கூடிய நிலை ஏற்பட்டது. இது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்தியது. இந்த மாறுதல்களுடன் தலைவர் பிரபாகரன் இந்தியாவால் நன்கு அறியப்பட்டார். இந்த அறிதலானது தலைவரையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் மிகவும் பலம் வாய்ந்த ஒரு சக்தியாக மாற்றியது. தொடர்ந்து முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன்பால் தலைவர் பிரபாகரன் ஈர்க்கப்பட்டார். இந்த ஈர்ப்பானது புலிகளின் போராட்டத்தை மேலும் பலப்படுத்தியது.

தொடர்ந்து வந்த காலங்கள் புலிகளின் காலங்களாகவே மாறின. தமிழீழ மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்ப

ட்ட அமைப்பாக புலிகள் இயக்கம் மாறியது. தலைவர் பிரபாகரன் தமிழீழத் தேசியத் தலைவர் என்று ஒட்டுமொத்த தமிழ் மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். முன்பெல்லாம் கெரில்லாவாக மறைந்திருந்து தாக்குதல்களை மேற்கொண்ட புலிகள் காலப்போக்கில் சிறிலங்காப் படைகளுக்கு எதிராக மரபுவழிச் சமர்களைப் புரியக்கூடியவர்களாக மாற்றமடைந்தனர். சிறிய சிறிய ஆயுதங்களை மட்டும் வைத்திருந்து சமர் புரிந்த இவர்கள் இப்போது அதி நவீன ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ளக்

கூடிய வாய்ப்புகள் கிடைத்தன.

தனியே சிறிலங்காப் படைகளுடன் போர் புரிவதுடன் மட்டும் நின்றுவிடாமல் தமிழ் மக்களுக்கென்று தனியான தாயகம் ஒன்றைக் கட்டி வளர்ப்பதில் பிரபாகரன் வெற்றி கண்டார். தரைப்படையுடன் கடற்படை, வான்படை என்ற முப்படைகளையும் உருவாக்கி தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார். இதனை விட குறைந்த இழப்புக்களுடன் எதிரிக்கு கூடிய இழப்பை ஏற்படுத்தக்கூடிய கரும்புலிகள் படையணியை உருவாக்கினார். தனது படையணிகளில் மட்டுமன்றி நிர்வாகக் கட்டமைப்பிலும் பெண்களுக்கும் சம உரிமை கொடுத்தார்.

காவல்துறை, சட்டத்துறை, நீதித்துறை, நிதித்துறை, நிர்வாகத்துறை, வைப்பகங்கள், நீதிமன்றங்கள் போன்ற பல கட்டமைப்புகளை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கான அரசாங்கம் ஒன்றை அமைத்தார். உலக நாடுகளே வியக்கும் வண்ணம் இந்த அரசாங்கம் செயற்பட்டது. இவற்றை விட, உலகில் எங்குமே இல்லாத நடைமுறையாக, போரில் உயிரிழந்த வீரர்களைக் கௌரவிப்பதற்கென்றே வருடத்தில் ஒருமுறை, அதுவும் முதல் போராளி உயிரிழந்த தினத்தன்று தமிழீழ தேசிய மாவீரர் தினத்தை உருவாக்கினார். அதைப் புனிதமான நாளாகவும் கடைப்பிடிக்கச் செய்தார்.

உண்மையிலேயே இந்தச் செயற்பாடுகள் சாதாரண ஒரு மனிதனால் செய்ய முடியாத காரியங்கள். எத்தனை பலம் இருந்தாலும் வேற்று நாடுகளின் உதவியின்றிச் சாதாரண ஒரு மனிதனால் இத்தகைய சாதனைகளைச் செய்வது என்பது அசாத்தியமானது. ஆனால் எமது தலைவர் அதனைச் செய்து முடித்தார். எமது தலைவர் தொடர்பாக பலரும் புகழ்ந்து கூறியிருக்கின்றனர். அதில் அவரது நெருங்கிய தோழனாக விளங்கிய பழ.நெடுமாறன் ஐயா கூறும்போது, □நமது தமிழர்கள் அடிமைச் சேற்றில் புழுக்களாக நெளிந்து கொண்டிருந்த போது புலிகளாக மாற்றி உலகத்தையே பிரமிக்க வைத்த பெருமை பிரபாகரன் அவர்களுக்கு மட்டுமே உண்டு. இருபதாம் நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க விடுதலைப் போராட்டங்கள் உண்டு.

இந்தியாவின் மகத்தான தலைவர்களில் ஒருவரான நேதாஜீ சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள் சிங்கப்பூரிலே சுதந்திர இந்திய அரசை அமைத்து, இந்திய இராணுவத்தை அமைத்து, இந்திய விடுதலைக்காக போராடியமை மெய் சிலிர்க்க வைக்கும் வரலாறாகும்.

ஆனால் உலகமறிந்த மாபெரும் தலைவர் சுபாஸ் சந்திரபோஸ் அவர்களுக்கு அன்று வல்லரசாக விளங்கிய ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகள் ஆதரவளித்தன. வியட்நாமின் விடுதலைப் போராட்டத்தை கோசிமின் நடத்திய போது அந்த போராட்டத்திற்கு செஞ்சீனமும் சோவியத் ஒன்றியமும் எல்லாவகையிலும் துணை நின்றன. அதைப்போல பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் நடைபெற்றபோது யாசீர் அரபாத் அவர்கள் அதற்கு தலைமை தாங்கினாலும், இருபத்தியேழு அரேபிய நாடுகள் அவருக்குப் பக்கபலமாக நின்றன. வங்க தேச விடுதலைப் போராட்டம் நடைபெற்ற போது இந்தியா முழுமையாக உதவியது.

ஆனால் இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற போராட்டங்களிலேய

ே தனித்தன்மை வாய்ந்த போராட்டம் எதுவென்று சொன்னால் அது தமிழீழ விடுதலைப் போராட்டம்தான். பிரபாகரன் அவர்கள் தலைமையில் தமிழீழ போராட்டம் அன்று நடைபெற்றபோதும், இனி நடைபெறப் போகின்ற போதும் சரி அந்தப் போராட்டத்திற்கு உலகில் எந்த நாடோ, எந்த ஒரு அரசோ, ஒரு சிறு உதவி கூடச் செய்யவில்லை. மாறாக இந்தியா போன்ற அண்டை நாடுகளே அதற்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு நின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்தச் சூழ்நிலையில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரகாகரன் உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்களின் துணைகொண்டு அவருடைய நாட்டைச் சேர்ந்த இளைஞர்களையும் யுவதிகளையும் மட்டுமே நம்பி இந்த வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்தை நடத்தினார்.

பிரபாகரன் அவர்களை நான் முன்பு குறிப்பிட்ட உலகறிந்த தலைவர்களோடு ஒப்படும்பொழுது வயதாலும் அனுபவத்தாலும் அவர் மிக மிக இளையவர். ஆனால் நாடோ, எந்த அரசோ உதவாமல் தனி மனிதனாக பிரபாகரன் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கும் இந்த மகத்தான போராட்டத்திற்கு துணை நிற்க வேண்டிய கடமை எல்லாத் தமிழர்களுக்கும் உண்டு□ என்றார் பழ நெடுமாறன் ஐயா.பழ.நெடுமாறன் ஐயா கூறியது போன்ற இந்த வரலாறுகளை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டும்.

தாயகத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் குறிப்பிட்டளவான இளைஞர்களுக்கு, குறிப்பாக, இன்று 17 தொடக்கம் 20 வயதிலுள்ள இளைஞர்களுக்கு தமிழீழ விடுதலைப் போராட்டம் என்றால் என்ன என்று தெரியாது. அவர்களுக்கு அதை எடுத்துக் கூறவும் பெற்றோர்கள் விரும்புவதில்லை. இப்படியான செயல் எமது தமினத்தை அதல பாதாளத்திற்குள் தள்ளிவிடும். எமது போராட்டத்தை, எமது தலைவரை முற்றுமுழுதாக இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டும். இதற்கான நடவடிக்கையை பெற்றோர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதுவே, எமது தமிழீழத் தேசியத் தலைவரின் இன்றைய பிறந்த தினத்தில் விடுக்கப்படும் செய்தியாகும்.

-தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்-

J.R.B
GROUP CORPORATION
Best Rate Mortgage Arranged
Almost All Services Available
அனைவரும் வீடு வாங்க சிறப்பான சேவை...

R.R.Rajkumar B.Com (Hons) M.B.A
BUSINESS LOAN 25 K to 500,000 New Business
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள சகல வர்த்தகருக்கான சிறப்பான சேவை
Welfare, ODSP, Medical visit translation services
* Loans * Mortgages
* Insurance * Visa * Real Estate
* Credit Counseling
* Master Card
647-289-6164
416-655-5577



தமிழீழ தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவை

01. முன்னுரை

உலகிலுள்ள எல்லா நாடுகளும் தத்தமக்கெனத் தேசியக் கொடிகளை உருவாக்கியுள்ளன. ஒரு நாட்டின் மீது அந்நாட்டின் குடிமக்கள் கொண்டிருக்கும் மதிப்பின், பற்றின் வெளிப்பாடே தேசியக்கொடி வணக்கமாகும். தேசியக்கொடியை ஏற்றிப் போற்றியபின்பே முதன்மையான விழாக்கள், நிகழ்ச்சிகள் என்பன ஒவ்வொரு நாட்டிலும் தொடக்கப்படுகின்றன.

மாற்றாரின் பிடியிலிருந்து தமிழீழ மண்ணை முற்றாக விடு விப்பதற்கான போராட்டம் வீறுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளையில், ஆயிரக்கணக்கான மாவீரரின் உயிர்களை விலை கொடுத்து மாற்றாரிடமிருந்து மீட்டெடுத்த எமது பாரம் பரியத் தமிழீழ மண்ணில் தமிழீழ நாட்டுக்கான தேசியக்கொடியை எமது தேசியத்தலைவர் ஏற்றிப்பறக்கவிட்டுள்ளார்.

நாடு உருவாகுதற்கு முன்பே நாட்டுமக்களால் முறைப்படி கொடிவணக்கம் செலுத்தி, கொடிவணக்கப்பாடலை இசைத்து முதன்மை விழாக்களை, நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் தமிழீழமண் தேசியக்கொடி வரலாற்றில் ஒரு புதுமை சேர்த்திருக்கிறது.

உலகம் வியக்கக்கூடிய புதுமையான வரலாற்றைப் பெற்ற எமது தேசியக்கொடியை ஏற்றிப்போற்றும் முறையைத் தமிழீழ மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத் தேசியக்கொடிப் பயன்பாட்டு விதிக்கோவை என்ற இக்கைந்நூலைப் பெருமகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

02. தேசியக்கொடியின் தன்மை

ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி, இறைமை என்பவை உட்பட அந்த நாட்டைக் குறிக்கின்ற ஒட்டுமொத்தமான பொதுச் சின்னமாகத் தேசியக்கொடி விளங்குகின்றது.

03. தேசியக்கொடியின் அமைப்பும் அளவும்

ஒவ்வொரு நாட்டினதும் இயல்புகள், நிலைமைகள், எண்ணங்கள் ஆகியவற்றின் வெளிப்பாடாக அந்தந்த நாடுகளின் தேசியக்கொடிகளின் சின்னம், நிறம், அளவு, அமைப்பு என்பன வேறுபட்டிருக்கும். தேசியக்கொடிகளின் நீள, அகலங்கள் பெரும்பாலும் 3:2 என்ற கூறுபாடு (விகிதம்) கொண்டனவாக அமைகின்றன. சில நாடுகளின் தேசியக்கொடிகளின் நீள, அகலங்கள் 2:1 என்ற அளவினவாகவும் இன்னும் சில நாடுகளில் 1:1 என்ற அளவைக் கொண்டனவாகவும் (சதுரமாகவும்) அமைகின்றன.

04. தேசியக்கொடியின் பெருமையும் கொடி வணக்கமும்

நாட்டைப்போற்றி வணங்குதற்கீடாகத் தேசியக்கொடிக்கு வணக்கம் செலுத்தப்படுகின்றது. தேசியக்கொடியை வணங்குவது, நாட்டை வணங்குவது போலாகும். நாட்டின் தலைவர், படை, ஆட்சி என்பவற்றைவிடவும் உயர்ந்ததாகத் தேசியக்கொடி மதிக்கப்படுகின்றது. எனவேதான் எந்தவொரு நாட்டிலும் எந்தச் சிறப்பு நிகழ்வுகளின்போதும் நாட்டின் தலைவர், படை வீரர், அரசுப் பணியாளர், குடிமக்கள் அனைவரும் கொடிவணக்கம் செய்கின்றனர்.

நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளிலும் குறிப்பிட்ட சில பொது இடங்களிலும் தேசியக்கொடியை நாள்தோறும் பறக்கவிடலாம்.

வெளிநாடுகளிலுள்ள எமது பணியகங்களிலும் தூதரகங்களிலும் பகலில் எந்நாளும் எமது தேசியக்கொடியைப் பறக்கவிடலாம்.

தேசியக்கொடி ஏற்றப்படும்போது அனைவரும் எழுந்துநின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும்.

கொடிவணக்கத்தின்போது சீருடையில் இருக்கும் பணி ஆளணியினர் (படையணிகள், சாரண இயக்கத்தவர், முதலுதவிப்படை முதலியன) தத்தமது பணிகளுக்குரிய கட்டளைகளில் விதித்துரைக்கப்பட்டவாறு முறைப்படி கொடிவணக்கம் செலுத்துவர்.

சீருடை அணிந்தவர்கள் தவிர ஏனையோர் தலையணி (தொப்பி) அணிந்திருப்பின் தேசியக்கொடி ஏற்றப்படும் வேளையில் அவற்றை வலது கையாற் களைதல்வேண்டும். தலையணியைக் களைந்தபின்பு வலது கையை இடப்பக்க நெஞ்சின் மீது வைத்துக் கொடி வணக்கம் செலுத்தவேண்டும். தமிழீழக் குடியுரிமையாளரல்லாதாரும் வலது கையை இடப்பக்க நெஞ்சின் மீது வைத்து வணக்கம் செலுத்தலாம். அல்லது கவன நிலையில் (யுவவநவெழைடெ) நிற்கவேண்டும்.

வணக்கத்துக்குரிய தேசியக்கொடியை உடையாக அணியவோ உடையின் பகுதியாகப் பொருத்தவோ கூடாது.

தேசியக்கொடியிற் பொறிக்கப்பட்டுள்ள இலச்சினையைப் பெறுமதியான பொருட்களிலோ உடைகளிலோ பொறிக்கலாம்.

தேசியக்கொடியில் எவ்வகையான அடையாளங்களையோ எழுத்துக்களையோ சொற்களையோ எண்களையோ வடிவங்களையோ படங்களையோ எழுதவோ வரையவோ கூடாது.

தற்காலிகமாகப் பயன்படுத்திவிட்டு வீசப்படும் எப்பொருளிலும் தேசியக்கொடியைப் பதிக்கக்கூடாது.

தேசியக்கொடி நிலத்தில் வீழ்வதை எப்பாடுபட்டேனும் தவிர்க்கவேண்டும். ஒருவேளை நிலத்தில் வீழ்ந்துவிட்டால் உடனடியாக நிலைமையைச் சீராக்கிவிடவேண்டும். கொடியில் அழுக்குப்படிந்துவிட்டால் உடனடியாகக் கழுவிக் காய விட்டபின்பே பயன்படுத்தவேண்டும்.

தேசியத்துயர நிகழ்வின்போது தேசியக்கொடியை அரைக்கம்பத்திற் பறக்கவிடப்படுவதன்மூலம் நாட்டின் துயரம் உணர்த்தப்படுகின்றது. கொடிக்கம்பத்தின் நுனியிலே பறக்கின்ற கொடி நடுப்பகுதிவரை இறக்கப்பட்டு அரைக்கம்பத்திற் பறப்பதே நாட்டின் மிகுதுயரை உணர்த்துவதாயின் தேசியக்கொடி சிதைவுறுவதோ கீழே வீழ்த்தப்படுவதோ வீசப்படுவதோ கால்களில் மிதிக்கப்படுவதோ எண்ணிக்கூடப் பார்க்கமுடியாத இழி நிலையாகும்.

தேசியக்கொடியின் நிறம் மங்கிப்போனாலோ வேறு ஏதாவது வகையிற் பழுதடைந்து பறக்கவிடுவதற்குரிய நிலையை இழந்துவிட்டாலோ அதனை உரியமுறையில் எரித்து அழித்துவிடவேண்டும். பழந்துணியாகப் பயன்படுத்துவதோ குப்பைத்தொட்டியிற் போடுவதோ தேசத்திற்குச் செய்யப்படும் அவமானமாகும். எனவே அவ்வாறு செய்யக்கூடாது.

05. கொடியையேற்றும்போதும் கொடிவணக்கத்தின்போதும் செய்யப்படக்கூடாதவை

தேசியக்கொடிக்கு வழங்கப்படுகின்ற மதிப்பு, சிறப்பு என்பன அந்த நாட்டைச் சென்றடைவது போன்று, தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு, புறக்கணிப்பு என்பனவும் அதன் நாட்டையே சென்றடையும். எனவேதான் தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு பெருங்குற்றமாகக் கருதப்பட்டு அக்குற்றத்துக்கு மிகுதியான ஒறுப்பு (தண்டனை) வழங்கப்படுகின்றது.

தேசியக்கொடிக்கு மதிப்புச் செலுத்துகின்ற கொடிவணக்க நிகழ்வுக்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சீரான ஒழுங்குமுறை வரையறுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கொடியேற்றம், கொடிவணக்கம் என்பனவற்றுக்கான ஒழுங்குமுறை, நடைமுறை நாட்டுக்கு நாடு வேறுபட்ட முறையில் அமைந்திருக்கும். அந்த வரையறுக்கப்பட்ட ஒழுங்கு முறைகளை மீறுவது தேசியக்கொடிக்கு இழைக்கப்படுகின்ற இழிவாகவே கொள்ளப்படும்.

தேசியக்கொடியைத் தலைகீழாகப் பறக்கவிடக்கூடாது.

மடித்தபடி மேலே ஏற்றி அங்கிருந்து விரிந்து பறக்கும் வகையில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது. தேசியக்கொடியைக் கீழிருந்து பறந்தபடியிருக்கும் நிலையிலேயே ஏற்றவேண்டும்.

06. கொடிமீது கொண்ட பற்று

சிறப்பு நிகழ்வுகளுக்கான ஊர்வலங்களின் போது தேசியக்கொடியை ஏந்திச்செல்வதும் ஏந்தி நிற்பதும் கூடத் தேசியக்கொடிக்குச் செலுத்துகின்ற மதிப்பு வணக்கமாகும். தேசியக்கொடி ஏந்துபவர்களும் கொடிக்கம்பத்தைக் காப்பவர்களும் தேசியக்கொடி சிதையவோ கொடிக்கம்பம் சரியவோ இடமளிக்கமாட்டார்.

தேசியக்கொடியை ஏந்துபவர் ஏந்துகின்ற கொடியைக் கடமை முடிந்ததும் உரிய இடத்தில் வைப்பர் அல்லது தகுதியானவரிடம் கையளிப்பர் எவ்விடர்வரினும் உயிரேபோகின்ற நிலைவரினும் கொடியைக் கைவிடாத தன்மையைக் கொண்டிருப்பர். தாம் ஏந்துகின்ற கொடி சரிந்தாலோ கீழே விழுந்தாலோ அது தமது நாட்டுக்கு இழுக்காகிவிடும் தமது நாட்டின் ஆட்சி வீழ்ந்ததாகக் கொள்ளப்படும் என்ற உணர்வு அவர்களிடமிருக்கும். பண்டைக் காலத்திலேயே தமிழ்மக்கள் நாட்டின் கொடிமீது கொண்டிருந்த பற்றும் அதற்குக் கொடுத்த மதிப்பும் பற்றி இலக்கியங்களும் வரலாறுகளும் எடுத்தியம்புகின்றன.

07. தமிழீழத் தேசியக் கொடியின் வரலாறு

எமது தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பெற்ற புலிக்கொடி 1977 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்துவருகிறது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடியிலுள்ள எழுத்துக்கள் நீக்கப்பெற்ற கொடி தமிழீழத் தேசியக் கொடியாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் 1990 ஆம் ஆண்டு அறிவிக்கப்பெற்றது. தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்த இரண்டாவது மாவீரர் நாளில் அதாவது 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் நாள் முதல் தடவையாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் அவரது பாசறையில் ஏற்றிவைக்கப்பெற்றது.



08. நிறங்களும் குறிக்கோளும்

எமது தேசியக்கொடியை மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நான்கு நிறங்கள் அழகுபடுத்துகின்றன. தனிப்பாங்கான தேசிய இனமான தமிழீழத் தேசிய இனம் தனது சொந்த மண்ணில் தன்னாட்சி அமைத்துக்கொள்ள விழைவது அதனது அடிப்படை அரசியல் உரிமையும் மனித உரிமையுமாகும். தமிழீழ மக்கள் நடத்துகின்ற தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது, நியாயமானது என்பதையும் தமிழீழத்தேசம் எப்பொழுதும் அறத்தின் பக்கம் நிற்குமென்பதையும் மஞ்சள் நிறம் குறித்து நிற்கிறது.

தேசிய விடுதலை பெற்ற தமிழீழத் தனியரசை அமைத்துவிடுவதால் மட்டும் முழுமையான விடுதலையைப் பெற்றுவிட்டதாகக் கொள்ளமுடியாது. தமிழீழக் குமுகாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். சாதிய, வகுப்பு முரண்பாடுகள் அகற்றப்படவேண்டும். பெண்ணடிமைத்தனம் நீக்கப்படவேண்டும். இதற்குக் குமுகாய அமைப்பிற் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். சமன்மையும் சமதருமமும் குமுகாய நீதியும் நிலைநாட்டப்படவேண்டும். இத்தகைய புரட்சிகரமான குமுகாயமாற்றத்தை வேண்டிநிற்கும் எமது அரசியல் இலக்கைச் சிவப்பு நிறம் குறியீடு செய்கின்றது.

விடுதலைப்பாதை கரடுமுரடானது சாவும் அழிவும் தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இவற்றைத் தாங்கிக் கொள்ளவும் விடுதலையடைந்தபின் ஏற்படப்போகும் நெருக்கடிகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு தேசத்தைக்கட்டியெழுப்பவும் பாதுகாக்கவும் உருக்குப் போன்ற உறுதியான உள்ளம் வேண்டும் அசையாத நம்பிக்கை வேண்டும் தளராத உறுதி வேண்டும். இவற்றைக் கறுப்பு நிறம் குறித்துக் காட்டுகின்றது.

விடுதலை அமைப்பும் மக்களும் தலைவர்களும் தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வெள்ளை நிறம் குறித்து நிற்கிறது.

09. தமிழீழத் தேசியக் கொடியின் வகையும் அளவும் கொடிக்கம்பத்தின் அளவும் பொதுக்கொடி 4‘ x 6‘

கொடியின் வகை	கொடியின் அளவு	கொடிக்கம்பம் பீடத்துக்கு மேலுள்ள அளவு
ஏற்றுங்கொடி - பொதுக்கொடி	4' x 6'	24'
உள்ளிடக்கொடி	3' x 5'	9'
எழுச்சிக்கொடி	2' x 3'	18'
வீட்டுக்கொடி	2' x 3'	18'
அணிவகுப்புக கொடி	2' x 3'	6'
மாதிரிக கொடி	1' x 1.5'	2'
மிசையன்கொடி (மேசைக்கொடி)	6" x 9"	15"

விடுதலைப்புலிகள் இயக்கப் பாசறைகள், அரசநிறுவனங்கள், பள்ளிகள், கூட்டுறவு அமைப்புக்கள், குமுதாய அமைப்புக்கள் போன்ற எல்லாப் பொது இடங்களிலும் இக்கொடி பறக்கவிடப்படும். இவ்விடங்களில் நிகழ்ச்சிகள் தொடங்குமுன்பும் இத்தேசியக்கொடி ஏற்றிவைக்கப்படும்.

உள்ளிடக்கொடி 3 'x 5'

அரசுத்தலைவர், அமைச்சர்கள், படைத்தலைவர்கள் போன்றோரின் பணிமனைகளிலும் மாநாட்டுக்கூடங்களிலும் நிறுத்தியிற் பொருத்தப்பட்ட தேசியக்கொடி வைக்கப்படலாம். பணிமனையின் உள்ளே நுழைவாயிலின் வலப்புறத்தில் வைக்கப்படவேண்டும்.

எழுச்சிக்கொடி 2' x 3'

பொது இடங்கள் அனைத்திலும் எழுச்சியை ஏற்படுத்துவதற்காக இக்கொடி பறக்கவிடப்படும்.

வீட்டுக்கொடி 2' x 3'

தாயகப்பற்றுடைய தமிழீழக் குடியுரிமையாளர் எவரும் தமது வீட்டுக்கு முன்னாலோ வணிக வளாகங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றிலோ இக்கொடியைப் பறக்கவிடலாம்.

அணிவகுப்புக்கொடி 2' x 3'

அணிநடை மற்றும் ஊர்வலங்கள் போன்றவற்றில் இக்கொடி பயன்படுத்தப்படும்.

10. கொடிக்கம்பமும் கயிறும் கொடிக்கம்பங்கள் மேற்குறிக்கப்பட்ட அளவுகளில் வெள்ளிநிறத்தில் இருத்தல் வேண்டும். கொடிக்கம்பத்தின் நுனியில் வெள்ளி நிறமுடையதும் இங்குக் காட்டப்பட்ட வடிவிலமைந்ததுமான முடி பொருத்தப்படவேண்டும். கொடிக்கயிறு வழுக்காமலிருப்பதற்காகக் கயிற்றைக் கட்டுமிடத்தில் தடை அமைக்கப்படல் வேண்டும். இத்தடை பீடத்திலிருந்து மூன்றாவது அடியில் இருத்தல் வேண்டும். கொடிக்கயிறு வெள்ளை நிறத்தில் இருத்தல்வேண்டும். கொடிக்கம்பம் பீடத்திலிருந்து 24 அடி உயரத்தில் இருக்கவேண்டும். பீடம் இல்லாத இடங்களில் நிலமட்டத்திலிருந்து 24 அடி உயரத்தில் இருக்கவேண்டும். கொடிக்கம்பம் 2 அங்குல விட்டமுடையதாக இருக்கவேண்டும்.



11. கொடிப்பீடம்

கொடிப்பீடம் நிலமட்டத்திலிருந்து ஓர் அடி உயரங் கொண்டதாகவும் 2

அடி நீளம் 2 அடி அகலம் கொண்டதாகவும் இருக்கவேண்டும். பீடத்தின் முன்புறம் பீடத்தோடு இணைந்து 2 அடி நீண்டு நிலத்திலிருந்து அரை அடி உயரமுடையதாக இருக்கவேண்டும்.

12. கொடியேற்றும் முறை தேசியக்கொடியை ஏற்றும்போது



கொடியேற்றப்படும் வளாகத்திலோ வீட்டிலோ இருக்கும் அனைவரும் (நோயாளர் நீங்கலாக) கொடியேற்றும் நிகழ்விற் பங்கேற்கவேண்டும். கொடிக்கம்பத்திற்கு இடது பக்கத்தில் நின்று கொடியையேற்றவேண்டும். கொடியை மிடுக்கோடும் சீரான வேகத்தோடும் ஏற்றவேண்டும். கூடுதலான வேகத்துடனோ மிக மெதுவாகவோ ஏற்றக்கூடாது. கொடியையேற்றுபவர் தானே கொடியையேற்றிக் கயிற்றைக் கொடிக்கம்பத்திற் கட்டவேண்டும். தேசியக்கொடியை ஏற்றும்போது கொடியை விரிப்பதற்கும் கொடி ஒழுங்காக இருக்கிறதா என்பதை உறுதிசெய்வதற்கும் கொடி நிலத்திற்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கும் கொடியை ஏற்றுபவருக்கு ஒருவர் உதவவேண்டும். கொடியையேற்றுபவர் கொடியை ஏற்றியதும் ஓர் அடி பின்னகர்ந்து வணக்க நிலையில் நிற்கவேண்டும். கொடிவணக்கப் பண் முடிவடையும் வரை அனைவரும் வணக்க (ளுயடரவந) நிலையில் நிற்கவேண்டும்.

13. கொடியின்பார்வை



கொடியிலுள்ள புலியின்பார்வை கொடிக் கம்பத்திற்கு எதிர்ப்புறமாக இருத்தல் வேண்டும்.

14. தேசியக் கொடியை ஏற்றும் நேரமும் ஒளிபாய்ச்சுதலும்

கொடிக்கம்பத்தில் ஏற்றப்படும் தேசியக்கொடி நாள்தோறும் கதிரவன் எழுந்ததற்குப் பின்னர் ஏற்றப்பட்டு மறைவதற்கு முன்னர் இறக்கப்படவேண்டும்.

கலைக்கோவில்
KALAIKOVIL ACADEMY OF FINE ARTS – CANADA
The first authorized Local Training Centre for Annamalai University – Canada Campus (2012 to 2015)
பரதநாட்டியம், மிருதங்கம், புல்லாங்குழல் அனுபவமும் தராதரமும் கொண்ட முன்னணி ஆசிரியர்களினால் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன
Kalaikovil Performing Arts Centre 1-50, Innovator Ave.,Stouffville – ON, L4A 0Y2
"Miruthangakalaavithagar" Shri. Kugenthiran Kanaganthiram Director
"Naatya Narthaki" Smt. Vanitha Kugenthiran Director
Professional Studio with a modern stage facilities available for rent. STUDIO LOCATIONS Markham, Scarborough, Brampton, Mississauga, Stouffville, Ajax, Oshawa & Woodbridge
HEAD OFFICE:
30, New Delhi Drive, Unit-64, Markham - Ont. L35 089, Canada. Tel: (416) 292-2425 Toll Free: 1 (877) 513-2425 Fax: (647) 799-1024 Website: www.kalaikovil.com Email: info@kalaikovil.com

மங்கிய ஒளியிற் கொடியை ஏற்றுதல் கூடாது. எனவே காலை 6 மணிக்கு முன்பும் மாலை 6 மணிக்குப் பின்பும் கொடியை ஏற்றவேண்டுமெனிற் கொடிப் பீடத்திலிருந்து கொடிக்கம்பத்தின் உச்சிவரை போதுமான ஒளிபாய்ச்சப்படவேண்டும். கொடியேற்ற நிகழ்வு நடைபெறும் இடத்திலும் போதுமான வெளிச்சம் இருக்கவேண்டும்.

தேசியக்கொடியை முழுமையான வெளிச்சத்தின்கீழ் இருபத்துநான்கு மணிநேரமும் பறக்கவிடலாம்.

தேசியக்கொடி பொதுவாக மாலை 6 மணிக்கு முன்னர் முறைப்படி இறக்கப்படவேண்டும். கொடியேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச்சிகள் மாலை 6 மணிக்குப் பின்னரும் தொடருமாயின் நிகழ்ச்சி முடிவுறும் வரை கொடிக்கு வெளிச்சம் பாய்ச்சப்படவேண்டும். இரவில் நிகழ்ச்சி முடிவுற்றதும் கொடியை அமைதியான முறையில் இறக்கலாம்.

கொடியேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச்சிகள் நாட்கணக்கில் தொடருமாயின் அந்த நிகழ்ச்சிகள் முடிவுறும்வரை தேசியக்கொடி இரவும் தொடர்ச்சியாகப் பறக்கவிடப்படலாம். ஆனால் கொடிபறப்பது தெளிவாகத் தெரியக்கூடியவாறு போதிய வெளிச்சம் பாய்ச்சப்படவேண்டும். நிகழ்ச்சிகள் முடிவடைந்தபின் முறைப்படி தேசியக்கொடி இறக்கப்படவேண்டும்.

15. எமது தேசியக்கொடியுடன் வேறு நாடுகளின் தேசியக்கொடிகள்



(கொடிக்கம்பத்தின் முன்பக்கத் தோற்றம்)

தமிழீழத் தேசியக்கொடியுடன் வேறு நாடுகளின் தேசியக்கொடிகளைப் பறக்கவிடும்போது ஒரே அளவான கொடிக்கம்பங்களில் கொடிகளை ஏற்றவேண்டும். தமிழீழத் தேசியக்கொடியின் இடப்புறமாக ஏனைய நாடுகளின் தேசியக்கொடிகளை அந்தந்த நாடுகளின் அகரவரிசைப்படி பறக்கவிடவேண்டும். எமது தேசியக்கொடியும் ஏனைய தேசியக் கொடிகளும் இடைஞ்சலின்றிப் பறக்கக்கூடியவகையிலும் (ஒன்றில் ஒன்று முட்டாமல்) சமனான இடைவெளியிலும் கொடிக்கம்பங்கள் நடப்படவேண்டும். எமது தேசியக்கொடியை ஏற்றியபின்பே ஏனையவற்றை ஏற்றவேண்டும். ஏனையவற்றை இறக்கியபின்பே எமது கொடியை இறக்கவேண்டும்.

16. தேசியக்கொடியும் ஏனைய கொடிகளும்

எமது தேசியக் கொடியுடன் எமது முப்படைகள், காவற்றுறை, படையணிகள், உள்ளூராட்சி மன்றங்கள், திணைக்களங்கள், பள்ளிக்கூடங்கள், கூட்டுறவுச் சங்கங்கள். விளையாட்டுக் கழகங்கள், குமுகாய அமைப்புக்கள் போன்றவற்றின் கொடிகளைப் பக்கவாட்டில் அடுத்தடுத்துள்ள கம்பங்களில் ஏற்றும்போது தேசியக்கொடியின் அளவைவிடச் சிறிய அளவிலான கொடிகளைத் தேசியக்கொடிக் கம்பத்தைவிட 4□ உயரம் குறைவான கம்பங்களில் ஏற்றவேண்டும். அதாவது தமிழீழத் தேசியக்கொடி மற்றக் கொடிகளைவிட 4□ கூடுதலான உயரத்தில் இருக்கவேண்டும்.

16. 1. தேசியக்கொடிக்கு இடப்புறமாகச் சமனான இடைவெளியில் ஏனையகொடிகள் ஏற்றப்படலாம்.



(கொடிக்கம்பத்தின் முன்பக்கத் தோற்றம்)

16. 2. தேசியக்கொடிக் கம்பத்திலிருந்து ஏழு அடிக்குப்பின்னால் தேசியக்கொடிக்கு இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் தமிழீழத் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகிய முப்படைகளின் கொடிகளும் காவற்றுறையின் கொடியும் சமனான இடைவெளியிற் பறக்கவிடப்படலாம்.



16.3. தேசியக் கொடிக்குப்பின்னால் 16. (2) இற்கமைவாக முப்படைகளதும் காவற்றுறையினதும் கொடிகளும் அவற்றுக்குப் பின்னாற் போதிய இடைவெளிவிட்டுப் படையணிகளின் கொடிகளும் பறக்கவிடப்படலாம்.



16.4. உள்ளூராட்சி மன்றங்கள், திணைக்களங்கள், பள்ளிகள், கூட்டுறவுச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், குமுகாயவமைப்புக்கள் போன்றவற்றின் கொடிகளும் தேவைக்கேற்ப பறக்கவிடப்படலாம். தேசியக் கொடியுடன் முப்படைகளதும் காவற்றுறையினதும் கொடிகள் பறக்கவிடப்படும் நிகழ்வுகளில் அவற்றுக்குப் பின்னாலேயே மேற்படிக் கொடிகள் பறக்கவிடப்பட வேண்டும். மேலே கூறப்பட்ட கொடிகளும் படையணிக் கொடிகளும் ஒரே நிரையிற் பறக்கவிடப்படலாம். உள்ளூராட்சி மன்றங்கள், திணைக்களங்கள் முதலியவற்றின் கொடிகள் நிகழ்ச்சி நடைபெறும் திடலின் பின்புறமாக உட்பக்கத்திலும் பறக்கவிடப்படலாம்.



16. 5. தேசியக்கொடியுடன் இங்குக் குறிக்கப்பட்ட ஏனைய கொடிகளைக் கூட்டமாகப் பறக்கவிடும்போது ஏனைய கொடிக்கம்பங்களைவிட உயரமான கொடிக்கம்பத்தில் எல்லாக்கொடிகளுக்கும் நடுவில் தேசியக்கொடியைப் பறக்கவிடவேண்டும்.

தேசியக்கொடி ஏற்றப்பட்ட பின்பே ஏனையவை ஏற்றப் படவேண்டும் ஏனையவற்றை இறக்கியபின்பே தேசியக் கொடியை இறக்கவேண்டும். அரைக்கம்பத்திற் கொடிகளைப் பறக்கவிடும்போது ஏனைய கொடிகளை அரைக் கம்பத்திற்குக் கொண்டுவந்தபின்பே தேசியக்கொடியை அரைக்கம்பத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

கனகாம்பிகை தங்க மாளிகை
சிங்கப்பூரில் வடிவமைக்கப்பட்ட புதிய டிசைன் நகைகளை அனைத்தும் மலிவு விலையில் விற்பனையாகின்றன
CONTACT NOW 416-269-7197 | kana4gopalakrishnan@gmail.com
3160 Eglinton Ave,East,Unit 3 Scarborough,ON M1J 2H3





17. ஊர்வலங்களில் தேசியக்கொடியை எடுத்துச்செல்லுதல்

ஊர்வலங்களில் தேசியக்கொடியை வேறு கொடிகளுடன் எடுத்துச் செல்கையில் ஊர்வலத்தின் முன்னால் வலப்புறத்தில் எடுத்துச் செல்லவேண்டும். அல்லது நடுவரிசையில் மற்றைய கொடிகளுக்கு முன்னால் எடுத்துச்செல்லவேண்டும். வேறு எந்தக் கொடியை ஏந்திச் செல்பவரும் எமது தேசியக்கொடியை முந்திச் செல்லக்கூடாது. தேசியக்கொடியை நெஞ்சுக்கு நேராகவோ வலத்தோளிலோ ஏந்திச் செல்லவேண்டும்.



18. ஊர்திகளில் தேசியக்கொடியைப் பறக்கவிடுதல்

ஊர்தியின் முன்புறத்தில் உறுதியாகப் பொருத்தப்பெற்ற கம்பத்திற் பறக்கவிடவேண்டும். ஊர்தியின் தொளைமூடியின் (டிழநெவ) மேல் இரண்டடி உயரத்திற் கம்பம் இருத்தல்வேண்டும்.



உந்துருளிகள் மிதிவண்டிகள் ஆகியவற்றின் முன் வலப்புறத்தில் தேசியக்கொடியைப் பறக்கவிடலாம். உந்துருளிகள் மிதிவண்டிகள் ஆகியவற்றின் முன் வலப்புறத்தில் தேசியக்கொடியைப் பறக்கவிடலாம்.



19. மிசையத்தில் தேசியக்கொடியை வைத்தல்



அரசுத் தலைவர் மற்றும் முதன்மை மாந்தரின் மிசையங்களில் தேசியக்கொடியை வைக்கும்போது மிசையத்தின் வலப்புறத்தில் வைத்தல்வேண்டும். வேறு கொடிகளும் வைக்கப்படுமாயின் அவை இடப்புறத்தில் வைக்கப்படவேண்டும். தேசியக்கொடிக்கு முதன்மை வழங்கவேண்டும்.

20. ஈமப்பேழையின்மீது தேசியக்கொடியைப் போர்த்துதல்



மாவீரர், காவற்றுறை மாவீரர், தேசியத்துணைப்படை மாவீரர் மற்றும் தேசக் காப்புப்பணியில் ஈடுபடும் வீரர், நாட்டுப்பற்றாளர் ஆகியோரின் உடல் வைக்கப்பட்ட ஈமப்பேழையின்மீது தேசியக் கொடியைப் போர்த்தும் போது புலியின் தலைக்குமேலுள்ள பகுதி பேழையின் தலைப்பகுதியில் இருக்குமாறு போர்த்த வேண்டும். அவ்வாறு போர்த்தப்பெற்ற தேசியக்கொடியைப் போர்த்தப் பெற்றவரின் அரத்த உறவினரிடம் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு வழங்கலாம். இறந்தவரின் தாயகப்பற்றை மதிப்பதற்காக அவரின் ஈமப்பேழைமீது போர்த்தப்பெற்ற தேசியக்கொடியைப் பறக்க விடலாம்.



21. துயர நிகழ்வின போது கொடியேற்றுதல்

தேசியத் துயர நிகழ்வுகளின்போது கொடியேற்றுகையிற் கொடியைக் கம்பத்தின் உச்சிக்கு ஏற்றி, பின் அரைக் கம்பத்துக்கு இறக்கிக் கட்டவேண்டும். அரைக்கம்பத்தில் உள்ள கொடியை இறக்கும்போது முதலிற் கொடிக் கம்பத்தின் உச்சிக்கு ஏற்றி, பின் இறக்கவேண்டும்.

தேசத் தலைவரின்முறைப்படியான அறிவுறுத்தலுக்கு இணங்கவே தேசியக்கொடியை அரைக்கம்பத்திற் பறக்கவிடலாம். வேறெந்தவேளையிலும் அரைக்கம்பத்திற் பறக்கவிடக் கூடாது. தேசியக்கொடியை எத்தனை நாட்களுக்கு அரைக்கம்பத்திற் பறக்கவிடவேண்டுமென்பது தேசத்தலைவரின் அறிவுறுத்தலிற் குறிப்பிடப்படவேண்டும்.

கம்பத்தோடு நிலையாகப் பொருத்தப்பட்ட தேசியக் கொடியைத் தேசியத்துயர நிகழ்வுகளின்போது அரைக் கம்பத்திற்குக் கொண்டுவரமுடியாது. அவ்வேளையில் தேசியக் கொடிக் கம்பத்தில் **3‘x2‘** அளவுள்ள கறுப்புக்கொடியை அரைக்கம்பத்திற் பொருத்திவிடலாம்.

C.DENTAL CARE
Dr. Sharon Barr ,Dr.Chandra , Dr. Rahman , Dr.Cicilia & associates
941 Taunton Rd E Unit C7
Oshwa, ON, L1H 7K5
905-448-2500,
416-700-0101
info@cdentalcare.ca
cdentalcare.ca

22. கொடிகளைத் தொங்கவிடுதல்



உயரத்திற் கொடிகளைத் தொங்கவிடலாம். போக்குவரத்திலுள்ள எந்த ஊர்தியிலும் கொடி படாதவகையில் உயரமான கம்பங்களை இருமருங்கும் நிறுத்தி உறுதியான கயிற்றினை இணைத்துத் தொங்கவிடலாம். கொடி கட்டப்படும் கயிறு மிகவும் உறுதியானதாக இருக்கவேண்டும். கொடிக்கயிறு அறுந்து கொடி கீழே விழுவது தேசத்துக்கு இழுக்காகும்.

கொடியைக் கயிற்றில் இணைக்கும்போது புலியின் தலைக்கு மேலேயுள்ள பகுதி கயிற்றுடன் இணைக்கப்படவேண்டும். புலியின் பார்வை வலப்புறமாக இருக்கவேண்டும். அதாவது கொடிக்கு எதிரே நிற்பவரின் இடப்புறத்தைப் பார்த்தவாறு புலியின் பார்வை அமையவேண்டும். புலியின்பார்வை நிலத்தைப் பார்த்தவாறோ வானைப் பார்த்தவாறோ அமையக்கூடாது.

23. குறுக்குக் கம்பங்களிற் கொடியைப் பறக்கவிடுதல்



தமிழீழத் தேசியக் கொடியையும் வேறொரு தேசத்தின் தேசியக் கொடியையும் குறுக்குக் கம்பங்களிற் பறக்கவிடும்போது தமிழீழத் தேசியக்கொடி வலப்புறமாக இருக்கவேண்டும். அதாவது பார்வையாளருக்கு இடப்புறமாக இருக்கவேண்டும். மேலும் தமிழீழத் தேசியக் கொடியின் கம்பம் முன்னாலும் மற்றக்கொடியின் கம்பம் பின்னாலும் இருக்கவேண்டும்.

24. கட்டடங்களிற் கொடியைப் பறக்கவிடுதல்



சாளர அடிக்கட்டை, முகப்புமாடம் ஆகியவற்றிற் கிடையாகவோ கோணவடிவிலோ கொடியைப் பறக்கவிடும்போது கொடி, கம்பத்தின் உச்சியில் இருக்கவேண்டும். கிடையாகப் பறக்கவிடும்போது புலியின்பார்வை வலப்புறமாக இருக்கக்கூடிய வகையிற் புலியின் தலைக்கு மேலுள்ள பகுதியே கம்பத்துடன் இணைக்கப்படவேண்டும். கோணவடிவிற் பறக்கவிடும்போது அணிவகுப்புக் கொடியை இணைப்பதுபோன்று அதாவது எழுச்சிக் கொடியைக் கம்பத்தில் இணைப்பது போன்று இணைக்கவேண்டும்.

25. மேடைகளில் தேசியக்கொடி.



கூட்ட மேடைகளிற் பேச்சாளரின் தலைக்கு மேலாகப் பின்புறத்தட்டியில் தேசியக்கொடியைக் கட்டலாம். 9 அடி உயர நிறுத்தியிற் பொருத்தப்பெற்ற தேசியக்கொடியை மேடையின் வலப்புறத்திற் பேச்சாளருக்கு முன்னால் வைக்கலாம். ஏனைய கொடிகள் இடப்புறத்தில் வைக்கப்படலாம்.

26. தேசியக்கொடியை இறக்குதல்.

தேசியக்கொடி ஏற்றப்படுவதுபோன்றே இறக்கப்படுவதும் ஒழுங்குமுறையிலான சிறப்பு நிகழ்வாகவே இருக்கவேண்டும். கொடியை இறக்குபவரும் முதன்மையானவராக, தகுதியானவராக இருத்தல் வேண்டும். கொடியேற்றுபவர் நிகழ்ச்சியின் இறுதிவரை இருந்தால் அவரே கொடியை இறக்குதல் வேண்டும்.

தேசியக்கொடி இறக்கப்படும்போது நிலத்தில் விழாது கைக்கு எட்டக்கூடிய உயரத்தில் வைத்தே கைகளில் ஏந்தி எடுத்தல்வேண்டும்.

தேசியக்கொடி இறக்கப்படும் நிகழ்வின்போது எவரும் கையொலி எழுப்பக்கூடாது. அந்நிகழ்வு அமைதியாக நடைபெறவேண்டும்.

27. கொடி வணக்க நிகழ்வை ஒழுங்குசெய்பவர்களுக்கு.

தேசியக்கொடியை ஏற்றுகின்ற நிகழ்வின்போது தவறுகள், தடங்கல்கள் ஏற்படாது இருப்பதற்கு நிகழ்ச்சி தொடங்குவதற்கு முற்கூட்டியே தேசியக்கொடியைக் கம்பத்தில் ஏற்றி ஒத்திகை பார்த்தல் வேண்டும்.

தேசியக்கொடி தலைகீழாக அல்லாமல் நேராக இருக்கின்றதா?

தேசியக்கொடியிற் கயிறு கோர்ப்பதற்கான மடிப்பு புலியின் பார்வைக்கு எதிர்ப்புறமாகத் தைக்கப் பட்டிருக்கின்றதா?

கொடி கிழியாமல், மங்காமல் ஏற்றக்கூடிய நிலையில் இருக்கின்றதா?

நிகழ்வில் எற்றப்பட இருக்கும் வேறுநாடுகளின் தேசியக்கொடி தவிர்ந்த ஏனைய கொடிகள் தேசியக்கொடியைவிடச் சிறிதாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதா?

கொடியை ஏற்றுவதற்கான கயிறு கொடிக்கம்பத்தின் உயரத்தைவிட இருமடங்கிற்குக் குறையாமலும் உறுதியாகவும் இருக்கின்றதா?

தேசியக்கொடி ஏற்றப்படும் கொடிக்கம்பம் உறுதியாக நாட்டப்பட்டிருக்கின்றதா?

கொடிக்கம்பம் தேசியக்கொடி ஏற்றுவதற்கு வேண்டிய உயரத்தை, உறுதியை உடையதாக இருக்கின்றதா?

என்பவற்றையெல்லாம் முற்கூட்டியே உறுதிசெய்து கொண்டால் கொடியேற்ற நிகழ்வில் எவ்வகைத் தவறோ தடங்கலோ ஏற்படாது தவிர்க்கலாம்.

தேசியக்கொடியேற்ற நிகழ்வில் ஏற்படும் தவறுகள், தடங்கல்களுக்கு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்யும் பொறுப்பாளரே பொறுப்பாவார்.

28. தேசியக்கொடியை அகற்றுதல்.

நீண்டகாலப் பயன்பாட்டின்போது நரைத்தல், இற்றுப்போதல் போன்றவற்றாற் பழுதடைந்து தேசத்தின் சின்னமாகப் பயன்படுத்த முடியாத நிலைக்குவரும் தேசியக்கொடிகளை அகற்றிவிடவேண்டும். வகுக்கப்பட்ட முறைக்கிணங்க அகற்றும் நிகழ்வு நடைபெறும்.

பயன்படுத்தமுடியாத கொடிகளைச் சேர்த்தல்.

பழுதடைந்த கொடிகளை வட்டார அரசியற் செயலகங்களினூடாக ஆறுமாதத்திற்கொரு முறை சேர்க்கவேண்டும். சேர்க்கப்பட்ட கொடிகள்

KEV Tax Services
FREE EFILE SERVICE
STARTING FROM $19.99
CORPORATE INCOME TAX
BOOKKEEPING & ACCOUNTING SERVICES
PERSONAL INCOME TAXES
QUALITY SERVICE WITH REASONABLE FEE
FREE YEAR- ROUND CUSTOMER SERVICE
CORPORATE AND SOLE PROPRIETOR BUSINESS REGISTRATION
அழையுங்கள்:
Ganthiy Selvarajah (B.A Sri Lanka)
2889 Lawrence Avenue, East (Basment) M1P 2S8
(Brimely/Lawrence)
Tel: 416-841-1866 | Fax: 1888.841.8829
Email: ganthiy@rogers.com
website: KEVTAX.com



முழுவதும் தலைமைச் செயலகத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.

பழுதடைந்த கொடிகளை ஆய்வு செய்தல்.

தலைமைச் செயலகச் செயலரோ அவரால் அமர்த்தப்பெறும் தகுதிவாய்ந்த ஒருவரோ குழுவோ சேர்க்கப்பட்ட கொடிகள் அனைத்தையும் அவை எதிர்காலத்திற் பயன்படுத்த முடியாதபடி பழுதடைந்துள்ளனவா என்பதை ஆராய்ந்து உறுதிப்படுத்தவேண்டும். பயன்படுத்தமுடியாதவையென உறுதிப்படுத்தப்பட்ட கொடிகளுக்கு இறுதிச் சடங்கும் அகற்றுஞ் சடங்கும் ஒதுக்குப்புறமான வெள்வேறு இடங்களில் மாலைநேரத்தில் இருள் சூழ்வதற்கு முன் நடைபெறவேண்டும்.

இறுதிச் சடங்கு.

அகற்றப்படவிருக்கும் எல்லாக் கொடிகளையும் நிகராண்மைப்படுத்தும் ஒரு கொடியைத் தெரிவுசெய்து இந்நிகழ்விற் பயன்படுத்தவேண்டும். தற்போது பயன்படுத்தப்படும் கொடிக்காக ஒருவரும் நிலையாக ஓய்வு கொடுக்கப்படவிருக்கும் கொடிக்காக மற்றொருவருமாக செங்காவலர் (சிவப்புநிறப் பரேத் தொப்பி அணிந்திருக்கவேண்டும்) இருவர் தேர்ந்தெடுக்கப்படுவர். மொத்தமாக ஏழு பேருக்கு குறையாதோர் இந்நிகழ்விற் கலந்துகொள்ளவேண்டும்.

பகல் முழுவதும் பறந்துகொண்டிருக்கும் கொடிக்குப் பொதுவான சடங்கு முறைகளுக்கிணங்கப் பொழுது கருகுவதற்குமுன் ஓய்வு கொடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட செங்காவலரில் ஒருவர் இப்பணியைச் செய்வார்.

இறுதி மதிப்புப் பெறவிருக்கும் கொடியைக் கையாள்வதற்காகத் தெரிவு செய்யப்பெற்ற செங்காவலர் முன்னுக்குச் சென்று நடுவே நிற்பார். இறுதி மதிப்புச் செலுத்தப்பெற்று அகற்றப்படுவதற்காகத் தெரிவு செய்யப்பெற்ற கொடியைத் தலைவர் செங்காலவரிடம் கையளிப்பார். பின்னர் கொடியை ஏற்றுமாறு கட்டளையிடுவார். வழமையாகக் கடைப்பிடிக்கப்படும் சடங்குகளுடன் கொடியேற்றப்பட்டுக் கொடிக்கம்பத்தின் உச்சியைக் கொடி அடைந்ததும் தலைவர் பின்வருமாறு உரையாற்றுவார்:-

இந்தக் கொடி எமது தாயகத்திற்காக நீண்டகாலம் நன்கு பணியாற்றியுள்ளது. எதிர்காலத்தில் எமது தேசத்தை நிகராண்மைப்படுத்த முடியாத அளவுக்குப் பழுதடைந்துவிட்டது. பணியிலிருந்து முழுமையான ஓய்வு கொடுப்பதற்காக இன்று தெரிவுசெய்யப்பட்டிருக்கும் எல்லாக் கொடிகளையும் இக்கொடி நிகராண்மைப்படுத்துகிறது. இக்கொடியை வணங்குவதன் மூலம் எல்லாக் கொடிகளுக்கும் மதிப்பளிக்கிறோம்□

உரையின் பின் தலைவர், உறுப்பினர் அனைவரையும் கவனநிலைக்கு (யுவவநவெழை) அழைப்பார் வணக்கம் (ளுயடரவந) செய்யும் படி பணிப்பார் உறுதி மொழியை முன் மொழிவார். கொடிக்கு ஓய்வளிக்குமாறு கட்டளையிடுவார். செங்காவலர் மெதுவாகவும் சடங்கு முறைகளுக்கமைவாகவும் கொடியை இறக்குவார். பின்னர் உரிய மதிப்புடன் வழக்கம்போல முக்கோணமாக மடித்துத் தலைவரிடம் வழங்குவார். குழு கலைக்கப்படுவதுடன் இறுதிமதிப்புச் சடங்கு முடிவுறும்.

எரியூட்டும் சடங்கு.

ஒதுக்குப்புறமான வேறோரிடத்தில் எரியூட்டுஞ் சடங்கு நடைபெறும். கொடிகளை எச்சமெதுவுமின்றி முழுமையாக எரிக்கக்கூடிய வகையில் தீ மூட்டப்படும். முக்கோணமாக மடிக்கப்பட்டிருக்குங் கொடி, சடங்கு தொடங்கு முன் ஈமப்பேழையின் சாயலையுடைய செவ்வகமாக மடிக்கப்படும். எல்லோரும் நெருப்பைச் சூழ்ந்து நிற்பர். தலைவர் எல்லாரையும் கவனநிலைக்கு (யுவவநவெழைஎ) அழைப்பார். செங்காவலர் முன்னே வந்து கொடியைத் தீயிலிடுவார். எல்லோரும் விரைந்து வணக்கம் (ளுயடரவந) செலுத்துவர். வணக்கம் செலுத்திய பின் அனைவரும் கவனநிலைக்கு வருவர். தேசியப்பண் இசைத்தல், உறுதிமொழி உரைத்தல், கொடியின் மேன்மையை உரைத்தல் போன்றவற்றைத் தலைவர் நிகழ்த்துவார்.

கொடி எரிந்ததும் குழுத்தலைவரையும் செங்காவலரையுந் தவிர ஏனையோர் கலைந்து ஒரே வரிசையில் அமைதியாகச் செல்வர். தலைவரும் செங்காவலரும் அங்கேயே நின்று கொடி முற்றுமுழுதாக எரிந்துவிட்டதென்பதை உறுதி செய்வர். ஏனைய கொடிகளையுந் தீயிலிடுவர். எல்லாக் கொடிகளும் முழுமையாக எரிந்தபின் நெருப்பு அணைக்கப்படும். சாம்பர் முழுவதும் கவனமாகப் புதைக்கப்படுவதுடன் நிகழ்ச்சி முடிவடையும்.

LONGO LAWYERS
Our Clients Aren't Just A File
Each Are Our Life
www.longolawyers.ca

SHENTHURAN SUBRAMANIAM
B.Sc.,M.B.A.,J.D.
(PERSONAL INJURY LAWYER)
4950 YONGE STREET,
SUITE 401 TORONTO, ON.M2N 6K1
CELL : 647-992-2417 | PHONE : 416-800-4232 | FAX : 416-800-6247 | TOLL FREE : 1-844-800-4232





தலைவனுக்கு அகவை

தேடிக் கிடையா தேவதூதன் நீர்...
வாடிக் கிடக்கும் தமிழர் வரலாறும் நீர்...
வருங்காலமும் நீர் தான்...

பிஞ்சுகளின் விரல் பிடித்து கொஞ்சு தமிழ்
பேசிய செஞ்சோலையும் நீர் தான்...

நஞ்சுக் குப்பியை நாவடியில்
பொத்தி வைத்து போர் புரிந்த
நாயகனும் நீர் தான் ஐயா...

சிந்தும் புன்னகையில் மாசில்லை
சிறிதும் கொள்கையில் மாற்றில்லை
பொங்கும் புரட்சியில் ஓய்வில்லை
விடியும் கிழக்கு தூரமில்லை...

தமிழும், தமிழீழமும்
உன்னிரு விழிகள்...
களத்திலும் கண்ணியம் உன்னுடைய
நேர்மை...
எதிரிக்கும் பிடிக்கும்
அதுதான் உம் பெருமை...

குறையொன்று காண குற்றவாளியல்ல நீர்...
பிறை சூடி நாளும்
பகைதீர் புலி நீர்...

காலமெல்லாம் உனை வாழ்த்த ஞாலமெல்லாம் பலருண்டு...
ஈழம் தாண்டிய வேழம் நீர்...
ஈழத்தமிழரின் வேரும் நீர் தான்...

அன்றும், இன்றும், என்றும்
உன் கண் அசைவிற்காகவே
காத்திருக்கும் போராளிகள் நாம்.

இப்படிக்கு...
ஈழமகள் அபிசேகா
கனடா

LUXSHAN KANDASAMY
NEW HOME & CONDOS EXPERT
We Specialize in Finding New Home & Condos Project that Meet Your Investment Needs. Register on our website to be informed about upcoming new projects & Receive First Platinum/ VIP Access to Price Lists.
416-888-8044
NEW RELEASE HOME.COM
NEWRELEASEHOME.COM



இந்த நாள் இனிய நாள்;

இந்த நாள் இனிய நாள்,
எங்கள் இனத்தின் தலைவர் பிறந்தநாள்.
தலைவரின் வீரம் கண்டு உலகமே அஞ்சும்
அவர்தம் ஈரம் கண்டு தாய்மையே கெஞ்சும்.
கண்களை மூடி உமை நினைக்கும் போது
காயத்தில் ஒரு மாயத்தை உணர்கிறோம்.

வேங்கை தலைவனே! நின் பிறந்த திகதி
சத்தியத்தின் வேரில் பெயரானது. விலை
இல்லாத சுதந்திர விடுதலைக்காக சுவாசத்தை
நிறுத்திய ஒவ்வொரு மாவீரனின் குருதியிலும்
உயிராக கலந்தது.

சுதந்திரகீதம் ஒலித்த உங்கள் இதயத்துடிப்பு
பரவிக்கிடக்கிறது பார்க்கும் இடமெல்லாம் - அந்த
குழந்தை முகமும் மழலைச்சிரிப்பும் ஆட்சி
செய்கிறது எம் ஆழ்மனதை.
எத்தனை அடக்குமுறையையும் உடைத்து
எறியவல்ல வல்லமையே! ஆறு படை வீடு
கொண்ட ஆறுமருகனையே கண்டோம்
உம் நடையில்.

அசாதாரணப்பிறவியே நின் ஆற்றல்
அடங்கிவிட்டது என்று நினைக்கும் மூடர்கள்
மறவாதிருக்கட்டும், நெருப்பின் வடு
அழியாதென்பதை.

தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும்
மறுபடியும் தர்மமே வெல்லும்.

தூய கங்கை நீர் போன்ற தூமணியே! சங்க
தமிழ் வீரமரபதன் பிதாமகனே!
“பிரபாகரன்” எனும்
மந்திரமே வாழ்த்துக்கள்! வாழ்க வளமுடன்
என்றும் நலமுடன்.

தாயகத்திலிருந்து
கண்ணம்மா அறிவழகன்.

MAJESTIC CITY PHARMACY

துரித சேவை
சகல காப்புறுதி திட்டங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
$2.00 அறவிடப்படமாட்டது
முதியவர்களிற்கு தள்ளுபடி உண்டு

Majestic City Mall
A1- 2900 Markham Rd
Scarborough, ON
M1X 1E6
416-298-9944
416-299-5943
mcitypharma@gmail.com

தமிழ்த் தேசிய நாட்காட்டி 2024

























2023 மாவீரர் நாளில் பேற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 416-805-3085 / 416-766-9544



Majestic City

For Leasing Opportunity

Call
Crish Sivakolunthu
647 218 3698
416 291 3555





மாமா வாங்கோ மாமா வாங்கோ

மாமா வாங்கோ மாமா வாங்கோ
மழலை பூக்கள் அழைக்கின்றோம்
செஞ்சோலை நிழல் தந்த மாமா வாங்கோ
இரந்த ஆற்றில் தினம் இங்கே மிதக்கின்றோம்

பாரத வரவு பொர்ணமி என்றே
அப்பா அன்று சொன்னாரு
எங்களை விழுங்க வந்த சுனாமி என்றே
தலைவர் மாமா நீங்க சொன்னீங்க
காதகர் வந்தார் காமுக கழுகாய்
அம்மா கூட இரையாணாள்
சிங்கள ராணுவ கொடும்வதை முகாமில்
அப்பா சிதைந்து பிணமானார்

கண்ணை பறிச்சு காட்டில் விட்டு
கைத்தடி ஒண்டு தாறாங்க
கைத்தட்டு ஏந்தி பிச்சை கேட்க
வீதியில் எங்களை விட்டாங்க

கருநீலா காலம் கண் உறங்கி நாளாச்சு மாமா
சாகாமல் சாகிறோம் சவக்காட்டில் வீழ்கிறோம்
காத்திட ஓடி வாங்கோ
மழலை பூக்கள் வாடுகிறோம்
உங்கள் மதி முகம் காட்டி போங்கோ

-பாவலர் வல்வை சுயேன்-

MT CPA CA
MAYURAN THARMALINGAM
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- Audit - Review Engagement - Notice To Reader - Business Advisory - Controllership Services - Corporate Taxes - Personal Taxes - Financial Planning - Cra Audits - Payroll - Bookkeeping
MAYURAN
THARMABALAN, CPA,CA,LPA
647-748-6344
647-989-6298
647-748-6444
www.tharmabalan.ca I Suite 304-5200 Finch Ave East Scarborough ,ON M1S 4Z5



வாழும் காலத்தே வரலாறு ஆனமகன் சூழும் பகைவிரட்டி நாளும் நடந்தமகன்
முந்தைத்தமிழ் வீரம் முகிழ்ந்தெழுந்து சிலிர்த்த தினம் வந்தபகை நடுங்க
எங்கள் சொந்தமகன் சீற்றமொடு எதிர்த்த பலம் எந்தப்பகை வரினும் எதிர்த்து
ஆடி வெல்லும் உரம் போர் ஒடுங்கிப்போனாலும் புகழ் ஒடுங்கிப்போகாத
பொங்கு தமிழோடும் புலருகின்ற பொழுதோடும் மங்காத புகழோடும்
அன்னைமண் விடியலுக்காய் வரிதரித்த எங்கள் தங்கத்தலைவன் வந்துதித்த
திருநாளில் வாழ்த்தி நாம் மகிழ்ந்திடுவோம்

- (சயந்தன் பசுபதி)





Mirage Banquet & Convention Centre
1917 Albion Rd, Toronto, Canada. (HWY 27 @ Albion Rd)
மாவீரர் நாள் ஏற்பாட்டுக்குழு
தமிழர் நினைவு அறக்கட்டளை 416-805-3085 / 416-766-9544
TamilMemorial Tamil_Memorial



LIVE LIFE FULLY COVERED
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca

- Life Insurance Products
- Disability Insurance
- Travel Insurance
- Mortgage Insurance
- RESP Education Saving Plan
- Critical Illness Insurance
- Dental & Drug Insurance
- Non-Medical Insurance
- RRSP's Investments
- Final Expense Products



Mega Financial Group
Office: 416-293-5559 | Fax: 416-293-9409 | www.megafinancial.ca
PH 28-4168 Finch Ave. E, Scarborough, ON. M1S 5H6



வழிநடத்த வா தலைவா...!

தலைவா...!
இருக்கிறாய் தலைவா !
எங்கே இருக்கிறாய் தலைவா ?

நேற்றைய இரவும் எதிரிகளுடைய
தூக்கம் கெடுத்த தூயவெண் புலியே
இத்தனை கோடி தமிழர்கள் நாங்கள் எத்தனை முறை
கேட்கின்றோம்???

எங்கே இருக்கிறாய் தலைவா?

இத்தனை ஆண்டுகள் கடந்த பின்னும்,
எத்தனை சூழல் நிகழ்ந்த பின்னும்
அத்தனை கோடி தமிழர் நெஞ்சிலும்
சித்தனை போல அமர்ந்த எம் தலைவா...

எங்கே இருக்கிறாய் தலைவா ?
எப்படி இருக்கிறாய் தலைவா ?

ஆர்மி காரன் வந்தபோதும்
ஆழிப்பேரலை வந்தபோதும்
தாயை போல தாயகத்தை
பாதுகாத்த தலைவா...

பாதி புலிகள் (தமிழர்) புலம்பெயர்ந்து
மீதி புலிகள் முகம்மறைந்து
வீதிகளில் உலவுவதே
கார்த்திகையின் கடைசியிலே
காற்றில் வரும் உம் கட்டளைக்கே...
எப்போது வரும் தலைவா ?
கட்டளை...
எப்போது வரும் தலைவா ?

பாலஸ்தீனத்தில் குண்டு விழுந்ததும் பதறி துடிக்கிற உலகப் பந்து,
பாலச்சந்திரன் மீது பாய்ந்த போது
பாராமுகம் காட்டியதே...
பன்னாட்டு அரசியலை படிப்பினையாக்கி
பாயும்நாளை பார்த்தே நடக்கிறோம்...

“பாதையை தேடாதே உருவாக்கு”
பயிற்றுவித்த தலைவா !

பாதையை உருவாக்குகிறோம்
வழிநடத்த வா தலைவா...

வழிநடத்த வா தலைவா...

திருப்பூர் சுடலை
ஒருங்கிணைப்பாளர் - தமிழர் காவல் படை.
தமிழ்நாடு,
இந்தியா



தமிழீழ வழியில்

ஈழ விடுதலைப் போராட்டத்தை
ஒவ்வொரு தமிழனும்
தனது அடையாளமாக, ஆத்மமாக
பதிவெடுத்துக் கொள்கிறான்.

பெருகின்ற பெருமையில்
பெருமிதம் கொள்ளும் உயிராக
ஒவ்வொரு உயிரும் உரிமையாகிறது.

வீரத்தை விதைத்த எழுகையில்
விரதமிருந்து வரம் பெறுகிறது
விடுதலை நோக்கிய தாயகப் பயணம்.

இலட்சிய வெறி துடிப்பாகிறது
வாழ்வின் வாசலில் கோலமாக.
எதுவாகினும் எதிர்ப்போம் என்கிறது
எங்களின் மாவீர விடுதலை ஈகம்.

தலைவன் எங்கள் சூரியன் என்று
தமிழினம் வாழ்வை அசைக்கிறது.
விழியூற்றை விடுதலைக் கவிதையாய்
மொழிந்து கவி பாடும் குரல்
பிரபாகரன்.

ஒற்றுமையை சுவாசத்தின் ஓசையாக்கி
ஒளிர் என்கிறது அந்தத் தமிழ் குரல்.
ஒடிந்து போன கனவுளை அடுக்கி
விசையெடுக்கிறது யுகத்தின் வேட்கை.

தமிழரின் தாகத்தைப் பறை
ஓசையாக்கி
தடை உடைக்கிறது வீர எழுச்சிக்
குயில்.
தர்மம் என்று தலையசைத்து
சிவக்கிறது
தமிழ் சுமந்த அந்த பிரபாகரக் கால
வெளி.

நம்பிக்கையை நடை பாதையாக்கி
தமிழன் என்று நடக்கும் அழகு
தமிழீழம்.
நச்சுப் புகை நடுவே
நர்த்தனமாடுகிறது.
நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
என்ற உறுதி உரை சுமந்த நாட்டிய
மயில்...



கலைப்பரிதி.



"வரலாற்று நாயகனே"

தேசத்தின் தலைமகனே
எங்கள் பிதாமகனே!
புறநானூற்றின்
பெருமகனே
ஈழத்து வேந்தா!
கலியுகத்தின் கரிகால
சோழனே
தமிழீழத்தின் பிரபாகரா!
வேலுப்பிள்ளை பெற்ற
மைந்தனே
வேல் கொண்ட
வேலாயுதா!
தரணியெங்கும்
தடம்பதித்த வீரனே
தேசத்தின்
தேசத்தலைவா!
மக்கள் மனதில்
இடம்பிடித்தவனே
வல்வையின்
தவப்புதல்வா!
முப்படை கண்ட
வீரத்திருமகனே
ஈழத்து இராவணா!
ஆதியும் அந்தமுமில்லா
சோதியனே
வானத்து சூரியதேவா!
அனைத்தும் அறிந்த
சகலாகலா வல்லவனே
எங்கள் தாயுமானவரே!
யாரும் அறியாத
காலத்துக்
கணிப்பாளனே
விடியலின்
விடிவெள்ளியே!

எழுத்தாக்கம்;
ஈழம் வாகீசன்.



MORTGAGE FINANCIAL SOLUTIONS

Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit
• Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

NESAN
Subramaniam
416-908-5656





என் தலைவனுக்கு ஒரு பக்தனின் வாழ்த்துப்பா!!

காந்தள் மலர்க் காடுகளே!
எனக்கொரு கடி மலர் வேண்டும்
வெடிகளுக்குள் முளைத்தெழுந்த
எம் வீரப் புதல்வன் பொன் அடிகளுக்கு
அதைச் சாற்றவேண்டும்
நீடுழி வாழ்கவெனப் போற்றவேண்டும்

கதைகளிலே படித்துவந்த
காவியத்து வேல் முருகன்
சதை உடுத்தி வந்த நாள் இன்று
போர்க் கதை உயர்த்தி வா!!
போரில் வென்றுவா என
மனம் பதை பதைக்கப் பிணமான
எதிரிகளின் சிதைகளுக்கு
தீ வைத்த தெய்வத் திரு வேந்தன்
தமிழின வாதை துடைத்த வரலாற்று நாயகனை
வாழ்த்த வேண்டும் வாருங்கள்

காந்தள் மலர்க் காடுகளே!
எனக்கொரு கடி மலர் வேண்டும்
கொஞ்சம் புதுவகையாய்
கலித்தொகையாய்
பொன்னகையாய்
தேனாய்
மேற்கந்தி வானாய்
தெவிட்டாத தமிழிலிருந்து
ஒரு சொல்லெடுத்துத் தாராய்
தமிழ்த்தாயே பாராய்!

பாராய்!!
அழகுடுத்தி மலர்ந்த அன்னை
நிலத்தைக் களவெடுக்க வந்த கயவர்கள்
எம் சிசுவின் உடலெடுத்துத் தாரில்
உள்நுளைத்து அழுத்திப் பின்
உரிந்த தோலில் ஒழுகும் குருதியில்
உயிர் இருக்கிறதா எனப் பார்த்தான்
அதை என் தலைவன் பார்த்தான்

இதைக் காண்கையில் உயிருள்ள
எல்லோர்க்கும உடனே கோவம் வரும்

மடை திறந்த அருவியின்
தடை அற்ற வேகம் போல்
குருதி கொதிக்க
பகையை கொல்வதற்கு கோவம் வரும்
தனி ஈழம் அமைக்கும் வேகம் வரும்
அதைத்தானே அன்று எம் அண்ணன் செய்தான்

கண்ணியம் காலகாலமாய் கிடந்த இருட்டறை
உடைத்து வெளிவந்தது
ஈழத்துப்பெண்ணியம்

அன்பாய் எதிரியை அழித்துவிடும் அம்பாய்
பண்பாய் பனிக்குளிரில் கிடந்தாலும் பழுதுபடா
"மாமத்"தின் பலமான என்பாய்
செவ்வாய் மலர்ந்து
எமக்காய் சேவைகள் செய்த ஆண் தாய்
உனைச் சீராட்டி வளர்த்ததால்
தலை நிமிர்ந்தது
வேலுப்பிள்ளையின் வல்வாய்

எம் தலைவா எங்கள்
இதயத்திலிருக்கும் நான்கு அறை
எவர்க்கும் இடமில்லை
அது நீ இருக்கும் அறை
என் தமிழா எடுத்து வா பறை
எட்டுத் திக்கும் எம் தலைவன் பெயரை உரை
எம் இனத்தின் வாத்தியமடா அது
ஒலிக்க அறை "பறை"

ஒரு புயலுக்குப் பின் அமைதி இருக்கும்
அந்த அமைதிக்குப் பின் வானம் கறுக்கும்
அமைதியின் அர்த்தம் ஆர்ப்பரிப்பு என
அறியாதார் செவிகள்
இதைக் கேட்டால் உறைக்கும்

"ஸ்பாட்டன்"களின் வீரத்தை
இன்றுவரை பேசுகிறது உலகு
என் தலைவன் வீரம்
பிரபஞ்சத்தில் கடைசி உயிர் உள்ளவரை
பேசப்படும் அலகு

கடவுள் இருக்கிறார்!!
கடவுள் இருக்கிறார் என்பவர் ஒருபுறம்
இல்லை என்பவர் மறு புறம்
எவர் எதையும் பேசட்டும்
ஆனால் உற்சவம் மட்டும்
சிறப்பாய் நடக்கும்

எம் வாழ்க்கைக்கு அர்த்தம் தந்த தலைவா!
ஈழத் தாயின் உன்னத புதல்வா
இன்று போல் ஈராயிரம் ஆண்டு
கடந்து வருகிற கார்த்திகை இருபத்தியாறில்
நீ மீண்டும் மீண்டும் பிறந்து கொண்டுதானிருப்பாய்
தமிழர் மனங்களில் உயர்ந்துகொண்டுதானிருப்பாய்

எம் உன்னத தலைவா நீ வாழ்க!!
என்றென்றும் உன் புகழ் வாழ்க!!

–அனாதியன்–
பிரித்தானியா

Sri Lankan & East Indian Cuisine
New Kalyani Takeout
Take Out / Catering
Tel: 416-264-1888
723 Kennedy Road (South of Eglinton), Scarborough, ON. M1K 2C6

பாரில் நினைப்போல் படை நடத்துக் கற்வர்யார்?-(02)



பாரில் நினைப்போல் படை நடத்தக் கற்வர் யார்?
போரில் புகழ்நாட்டும்
பொன்முடியே! காரில்
மின்போலும் ஊடுருவி வெற்றிக்
கனிபறிக்க உன்போலும்
ஆமோ உரை ! (11)
உரைக்கப் புகுந்தால் உணர்ந்துன்
புகழைக் கரைக்குள் அடங்காக் கடலாய் விரியும்
தனை நிகர்த்தோனே!
தரிசித்ததுண்டோ உனை
நிகர்த்தோனை உலகு! (12)
உலகம் வியக்கும் உயர்தனிக்கோனே ! இலங்கைத் தமிழர்க்(கு)
இறைவா!
உலங்குவா(ன்) ஊர்திப்
படை கண்ட ஒண்டமிழா! சிங்களரின்
மார்பிளந்த நீயன்றோமன்! (13)
மன்னு புகழ்மறவா! மானத் தமிழா!
நாம் உன்ன உளத்துள் உறைபவனே! பொன்னனைய
துய்யமனத்தால்
துயரம் களைந்த கதிர்க்கைய!
எமக்குநீ காப்பு! (14)
காப்பான எங்கள் கரிகாலா!
செந்தமிழர் கூப்பிக்கை கும்பிடும்
கோமகனே! மூப்பில்கைபற்ற உதவும்
பகுந்தடி போலெமக்(கு) உற்றதுணை
ஆனாய் உவந்து! (15)
உவமையொன்(று)
இல்லா உயர்கோனே! நீயே
உவமையுனக்(கு) என்றே
உணர்ந்தோம் உவட்டா
இனிப்பதுவே! பாயும் இளம்புலியே!
ஈழம் இனிப்பொதுவே
ஆகும்நாள் என்று? (16)
என்று பிறந்தகுடி என்ப(து) அறியாமல்
இன்றும் உலகம் எதிர்நோக்கும்
பொன்றாழுத்தமிழ்க்குடியைக்
காத்த தலைவா!
நீயே அமிழ்தினும்
மிக்க அரிது! (17)
அரிதரி(து) உன்போல் அடலேறைக்
காணல் அரிதரி(து) உன்னை
அடக்கல் அரிதரிது
கொள்கைக்(கு) உயிர்கொடுக்கும்
கோவுன்போல் காண்பரி(து)
உள்வைத்தோம் உன்னை உவந்து! (18)
உவரி - நடுவே உதித்த தமிழர்
உவலைக் கடலில் உழலும்
அவலம் களையப் பிறந்த கரிகாலா!
உன்னை அளையப் புகுமெம் அகம்! (19)
அகமென்ற ஒன்றை அடியோ
அகற்றிப்பகை கொண்ட மாணார்ப் பரிசை
அகம்கொண்ட மாந்தர்
அறிய, மறவா ! அமைதி வழி
ஏந்திப் பிடித்தாய் இயன்று! (20)
குறிப்பு:
கார்-மழை முகில் உலங்குவானூர்தி -
ஹெலிகாப்டர் மன்னுதல் நிலைத்தல்
உன்னுதல் - உணர்தல்
துய்ய - தூய்மையுள்ள உவட்டா -
அருவருப்பில்லாத
பொன்றாத - அழிவில்லாத அடலேறு
வலிமையுடையவன் கோ - அரசன் உவரி
கடல் உவரி நடுவே உதித்ததமிழர்
இலங்கைத்தமிழர் உவலை துன்பம்
அளைதல் - தழுவுதல் மாணார்
பகைவர் பரிசு பண்பு.

அன்புடன் அகரம் - அமுதன்





தலைவனே உன் வீர உரை இன்றி விளக்கேற்றி தொழுகின்றோம்'

தலைவனே உன் உரை கேளாது
கல்லறையில் உறங்கும் எம்
காவிய நாயகர்கள்
விழி நீரில் கரைகின்றார்கள்

கார்த்திகையில் இருள் சூழ
தீப ஒளியில் தேசம் மிளிர
கார்த்திகையில் தேசமே
ஒளி கொல்லுது
தலைவனே நீ எங்கே

உறவுகள் நாம் ஓடோடி வந்தோம்
கல்லறைகள் தேடியே
கார்த்திகை நாயகனே நீ எங்கே
விடுதலை கானம் ஒலிக்குது
விழி நீரில் தேசம் நனையுது

ஒப்பாரி ஓலங்கள் வான் முட்ட எழுகுது
தலைவனே உன் உரை கேளாது
கல்லறையில் உறங்கும் எம்
காவிய நாயகர்கள்
விழி நீரில் கரைகின்றார்கள்
வீர உரை இன்றி விளக்கேற்றி
தொழுகின்றோம் வீழ்ந்த எம்
வீரர்களின் கல்லறைகள் முன்னே
வீரனே தலைவனே நீ எங்கே

ஸ்ரீசிவா TE





தமிழர் தலைவனானவன்
எங்கள் தாயுமானவன்....

எத்தனை தடைகள் தாண்டி
எத்தனை சுமைகளை சுமந்து
எத்தனை காயங்கள் தாங்கி
எத்தனை நினைவுகளில் தங்கி
எத்தனை சவால்களை எதிர்கொண்டு

எத்தனை சோதனைகளை கடந்து
பகலிரவு பரபட்சமில்லாது உழைத்து
எத்தனை கனவுகள் கொண்டு
எத்தனை களப்பலி கண்டு
எத்தனை இலட்சிய பற்றுகொண்டு

கடைமையில் கண்ணாக நின்று
உரிமையில் உறவாக உறவாடி
பெருமை பேசுவதை துறந்து
உரிமை பேசுவதில் முனைந்து
வான் படைவரை வளர்ந்து
வானுயர்ந்து நின்றான்

தமிழர் வீரத்தை வானத்திலேற்றியும்
கடத்தினான்..
தமிழர் தலைவனானவன்.
எங்கள் தாயுமானவன்...!

- தமிழரின் தாகம் தமிழீழ தாயகம் -
பிரபாசெழியன்.



இயலாது இன்று இருக்காது ஏமக்கு..

ஈழமண்ணில் பிறந்து தேசிய தலைமகனின் வழிகாட்டுதலை உளமார ஏற்று சுதந்திரம் வேண்டி தாய்மண்ணை மீட்க எத்தனையாயிரம் மாவீரர்கள் களமாடி வீரச்சாவடைந்துவிட்டனர். ஆனால் இப்படியொரு பாக்கியம் தங்களுக்கு அமையவில்லையே என்று தன்மானமும் இனமானமும் தன்னின பெருமையும் தலைவர் மீது பாசமும் கொண்டு ஏங்குவோர் பலர் இருக்கதான் செய்கின்றனர். குறிப்பாக தாய் தமிழகத்தில் இப்படியான இளைய தலைமுறை பிள்ளைகளின் ஆர்வம் அதிகரித்திருக்கின்றது. தேசியதலைவரை கடவுளுக்கு நிகராக போற்றுகின்றார்கள்.

அவர்களின் அரசியல் பலம் நிச்சயம் வலுசேர்க்கும். அதற்கு உதாரணம் இந்தியாவின் மிக வலிமையான பிரதமராக ராஜீவ்காந்தி இருந்தபோது அவரையும் மீறி எம் ஜீ ஆர் அவர்கள் செய்த உதவிகள் பெறுமதிமிக்கது.
தேசிய தலைவரின் வழிகாட்டுதலில் வாழ்வது களமாடுவது சாதிப்பது அதுவொரு வாழ்நாள் வரம். தேசிய தலைவரின் வழிகாட்டுதலில் வாழ்ந்தால் புல்லுக்கும் புண்டுக்கும்கூட இனமான உணர்வு பிறக்கும். முடவனும்கூட சாதிக்க துடிப்பான் அண்ணனின் அரவணைப்பில் வாழ்ந்தால். சாதிக்கக்கூடிய உதீவேகம் இயல்பாகவே வந்துவிடும். அவரொரு மனிதர் தலைவர் வழிகாட்டி எனபவற்றை கடந்து அவரொரு பொக்கிஷம். இரவு நேரத்தில் வீட்டை விட்டு வெளியே செல்ல அம்மாவை துணைக்கழைத்த அங்கயற்கண்ணி அக்காவை. 326.04 அடி நீளமும், 51.02 அடி அகலமும், 1300 தொன் எடையை கொள்ளக்கூடியதும், அதிநவீன ராடர் கருவிகள் பொருத்தபட்ட நடமாடும் கடற்படை தலைமையகத்தை தனியொருத்தியாக 17 கடல் மைக்கள் எறத்தாழ 35 கிலோமீற்றர்கள் கடலில் நீந்தி கடந்து இலக்கை வெற்றிகரமாக தாக்கியழித்து சாதனை படைத்தார் என்றால்
தேசிய தலைவரின் வழிகாட்டுதலை உளப்பூர்வமாக ஏற்றதனால்தானே அது சாத்தியமாகியது.
அசாத்தியங்களை சாத்தியப்படுத்தினார் தலைவர். ஒவ்வொருவரிடத்தும் ஒருதனித்திறமை நிச்சயமாக இருக்கும். அத்திறமையை நுணுக்கமாக இனங்கண்டு உன்னால் இயலும் என்று உதீவேகத்தை அளிக்கக்கூடிய தலைமை கொடையாக பெற்றிருக்கிறது தமிழினம். உலகெங்கும் பரவி வாழும் தன்மானத் தமிழர்கள் யாவரும் ஒற்றை கோரிக்கையை முன்னிறுத்தி ஒற்றை தலைமையின் கீழ் அணிதிரண்டு ஒரு புள்ளியில் இணைந்தால் விடியலின் எல்லை வெகுதூரத்தில் இல்லை. புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்.

பிரபாசெழியன்.





கங்கை கொண்டு கடாரம் வென்று
செங்கை ஆழி எங்கும் செறிந்து
வங்கம் முழுதும் வலுவாய் வளர்ந்து
வானளாவ வாழ்வாங்கு வாழ்ந்த
எங்கள் தமிழ் ஆண்ட பரம்பரை
மங்கி மடிந்து மறைந்து ஒழிந்து
மாநிலம் இழந்து மண்டி மெலிந்து
சிங்க இளவனின் சிறைகளில் அடைந்து
சிக்கி முக்கி சீரழிந் துழல்வதோ –என்று
பொங்கி எழுந்து எரிமலை பிழம்பாய்
போர் முரசறைந்த பெருவழுதி எங்கள் தம்பி
பிரபஞ்சம் தந்த "பிரபாகரன்" பார்த்திபன்
சிங்கள சேனையின் சிம்ம சொப்பனன்
சங்ககால சரித்திர நாயகன்! சோழவளவன்!
நம்தமிழ் காக்க நிமிர்ந்து எழுந்த நிலவன்
நிழலாய் பகலாய் உதித்த நித்யசூரியன்!
தங்க மறவனை தமிழ் உளவரை மறக்குமா?
தலைவன் பிரபாகரன் பிறந்த நாளினை
தமிழால் இணைந்து தாழடி பணிந்து
தலைவா வாவென தாகமாய் வாழ்த்துவோம்
வானே நீ வாழ வண்தமிழ் வாழுமே

வாழ்க வருக வளர்வினை தருக.

சிவா சின்னத்தம்பி.
26-11-2023



மகுடம் சூட்டிய மன்னவன்



அனிபிற்கு உரித்தானாய்
அகத்திற்கு மகிழ்வானாய்
இறைவனுக்கு நிகர் நிகரானாய்
இதயத்தினி உருவானாய்

அற்புதம் பல செய்தாய்
அடிமனதில் விருட்சம் விட்டாய்
கொப்பளித்த இரத்தத்தில்
உரிமை நிலை நாட்டி வைத்தாய்

அறிவியல் சிறகடித்தாய்
அற்புதம் தினம் படைத்தாய்
துணிவினில் பெயர் எடுத்தாய்
துனிபத்தை களை எடுத்தாய்

அலைகளை அணியவைத்தாய்
அர்த்தத்தை மறைத்துவைத்தாய்
வானுயர் புலி வளர்த்தாய்
வண்ண முகில் சுழவைத்தாம்

அடிமையின் பிடியில் இல்லை
அற்புதம் கண்ணில் இல்லை
செழகொழகளை காக்கவெனிறு
வனவளத் துறை வளர்த்தாய்

ஆதிக்கம் அடக்கி வைத்தாய்
அழிமையை விளக்கி வைத்தாய்
துணிவை முளைக்கவைத்தாய்
தமிழனை அணிவகுத்தாய்

ஆதியனி மரபில் வந்தாய்
அனியின அதிரவைத்தாய்
அடிமையை எதிர்த்து நினிறாய்
அனிபையும் சுமந்து நினிறாய்

அடிமை விலக்குடைத்தாய்
அக்கினியில் தடையுடைத்தாய்
ஆணுக்கு நிகர் பெண் எனிறாய்
அரியபுலிபெணிபடை வளர்த்தாய்

இலட்சியம் தாங்கி நினிறாய்
இழந்ததை மீட்டுத்தந்தாய்
போரினில் தலை சிறந்தாய்
பொங்கிடும் ஆற்றலானாய்

இருப்பதை வைத்து சிறகழத்தாய்
ஈழத்தை மகிழவைத்தாய்
தனித்துவத்தில் சிறகுவிரித்தாய்
சந்ததிக்கு நீ உழைத்தாய்

இலட்சியம் விதைத்து வைத்தாய்
சத்தியத்தில் உயிரைவைத்தாய்
தியாகத்தை பேணவைத்தாய்
துயிலும் இல்லத்தை புசித்தாய்

ஈகம் எழுதி வைத்தாய்
ஈனர் அழித்தொழித்தாய்
சரித்திரம் எழுதவைத்தாய்
சாதனை படைத்து வைத்தாய்
உணர்வுகளை ஊட்டவைத்தாய்
உலகமெலாம் விதை வளர்த்தாய்
தலை நிமிர உயர்த்தி வைத்தாய்
தமிழனைஇமையம்ஏற்றிவைத்தாய்

உருகிய உள்ளம் கொண்டாய்
உணமையை பேசிக்கொண்டாய்
நேர்மையை நெஞ்சில் வைத்தாய்
நிழலாக எமக்கு நினிறாய்

உலகை வியக்க வைத்தாய்
உண்மையில் உயிரை வைத்தாய்
உதிரத்தை ஊற்றிவைத்தாய்
உலகம் தமிழனை ஈர்க்க வைத்தாய்

உயிருக்குப் நிலை எடுத்தாய்
உரிமைக்கு வாளி எடுத்தாய்
பெண் அடிமையை நீக்கி வைத்தாய்
பேய்களை துரத்தி விட்டாய்

ஊர்ச்சத்தில் நீ உதித்தாய்
நெஞ்சுரத்தில் தலைநிமிர்ந்தாய்
ஆதிக்கம் இல்லாத
அரசியல் துறை வளர்த்தாய்

ஊக்கம் உடலில் ஏற
விளையாட்டு துறை வளர்த்தாய்
உந்துதல் சிரத்தில் ஏற

உழைப்பினை ஊக்குவித்தாய்

எதிரியை தானி அழித்தாய்
தமிழனை நிமிர வைத்தாய்
சிறுத்தையாய் படை எடுத்தாய்
சிங்கள மட்டியை கட்டிவைத்தாய்

ஏகவீரம் ஏற்று நினிறாய்
வீரச்சாவை போற்றி நினிறாய்
விடுதலையை நேசித்தாய்
வித்துடலை புசித்தாய்

ஐயம் நீக்கி முனினரனில் நினிறாய்
அகிம்சையை தொட்டு வெனிறாய்
விணணுயர்ந்த வியுகம் செய்தாய்
விடுதலைக்கு மனமுவந்தாய்

ஒளியோனாய் இனத்தில் நினிறாய்
ஒளியேற்றி நிலத்தை வெனிறாய்
ஒழுக்கத்தில் உன்னை வெனிறாய்
உரிமைக்கே புட்சிகொண்டாய்

ஒவியமாய் எங்கள் மனதில் வந்தாய்
ஒப்பற்ற தலைவா வெனிறாய்
சாதியை துரத்திவிட்டாய்
சந்ததி வாழ வைத்தாய்

ஒளதகத்தில் அடையாளமானாய்
ஆயுதத்தில் வீரனானாய்
கனவுகளை சுமக்கவைத்தாய்
கார்த்திகை மலர வைத்தாய்

ஏக்கு வாள் ஏந்தி
எமினத்தை காத்தாய்
புகுவானி எவனோ
அவனை புரமுதிகிடவைத்தாய்

சதிவலைப்பினனல் உன்னை சுற்ற
நீ சந்ததி வாழ்வை தொட்டாய்
களத்தினில் சேர்ந்து நிற்பாய்
கந்தகம் சாரந்து நிற்பாய்

கருத்துடனி கவனம் வைப்பாய்
கடமையில் உயிரை வைப்பாய்
கடற்புலிகள் படையமைத்தாய்
வானிஎறி புலி பறக்கவைத்தாய்

வரிப்புலியாய் படை அமைத்தாய்
வரலாற்று தமிழ் மண் வளர்த்தாய்
கல்வி கட்டாயம் என்றாய்
கல்விக்கழகம் ஒனிறமைத்தாய்

விழுமியங்கள் காக்கவெனிறாய்
கலைபணபாட்டு கழகமொனிறாய்
கடமைகள் செய்யவைத்தாய்
கணணியம் காக்கவைத்தாய்

சமூகத்தை செளிக்க வைத்தாய்
சந்ததியில் உயிரை வைத்தாய்
கணகாணிப்பு பிரிவொனிறு
கதிர் இயக்கப்பிரிவொனிறு

போக்கு வரத்து பிரிவொனிறு
இயக்கை வள பிரிவொனிறு
கனியவளத்துறை ஒனிறு
மனிதவளத்துறை ஒனிறு

வெழபொருள் துறை ஒனிறு
இசை பாடும் துறை ஒனிறு
கட்டுப்பாட்டுப்பிரிவொனிறு
எரிசக்தி துறையொனிறு

மினனியல் துறை ஒனிறு
மீனி வளத்துறை ஒனிறு
சாதியம் இல்லை எனிறாய்
சமத்துவம் எனிறுரைத்தாய்

வெற்றிகள் அள்ளித்தந்தாய்
வேதாந்தம் மாற்றிவைத்தாய்

செயல்களை காட்டவைத்தாய்
சேனையை புட்ட வைத்தாய்
பணிபினை ஒழுகவைத்தாய்
படை அறம் காக்கவைத்தாய்

சமுகம் காத்தொழுக
காவல் துறை வளர்த்தாய்

நீதியில் நிலமி செழிக்க
நீதித்துறை வளர்த்தாய்
எமி நெஞ்சத்தில் நீ வளர்ந்தாய்
சிறைதுறை இல்லாமல்
சீரிருத்த துறை வளர்த்தாய்

பறத்தமை இல்லாத
பசுமி மொனி திருநாடு
செஞ்சோலை எனிறுரைத்தாய்
செமிபுகீகள் கணடுணர்ந்தாய்

புஞ்சோலை காக்கவைத்தாய்
புனனகை புகவைத்தாய்
செந்தளிர் இல்லமி எனிறாய்

செவ்வாழை பொத்தி எனிறாய்
தவழ்ந்திடுமி மழலை கான
தத்திடுமி முற்றமி வந்தாய்
தமிழ் மணமி காக்கவெனிறு

அறிவியல் நகரமி ஒனிறு
சந்ததி புகவெனிறு
பல்கலை கழகமி ஒனிறு

தடைகளை உடைக்கவைத்தாய்
தனினிரைவை ஏற்றிவைத்தாய்
செந்தனல் வளர்த்து வைத்தாய்
சேனைக்கு தமிழ் பெயரைவைத்தாய்

திட்டங்கள் நிறைவேற்ற
திட்டபணியகம் எனிறு ஒனிறு
சட்டங்கள் உருவாக்க
சட்டவாக்கமி எனிறு ஒனிறு

தனிமானமி காக்க வைத்தாய்
தமிழ் மானமி புகீக வைத்தாய்
தனி ஈழமி மீட்க வைத்தாய்
விடுதலைக்கே நீ வாழ்ந்தாய்

தேசத்தினி தந்தையானாய்
தேசியத்தினி சொத்தானாய்
இறைமையினி பிளளையானாய்
இனத்திற்கு ஈழத்தினி

தேசியத்தலைவனானாய்
நீதியை நிலைநாட்டிவைத்தாய்
நிமிரிநீதே வாழவைத்தாய்
சட்டத்தை சிறக்கவைத்தாய்

சத்தியமி உணரவைத்தாய்
நெறிமுறை ஒழுகவைத்தாய்
நினமதி உணரவைத்தாய்
பணிபுடனி பழகவைத்தாய்

பசுமையாய் வாழவைத்தாய்
புதுவாழ்வை அனுபவிக்க
புனரவாழ்வு கழக ஒனிறு
வந்தோரை வரவேற்க

நந்தவன புங்கா ஒனிறு
புல்லுருவி புகுந்திடாமல்
புலனாய்வு துறை ஒனிறு

பல்துறையுமி வீழ்ந்திடாமல்
பலனி ஆய்வுப்பிரிவொனிறு
பொறுப்பினில் தவற மாட்டாய்
புனனகை மறைக்க மாட்டாய்
சிறத்துடனி பணிகள் செய்தாய்

சிந்தையை மகிழவைப்பாய்
போரினில் வெற்றி பெற்றாய்
பொங்கு தமிழ் பரிசாம் பெற்றாய்
பரினில் புகழப்பட்டாய்

பந்தா காட்டமாட்டாய்
மழலைகள் புங்கா எனிறாய்
மல்லிகை தோட்டமி எனிறாய்
கனிகளாய் காக்குமி எனிறாய்

காந்தரூபனி அறிவுச்சோலை எனிறாய்
முனனோரை காக்கவெனிறாய்
கணணாலே பார்க்கவெனிறாய்
பெற்ற கடனி தீர்க்கவெனிறாய்

அனிபுச்சோலை அரவணைத்தாய்

மனநலமி குனிறியோருக்குமி
மதியுடனி வெற்றிமனை
மானுடமி வாழுமி எனிறு

மனிதநேயமி உணரவைத்தாய்
மனிதனாம் மதிதது வாழ
சமவுடமை பொருளாதாரமி
மானிபுகள் செளிதோங்க

தமிழனி மரபுகள் ஆதாரமி
மரபு உரிமை மதிதது வாழ
வரலாற்று துறையுமி மொனிறு

செமமணி புதைகுழிகள்
இல்லாத ஈழத்திரு
நாடு தேவையெனிறாய்
நடு இராத்திரியில் நந்தவன

தெரு வெளியில் பெணிகள் நடையில
நல்லதொரு நாடு ஈழமி எனிபாய்
தமிழ் ஈழத்தினி சுதந்திரமி அது
வெனிறாய்
மனிறுகள் திறந்துவைத்தாய்

மகிமையை சொல்லிவைத்தாய்
மரத்தினை நட்டுவைத்தாய்
சிரத்துடனி நீரி ஊற்றவைத்தாய்
மருத்துவத்துறை ஒனிறு

மனநலத்துறை ஒனிறு
மனித உரிமை சபை ஒனிறு
மகபேற்று பிரிவொனிறு
மக்களினி மனதை தொட்டாய்

மானிபுகழ் பலவுமி பெற்றாய்
ஆளுமை அசைவைபெற்றாய்
அழமையில்லா நட்காலமி தொட்டாய்
வரிப்புலியை வழவமைத்தாய்

வரலாற்றில் இடம் பிடித்தாய்
கருமபுலி உருவகித்தாய்
கந்தகத்தில் அடக்கி வைத்தாய்
வைப்பகமி ஆரமபித்தாய்

வைப்புகள் தொடங்கிவைத்தாய்
வறுமையை ஒழித்துவைத்தாய்
வரலாற்றை படைத்துவைத்தாய்
வெற்றிக்கொடி ஏற்றி வைத்தாய்

விடுதலை தீ முட்டிவைத்தாய்
புலிக்கொடி பறக்கவிட்டாய்
புதிய சரிதமி எழுதிவிட்டாய்
விடியமுனி இரவில் மங்கை

வீதியில் நடக்க வைத்தாய்
அணிகலனி அணிய வைத்தாய்
புலியாட்சியை சிறக்கவைத்தாய்
வெற்றியை எட்டி தொட்டாய்

விடியலை கையில் தொட்டாய்
ஈழ வேரினை ஆழவிட்டாய்
விளமபரமி தேட மாட்டாய்
ஆதிக்கமி இல்லாத

அரசியல் துறை வளர்த்தாய்
விணணுக்கு ஒரு துறை
எனிறாய் விடியல்
மணணுக்கு துறை எனிறாய்

நீ வயதாகி போகமாட்டாய்
வரலாற்றில் தூங்க மாட்டாய்
விழியை மூடமாட்டாய்
விடியலை மறக்கமாட்டாய்

வீரமி இழக்கமாட்டாய்
வித்துடல்கள் மறக்கமாட்டாய்
சொத்துக்கள் விரும்ப மாட்டாய்
சுகபோகமி அனுபவிக்கமாட்டாய்

சோரமி போகமாட்டாய்
சொல்லி செய்யமாட்டாய்
பதியமி பார்க்க மாட்டாய்
பால் சோரை தேடமாட்டாய்

நீ செத்து போகமாட்டாய்
வித்துக்கள் மறக்கமாட்டாய்
மாவீரர் சொத்துக்கள் இழக்க மாட்டாய்
பந்தாடுமவினைத்திறனாய்

படைத்துறை பல வளர்த்தாய்
இரானுவ சமநிலையாய்
வரலாறு நீ படைத்தாய்
தமிழ் இனத்தின் குறியிடாய்

என்றைக்கும் நீ இருப்பாய்
தமிழ் இன விடுதலைக்கே
உன் தவமி நாமி பெற்றோமி

தேசத்தினி தந்தையே
தேசத்தினி தலைவனே
உமக்கே எனி வணக்கமி
கவிஞர் ஈழத்து சுந்தர்.





பிரபாகரன் காலம் தந்த கொடை அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை

ஒரு தலைவன் வரவுக்காய் காத்திருந்தோம் எங்கள் தலைவன் பிறந்தான் எங்கள் பகைவன் ஓடி பறந்தான். மண்ணை மறவா என் தலைவன் அவன் எங்கள் மண்ணில் வேறான்றி நின்ற பனை அன்னை மண் பறிக்கும் மாற்றார் எதிரில் அவன் அனலை பொழிகின்ற ஏவுகணை பிரபாகரன் காலம் தந்த கொடை அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை

நெஞ்சை நெருப்பாகி நிமிர்ந்த தமிழீழ நிலத்தை உருவாக்கி காட்டியவன் பிஞ்சு மழலைக்கும் பகைவர் நஞ்சுடல் விளக்கும் தமிழ்வீரம் ஊட்டியவன் பிரபாகரன் காலம் தந்த கொடை அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை வாழத் துடித்த தமிழ் இனந்தின் வசை நீர்த்து வரலாறு படைத்த வழிகாட்டி ஈழத்தமிழ் மண்ணின் தலைவன் அவன் எங்கள் இனத்தை கரை சேர்த்த படகோட்டி

பிரபாகரன் காலம் தந்த கொடை அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை மான தமிழ் மாந்தர் மறவர் வரலாற்றில் வான்படை கண்ட முதல் தமிழன் தானை தலைவன் உலகெங்கும் வாழ்தமிழர் தாகம் தீர்க்க வந்த தனி தலைவன் பிரபாகரன் காலம் தந்த கொடை அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை,....

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தமிழனாய் நீங்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தோம் என்று பெருமைக் கொள்கிறோம்

PARITHI SINNATHAMBY

Sales Representative



HOMELIFE HIGHER STANDARDS

Higher Standard Agents... Higher Results!

REALTOR® MLS® MULTIPLE LISTING SERVICE®

416-904-7444

pari.sinnathamby@gmail.com

HomeLife Landmark Realty Inc., Brokerage (Independently Owned and Operated)
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4
Tel: 905-305-1600 Fax: 905-305-1609







மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி

NON-MEDICAL INSURANCE

நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!

Foresters

INDUSTRIAL ALLIANCE

• Life Insurance
• Critical Illness • RESP
• Disability • RRSP
• Mortgage Protection Insuran
• Travel Insurance (Super Visa)

Assumption Li

ARUN KULASINGAM

FINANCIAL ADVISOR

416-357-2847

KABIS



Preparation of Income Taxes T1 and T2 with E/File

Location : Unit 9- 40 Winges Road Woodbridge, ON. L4L 6B2

Pearl Fortune Canada
Head Office: 101 Laird Drive, Markham, Ontario. L3S 3N6
Office Number 905-554-5606 | Fax Number 905-554-3236

Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993





பிரபாகரன் என்பது எங்கள் மந்திரச்சொல்

பிரபாகரன் என்பது
வெறும் இரத்தமும் சதையும்
கொண்டு உயிர் சுமந்து
வாழும் ஒரு உடம்பல்ல ?
ஒரு துப்பாக்கி குண்டில்
அழிந்து போவதற்கு..!
அது எங்கள்
மந்திரச்சொல்
எத்தனை துரோகங்களையும்
எரித்து சாம்பலாக்கி விடும்
பெரும்நெருப்பு..! ?
மீண்டும் எங்களை
எழுந்து நிற்க வைக்கும்
உத்வேகம்..!
அஞ்ஞாதவாசமோ
அஞ்சுமனமோ
எதுவானாலும்
பேசாமல் வழி
நடத்துபவன்... ?
தியாகத்தின் ஒளிவடிவம்
உண்மையின் ஊற்று
போராட்டத்தின் தொடக்கம்
தமிழீழத்தின் முகவரி
தமிழரின் தாகம் இவன் அன்றோ!!! ?
எங்கள் மனங்களுக்குள்
மட்டும் அல்ல துரோகிகளே
சற்று உண்மையுடன்
உற்றுப் பாருங்கள்
உங்கள் மனங்களுக்குள்ளும்
பெரும் தலைவனின்
சிரித்த முகம்... !!!!!!

நன்றி...
கவியரசி பாமினி அக்கா

எங்கள் தேசிய தலைவன் அண்ணன்
மேதகு வே. பிரபாகரன் ஒருவனே. !!

விடியும் எங்கள் வழம்...
முடியும் எங்கள் துயரம்...

தமிழரின்தாகம் தமிழீழ தாயகம்

Pearl Signs INC.
DESIGN - PRINT - BUILD
EST 1990
190 Silver Star Blvd #15-16 Scarborough-Ont
www.pearlsigns.ca / www.pearlsign.com
Office 416 615 0428
Nava 416 562 7115
Siva 416 587 6921



பிரபாகரன் காலம் தந்த கொடை அவன்
பிறந்தான் பிறந்தது புலிகள் படை

ஒரு தலைவன் வரவுக்காய் காத்திருந்தோம்
எங்கள் தலைவன் பிறந்தான்
எங்கள் பகைவன் ஓடி பறந்தான்.
மண்ணை மறவா என் தலைவன் அவன் எங்கள்
மண்ணில் வேறூன்றி நின்று பனை அன்னை
மண் பறிக்கும் மாற்றார் எதிரில் அவன் அனலை
பொழிகின்ற ஏவுகணை பிரபாகரன் காலம் தந்த
கொடை அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை
நெஞ்சை நெருப்பாகி நிமிர்ந்த தமிழீழ நிலத்தை உருவாக்கி
காட்டியவன் பிஞ்சு மழலைக்கும் பகைவர்
நஞ்சுடல் விளக்கும் தமிழ்வீரம் ஊட்டியவன் பிரபாகரன்
காலம் தந்த கொடை அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை
வாழத் துடித்த தமிழ் இனத்தின் வசை
தீர்த்து வரலாறு படைத்த வழிகாட்டி
எழுத்தமிழ் மண்ணின் தலைவன் அவன்
எங்கள் இனத்தை கரை சேர்த்த படகோட்டி
பிரபாகரன் காலம் தந்த கொடை அவன் பிறந்தான்
பிறந்தது புலிகள் படை
மான தமிழ் மாந்தர் மறவர்
வரலாற்றில் வான்படை கண்ட முதல் தமிழின் தானை
தலைவன் உலகெங்கும் வாழ் தமிழர் தாகம்
தீர்க்க வந்த தனி தலைவன் பிரபாகரன்
காலம் தந்த கொடை அவன்
பிறந்தான் பிறந்தது புலிகள்
படை ....





எங்கள் தலைவன் பிரபாகரன் அந்த முருகனுக்கே அவன் நிகரானவன்...

எங்கள் தலைவன் பிரபாகரன் அந்த
முருகனுக்கே அவன் நிகரானவன் கடல்
விழுங்கும் முன்பே நிலம்
விழுங்க வந்த பகை முழத்து புகழ்
படை த்த மகுறொளியாற்றின் பண்பலை
அடக்கத்தில் வாழ்ந்த
நம்பாட்டன் அந்த முருகனுக்கே அவன்
நிகரானவன் முருகனுக்கே அவன்
நிகரானவன்
வேல் எடுத்தான் அவன் வேல்
எடுத்தான் வேல் எடுத்தான் அவன்
வேல் எடுத்தான் வேல் எடுத்தே
அவன் பகை முழத்தான் தமிழ் பகை
முழத்தான் பழம் தமிழ் பகை முழத்தான்
துவக் எடுத்தான் இவன்
துவக் எடுத்தான் துவக் எடுத்தான்
இவன் துவக் எடுத்தான் துவக் எடுத்தே
இவன் துவக்கி வைத்தான் படை
துவக்கி வைத்தான் புலிப்படை துவக்கி
வைத்தான்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அடிமை
யின் அடிமைக்கும் அடிமைகளாக
வாழ்ந்தவர் வேதனை
முழக்க வந்தான் நம் தமிழி ன
எழுச்சியை முடுக்க வந்தான் மேடையில்
பேச ஏறியதில்லை தேர்தல்
சீற்றிலும் இறங்கியதில்லை தாயை
அதிகம் பார்த்தவன் இல்லை தாயை
அதிகம் பார்த்தவன் இல்லை
தமி ழ்தாய் நெடுநாள் எதிர்பார்த்த
பிள்ளை தமிழ்தாய் நெடுநாள்
எதிர்பார்த்த பிள்ளை
எங்கள் தலைவன் பிரபாகரன் அந்த
முருகனுக்கே அவன் நிகரானவன்



Platinum
CAR & TRUCK RENTAL
Economy to luxury rent a car
Find the rental you want for
the time you need!

RESERVE NOW
Sathees Prasad Operations Manager
416-828-7081 | 416 613-1811 platinumcar.ca 1-880 Ellesmere Rd, Toronto, ON M1P 2W6, CA



தமிழினத்தின் தலைவனை தேடும் தமிழ்மகனின் தவிப்பு...

எல்லாள மன்னவனே
எங்கள் குலசூரியனே-நீ
இல்லாத சோகம் எம்மை
வாட்டுதய்யா-தாய்
இல்லாத குழந்தை
தனியாத் தவிக்குதய்யா
முல்லையில் நீ இருந்த
முப்படையும் நீ வளர்த்த
அத்தனையும் உன்புகழ்
சொல்லுதய்யா...
அழகா உன்சிரிப்பு
அடிக்கடி வந்து கொல்லுதய்யா

காத்தோட உன்வாசம்
காடெல்லாம் உன் பாசம்
ஊத்தாட்டம் உன் நினைப்பு
ஊறுதய்யா
ஊரெங்கும் உனைக்காண ஏங்குதய்யா
உத்தமரே ஊரைகாக்க வாருமய்யா.

கடல்தாண்டி போனாயோ
கடலாகிப்போனாயோ
தலைவா நீ திரும்பி வரனும்
தமிழர் நாட்டுக்கு.

மறைந்து நீ வாழ்ந்தாலும்
மண்ணோடு போனாலும்
தலைவா நீ பெருமை
உலகத்தமிழுக்கு

தலமை ஒன்று இல்லாம
சரிஞ்சது எங்கட ஆட்சி
நீயே எங்க ராசா
வா வா களத்துக்கு

தாய்மண்ணை காக்கும்
கடவுள் நீயய்யா
தாங்காம நீயும் போனா
தப்பய்யா...

காட்டுக்குள் வாழ்ந்தாலும்
களத்தில வீழ்ந்தாலும்
கம்பீரம் குறைஞ்சிடாத
நெருப்பு நீ

அய்யோன்னு போனாலும்
ஆகாசம் போனாலும்
தண்ணீரை குளத்தில்
சேர்க்கும் வரப்பு நீ.

உரிமை கேட்கிற ஆள
உதைச்சு தள்ளிற ஊர
கைய கால வெட்டிவீசும்
கரிகாலன் நீ

காடையர் உன்னை கண்டா
ஓடாரோ....
காப்பாத்தும் தெய்வம்
வந்து சேராயோ.....

தஃயாளன்ஃருகவிஞர் யுகபாரதியின்
சில வரிகளும்

POOKADAI FLORIST
Celebrate life's moments with the beauty and grace of Indian flowers
POOKADAI FLORIST
Fresh cut flowers,Flower Arrangements,Hair Floral,
Pooja Items,Wedding Florals,Ocassions,Funeral flowers
CALL NOW Scarborough:416-821-9494 / Ajax : 905-239-2191
3341 MARKHAM ROAD UNIT 101, TORONTO, ON M1X 0A5
570 WESTNEY RD SOUTH UNIT 2, AJAX, ON L1S 6V6
பூக்கடை FLORIST POOKADAI
www.pookadai.com



ராஜ கோபுரம் எங்கள் தலைவன் பார் எங்கும்
புகழ்கின்ற எங்கள் தலைவன் தடை நீக்கி வழிகாட்டும்
தலைவன் வந்த பகை வென்று முடி கொண்ட தலைவன்

ராஜ கோபுரம் எங்கள் தலைவன் பார்
எங்கும் புகழ்கி ன்ற எங்கள் தலைவன்
காலமெல்லாம் கை தந்த ஒளிவீச்சு கரிகாலன் தமிழரின்
உயிர்மூச்சு காலமெல்லாம் கை தந்த
ஒளிவீச்சு கரிகாலன் தமிழரின் உயிர்மூச்சு
ராஜ கோபுரம் எங்கள் தலைவன் பார்
எங்கும் புகழ்கின்ற எங்கள் தலைவன்

கண்ணெனத் தமிழரை காக்கும் காவலனே
கன்னித் தமிழுக்கு வாய்த்த கதிரவனே கண்ணெனத்

தமிழரை காக்கும் காவலனே கன்னித்
தமிழுக்கு வாய்த்த கதிரவனே
கோடை காலத்தில் குளிர்விக்கும் நிலவே ... கொட்டும் மழை
நாளில் குடையான அழகே
கோடை காலத்தில் குளிர்விக்கும் நிலவே ... கொட்டும் மழை
நாளில் குடையான அழகே
ராஜ கோபுரம் எங்கள் தலைவன் பார் எங்கும் புகழ்கின்ற

எங்கள் தலைவன் தடை நீக்கி வழிகாட்டும்
தலைவன் வந்த பகை வென்று முடிகொண்ட தலைவன் ....
ராஜ கோபுரம் எங்கள் தலைவன் பார்
எங்கும் புகழ்கி ன்ற எங்கள் தலைவன்
ராஜ கோபுரம் எங்கள்
தலைவன் பார் எங்கும் புகழ்கின்ற எங்கள் தலைவன்
குளிரான இளங்காலை என நினைத்தவனே நெருப்பாகி பகை
எரித்தவனே குளிரான இளங்காலை
என நினைத்தவனே நெருப்பாகி பகை எரித்தவனே ஓயாது
உழைத்திடும் அலையாகும் கடலே
தமிழீழம் தனை நோக்கி விரைகின்ற படகே ஓயாது
உழைத்திடும் அலையாகும் கடலே தமிழீழம்
தனை நோக்கி விரைகின்ற படகே

ராஜ கோபுரம் எங்கள் தலைவன் பார் எங்கும் புகழ்கின்ற
எங்கள் தலைவன் தடை நீக்கி வழிகாட்டும்
தலைவன் வந்த பகை வென்று முடிகொண்ட தலைவன் ....

ராஜ கோபுரம் எங்கள் தலைவன் பார் எங்கும் புகழ்கின்ற
எங்கள் தலைவன் ராஜ கோபுரம் எங்கள்
தலைவன் பார் எங்கும் புகழ்கின்ற எங்கள் தலைவன்

POORANI VILAAS
Take-out Restaurant & Catering
Delicious, Quality and Healthy
சுவை மிக்க தமிழீழ, தென்னிந்திய மற்றும் சீன உணவு வகைகள்
சகல விதமான வைபவங்களுக்கும் ஏற்ப சுவையான, சுத்தமான, தரம்மிக்க, சைவ, அசைவ உணவு வகைகளை குறிப்பிட்ட நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்!!!
416.335.7775 / 647.822.4972
6055 Steeles Ave E, Unit 104 (Markham & Steeles) Toronto, ON. M1X 0A7



தமிழினத்தின் தலைவனை தேடும் தமிழ்மகனின் தவிப்பு...

எல்லாள மன்னவனே
எங்கள் குலசூரியனே-நீ
இல்லாத சோகம் எம்மை
வாட்டுதய்யா-தாய்
இல்லாத குழந்தை
தனியாத் தவிக்குதய்யா
முல்லையில் நீ இருந்த
முப்படையும் நீ வளர்த்த
அத்தனையும் உன்புகழ்
சொல்லுதய்யா...
அழகா உன்சிரிப்பு
அடிக்கடி வந்து கொல்லுதய்யா

காத்தோட உன்வாசம்
காடெல்லாம் உன் பாசம்
ஊத்தாட்டம் உன் நினைப்பு
ஊறுதய்யா
ஊரெங்கும் உனைக்காண ஏங்குதய்யா
உத்தமரே ஊரைகாக்க வாருமய்யா.

கடல்தாண்டி போனாயோ
கடலாகிப்போனாயோ
தலைவா நீ திரும்பி வரனும்
தமிழர் நாட்டுக்கு.

மறைந்து நீ வாழ்ந்தாலும்
மண்ணோடு போனாலும்
தலைவா நீ பெருமை
உலகத்தமிழுக்கு

தலமை ஒன்று இல்லாம
சரிஞ்சது எங்கட ஆட்சி
நீயே எங்க ராசா
வா வா களத்துக்கு

தாய்மண்ணை காக்கும்
கடவுள் நீயய்யா
தாங்காம நீயும் போனா
தப்பய்யா...

காட்டுக்குள் வாழ்ந்தாலும்
களத்தில வீழ்ந்தாலும்
கம்பீரம் குறைஞ்சிடாத
நெருப்பு நீ

அய்யோன்னு போனாலும்
ஆகாசம் போனாலும்
தண்ணீரை குளத்தில்
சேர்க்கும் வரப்பு நீ.

உரிமை கேட்கிற ஆள
உதைச்சு தள்ளிற ஊர
கைய கால வெட்டிவீசும்
கரிகாலன் நீ

காடையர் உன்னை கண்டா
ஓடாரோ....
காப்பாத்தும் தெய்வம்
வந்து சேராயோ.....

த.யாளன்ருகவிஞர் யுகபாரதியின்
சில வரிகளும்





துடிக்கும் இதய ஓசைகளில் அந்த பெயரே ஒலித்தன...
அது பிரபாகரன் என்னும் திருநாமம்...
பூக்கள் எல்லாம் தாமாய் சேர்ந்து மாலைகள் ஆகின..
புழுதி படிந்த மண்ணில் மழையோ பன்னீர் தூவின...
தூக்க விழிகளும் ,மையை விலக்கி துணிவினை
பெற்றன...
துடிக்கும் ,தய ஓசைகளில் அந்த பெயரே ஒலித்தன...
அது பிரபாகரன் என்னும் திருநாமம்...

பிரபாகரன்தான் தமிழ்மானம்...
,து பிரபாகரனின் உயிர்காலம்....
,தயங்கள் யாவும் பூ தூவும்...

தமிழர் நிமிர்ந்த நாள்
அது
தலைவன் பிறந்தந-
ாள்...
இதயமனைத்திலும்
மன
துணிவு பிறந்தநாள்...
அகவை 69 காணும்
எங்கள் அன்னையே
எங்கள் அப்பாவே
எங்கள் ஆசானே
எங்கள் ஆண்மையே
எங்கள் வீரமே
எங்கள் வெற்றியே
எங்கள் ஈகமே
எங்கள் உறுதியே
எங்கள் இலட்சியமே
எங்கள் விடிவே

எங்கள் ஆளுமையே
எங்கள் அறிவே
எங்கள் ஆற்றலே
எங்கள் கருணையே
எங்கள் கடமையே
எங்கள் வாழ்க்கையே
எங்கள் ஊக்கமே
எங்கள் நம்பிக்கையே
எங்கள் செயல்திறனே
எங்கள் ஆருயிரே
எங்கள் தலைமையே

எங்கள் சீரிய சிந்தனையே
எங்கள் வழிகாட்டியே
எங்கள் துயர் நீக்கியே
எங்கள் விழுப்புண்ணே
எங்கள் வீரத்தழும்பே
எங்கள் அரணே
எங்கள் பாதுகாப்பே
எங்கள் கலாங்கரை விளக்கே
எங்கள் வழிகாட்டியே
எங்கள் வரலாறே
எங்கள் காரிருள் கிழித்த கைவிளக்கே
எங்கள் தீர்க்க தரிசனமே
எங்கள் விடுதலையே

உனை வாழ்த்துவதில் நிறைவடைகின்றேன்...
உனையன்றி எமக்கு ஏதுமில்லை இலக்கு...
உன் புகழ்பாடாது எதுக்கு
எனக்கு நாக்கு...
நீயின்றி விடியாது எமக்கு கிழக்கு...

தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்
பிரபாசெழியன்.

Quality EXPRESS
Quality Express
SRILANKAN ,INDIAN CUISINE
TAKEOUT & CATERING
வாங்கோ சாப்பிடலாம்...
#75 Williamson Dr. #07 Ajax,Ont,L1T 4Y4 | 905-427-8263



உலகத் தமிழினத்தின் உன்னதத் தலைவனுக்கு எனது இதயம் நிறைந்த

இனிய பிறந்தநாள் நல் வாழ்த்து.....,

அன்னை தமிழுக்காய் அவதாரம் எடுத்தவரே
முன்னைத் தமிழ் மன்னர் வீரம் முழுவதையும் உள்வாங்கி
கன்னித் தமிழ் மண்ணின் மானத்தைக் காக்க வந்த
மன்னவனே வாழிய நீ இந்த வையகம்தான் உள்ள மட்டும்
விண்ணைத் தொடும் வீரம் வியக்க வைத்தது உலகையையா
எண்ணத்தில் தூய்மையுடன் எடுத்து நின்ற இலட்சியத்தில்
மண்ணிலே தமிழரது மகிமை தனைப் புலப்படுத்தி
வண்ணத் தமிழினத்தின் வரலாற்றை விளக்கியதே
உலகத் தமிழினத்தின் உன்னதத் தலைவன் நீ
விலையற்ற உன் மகிமை விளங்காதோர் எவரும் இல்லை.


நான் எப்பொழுதும் உங்களோடு தான்
·BUY · SELL · RENT
REALTOR MLS RE/MAX Realtron Realty Inc., Brokerage
Raj Peampalam
Broker
Dir : 416-897-9155
Off : 416-221-0999




2008

தமிழீழ தேசிய மாவீரர் நாள் உரை...!

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
நவம்பர் 27, 2008 .
எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே

இன்று மாவீரர் நாள்.

தமிழீழத் தாய்நாட்டின் விடிவிற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.

ஆண்டாண்டு காலமாக அந்நிய ஆதிக்கப் பிடிக்குள் அடங்கிக்கிடந்த எமது தேசத்தை, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாத அடங்கா மண்ணாக மாற்றிவிட்ட எமது வீரமறவர்களைப் பூசித்து வணங்கும் திருநாள்.

எமது தேசம் விடுதலை பெற்று, எமது மக்கள் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற சத்திய இலட்சியத்திற்காக மடிந்த எமது மான வீரர்களை எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசிய நாள்.

எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காகத் தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.

இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக, கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது. எமது இனச் சரித்திரம் நிலைபெற்ற இந்த மண்ணை ஆழமாகக் காதலித்து, இந்த மண்ணிற்காகவே மடிந்து, இந்த மண்ணின் மடியிலேயே எமது மாவீரர்கள் படுத்துறங்குகிறார்கள். அவர்கள் பள்ளி கொள்ளும் இந்த மண் எமக்கேயுரித்தான மண். எமக்கே சொந்தமான மண். இந்த வரலாற்று மண்ணை ஆக்கிரமித்து, அடக்கியாள சிங்களம் திமிர்கொண்டு நிற்கிறது தீராத ஆசை கொண்டு நிற்கிறது.

மனித துயரங்களெல்லாம் அடங்காத, அருவருப்பான ஆசைகளிலிருந்தே பிறப்பெடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையிலிருந்தே தோற்றம் கொள்கின்றன. ஆசையின் பிடியிலிருந்து மீட்சி பெறாதவரை சோகத்தின் சுமையிலிருந்தும் விடுபட முடியாது. மண் ஆசை பிடித்து, சிங்களம் அழிவு நோக்கிய இராணுவப் பாதையிலே இறங்கியிருக்கிறது. உலகத்தையே திரட்டி வந்து எம்மோடு மோதுகிறது. இராணுவ வெற்றி பற்றிய கனவுலகில் வாழ்கிறது. சிங்களத்தின் இந்தக் கனவுகள் நிச்சயம் கலையும். எமது மாவீரர் கண்ட கனவு ஒருநாள் நனவாகும். இது திண்ணம்.

எனது அன்பான மக்களே!

என்றுமில்லாதவாறு இன்று தமிழீழத் தேசம் ஒரு பெரும் போரை எதிர்கொண்டு நிற்கிறது. இப்போர் வன்னி மாநிலமெங்கும் முனைப்புப்பெற்று உக்கிரமடைந்து வருகிறது.

சிங்கள அரசு இராணுவத்தீர்வில் நம்பிக்கைகொண்டு நிற்பதால், இங்கு இப்போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து விரிவாக்கம் கண்டு வருகிறது. தமிழரின் தேசிய வாழ்வையும் வளத்தையும் அழித்து, தமிழர் தேசத்தையே சிங்கள இராணுவ இறையாட்சியின் கீழ் அடிமைப்படுத்துவதுதான் சிங்கள அரசின் அடிப்படையான நோக்கம். இந்த நோக்கத்தைச் செயற்படுத்தி விடும் எண்ணத்தில், தனது போர்த்திட்டத்தை முழுமுனைப்போடு முன்னெடுத்து வருகிறது. தனது முழுப் படை பலத்தையும் ஆயுத பலத்தையும் ஒன்றுதிரட்டி, தனது முழுத் தேசிய வளத்தையும் ஒன்றுகுவித்து, சிங்கள தேசம் எமது மண் மீது ஒரு பாரிய படையெடுப்பை நிகழ்த்தி வருகிறது. சிங்கள இனவாத அரசு ஏவிவிட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து, எமது விடுதலை வீரர்கள் வீராவேசத்தோடு போராடி வருகின்றனர். உலகின் பல்வேறு நாடுகளும் தமிழ் இன அழிப்புப் போருக்கு முண்டுகொடுத்து நிற்க, நாம் தனித்து நின்று, எமது மக்களின் தார்மீகப் பலத்தில் நின்று, எமது மக்களின் விடிவிற்காகப் போராடி வருகிறோம்.

இன்று எமது விடுதலை இயக்கம் மிகவும் கடினமான, நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளை நாம் இந்த வரலாற்று ஓட்டத்திலே எதிர்கொண்டிருக்கிறோம். எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளையெல்லாம் நாம் எதிர்கொண்டிருக்கிறோம். வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளோடு நேரடியாக மோதியிருக்கிறோம். அலையலையாக எழுந்த எதிரியின் ஆக்கிரமிப்புக்களை எல்லாம் நேருக்கு நேர் நின்று சந்தித்திருக்கிறோம். பெருத்த நம்பிக்கைத் துரோகங்கள், பெரும் நாசச் செயல்கள் என எமக்கு எதிராகப் பின்னப்பட்ட எண்ணற்ற சதிவலைப் பின்னல்களை எல்லாம் தனித்து நின்று தகர்த்திருக்கிறோம். புயலாக எழுந்த இத்தனை பேராபத்துக்களையும் மலையாக நின்று எதிர்கொண்டோம். இவற்றோடு ஒப்புநோக்குகையில், இன்றைய சவால்கள் எவையும் எமக்குப் புதியவையும் அல்ல, பெரியவையும் அல்ல. இந்தச் சவால்களை நாம் எமது மக்களின் ஒன்றுதிரண்ட பலத்துடன் எதிர்கொண்டு வெல்வோம்.

சிங்கள தேசம் ஆக்கிரமித்து அடிமை கொள்ளத் துடிக்கும் இந்த மண் அதற்கு என்றுமே சொந்தமானதன்று. இந்த மண் எமக்குச் சொந்தமான மண் பழந்தமிழர் நாகரீகம் நீடித்து நிலைபெற்ற மண் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே எமது மூதாதையர் வாழ்ந்து வளர்ந்த மண். இந்த மண்ணிலேதான் எமது ஆதிமன்னர்கள் இராச்சியங்களும் இராசதானிகளும் அமைத்து அரசாண்டார்கள். எமது இன வேர் ஆழவேரோடியுள்ள இந்த மண்ணிலே, நாம் நிம்மதியாக, கௌரவமாக, அந்நியரின் அதிகார ஆதிக்கமோ தலையீடுகளோ இன்றி, எமது வாழ்வை நாமே அமைத்து வாழ விரும்புகிறோம். ஆங்கிலேய காலனியாதிக்கம் அகன்று, சிங்கள ஆதிக்கம் எம்மண் மீது கவிந்த நாள் முதல், நாம் எமது நீதியான உரிமைகளுக்காக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடி வருகிறோம்.

சுயநிர்ணய உரிமைக்கான எமது இந்த அரசியல் போராட்டம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துச்செல்கிறது. இந்த நீண்ட படிநிலை வரலாற்றில், வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வடிவங்களாக எமது போராட்டம்

Raman Home Comfort Inc.
Raman Chellaiah
416-332-2989 / 416-332-4967
6055 Steeles Ave. E. Unit C105
Totonto, ON., M1X 0A7
www.ramanhomecomfort.com
admin@ramanhomecomfort.com



வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டு வந்திருக்கிறது. ஆரம்பத்தில் அமைதியாக, மென்முறை வடிவில், ஜனநாயக வழியில் அமைதி வழிப்போராட்டங்கள் வாயிலாக எமது மக்கள் நீதிகேட்டுப் போராடினார்கள். அரசியல் உரிமை கோரி, தமிழ் மக்கள் தொடுத்த சாத்வீகப் போராட்டங்களைச் சிங்கள இனவாத அரசு ஆயுத வன்முறை வாயிலாக மிருகத்தனமாக ஒடுக்க முனைந்தது. அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து, அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்தபோதுதான், வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயக்கம் பிறப்பெடுத்தது. சிங்கள இனவாத அரசின் ஆயுதப் பயங்கரவாதத்திலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கவே நாம் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஆயுத வன்முறை வழியை நாம் விரும்பித் தேர்வு செய்யவில்லை. வரலாறுதான் எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது.

தவிர்க்கமுடியாத தேவையின் நிர்ப்பந்தமாக ஆயுதப் போராட்டத்தை வரித்துக்கொண்ட போதும், நாம் எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குப் போரை நிறுத்தி, அமைதி வழியில் தீர்வுகாணவே விரும்புகிறோம். இதற்கு எமது விடுதலை இயக்கம் என்றுமே தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு என்றுமே எதிரானவர்கள் அல்லர். அதேநேரம், நாம் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்றத் தயங்கியதும் இல்லை. சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க, திம்புவில் தொடங்கி, ஜெனீவா வரை பல்வேறு வரலாற்றுச் சூழல்களில் பேச்சுக்களில் பங்குபற்றி வந்திருக்கிறோம். எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நாம் முழுமனதுடனும் நேர்மையுடனும் செயற்பட்ட போதும் பேச்சுக்கள் எல்லாம் தோல்வியிலேயே முடிந்தன. சிங்கள அரசுகளின் விட்டுக்கொடாத கடும்போக்கும், நாணயமற்ற அரசியல் அணுகுமுறைகளும் இராணுவ வழித் தீர்விலான நம்பிக்கைகளுமே இந்தத் தோல்விகளுக்குக் காரணம்.

பிரமிப்பூட்டும் போரியற் சாதனைகளைப் படைத்து, சிங்கள ஆயுதப் படைகளின் முதுகெலும்பை முறித்து, படைவலுச் சமநிலையை எமக்குச் சாதகமாகத் திருப்பியபோதும், நாம் நோர்வேயின் அனுசரணையிலான அமைதிப் பேச்சுக்களிற் கலந்துகொண்டோம். போருக்கு முடிவுகட்டி, ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்த அமைதிப் பேச்சுக்களில் நேர்மையுடனும் பற்றுறுதியுடனும் பங்குகொண்டோம். ஆயுதப் படைகளின் அத்துமீறிய செயல்களையும் ஆத்திரமூட்டும் சம்பவங்களையும் பொறுத்துக்கொண்டு, அமைதி பேணினோம். இத்தனையையும் நாம் செய்தது, சிங்கள இனவாத அரசு எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று நீதி செய்யும் என்ற நம்பிக்கையினால் அன்று. சிங்கள அரசின் சமாதான முகமூடியைத் தோலுரித்துக்காட்டி, சமாதானத்தில் எமக்குள்ள பற்றுறுதியை உலகத்திற்கு வெளிப்படுத்தவே நாம் பேச்சுக்களில் கலந்துகொண்டோம்.

உலக அரங்கில் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் அரங்கேற்றப்பட்ட இந்த அமைதிப் பேச்சுக்கள், தமிழ் மக்களின் அன்றாட அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளையோ ,னப்பிரச்சினையின் மூலாதாரப் பிரச்சினைகளையோ தீர்ப்பவையாக அமையவில்லை. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, தமிழர் தேசத்தையும் அனைத்துலக சமூகத்தையும் ஏமாற்றுவதற்கே சிறிலங்கா அரசு இப்பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தியது. பேச்சு என்ற போர்வையில், சிங்கள அரசு தமிழர் தேசம் மீது ஒரு பெரும் படையெடுப்பிற்கான ஆயத்தங்களைச் செய்தது. போர் ஓய்வையும் சமாதானச் சூழலையும் பயன்படுத்தி, தனது நலிந்து போன பொருளாதாரத்தை மீளக்கட்டி, தனது சிதைந்துபோன இராணுவப் பூதத்தை மீளவும் தட்டியெழுப்பியது. பெருந்தொகையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தி, ஆயுதங்களைத் தருவித்து, படையணிகளைப் பலப்படுத்தி, போர் ஒத்திகைகளைச் செய்தது. தமிழர் தேசம் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்க, சிங்கள தேசம் போர்த் தயாரிப்பு வேலைகளிலேயே தன்னை முழுமையாக அர்ப்பணித்தது.

இதேநேரம், சமாதான முயற்சிகளின் காவலர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திய உலக நாடுகளில் ஒரு பகுதியினர் அவசரப்பட்டு அதிரடி நடவடிக்கையில் இறங்கியமை, சமாதான முயற்சிகளுக்கே ஊறுவிளைவிப்பதாக அமைந்தது. எமது சுதந்திர இயக்கத்தை இந்நாடுகள் ஒரு பயங்கரவாதக் குழுவாகச் சிறுமைப்படுத்திச் சித்திரித்து, தடை செய்யப்பட்ட இயக்கங்களின் வரிசையில் பட்டியலிட்டு, எம்மை வேண்டத்தகாதோராக, தீண்டத்தகாதோராக ஒதுக்கி ஓரங்கட்டி, புலம்பெயர்ந்து வாழும் எம்மக்கள் மீது வரம்பு மீறிய வரையறைகளை விதித்து, கட்டுப்பாடுகளைப் போட்டு, எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக அவர்கள் முன்னெடுத்த அரசியற் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகள் போட்டன. தாம் வாழும் நாடுகளின் அரசியல் சட்டவிதிகளுக்கு அமைவாக, நீதிநெறி வழுவாது எம்மக்கள் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளைக் கொச்சைப்படுத்தி சிங்கள அரசின் இன அழிப்புக்கு ஆளாகி, மனிதப் பேரவலத்திற்கு முகம் கொடுத்து நின்ற தமது தாயக உறவுகளைக் காக்க எமது மக்கள் முன்னெடுத்த மனிதநேய உதவிப் பணிகளைப் பெரும் குற்றவியற் செயல்களாக அடையாளப்படுத்தி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழின உணர்வாளர்களையும் கைது செய்து, சிறைகளிலே அடைத்து, அவமதித்தன. இந்நாடுகளின் ஒரு பக்கச்சார்பான இந்த நடவடிக்கைகள் பேச்சுக்களில் நாம் வகித்த சமநிலை உறவையும் சமபங்காளி என்ற தகைமையையும் வெகுவாகப் பாதித்தன. இது சிங்கள தேசத்தின் இனவாதப்போக்கை மேலும் தூண்டிவிட்டது. சிங்கள இனவாத சக்திகள் உசாரடைந்து, எமக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தின. இது சிங்கள தேசத்தை மேலும் இராணுவப் பாதையிலே தள்ளிவிட்டது.

சிங்கள தேசம் சமாதானக் கதவுகளை இறுகச் சாத்திவிட்டுத் தமிழர் தேசத்தின் மீது போர் தொடுத்தது. அனைத்துலகத்தின் அனுசரணையோடு கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தது. அப்போது சமாதானம் பேசிய உலக நாடுகள் ஒப்புக்குத்தானும் இதனைக் கண்டிக்கவில்லை கவலை கூடத் தெரிவிக்கவில்லை. மாறாக, சில உலகநாடுகள் சிங்கள தேசத்திற்கு அழிவாயுதங்களை அள்ளிக்கொடுத்து, இராணுவப் பயிற்சிகளையும் இராணுவ ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றன. இதனால்தான் சிங்கள அரசு தமிழருக்கு எதிரான இன அழிப்புப் போரைத் துணிவுடனும் திமிருடனும் ஈவிரக்கமின்றியும் தொடர்ந்து வருகிறது.

இன்று சிங்கள தேசம் என்றுமில்லாதவாறு இராணுவ பலத்திலும் இராணுவ அணுகுமுறையிலும் இராணுவ வழித் தீர்விலும் நம்பிக்கைகொண்டு செயற்படுகிறது. தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி, ஆயுத அடக்குமுறையின் கீழ் தமிழர்களை ஆட்சிபுரிய வேண்டும் என்ற அதன் ஆசை அதிகரித்திருக்கிறது. இதனால் போர் தீவிரம் பெற்று, விரிவுபெற்று நிற்கிறது. இந்தப் போர் உண்மையில் சிங்கள அரசு கூறுவது போல, புலிகளுக்கு எதிரான போர் அன்று. இது தமிழருக்கு எதிரான போர் தமிழ் இனத்திற்கு எதிரான போர் தமிழின அழிப்பை இலக்காகக் கொண்ட போர் மொத்தத்தில் இது ஓர் இன அழிப்புப் போர்.

இந்தப் போர் எமது மக்களைத்தான் பெரிதும் பாதித்திருக்கிறது. போரின் கொடூரத்தை மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, மக்கள் மீது தாங்கொணாத் துன்பப்பளுவைச் சுமத்தி, மக்களைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகத் திருப்பிவிடலாம் என்ற நப்பாசையிற் சிங்கள அரசு செயற்பட்டு வருகிறது. பாதைகளை மூடி, உணவையும் மருந்தையும் தடுத்து, எமது மக்களை இறுக்கமான இராணுவ முற்றுகைக்குள் வைத்துக்கொண்டு, கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும் எறிகணை வீச்சுக்களையும் நடாத்தி வருகிறது. சொந்த நிலத்தை இழந்து, அந்த நிலத்தில் அமைந்த வாழ்வை இழந்து, அகதிகளாக அலையும் அவலம் எம்மக்களுக்குச் சம்பவித்திருக்கிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரை சதா துன்பச்சிலுவையைச் சுமக்கின்ற மக்களாக எம்மக்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். நோயும் பிணியும் உடல்நலிந்த முதுமையும் சாவுமாக எம்மக்களது வாழ்வு சோகத்தில் தோய்ந்து கிடக்கிறது. எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு எமது எதிரியான சிங்கள அரசு இன்று எம்மக்கள் மீது எண்ணற்ற கொடுமைகளைப் புரிந்து வருகிறது. பெரும் அநீதிகளை இழைத்து வருகிறது. உலகில் எங்குமே நிகழாத கொடூரமான அடக்குமுறைகளைப் பிரயோகிக்கிறது. எமது தேசத்தின் மீது ஒரு பெரும் பொருண்மியப்போரை தொடுத்து, எம்மக்களின் பொருளாதார வாழ்வைச் சிதைத்து அவர்களது நாளாந்த சீவியத்தைச் சீர்குலைக்கின்ற செயலிலே இறங்கியிருக்கிறது. சிறிலங்கா படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழீழ நிலப்பரப்பில் மாதந்தோறும் நூற்றுக்கணக்கானோர் காணாமல் போகின்றனர் கொல்லப்படுகின்றனர். சிங்களப் பகுதிகளில் தமிழர் காணாமல் போவதும் கொல்லப்படுவதும் வழமையான நிகழ்ச்சியாகி விட்டது.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமிழர் பகுதிகளிலே ஒரு மறைமுகமான இன அழிப்புக் கொள்கை இன்று வேகமாகச் செயற்படுத்தப்படுகிறது. சாவும் அழிவும் இராணுவ அட்டூழியங்களும் சொந்த மண்ணிலேயே சிறைப்பட்ட வாழ்வுமாக


Homelife Galaxy REAL ESTATE LTD
210- Corporate Dr., Toronto ON. M1H 3G5
Brokerage Independently owned and operate
Ranjan Francis Xavier
Sales Reprensentative
Dir: 416.816.1220
Off: 416.284.5555
Fax: 416.284.5727
francisranjan@hotmail.com


எம்மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் துயரம் மிகக்கொடியது. கைதுகளும் சிறை வைப்புக்களும் சித்திரவதைகளும் பாலியல் வல்லுறவுகளும் கொலைகளும் காணாமல் போதல்களும் புதைகுழிகளுக்குள் புதைக்கப்படுவதுமாக ஒரு நச்சு வட்டத்திற்குள் எமது மக்களது வாழ்வு சுழல்கிறது. இருந்தபோதும், எமது மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. சுதந்திர தாகம் கொண்டு, எழுச்சி கொண்ட எம்மக்களை எந்தத் தடைகளாலும் எதுவும் செய்துவிடமுடியாது. ஆகாயத்திலிருந்து வீழும் குண்டுகளாலும் அவர்களது விடுதலை வேட்கையை அழித்துவிட முடியாது. எம்மக்கள் துன்பச்சிலுவையைச் சதா சுமந்து பழகியவர்கள். அழிவுகளையும் இழப்புக்களையும் நித்தம் சந்தித்து வாழ்பவர்கள். இதனால் அவர்களது இலட்சிய உறுதி மேலும் உரமாகியிருக்கிறது. விடுதலைக்கான வேகம் மேலும் வீச்சாகியிருக்கிறது.

பெரும் போருக்கு முகம் கொடுத்தவாறு, நாம் இத்தனை காலமாக இத்தனை தியாகங்களைப் புரிந்து போராடி வருவது எமது மக்களின் சுதந்திரமான, கௌரவமான, நிம்மதியான வாழ்விற்கே அன்றி வேறெதற்காகவும் அன்று. உலகத் தமிழினத்தின் ஒட்டுமொத்தப் பேராதரவோடு நாம் இந்தப் போராட்டத்தை நடாத்தி வருகிறோம். அதுமட்டுமன்று, எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அவற்றின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை. எமது மக்களது ஆழமான அபிலாசைகளும் எந்தவொரு தேசத்தினதும் எந்த மக்களினதும் தேசிய நலன்களுக்குப் பங்கமாக அமையவில்லை. அத்தோடு இந்த நீண்ட போராட்ட வரலாற்றில், நாம் திட்டமிட்டு எந்தவொரு தேசத்திற்கு எதிராகவும் நடந்துகொண்டதுமில்லை.

எமது விடுதலை இயக்கமும் சரி எமது மக்களும் சரி என்றுமே உலக நாடுகளுடனும் எமது அண்டை நாடான இந்தியாவுடனும் நட்புறவை வளர்த்துச் செயற்படவே விரும்புகிறோம். இதற்கான புறநிலைகளை உருவாக்கி, நட்புறவுப் பாலத்தை வளர்த்துவிடவே சித்தமாக இருக்கிறோம். எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி, காத்திரமான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்குக் காத்து நிற்கிறோம். எம்மை தடைசெய்துள்ள நாடுகள், எமது மக்களது அபிலாசைகளையும் ஆழமான விருப்பங்களையும் புரிந்துகொண்டு, எம்மீதான தடையை நீக்கி, எமது நீதியான போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டுமென அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

இன்று இந்திய தேசத்திலே பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அங்கு அடங்கிக்கிடந்த எமது போராட்ட ஆதரவுக்குரல்கள் இன்று மீளவும் ஓங்கி ஒலிக்கின்றன. எமது போராட்டத்தை ஏற்றுக்கொள்கின்ற ஏதுநிலைகள் வெளிப்படுகின்றன. கனிந்து வருகின்ற இந்தக் கால மாற்றத்திகேற்ப, இந்தியப் பேரரசுடனான அறுந்துபோன எமது உறவுகளை நாம் மீளவும் புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறோம். அன்று, இந்தியா கைக்கொண்ட நிலைப்பாடுகளும் அணுகுமுறைகளும் தலையீடுகளும் ஈழத்தமிழருக்கும் அவர்களது போராட்டத்திற்கும் பாதகமாக அமைந்தன. இனவாத சிங்கள அரசு தனது கபட நாடகங்களால் எமது விடுதலை இயக்கத்திற்கும் முன்னைய இந்திய ஆட்சிப்பீடத்திற்கும் ,டையே பகைமையை வளர்த்து விட்டது. இந்தப் பகைப்புலத்தில் எழுந்த முரண்பாடுகள் மேலும் முற்றிப் பெரும் போராக வெடித்தது. இதன் ஒட்டுமொத்த விளைவாக எமது மக்கள் பெரும் அழிவுகளைச் சந்திக்க நேர்ந்தது.

நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக நின்ற காரணத்தினால்தான் எமது இயக்கத்திற்கும் இந்திய அரசிற்கும் பிணக்கு ஏற்பட்டது. எனினும், இந்தியாவை நாம் ஒருபோதும் பகை சக்தியாகக் கருதியதில்லை. இந்தியாவை எமது நட்புச் சக்தியாகவே எமது மக்கள் என்றும் கருதுகிறார்கள். எமது தேசியப் பிரச்சினை விடயத்தில் இந்தியப் பேரரசு ஒரு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கும் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள்.

காலமும் கடல் கடந்த தூரமும் எம்மைப் பிரிந்து நிற்கின்ற போதும், எமது மக்களின் இதயத்துடிப்பை நன்கறிந்து, தமிழகம் இந்தவேளையிலே எமக்காக எழுச்சிகொண்டு நிற்பது தமிழீழ மக்கள் அனைவருக்கும் எமது விடுதலை இயக்கத்திற்கும் பெருத்த ஆறுதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது. எம்மக்களுக்காக ஆதரவுக் குரல் எழுப்பி, அன்புக்கரம் நீட்டும் தமிழக மக்களுக்கும் தமிழகத் தலைவர்களுக்கும் இந்தியக் தலைவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே எமது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதேநேரம், எமது தமிழீழத் தனியரசுப் போராட்டத்திற்கு ஆதரவாக வலுவாகக் குரலெழுப்புவதோடு, இந்தியாவிற்கும் எமது இயக்கத்திற்கும் இடையிலான நல்லுறவிற்குப் பெரும் இடைஞ்சலாக எழுந்து நிற்கும் எம்மீதான தடையை நீக்குவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

எனது அன்பான மக்களே!

சிங்கள அரசியல் உலகத்தில் பெரும் மாற்றங்களோ திருப்பங்களோ நிகழ்ந்து விடவில்லை. அங்கு அரசியல், போராகப் பேய் வடிவம் எடுத்து நிற்கிறது. அன்பையும் அறத்தையும் போதித்த புத்த பகவானைப் போற்றி வழிபடும் அந்தத் தேசத்திலே இனக்குரோதமும் போர் வெறியும் தலைவிரித்தாடுகின்றன. அங்கு போர்ப் பேரிகைகளைத்தான் எம்மால் கேட்க முடிகிறது. போரை கைவிட்டு, அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்குமாறு அங்கு எவரும் குரல் கொடுக்கவில்லை. சிங்களத்தின் அரசியல்வாதிகளிலிருந்து ஆன்மீகவாதிகள் வரை, பத்திரிகையாளர்களிருந்து பாமர மக்கள் வரை போருக்கே குரல் கொடுக்கிறார்கள்.

தமிழர் தேசம் போரை விரும்பவில்லை. வன்முறையை விரும்பவில்லை. அகிம்சை வழியில் அமைதி வழியில் நீதி வேண்டி நின்ற எம் மக்களிடம் சிங்கள தேசம்தான் போரைத் திணித்திருக்கிறது. எமது பிராந்தியத்தைச் சேர்ந்த சார்க் நாட்டுத் தலைவர்கள் கொழும்பிலே கூடியபோது, எமது தேசத்தின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி நாம் அறிவித்த பகைமைத் தவிர்ப்பையும் ஏற்க மறுத்து, அதனை ஏளனம் செய்து போரைத் தொடர்ந்து நிற்பதும் சிங்கள தேசம்தான். ஏற்றுக்கொள்ளவே முடியாத அவமதிப்பூட்டும் நிபந்தனைகளை விதித்துப் போரைத் தொடர்வதும் சிங்கள தேசம்தான்.

சிங்கள தேசம் ஒரு பெரும் இன அழிப்புப் போரை எமது மண்ணிலே நிகழ்த்தி வருகிறது. இந்த உண்மையை மூடிமறைத்து, உலகத்தைக் கண்கட்டி ஏமாற்ற சிங்கள அரசுகள் காலங்காலமாகப் பல்வேறு அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன. வட்டமேசை மாநாட்டில் தொடங்கி, இன்று அனைத்து கட்சிக் கூட்டம் என இந்த ஏமாற்று நாடகத்தின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. கடந்து சென்ற இந்த நீண்ட கால ஓட்டத்தில், சிங்கள அரசுகள் உலகத்தை ஏமாற்றியதைத் தவிர, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு உருப்படியான எந்தவொரு தீர்வினையும் முன்வைக்கவில்லை. மாறாக, சிங்கள தேசம் தனது படைக்கல சக்தியால் தமிழர் நிலங்களைப் பற்றியெரிய வைத்திருக்கிறது. தமிழரது அமைதியைக் கெடுத்து, அவர்களது நிலத்தில் அமைந்த வாழ்வை அழித்து, அவர்களை அகதிகளாக அலைய வைத்திருக்கிறது. தமிழரின் மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்க மறுத்து, தமிழர் தேசத்தை இரண்டாகப் பிளந்து, அங்கு தமிழர் விரோத ஆயுதக்குழுக்களை ஆட்சியில் அமர்த்தி, இராணுவப் பேயாட்சி நடாத்துகிறது. புலிகளைத் தோற்கடித்த பின்னர்தான் தமது தீர்வுத்திட்டத்தை அறிவிப்போம் எனக்கூறிக்கொண்டு, போரை நடாத்துகிறது. தமிழர்களைக் கொடுமைப்படுத்திக் கொன்றொழித்த பின்னர், சிங்களம் யாருக்கு தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் உண்மையான பிரதிநிதிகளை, அவர்களது பேரம் பேசும் சக்தியை அழித்துவிட்டு, எப்படிச் சிங்களம் தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் வரலாற்றுச் சொத்தான தாயக நிலத்தையே ஏற்க மறுக்கும் சிங்களம், எப்படி எமது மக்களுக்கு ஒரு நீதியான தீர்வை முன்வைக்கப்போகிறது?



தமிழரின் தேசியப் பிரச்சினை விடயத்தில், சிங்களம் அடக்குமுறை என்ற ஒரே பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறது. இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு, சிங்களம் நீதி வழங்கும் என எமது மக்கள் வைத்திருந்த சிறிய நம்பிக்கையும் இன்று அடியோடு அழிந்துவிட்டது. சிங்கள தேசத்திலே கடந்த அறுபது ஆண்டுகளாக நிகழாத அரசியல் மாற்றம் இனிவரும் காலங்களில் நிகழ்ந்துவிடப் போவதுமில்லை, அப்படி நம்பி ஏமாறுவதற்கு எமது மக்களும் தயாராக இல்லை.

பூமிப்பந்திலே ஈழத்தமிழினம் ஒரு சிறிய தேசமாக இருக்கின்றபோதும் நாம் பெரும் வலிமை வாய்ந்த ஒரு சக்திமிக்க இனம். தன்னிகரற்ற ஒரு தனித்துவமான இனம். தனித்துவமான மொழியையும் பண்பாட்டு வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு பெருமைமிக்க இனம். இப்படியான எமது அருமை பெருமைகளையெல்லாம் அழித்து, தமிழீழ தேசத்திலே தமிழரின் இறையாண்மையைத் தகர்த்துவிட்டு, இராணுவப் பலத்தாற் சிங்களம் தனது இறையாண்மையை திணித்துவிடத் துடிக்கிறது. தமிழரின் சுதந்திர இயக்கம் என்ற வகையில், நாம் எமது மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பிற்கோ சிங்கள ஆதிக்கத்திற்கோ என்றுமே இடமளிக்கப்போவதில்லை.

எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவிற்காகத் தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில், காலம் இட்ட கட்டளைப்படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

இந்த வரலாற்றுச் சூழமைவில், தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மையே அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர்கள் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோமென உறுதியெடுத்துக்கொள்வோமாக.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.



THINKING OF BUYING or SELLING YOUR PROPERTIES

Rave P Raventhiran

Realtor
Dir: 416-567-2462
realtor.rave@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc.,
Brokerage Independently Owned & Operated
7 Eastvale Dr., Suite 205 Markham, ON, L3S 4N8
Bus: 905-201-9977 | Fax: 905-201-9229

இனத்தின் முகவரி எங்கள் அண்ணன்...!



என்ன தந்தார் எங்கள் அண்ணண்
என்று ஒருவன் கேட்பானா..?
கேட்பவன் உண்மையிலே
தமிழனாக இருப்பானா..
என்ன தந்தார் என்ன தந்தார்
எங்கள் அண்ணண் என்ன தந்தார்
எது எது எங்களுக்கு தேவையோ
அதுகளையே அண்ணண் தந்தார்

ஏழை பணக்காரன்
இல்லாத தேசம் தந்தார்
எதிரியிடம் இருந்து
எமைக் காவல்காத்து நின்றார்

பெருமைமிகு பெண்களுக்கு
உரிமை தந்தார்
பெண்ணடிமை
தகர்த்து பெருவெற்றி தந்தார்

பிரிவினையை போக்கி தந்தார்
பிறப்பில் பேதம் நீக்கித்தந்தார்
கருகிப்போன ஈழத்தை
களனிவயல் ஆக்கித்தந்தார்

அச்சவுணர்வு அகற்றி தந்தார்
அடிமை வாழ்வை விலக்கி தந்தார்
பிச்சையற்றோர் நாடு தந்தார்
பெருங்கடல் வணிகம் தந்தார்

இச்சை இழிசெயல் அற்ற
இளைஞர்களை
உருவாக்கி தந்தார்
பச்சைவயல் விவசாயம்
பசுமைக்காடு பெருக்கித்தந்தார்

உண்மையான ஆட்சி தந்தார்
உரிமைகளை மீட்டு தந்தார்
தமிழன் என்ற உணர்வுகளை
தரணியெங்கும் தழைக்க செய்தார்

முப்படை தந்தார்-தமிழன்
முதற்குடி என்ற திமிர் தந்தார்
எப்படையையும் எதிர்க்கும்
எமக்கொரு படை தந்தார்

தமிழ்குடிக்கோர் தனிக்கொடி தந்தார்
தனிநாடு அமைத்து தனியரசு தந்தார்
லஞ்ச ஊழலற்ற பஞ்சம் பட்டினியற்ற
நிர்வாகம் தந்தார்.

சமநீதி தந்தார் சாதி சமயமற்ற
மனுநீதி தந்தார்
சண்டை சச்சரவற்ற
சாராய போதையற்ற
சமூதாயம் தந்தார்.

களங்கமில்லாத
கல்வி தந்தார்
கண்ணீர் இல்லா
வாழ்க்கை தந்தார்
இழந்த நிலங்கள்
மீளத்தந்தார்
இயற்கையை
நண்பணாக்கித் தந்தார்

தன் உழைப்பை தந்தார்
தன் உதிரம் தந்தார்
தன் உறவுகளை தந்தார்
தனக்காக வாழாது தன்னையே
தமிழர்க்காய் தமிழுக்காய் தந்தார்.

என்ன தந்தார் எங்கள் அண்ணண்
என்று ஒருவன் கேட்பானா
கேட்பவன் உண்மையிலே
தாய்த்தமிழனாக இருப்பானா..?

த.யாளன்

KEV Tax Services
FREE EFILE SERVICE
STARTING FROM $ 24.99
CORPORATE INCOME TAX
BOOKKEEPING & ACCOUNTING SERVICES
PERSONAL INCOME TAXES
QUALITY SERVICE WITH REASONABLE FEE
FREE YEAR- ROUND CUSTOMER SERVICE
CORPORATE AND SOLE PROPRIETOR BUSINESS REGISTRATION
அழையுங்கள்:
Ganthiy Selvarajah (B.A Sri Lanka)
2889 Lawrence Avenue, East (Basment) M1P 2S8 (Brimely/Lawrence)
Tel: 416-841-1866 | Fax: 1888.841.8829
Email: ganthiy@rogers.com
website: KEVTAX.com

உலகை புரட்டிப் போட்ட ஓர் தமிழ் ஆளுமை



ஈழத்து பெருவெளியில் மட்டும் அல்ல உலகத்து சம வெளியில் எல்லாம் உரைக்கின்ற தமிழ்ப் பெயரே பிரபாகரன்...

எங்கிருந்து வந்த வல்லமை
எதிலிருந்து பெற்ற ஆளுமை
எப்படி வளர்ந்து கொண்ட போர்க்குணம்

உலகை புரட்டிப் போட்ட ஓர் தமிழ் ஆளுமை
ஈழ வரலாற்று மாற்றத்துக்கான ஓர் போராற்றல்
காலத்தை கடந்தும் களம் கண்ட கரிகாலப் பெருவீரன்
சிகரம் தொட்டுச் சிரித்த சீறுபுலிச் செழுமறவன்

சினந்தெழுந்து பகை வென்ற சேனைப்படை வீரன்
செந்தமிழின் சினம்கொள் செஞ்சுவர்த் தூண்
அஞ்சுதல் தனை மறந்த ஆயிரத்துப் பெருங்காளை
கெஞ்சுதல் அகற்றி வென்ற பேரீழப் புலியூரான்

ஆற்றல் மிகுதி கொண்ட வேழத்திறல் வேந்தன்
கனவுக்கு உயிர் தந்த காவியத்து தமிழோவியம்
நினைவுக்குள் நிமிர்கின்ற நித்தியத்து பெருவீரம்

பெண்மைக்கு களம் கொடுத்த பேராற்றல் தாய்ப் புலியே
ஆண்மைக்கு அழகுந்தன் களம் கொண்ட சிறு வயதே
காவியத்தில் எழுதாத பாட்டுடைப் புலி வேந்தா
ஓவியத்தில் தீட்டாத ஒற்றுமையின் விழி நெருப்பே

அழித்தாலும் அழியாது வேரூன்றும் பெரு மரமே
ஒழித்தாலும் ஒழியாத ஓர்மத்தின் தீப் பிளம்பே
சிதைத்தாலும் சிதையாத செந்தமிழின் ஒளி நெருப்பே
எரித்தாலும் ஏரியாத எரிதணலின் பெரும் பொறியே.

கந்தகம் கட்டி நின்ற காவலுக்கு
களம் தந்த கரிகாலனே.
வெந்த எம் மனம் வந்து குளிர் தந்த ஒளிநிலவே.
செந்தணல் மண் வந்து விலங்கொடித்த செழு மறவா
எந்தமிழ் மொழி கொண்டு எனையாளும் செந்தமிழா...

வாழ்க நீ நூறாண்டு
இனிய அகவை நாள் வாழ்த்துக்கள் அண்ணா...


TO BUY AND SELL! வீடு வாங்க, விற்க அழையுங்கள்
RAVI THARMALINGAM
(Sale Representative)
DIR: 416-319-7507
HOMELIFE HIGHER STANDARDS
HOME LIF GALAXY REAL ESTATE LTD
#301 - 111 GRANGEWAY, TORONTOP,NO,M1H3E9
Office:416-284-5555, Fax: 416 -284 - 5727



தாய் நிகர் தலைமைக்கு அகவை வாழ்த்து
மரணம் கலைத்து மண்ணில் ஜனனம்
பல கொண்டவன்
உறக்கம் தொலைத்து விண்ணில்
உயரம் பல கண்டவன்

ஓட வழி சொன்னவன்
கூட்டின் கதவுடைத்து கிளியை
வானம் உலவ செய்தோன்
காற்றில் உலவி நின்ற தமிழ்
மானம் காத்து நின்றோன்.

ஆழப் பெரும் கடலில்
வாழக் குறி சொன்னவன்
வீழாத் தமிழ் வீரத்தை
தோளில் வெல்ல சுமக்கின்றவன்

ஆற்றல் உடைய அண்ணன்-அவன்
தோற்றம் பிறந்த நாளில்
சீற்றம் மிககொண்டு பகைக்கு
கூற்றம் ஆகி நிற்க வாழ்த்துவோம்
பல்லாண்டு...

பாடும் பறவைக்கு எல்லாம்
பறக்கும் நிலை தந்தவன்
ஓடும் நதிக்கு எல்லாம்

கவிப்புயல் சரண்





ஐம்பூதங்களின் சக்தியானவன் எம் தலைவன்□!
வறண்ட நிலம் மீது மழைதூவிய
வான்முகிலுக்குப் பல்லாண்டு
நாதியற்ற இனத்தை காத்து நின்ற
காப்பரணுக்கு அகவை அறுபத்தாறு
தமிழ் இனம் மீது இருள் சூழ்ந்த வேளை
ஒளிதூவிய வெளிச்சத்துக்கு
அகவை அறுபத்துஆறு
பகை ஏவிய குண்டுகள்
எம் உயிர்துளைத்த வேளை
நெஞ்சத்துக் கவசமாய் நின்று காத்தவனே
நீ வாழ்க! பல்லாண்டு வாழ்க!

துயர் வடிந்த இனமாய்
நீர் வற்ற நதிப்படுக்கையாய்
விளைச்சல் இல்லா நிலமாய்
நெடுங்காலமாய் உறக்கத்தில் கிடந்தோம்
தட்டியெழுப்ப எவருமின்றி
தவித்து தனித்துப்போய் நின்றோம்

ஐயனே!
இளங்காற்றின் பூந்தென்றலாய்
தழுவினாய் எம்மை
உயிர்த்தெழுந்த எம் கரங்களில்
வாள் தந்து
பெரும் புயலாக வீச வைத்தாய்
காலாற உன் நிழலில் நின்று
கவலைகள் மறந்திருந்தோம்
இன்று மறுபடியும்
எம்மை தவிக்க விட்டு
எங்கு சென்றாய்

உன்னைக் கொண்டாட
தடைபோடும்
அவர்களுக்கு என்ன தெரியும்
எங்கள் தேவன் நீ என்று
ஐம்பூதங்களின் சக்தியானவன்
நீ என்று

நீண்ட நெடுங்காலமாய்
கிடப்பில் கிடந்த வரலாறு
உன் வருகைக்குப் பின்னரே
தலைநிமிர்ந்தது
எவனும் எம் இனத்தை மிதித்து
எது வேண்டுமானாலும் செய்யலாம்
என்ற நிலையை மாற்றிய பெருமை
நின்னதே தலைவா!

நீ பெற்ற வெற்றிகள் அனைத்தையும்
இனத்தின் கையில் தந்துவிட்டு
வெறுங்கையான வெளிச்சம் நீ
எங்கள் விடுதலைப் போரின்
தெளிந்த தலைப்பயணியே
இன்று உனக்கல்ல அகவை
அறுபத்துஆறு
தமிழர் எமக்கே !
தமிழர் விடுலைப்போருக்கு
பல்லாண்டு !
வாழ்க! வாழ்க!
தலைவா நீ வாழ்க!

கவியாக்கம் : நாகதேவன் தமிழீழம்.
நாம் தமிழர் கட்சி.



நீங்கள் வீடு வாங்க அல்லது விற்க

Roshan Ramachandran
Sales Representative
Dir: 905.730.5555 | Off: 905.455.5100
Fax: 905.455.5110

HOMELIFE HIGHER STANDARDS
MIRACLE REALTY LTD

நம்பிக்கை
நேர்மை
திறமை



காலத்தை வென்ற காவியத் தலைவன்

காலம் பல விடுதலைப் போராட்டத் தலைவர்களை கண்டுள்ளது. சீனக்குடியரசின் தலைவர் மாசேதுங், வியட்நாம் விடுதலை வீரன் ஹோ சிமின், கியூபா புரட்சியாளன் பிறடல் காஸ்ரோ போன்றவர்கள் வரிசையில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனும் இடம் பெற்று விட்டார். ஓ எமது தேசியத் தலைவர் பிரபாகரன் ஓர் அவதாரம், ஒரு இலட்சியத்திற்காக அவரித்துள்ளார். எனவே அவர் இலட்சியம் நிறைவேறும் வரைக்கும் அவரை எவராலும் அசைக்கவே முடியாது. இன்று தேசியத்தலைவரைப் பற்றிய நூல்கள் பல வந்து கொண்டு இருக்கின்றன. இந்த நூல்கள் எல்லாம் தேசியத் தலைவரின் ஆளுமைகள் பற்றி வியந்து போற்றுகின்றன. ஈழத்தமிழினம் கடந்த 75 ஆண்டுகளாகப் பல தலைவர்களைக் கண்டுள்ளது சேர் பொன் இராமநாதன், தந்தை செல்வா போன்றவர்களிலும் பார்க்க, தலைவர் பிரபாகரன் தேசியத் தலைவர் என்று அந்தஸ்தைப் பெற்றிருந்தார்.உலகத் தலைவர்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் தேசியத் தலைவர் என்று பிரபாகரனை அழைத்து வருகின்றார்கள். ஈழத்தமிழரின் இதயத் துடிப்பாம், உலகத் தமிழரின் உயிர்த்துடிப்பாம் எங்கள் தலைவரின் அடியொற்றி வாழ்ந்து அவர் இலட்சியத்தை வென்றெடுப்போம், என உறுதி பூண்டு உழைப்போமாக!!!

ஆக்கம்- பாலா மாஸ்டர் ஐக்கிய இராச்சியம்





எங்கள் தலைவன் பிரபாகரன் அந்த முருகனுக்கே அவன் நிகரானவன்!



முருகன் அழித்த ஆறு பகைவர்கள் ஆணவம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சர்யம்.

எங்கள் தலைவன் பிரபாகரன்
துருப்பிடித்த ஒரு கைத் துப்பாக்கியோடு புலிகள் அமைப்பை தொடங்கிய
பிரபாகரன் ஏவுகணை தாங்கிய தரைப்படையோடு எதிரி கப்பல்களை மூழ்கடிக்கும் கடற்படையோடு குண்டுகள் சுமந்த வான் படையோடு சிங்கள இனவெறியனை அடித்து, இந்திய அமைதிப்படை என்ற அரக்கனை அடித்து
தமிழர் பகை வென்றவன்.

முருகப்பெருமானின் வலப்புறம் ஆறு கரங்களில் அபாயகரம், கோழிக்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், என்ற ஆறு ஆயுதங்களும், இடப்புறம் உள்ள ஆறு
கரங்களில் வரமளிக்கும் கை, தாமரை, மணி, தண்டாயுதம் வில்
போன்றவையும் இருக்கும்.

எங்கள் தலைவன் பிரபாகரன் கையில் துவக்கு, கரும்புலிகள், வீரம்,விடுதலை உணர்வு, ஈகம், துரோகத்திற்கு மரணமே சரியான தண்டனை என்ற விதி, பிறகு பெண்களின் கைகளில் ஆயுதம் தந்து
பெண் அடிமை விலங்கை நொறுக்கியது, சாதியத்தின் எச்சசெங்களை எரித்து சாம்பலாக்கியது, செஞ்சோலை, மலர்சோலை காப்பகம், தந்த தலைவன்.

முத்தமிழாழ் வைத்தாரையும்
வாழவைப்பான் முருகன் என்று அருட்கவி அருணகிரி பாடியுள்ளார்.

நாயாக இருந்த தமிழனை புலியாக மாற்றியவன் என்று புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன், வாலி போன்ற கவிஞர்கள்
எழுதியுள்ளனர்.

முருகனின் கையில் உள்ள வேல் இறைவனின் ஞானசக்தி எனப் பெயர் பெறும்.

கழுத்தில் நஞ்சு கட்டிய புலிகளை பிரபாகரன் களத்தில் இறக்கினான். சாவையே ஆயுதமாக்கி களம் கண்ட விடுதலைப் புலிகளின் போர் திறன் பெயர் பெற்றது.

முருகனுக்கு விசாகன் என்றும் ஒரு பெயர் உண்டு.

பிரபாகரனுக்கு கதிரவன், கரிகாலன், கதிர்கேயன், தம்பி, என்றும் பெயர்கள் உண்டு.

முருகனுக்கு உகந்த மலர் முல்லை.

பிரபாகரன் உகந்தமலர் செங்காந்தமலர்

முருக வழிபாடு ஷண்மதம் என்று சொல்லப்படுகின்றது

பிரபாகரன் வழிபாடு தமிழ் தேசியம்

முருகனின் மூலமந்திரம் ஓம் சரவணபவாய நம என்பதாகும்.

பிரபாகரனின் மூலமந்திரம் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.

தமிழ் கடவுள் முருகன் என்றால், தமிழினத்தின் கடவுள் பிரபாகரனே!



"எந்நிதியும் தருவான் செல்வா சந்நிதி முருகன்"

ஸ்ரீ செல்வா சந்நிதி முருகன்

ஆலயம் திறந்திருக்கும் நேரம் காலை 9:00 மணி முதல் மாலை 6:00 மணிவரை
வெள்ளிக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும்
காலை 7:00 மணி முதல் மாலை9:00 மணிவரை

தொடர்புகளுக்கு பிரதமர் பூசகர்கள்
பொன் புவனேந்திரன் ஐயா சு. ஞானசேகரம் ஐயா
3-1085 Bellamy Rd N, Scarborough, ON M1 H 3C7 Tel: 416-297-8716 Cell: 416-731-8453



அண்ணன் வாழ்க என்று கொட்டு முரசே

பிறந்தநாள் எங்கள்
ஈழ சூரியன் பிறந்தநாள்
முப்படை கண்டவேந்தனின்
பிறந்தநாள்
எங்கள் தலைவன் பிறந்தநாள்
பார்போற்றும் அண்ணனின்
பிறந்தநாள்
தலைவன் வாழ்க என்று
கொட்டு முரசே
எட்டுத்திக்கும் அவன் புகழ் பாடு
முரசே

உன் பிறந்த நாளுக்காய்.
ஈழத்தாய் காத்திருந்தாள்
பார்வதத் தாய் வயிற்றில் வந்த
செங்கதிர் ஞாயிறே வாழ்க நீ
வேலுப்பிள்ளை பெயர் சொல்ல
ஒரு புலிப்பிள்ளை வந்துதித்தாய்
ஈழத்தாய் தத்தேடுத்தால்
உன்னை
தலை மகனாய் சுவீகரித்தால்
அண்ணன் வாழ்க என்று
கொட்டுமுரசே

வே.பிரபாகரன் பிறந்தநாளில்
தமிழர் நாம் தலை நிமிர்ந்தோம்
வீறு கொண்டு நாம் எழுந்து
வேங்கையாக களம் புகுவோம்
பகைகளைக் கொள்ள புலிகள்
பிறக்கும்
புலிகளே மீண்டும் நாட்டை
ஆளும்
அண்ணன் வாழ்க என்று
கொட்டு முரசே
எட்டுதிக்கும் அவன் புகழ் பாடு
முரசே ...
அவன் இல்லை என்று எவன்
சொன்னான்
கடவுளும் தலைவனும் ஒன்றே
இல்லை என்போர்க்கு இல்லை
உண்டு என்போர்க்கு உண்டு

இளம்புயல் சி சதீஷ் நாம்
தமிழர் கட்சி திருப்பத்தூர் கிழக்கு
ஒன்றிய இளைஞர் பாசறை
செயலாளர்







அவனது பெயரில் வீரமிருக்கிறது..
பெயர் சொன்னாலே
கர்வம் கொள்கிறது..
பெண் முகத்தில் கூட
மீசை முளைக்கிறது..

அன்பும் கூட
அவனோடு ஒட்டியிருந்தது
அவனது புன்னகை போல..

அவனோடு தான்
நாங்கள் இருந்தோம்
எம் தேசத்தில்...
காவலோடும் கண்ணியத்தோடும்..

இன்று
யாரோ ஆள்வதாய்
எம் ஒற்றைப் பருக்கை
உணவைக் கூட அவர்களே
பிச்சையிடுவதாய் சொல்கிறார்கள்..

அதிகாரங்களும் ஆயுதங்களும்
நம்மை ஆள்கிறது..
விகாரைகளும் அரசமரங்களும்
பெருகுகிறது..

போர் தின்று துப்பிய
எச்சங்களாய் நாம்
காக்கைக் கூட்டம் போல
அவர்கள்....

இருந்தும்
கனவுகள் சுமக்கின்றோம்
எங்களிடம் மிச்சமிருக்கும்
சுதந்திர உணர்வுகளின் மீது
கனவுகளைக் கட்டியெழுப்புகிறோம்..
தலைவனில்லா தேசத்தின்
தலைவனைத் தேடுகிறோம்..

மந்திரங்களின் உச்சாடனம்போல
அவன் பெயரையே மௌனமாய் உச்சரிக்கின்றோம்....

எத்தனையோ வீரர்களை
தமிழர்களை
மரணம் ஏறெத்துச் சென்றாலும்..
அவன் பெயரை கடைசித்தமிழன்
இருக்கும் வரை
உலகிற்கு எடுத்துச் சொல்வான்..
அது வெறும் பெயரல்ல தமிழனின்
தன்மான உணர்வு....

காலத்துயரின் பெரு மௌனம்
கவிழ்கிறது மனங்களில்..
இங்கு ஏதுமற்ற வாழ்வில்..

வாருவாய் தலைவா
தலைமுறை தழைக்க....

— சங்கரி சிவகணேசன்

FIND YOUR DREAM HOME WITHOUT ANY STRESS
DON'T GET LEFT BEHIND BUYING OR SELLING
We'll get you where you need to Go!
KAILAIN THILLAINATHAN
647-668-8276
RAGHU THILLAINATHAN
416-629-5800
7 Eastvale Dr, Markham
ON L3S 4N8
B : 905 201 9977
F : 905 201 9229
TEAM ROYALAN
HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE/ FUTURE REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED | *SALES REPRESENTATIVES



அழிவில்லா தலைமகனுக்கு அகவைத்திருநாள் வாழ்த்துக்கள் ...
அகவை கூடும் போது உனை வாழ்த்த மொழிகள் வரிகள் தேடுது அண்ணா ..
ஆண்டுகள் கடந்தாலும் உனைக் காண
விழிகளுக்குள் மனம் ஏங்குது அண்ணா...

தேசம் தந்த காலத்தின் தலைவா ...
கேட்காதோ மீண்டும் உன் குரல்...??
பார்க்காதோ என் விழிகள் உனை...??

உயிர் துடிக்கும் ஓசையிலே
உன் வரவை எதிர் பார்க்கிறேன் ..
விரைந்து வா அண்ணா...
விடியல் வரும் நாளை எண்ணி
காலம் உன் கட்டளைக்காய் காத்திருக்கு...
தேசம் உன் வரவுக்காய் விழித்திருக்கு...

கார்த்திகையில் மலர்ந்தவனே...
பார்வதி பெற்றுத் தந்த புத்திரனே...
உனை தேடி அலைகின்றோம் அண்ணா
விழிகள் நனைகிறது விடியல் கிடைக்காது
கேட்பாரற்று தேசம் நின்மதி
இழந்து கிடக்கிறது...

எம் உணர்வுகள் காற்றோடு கலந்து
உன் மனதை தொடவில்லையா அண்ணா
மௌனம் போதும் அண்ணா
வந்துவிடு மீண்டும் எமக்காய்..
தேசம் உயிர்பெறும் உன்னால்...

உயிரான என் அண்ணனுக்கு
இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்...

S Rathan Karthika

Mano Thangavel
Director
Tel: 647-612-2741 / 416-484-3805
manoshabri25@gmail.com
SHABRI SECURITY SERVICES



எங்கே இருக்கின்றார் எங்கள் தலைவன்
..?
செங்காந்தள் மலரே..!!
வெங்காட்டில் விளையாடும்
புலிகளின் பூவே!!!

எங்கே இருக்கின்றான்
எங்கள் தலைவன் ..?
எம்மிடம் சொல்லுங்களேன் ..!!!

தன்மானம் மிக்கவன்
தண்டமிழ் மாறன்
எங்கள் சுந்தரபாண்டியன் ..

கண்டால் சொல்லுங்கள்
கவின் முகம் காண ..
தவமே இருக்கின்றோம்..!!!!

கார்திகைப் பூவே..!!
கடல் சூழ் தீவே..!!

உடலும் உயிரும்
உரிமைக்காய் உகுத்த
வேங்கைகள் எங்கே..??
விளம்புங்கள் ...

அந்த வீரரை வாழ்த்த
கிளம்புங்கள் ..!!!

எழுதியவர்: ரதி





தவமின்றி தமிழர்க்கு கிடைத்த
பெருவரம் பிரபாகரன்..!
தவமின்றி தமிழர்க்கு கிடைத்த
பெருவரம் பிரபாகரன்
தமிழன் தலைகுனிந்து நிலைகுலைய
நிமிர்த்தி நிறுத்தியது பிரபாகரம்
இனப்பகை எரிக்க பிறந்த
தீ பிரபாகரன்
இனவிடுதலைக்காய் உறுதியோடு
உயர்ந்து நின்றதும் பிரபாகரம்
விலங்குடைக்க விடுதலை வேங்கையாய்
பிறந்தது பிரபாகரன்
தப்பென அறிந்ததும் தட்டிக்கேட்க
உயர்ந்ததும் பிரபாகரம்
தமிழரின் அகம் என்பதே
பிரபா முகம்
தன்னின விடுதலை ஒன்றே
பிரபா அகம்
தாய்முகம் போன்றது
பிரபா முகம்

தாய்மையையும் வென்றது
பிரபா அகம்
தமிழரின் போர்முகம்
பிரபா முகம்
தமிழரின் கருணைமுகம்
பிரபா அகம்
தமிழரின் அறிவியல் பிரபாகரம்
தமிழரின் வாழ்வே பிரபா அகம்
மொழி ஒளி பிரபாமுகம்
புலி மொழி பிரபாகரம்
உறுதியின் பிறப்பிடம் பிரபாஅகம்
உரிமைப் போர்முழக்கம் பிரபாகரம்
தமிழின அடையாளம் பிரபாமுகம்
தமிழின வல்லமை பிரபாகரம்
பலதலைமுறை தாண்டியும் வாழும் பிரபாகரம்
என்றுமே இறவாவரம் பிரபாகரம்

தலைவர் 69
ஈழப்பிரியன்

S.P.Importers
Vegetables, Fruits, Groceries, Dairy Products, Gift Items, Pooja Items & Many More
2863 Lawrence Avenue East,
Scarborough, ON. M1P 2S8
(Brimley & Lawrence)
Tel: 416-261-3881 | Fax: 416-26-949
Fish Market
2853 Lawrence Avenue East
Scarborough, ON. M1P 2S8
(Brimley & Lawrence)
Tel: 416-261-4737
Fax: 416-26-5483
Importers & Distributors of High Quality Furniture & Mattresses
2861 Lawrence Ave. East
(Lawrence & Brimley)
Scarborough, ON. M1P 2S8
Tel: 416-266-3077
Fax: 416-266-9499
www.spimporters.com



நீ வரும் பாதையில் காத்திருக்கிறேன்.
தம்பி என்றாலும் - நீ
ஈழத்து உறவுகளின்
அண்ணன் நீ !
மா வீரன் என்றழைக்கப்பட்டாலும்-நீ
ஈழ மக்களின்
மன்னன் நீ !
அண்ணனாக இருந்து
மன்னனாக வழிநடத்திய போதும்
எங்கிருக்கிறாய் நீ !
நீ வரும் பாதையில்
காத்திருக்கிறேன்.
ஈழம் மலர...

புலிக்கொடி தாங்கி
கொரில்லா தாக்குதலில்
ஐந்துக்களையும்
நர மிருகங்களையும்-வெட்டி
வேட்டையாடிய
வேட்டைக்காரனே !
நீ இன்னுமா மறைவிடத்தில்...

பாடையில் போக வேண்டிய
காடைகள் எல்லாம்
மேடையில் எக்காளம் போடுதே!
எங்கிருக்கிறாய்...
நீ !
நீ வரும் பாதையில்
காத்திருக்கிறேன்.
ஈழம் மலர..

படுக்க பாய்...
நலைக்கு நலையணி..
அடுத்த வேளைக்கு சோறு...
காலுக்கு காலணி...
விளையாட தோலி...

அம்மா மடியில் தூக்கம்
கதை சொல்ல பாட்டி
என்றிருக்கும் வயதில் நீர்மானித்தாயே
எம் தலைவா..
14 வயதில் ஈழத்தின் எதிர்காலத்தை
நீர்மாணிக்க புறப்பட்ட புலியே
எங்கிருக்கிறாய் நீ!
நீ வரும் பாதையில்
காத்திருக்கிறேன்
ஈழம் மலர

புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம் என்ற
முழக்கத்தை
புலிகளின் குரலில்
கேட்டுக் கேட்டு மகிழ்ந்தோமே !
உன் குரலில்
அம்முழக்கத்தை
இன்று மீண்டும் கேட்கமாட்டோமா?
உன் பெயரை உச்சரித்தால்-எங்கள்
உள்ளம் பூரிக்கும்- அதே
பெயரை எதிரி உச்சரித்தால்-அவன்
ரத்தம் கருந்துப்போகுமே !
எங்கிருக்கிறாய் நீ !
நீ வரும் பாதையில்
காத்திருக்கிறேன்
ஈழம் மலர

காந்தியத்தை கையில் ஏந்தி
சத்தியத்தை நெஞ்சில் நீறுத்தி
ஈழ மக்களின் சுதந்திர மூச்சுக்கு
பேச்சை மட்டுமா அடக்கினான் !
தனது மூச்சையும் அடக்கிய
தீலிபனின் தியாகத்துக்கு
வரலாற்றில் தீர்ப்பு
எழுத வேண்டாமா?

கிட்டுக்கு நேர்ந்த கதிக்கு
விதியென சும்மா கிடப்பதா
சதி செய்த சண்டாளர்கள்
வரலாற்றில் வாழ்வதா?
முப்பதாயிரம் மக்களை முழுங்கிய
முள்ளிவாய்க்காலின் ஊருக்கு
வரலாற்றில் பிழையான
பக்கமே பதிந்து போனதே
எம் தலைவா?
நிரித்த வரலாற்றை
திருத்தி எழுத
வந்துவிடு தலைவா
நீ வரும் பாதையில்
காத்திருக்கிறேன்
ஈழம் மலர

நீ இருட்டில் இருந்தால்
நாங்கள் குருடர்களாய்
நீ மௌனமாய் இருந்தால்
நாங்கள் ஊமைகளாய்
நீ பேசாமல் இருந்தால்
நாங்கள் செவிட்டர்களாய்
வீடில்லாமல்
வீதியில்லாமல்
நாதியில்லாமல்
விதியேயென
கதியாய் கிடக்க
இன்னும் எத்தனை நாள்
இன்னும் எத்தனை நாள்
காத்திருக்க தலைவா?
நீ வரும் பாதையில்
காத்திருக்கிறேன்
ஈழம் மலர

எழுத்தாக்கம் – நாய்மண் நோக்கி சேரமான்





விடுதலைச்சோதியே..!
தாயையே தாங்கும் தாய்மை
மனங்கொண்ட எங்கள் தாயுமானவன்,
தனக்குவமையில்லாத் தமிழனாய் நிமிர்ந்து
தரணியை ஆழ்பவன்...

தாயும், சேயும் கூடிய உறவாய்
எம்மைக் காத்தவன், தலைவன்
தானே முன்னே வழிநடந்து
தடங்கள் பதித்தவன்...

சாயும் தோள்கள் கோபுரமாகச்
சரிதம் வென்றவன், எம் சந்ததி
வாழ்ந்திடத் தன்னலமில்லாத்
தவமும் புரிந்தவன்...

வாயும் வயிறும் ஒட்டிய மாந்தர்க்கும்
வல்லமை காத்தவன், எம்மை
வருத்த வந்த வலியோர் அவர்க்கே
வலிகளைக் கொடுத்தவன்...

ஞாயிறின் ஒளியுடன் நற்றவப்பேறாய்
நானிலம் வென்றவன், நம்மை
ஆண்டிட வந்த ஆளுமைகொண்ட
ஆண்டவனானவன்...

வாரணமாயிரம் வந்துபுடை சூழ்
வல்லபடை கொண்டு வென்றவன் ,
கரிகாலமன்னனின் வல்ல வடிவமாய்
வந்து எம் மண்ணில் நின்றவன்...

நீதிதேவன் நடந்த வழியிலே
நீதியின் கண்களே தினம்தேடும்,
நிலையாய் மாந்தர் நிம்மதி மலர்ந்திட
ஞாலமும் ஒருநாள் வழி தேடும்...

ஆதியும், அந்தமும், அன்பினால் ஏற்றிய
சூவிடுதலைச்சோதியின் புகழ்பாடும்,
ஒருநாள், வீதியில் நின்று விடுதலைபாடிய
மாந்தரின் விதிகளும் கரைசேரும்...

-காந்தள்-



தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் எழுதிய கவிதை

நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த எமது நாட்டை மீட்க

எதிரி நமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்துவிட்டான்!
அதைக் கண்டு நாம் அஞ்சவில்லை!

புயலெனச் சீறி
இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்
ஆனால்...
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவசம் எம்மிடம் உண்டு!

எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது!
எமதுஆத்ம பலமோ அதைவிட
வலிமை வாய்ந்தது!
எதிரியின் குண்டுகள் வெடிக்கும் - ஆனால்
எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்!

நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
எமது அணிவகுப்பு
எமது தமிழ்ஈழ மக்களிடையே
அணிவகுத்துச் செல்கிறது!

நாம் செல்லும் இடமெல்லாம்...
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்!
மக்களிடத்தில் உள்ள
பிரதேசம் சாதி
மதமென்னும் பேய்களும்
அலறி ஓடுகின்றன...

எமது படையணி விரைகிறது...
எம தேசத்தை மீட்க!

நாம் செல்லும் இடமெல்லாம்...
காடுகள் கழனிகள் ஆகின்றன!
வெட்டிப் பேச்சு வீரர்கள்
மிரண்டோடுகின்றனர்...!

உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது
ஏழைகள் முகங்களில்
புன்னகை உதயமாகிறது.



ஆக்கியவர்: திரு. வே.பிரபாகரன்
பதிவு: கரும்புலிகள் உயிராயுதம்

Thermo Care
Heating & Cooling Inc.
FURNACE | AIR CONDITIONER FURNACE CLEANING | HUMIDIFIERS AIR CLEANERS |
TANKLESS WATER HEATER RENTAL
We offer flexible Financing Options to specifically meet your budget. Its the fast, flexible and easy way to upgrade your home-comfort system.
Best SERVICE PRICE & WARRANTY
BOOK NOW 416-825-9373 / 416-640-1174 WWW.THERMOCARE.CA 513 East Ave Scarborough Ontario



தோல்விகளை சேர்த்து வேள்வி செய்தவன் ..!

இருள் மூட இருள்மூட
நீ விரிந்தாய்
இளம்சூரியனாக

இடர்கூட இடர்கூட
நீ எதிர்த்தாய்
இனசூரனாக

வலிகூட வலிகூட
நீ புலியானாய்
புதுவாலிபனாக

மொழி சாக மொழிசாக
நீ முழங்கினாய்
இடி மின்னலாக
இழிபேச இழிபேச
நீ எழுந்தாய்
இன்னும் இரட்டிப்பாக

பகைமோத பகைமோத
நீ வளர்ந்தாய்
பரந்தாமனாக

தடைபோட தடைபோட
நீ உடைத்தாய்
உயிர் தமிழ்வாழ
சதிசெய்ய சதிசெய்ய
நீ புதுவிதிசெய்தாய்
சர்வேஸ்வரனாக
நீ துயரங்கள் சேர்த்து
உயரம் அடைந்தவன்
தோல்விகளை சேர்த்து
வேள்வி செய்தவன்
அயராது உழைத்து
எங்கள் அண்ணணாணவன்
அடிபணியாது தணித்து நின்று
தமிழன் அடையாளம் ஆனவன்.

த.யாளன்

PYRAMID GROUP WWW.PYRAMIDGROUP.COM
REAL ESTATE PROFESSIONALS
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
UTHAYAN SIVARAJAH
BROKER
416-301-5555
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
Independently Owned and Operated
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
OFFICE:416-282-3333 I FAX:416-272-3333
Broker of Record* I Broker** I Sales Representative*



தேசியத் தலைவரின் அகவை விழாவுக்கு தொடர்ந்து அனுசரணை வழங்கும் வாணிப நிறுவனங்கள்

NEW SPICELAND SUPER MARKET

NEW SPICELAND

5790 Sheppard Ave E,
Unit# 4, 5, & 6
Scarborough
(416) 292-9769

6065 Steeles E,
Unit# 13, 14, 15,16 & 17
Toronto
(416) 335-3030

1801 Harwood Ave N,
Unit# 21,22,23 & 24
Ajax
(905) 426-1114



QUALITY BREAD BAKERY -Est. 1996-

1970 Ellesmere Road
Units 12 & 13,
Scarborough,
ON. M1H 2W1

Follow us on Twitter @QBBakery



Life Insurance?
It's for those you LOVE the most!

ஆயுட்காப்புறுதி
Call: 416-704-8074

- RESP/RRSP
- Disability
- Investments for Children

Excellent Rates!

Insurance Ajay
Are you Insured?





SUN CITY SUPER MARKET

OPEN 7 DAYS 8.30AM-10.30PM

துரித பணமாற்றுச் சேவை
அனைத்து நாடுகளுக்கும் ஒரே நாள் சேவையில்

Tel: 416-724-6666
SUN CITY PLAZA, 2761 Markham Rd, Unit 18
Scarborough ON M1X 1M4

நந்தா உலகம் NANTHA RESTAURANT

Vegan Nantha
Brimley & Steeles
Unit 2 – 4915 Steeles av E,
Scarborough
(416-NANTHA-1 Ext. 1)

Nantha Caters
Kipling & Steeles
Unit 18 – 5010 Steeles Ave W,
Etobicoke
(416-NANTHA-1 Ext. 2)

Nantha Caters
Warden & Finch
Unit 3 &4 – 3268 Finch Ave E,
Scarborough,
(416-NANTHA-1 Ext. 3)

Nantha Express
Middlefield & Steeles
Unit 2 – 2002 MiddleField Rd
Markham,
(416-NANTHA-1 Ext. 4)

Phone: (416) 626-8421 Email: nanthacatersinc@gmail.com

#1 RE/MAX

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage

Secure Your future with Commercial Investment

Commercial Real Estate Investment

Shean Sinnarajah
Real Estate Broker
Dir: 416.882.0118
1265 Morningside Ave,Suite 203, Toronto ON.M1B 3V9
Tel:416.287.2222 Fax:416.282.4488



SINDI FINANCIAL SERVICES INC.

துரித பணமாற்றுச் சேவையின் முன்னோடிகள்

★ நம்பிக்கை ★ நாணயம் ★ உத்தரவாதம்

416.288.0277

792 Kennedy Rd., Suite 204
(Eglinton & Kennedy)

Ideal Auto Tech

416 752 LUBE 5823

idealautotech.com

90 DAYS NO PAYMENT NO INTEREST NO CREDIT CHECK

TIRE SALE!

PRICE MATCH GUARANTEED ON ALL MAJOR BRAND TIRES

1815 Lawrence Ave, East, Unit 2, Scarborough

Century 21 Innovative Realty Inc. Brokerage

Office: 416-298-8383 | Fax: 416-298-8303
3-2250 Markham Rd., Toronto ON. M1B 2W4

Karan Thurainayagam
Sales Representative
Direct: 416-707-4350
karant991@yahoo.ca



தேசியத் தலைவரின் அகவை விழாவுக்கு தொடர்ந்து அனுசரணை வழங்கும் வாணிப நிறுவனங்கள்

Taste & Flavour of Thamil Eelam
BABU
Take-Out & Catering
SINCE 1993

9590 McCowan Rd, Markham, ON L3P 8M1, Canada
Phone: (416) 298-2228

4800 Sheppard Ave E, Scarborough, ON M1S 4N5, Canada
Phone: (416) 298-2228

You Name It. We Sell It!
NEW OCEAN™
SUPERMARKET
Download on the App Store | GET IT ON Google play
Best store to find fresh goods and quality products at affordable prices.
For our valued customers: Open daily 7:30 am - 10:00 pm
Download NOS CLUB APP to access your NOSM Discount Card & get 2% discount on all your groceries
ORDER NOW
416 292 0122 | 5635 Finch Avenue East, Scarborough, ON M1B 5K9

SOUTH ASIYAN SUPERMARKET
We offer the widest selection of both Asian & non Asian vegetables, fruits, daily products, seafoods, meats and ethnic goods
Paramesh: 647-470-8383
Nish: 647-991-2124
5402 Main Street, Unit 7, Stouffville, ON. L4A 1H3
Sajan: 647-866-5681
9909 Markham Rd, Unit 11&12, Markham, ON. L3P 3J3
Tel: 905-201-9833
Stouffville வாழ் தமிழ் மக்கள் நலன் கருதி எமது கிளை திறக்கப்பட்டுள்ளது!
Kajan: 647-818-4693
Nish: 647-991-2124
Syan: 647-866-5681
5402 Main Street, Unit 7, Stouffville, ON. L4A 1H3
9909 Markham Rd, Unit 11&12, Markham, ON. L3P 3J3
Tel: 905-201-9833
SOUTH ASIYAN SEAFOOD
Seafood & Meat Shop
We've got all your healthy, delicious meat & seafood items

REGINOS PIZZA
Reginos Pizza
ராசன்
135 Toronto road
Port Hope, Ontario. L1A 3S6
Tel: 905-885-5656
Main intersection:
Toronto road and 401

C.DENTAL CARE
Dr. Sharon Barr ,Dr.Chandra , Dr. Rahman , Dr.Cicilia & associates
941 Taunton Rd E Unit C7
Oshwa, ON, L1H 7K5
905-448-2500,
416-700-0101
info@cdentalcare.ca
cdentalcare.ca

J.R.B
GROUP CORPORATION
Best Rate Mortgage Arranged
Almost All Services Available
அனைவரும் விடு வாங்க சிறப்பான சேவை...
R.R.Raikumar B.Com (Hons) M.B.A
BUSINESS LOAN 25 K to 500,000 New Business
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள சகல வர்த்தகருக்கான சிறப்பான சேவை
Welfare, ODSP, Medical visit translation services
* Loans * Mortgages
* Insurance * Visa * Real Estate
* Credit Counseling
* Master Card
647-289-6164
416-655-5577

HOMELIFE / CHAMPIONS REALITY INC.
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
SINCE 1988
Realtors Wanted
FLEXIBLE SPLIT
OR FLAT FEE
UTAYAN PONNUTHURAI
BROKER OF RECORD, Bsc (Hons)
HOMELIFE
HIGHER STANDARDS
D: 416 505 2120 B: 416 281 8090

Ganesha
Takeout and Catering
411 Manhattan Dr.
Markham, ON. L3P 7P4
905-305-0522
Raj: 416-358-5225




NEWOCEAN
SUPER MARKET
NEW OCEAN
SUPER MARKET
சுத்தம், தரம், மலிவு
CALL
+1 416 292-0122
5635 Finch Ave E,Scarborough,
ON M1B 5K9 Canada
newoceansupermarket


THINUSHA TAKE-OUT &
CATERING
இடியப்பம், இட்டலி
தோசை மற்றும்
சைவ, அசைவ
சிற்றுண்டி
சாப்பாடுகள்
தினுஷா டேக்கவுட் &
கேட்டரிங்
WE CATER FOR ALL
OCCASIONS - BIG OR SMALL !
சிறந்த முறையில் தயாரித்த
இலங்கை, இந்திய
உணவகம்
Call : 905.454.4224 / 905.497.4224
107 Kennedy Road South, Unit 6, Brampton L6W 3G3